# திவ்யம

(தமிழ் மெ

எட்டயபுரம் ஸம்ஸ்தான வித்வ

திரு. வீ. சாமிஜயங்கார் ஸ்வ

மொழிபெயர்த்தது

ஹரிஸமயதிவாகரப் பிரசுரம்.

H. S. D. PRESS, MADURA.
1929.

ட்டு.] விலை ரூ. 1—8—0

O22:417
N29
2159

ஸ்ரீ:

# திவ்யஸூரி சரிதம்.

(தமிழ் மொழி பெயர்ப்பு.)

1288

13 JUN 1929

எட்டயபுரம் ஸம்ஸ்தான வித்வான்

ஸ்ரீ. உ. வே. திரு. வீ. சாமிஐயங்கார்

மொழி பெயர்த்தது.

ஹரிஸமயதிவாகரப் பிரசுரம்.

H. S. D. PRESS, MADURA.

1929.

காப்பிரைட் ரிஜிஸ்டர்டு.

விலை ரூ. 1—8—0

ஸ்ரீ:

# முகவுரை.

---

[மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராதிபர்,
ஸ்ரீ. உ. வே. திருநாராயணையங்கார்ஸ்வாமி எழுதியது.]

திவ்யஸூரி சரித மென்பது ஸம்ஸ்க்ருத பாஷைக்கு அலங்காரமாய் விளங்கும் மிகச்சிறந்த காவ்யங்களில் ஒன்று. பகவதம்ச பூதர்களாய் அவதரித்த •ஆழ்வார்-ஆசார்யர்களின் திவ்யசரிதத்தை ப்ரதிபாதிப்பதாகையால் இதற்கு அப்பெயர் வழங்கலாயிற்று.

இது உடையவர் காலத்தோடு ஒட்டிய அவ்வளவு பழைமை வாய்ந்ததாகும். அவ்வெம்பெருமானாரது திருமுன்பே இஃது அரங்கேற்றப்பெற்றதென்று கர்ணபரம்பரையாகக் கேள்விப்படுவதும் உண்டு. பூர்வாசார்யர்கள் இதனை ப்ரமாணமாக எடுத்தாளுவதாலும் இதன் பெருமை இனிது விளங்கும். அன்றியும் ஸ்ரீவைஷ்ணவர்கள் மட்டுமேயன்றி, வடமொழியில் வல்லுநரான மற்றையோர்களும் இதன் இன்பரஸங்களை அநுபவிப்பதில் பெரிதும் ஈடுபடக் காண்கிறோம். ஆகையால் இக்காவ்யத்தின் அருமை பெருமைகள் இங்கு அளவிட்டுச் சொல்லுந்தரத்தினவல்ல.

இதனை இயற்றியருளிய மஹாநுபாவர் கருடவாஹந பண்டிதர் என்னும் ஸ்ரீநிவாஸ மஹாகவிபாவர். இவர் வாதூல கோத்ரத்தில் வரதரென்பவருக்கு 'லோகேசை'யினிடம் ஒப்பற்ற புதல்வராய்த் தோன்றினவர்; வரவராதீச ரென்பவரை ஆசார்யமாக வுடையவர். இவருடைய கவிதாஸாமர்த்யத்தை உணர்ந்தவர்கள், காளிதாஸன் பவபூதிபோன்றவர்களின் வரிசையில் இவரையும் ஒருவராகக் கணக்கிடுகின்றனர்.

'கவிவைத்யபுரந்தரர்' என்ற மற்றொரு சிறப்புப்பெயரும் இப்பவரைக்குறித்து வழங்குவதுண்டு. ஸ்ரீரங்கராஜனுடைய வைத்யத்திற்கு இவர் தலைவராய் விளங்கினரென்றும், பத்யத்தின் பொருநன்றி வெரியற்றிய கஷாயத்தைப் பெருமாளுக்குத் தினந்தோறும்

திருவமுது செய்விக்கும்படி எம்பெருமானார் நியமித்தருளினரென்றும் அறியப்படுகின்றது.

ஶம்ஸேநோ: ஸமஸ்ய வாஹநஸ்லக்ஷ்யம்
வஸ்த்யாயாநம் த்ரிதசாவ யக்ஷாயந் ||

என்று தாமேகொண்டாடும்படி அவருக்கு வாய்த்த பகவத்கைங்கர்யத்தின் மஹிமை பெரிதும் பாராட்டத்தக்கதேயன்றோ?

அது நிற்க; ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் முதலான க்ரந்தங்களிற் சொல்லப்படாத அரிய விஷயங்கள் பல இத் திவ்ய ஸூரிசரிதத்தில் அடங்கியுள்ளன. அவற்றோடு மாறுகொள்ளும் பகுதிகளும் இதிற் சிற்சில காணப்பெறுவனவாம். அவையாவும் அறிஞர்கள் ஆராய்ந்து முடிவுரைக்கற்பாலன. ஆயினும் இந்த க்ரந்தத்திற்சொல்லிய விஷயங்களும் எல்லார்க்கும் ஆதரணீயமென்பதிற் சிறிதும் ஸந்தேகமில்லை.

உடையநங்கையார் திருவயிற்றில் ஆழ்வார் அவதரித்த அப்பொழுதே உறங்காப்புளியின் உருவமாய் ஆதிசேஷன் ஆவிர்பவித்ததும்; ஸ்ரீநீளாதேவியின் அம்சமாய்க் குலசேகரப்பெருமாளுக்கு ஒரு திருமகளார் அவதரித்து ஸ்ரீரங்கநாதனைக் காதலித்து அப்பெருமானையே அவர் தமக்கு உகந்த மணவாளனாகப் பெற்றதும்; ஸ்ரீ ஆண்டாளின் திருமணம் திருநகரியில் மிகவிமரிசையாய் நிறைவேறியதும்; நூற்றெட்டுத்திருப்பதி யெம்பெருமான்களும் அங்கு ப்ரஸந்நராக ஸேவைஸாதித்ததும்; அவ்விவாஹத்தின் அநந்தரமே திருமங்கைமன்னன் வேடுபறி நிகழ்த்தியதும்; ஸ்ரீரங்கத்தில் திருமதில் கைங்கர்யம் நடந்தபொழுது அதற்குத் தடையாயிருந்த ஒரு யோகியை அவர் ஹிமாலயப்ரதேசத்திற்கு எழுந்தருளச்செய்ததும்; காழிநகரத்தில் அவர் ஞானஸம்பந்தரைச் சந்தித்து அவராற் கவிமாலைபுனைந்ததும்; ஆகிய இவை போன்ற வரலாறுகள் அவ் வேறுபாடுகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன. அன்றியும் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களின் அர்த்தவிசேஷங்களை இந்நூலாசிரியர் அவ்வவ்விடங்களில் ஆழ்ந்து அநுபவித்துப் பேசியிருப்ப
இதற்கு மிகவும் அதிசயத்தை விளைக்கின்றது. இவைபோ
சரித்திரவாராய்ச்சிக்குரிய எத்தனையோ பல குறிப்புக்களு

காணக்கிடப்பனவாம். மற்றும் இம் மஹாகாவியத்தின் சிறப்புக்களெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும்.

இங்ஙனம் அபூர்வமான இத் திவ்யஸூரிசரிதம் ஸம்ஸ்க்ருத பாஷையில் பத்யரூபமாக அமைந்து, அதிற் பரிசயமில்லாத பலர்க்குப் பயன்படாமலிருக்கிறது. ஆகையால் இதனைத் தெளிவான தமிழ்நடையில் எழுதவேண்டுமென்று அடியேன் விஜ்ஞாபித்ததைத் திருவுள்ளம்பற்றி, எட்டயபுரம் ஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீ. உ. வே. திரு. வீ. சாமி ஐயங்கார் ஸ்வாமியால் இம்மொழிபெயர்ப்பு எழுதப்பெறுவதாயிற்று. அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்களின் வைபவத்தை அச் செந்தமிழ்மொழியால் அநுஸந்திப்பதும் அவர்கள் திருவுள்ளத்திற்குப் பாங்கானதே யாகும்.

ஆகையால், இம்மொழிபெயர்ப்பு எல்லார்க்கும் எளிதிற் பயனளிக்க வல்லது; சிறிதும் வழுவாத செவ்விய நடையுடையது; முதனூலின் கருத்துக்களை முழுவதும் தழுவிச்செல்லுவது; அதனால் அதற்குத் தக்கவாறமைந்த ஒரு தமிழுரையென்றே சொல்லுந்தரத்தது.

ஆயினும் எட்டாவது ஸர்க்கத்தினிடையே சில நாற்பது ச்லோகங்கள் வரை இதில் உரையெழுதாமல் விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவை யுத்தத்தை வர்ணிப்பனவாய் ஸப்தாலங்காரமான யமகங்களாயிருக்கின்றன. சுவைபழிபாமல் அவற்றைப் பிறமொழியிற் பெயர்த்துரைப்பது ஸுலபமான காரியமன்று. இவ்வாறே சப்தச்லேஷையாகவும் ஸந்தேகவிஷயமாகவுமுள்ள மற்றுஞ் சில இடங்களும் விடுபட்டன உள. ஆனாலும் சரித்திரத்தொடர்பிற்கு அவை சிறிதும் தடையாயிருக்கவில்லை. இது நிற்க,

இதனை எழுதி அச்சிடுவித்ததில் பரிசோதனைக் குறைவாற் பிழைகள் பலவாறாகப் பெருகி விட்டன. அவைகளை இங்குப் பிழை திருத்தத்திற் சேர்த்திருப்பதன்றி, மற்றுள்ளவைகளும் இதன் இரண்டாம்பதிப்பிலேயே சீர்திருத்தம் பெறவேண்டும். ஆகையால் இப்புத்தகத்திற்காணும் குற்றங்குறைகளை அறிவுடையோர் பொறுத்துத்திருத்தி யருள்வாராயின் அன்னார்மாட்டு இதன் ஆசிரியர் மிக்க நன்றி செலுத்துவதாக அறிவிக்கப்படுகிறது.

இனி, இதனை இயற்றியுதவிய ஸ்ரீ உ. வே. சாமி ஐயங்கார் ஸ்வாமி இருமொழியிலும் நிறைந்த புலமையுடையவரென்பது தானே விளங்கும். ஆகையால் அதனை விரித்துரைக்கவேண்டுவதில்லை. ஆயினும் அவர் போன்ற ஆற்றலுடையவர் இக்காலத்து மிகவும் அரியர் என்பதை இங்குக் குறிக்காமலிருத்தல் இயலாது. அவர் வடமொழியில் விரைவாகக் கவியியற்றும் வன்மையும், வ்யாகரண சாஸ்த்ரத்தில் விசேஷமான பாண்டித்யமும் உடையவர்; சிந்தாமணி, திருக்குறள், கம்பராமாயணம் போன்ற தமிழ்நூல்களில் திறமையான ஆராய்ச்சியுள்ளவர்; செய்யுளாகவும் வசனமாகவும் சிற்சில நாடகங்களைத் தமிழ் மொழியில் இயற்றியவர்; செந்தமிழ்ப் பத்திரிகையில் மொழிபெயர்ப்பான சில சிறந்த கட்டுரைகள் வரைந்து வெளியிட்டவர்

இவையேயன்றிச் சிலமடாதிபதிகளும் ஸம்ஸ்தானாதிபதிகளும் இவர் வித்யையை ஸங்மானித்து கௌரவமளித்துள்ளனர். மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும் பாலவநத்தம் ஜமீந்தாருமாயிருந்த ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களின் வித்வத் கோஷ்டியினரில் இவரும் ஒருவராக வீற்றிருந்த பெருமையுடையவர். இப்பொழுதும் எட்டயபுரம் மஹாராஜா அவர்களால் இவர் அபிமானத்துடன் ஆதரிக்கப் பெற்றுவருகிறார். ஆகையால் இந்த ஸ்வாமியின் கல்வியறிவு எல்லார்க்கும் பயன்படும்படி, இத் திவ்யஸூரிசரித மொழிபெயர்ப்புப்போன்ற ச்ரேயஸ்கரமான காரியங்கள் பலவற்றை இவர் செய்யுமாறு எம்பெருமான் அநுக்ரஹிப்பானாக.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# திவ்யஸூரி சரிதம்.

---

## *முன்னுரை.

ஸ்ரீரங்கராஜனது திவ்யகடாக்ஷத்தினால் வ்ருத்தியடைந்த ஞானவைபவத்தை யுடையவரும், அவரது வைத்தியசாலைத்தலைவரும், கவிவைத்தியபுரந்தரரென்ற மற்றொரு பெயரையுடையவருமான - கருடவாஹனபண்டிதரென்ற ஸ்ரீநிவாஸ மஹாகவியானவர் தாம் ஸதாசாரியர்களின் உபதேசபரம்பரையாய்க் கேட்டறிந்துள்ளதும், ஸ்ரீவேதாந்ததேசிகர்முதலியவர்களால் ரஹஸ்யக்ரந்தங்களில் ப்ரமாணமாகக் கூறப்பட்டுள்ளதும், அத்தகைய ஆசார்யவம்சமும் அறியத்தக்கதென்று ப்ரபந்நர்களால் அவசியமறியவேண்டியதாக அங்கீகரிக்கப்பெற்றதுமான எம்பெருமானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்திற்குப் பரிபூர்ண பாத்ரர்களான பொய்கையார்முதல் ஸ்ரீராமானுஜர்வரையுள்ள திவ்யஸூரிகளின் வைபவத்தை, குறிப்புப்பொருளை முக்கியமாகவுடைய இனிமைபயக்குங் காவ்யத்தின் மூலமாய், மோக்ஷத்தைவிரும்புவோர்க் கறிவிக்கவேண்டுமென்ற எண்ணத்தால், திவ்யஸூரிசரிதம் என்னும் பெயரையுடைய மஹா காவ்யத்தைச் செய்தருளினர்.

அத்தகைய இக்காவ்யம் அறிவை வ்ருத்திசெய்துகொள்பவர்க்கு திவ்யஸூரிகளின் திவ்ய வ்ருத்தாந்தங்களின் கேள்வி மனனம் முதலியவற்றால் மிகுந்த விவேகத்தை வளரச்செய்யவல்லதென்று ஆலோசித்து, ஸ்ரீயதுகிரிவலயத்திற்கு அலங்காரபூதமான மஹாசாரியர்களின் திருமாளிகை முதலிய இடங்களிலும் ஸ்ரீதிருவாய்மொழி திருநாராயணாசாரியரின் திருமாளிகையிலுங்கிடைத்த

---

*இம்முன்னுரை வடமொழிப் பதிப்பிலுள்ளவாறே மொழிபெயர்க்கப் பெற்றது.

புஸ்தகங்களில் பரிபூர்ணமாக இல்லாமற் சிற்சிலபாகங்குறைந்திருந் தும் அப்புஸ்தகங்களைச்சேர்த்து, ஸ்ரீமதகோபிலமடத்தின் ஆதி வண் சடகோப ஸ்வாமியின் வம்சத்திலுதித்தவரும் உபயவேதாந் தங்களில் வல்லவருமான நாராயணாசாரிரென்பவரால் பரிசோ தித்து, சிற்சிலவிடங்களில் அவ்வப்பதங்களுக்கு ப்ரதியான தமிழ்ப் பெயர்களாலும் மறைபொருளை விவரணஞ்செய்து பாடபேதத்தைக் காட்டக்கூடிய அடையாளங்களுடன், லௌகிகவைதிக விஷயமான ஸகலகலைகளிலும் வல்லவரும் லோகோபகாரசீலருமான மைசூர் ஸம்ஸ்தான அஸிஸ்டெண்டிஞ்சினீர் ஆட்கொண்டவில்லி கோவிந் தாசாரியரின் சகாயத்தால் அச்சிடப்பெற்றதாக விளங்குகின்றது.

---

## முதல் ஸர்க்கம்.

ஒளியும் சூரியனும்போல் ஒற்றுமையுடையவர்களாயும் மூவுல கங்களையும் ரக்ஷிப்பவர்களாயுமுள்ள லக்ஷ்மீநாராயணர்களை பஜிக் கின்றேன். திவ்யஸூரிகளின் சரிதமெங்கே; எனது மந்தபுத்தி யெங்கே! யானோ தாமரைநூலால் யானையைக்கட்டவேண்டு மென்ற எண்ணமுடையவனாயிருக்கிறேன். மிகவுந் தணிந்தவனான நான் ப்ராசீனர்களான பண்டிதர்களின் ப்ரஸித்தியையடையவிரும்பு வது மரத்தின் நுனியிலிருக்கும் தேனை முடவன் விரும்புதல்போ லாகின்றது. பூர்வாசார்யர்களால் ஆதரவுடன் வெளியிடப்பட்ட திவ்யஸூரிகளின் சரிதத்தை அடியேனும் வெளியிடுதல், சூரிய னால் ப்ரகாசிக்கப்பெற்ற ஆகாயம் மின்மினியினாலும் ப்ரகாசமடை வதுபோலிருக்கிறது. ப்ராசீனர்களின்வாக்கிற்கு விஷயமான திவ்ய சரிதத்தை நான் சொல்லுகின்றேன்; யானை செல்லும்வழியில் எறும்பு செல்லாதிருப்பதில்லையே? சிசுக்களின் மழலைச்சொற்கள் தாய்தந்தையர்கட்கு இன்பம்பயத்தல்போல, எனது வாய்மொழி களும் ஸாதுக்களுக்கு சந்தோஷத்தையுண்டுபண்ணட்டும். பகவத் ஸங்கல்பத்திற்குப் பாத்ரபூதர்களாயும், லோகரக்ஷணஞ்செய்வதே தமது ஸ்வபாவமாகவுடையவர்களாயும், பக்திப்ரபத்திகட்கு உறை விடமான மனதையுடையவர்களாயும், ஸம்ஸாரமெனனுங்கடலைக் கடத்தற்குரிய தோணியாகிய திவ்யஸூக்திகளையுடையவர்களாயும்,

ராகத்வேஷம் முதலிய துர்க்குணங்களற்றவர்களாயும் ஸகல ஸத்குணங்களும் நிறைந்தவர்களாயும், பகவத்யானநிஷ்டர்களாயும், சுகப்ரும்மரிஷிபோன்ற சுத்தயோகிகளாயும், வேதாந்தபாரங்கதர்களாயும், ஸ்ரீவைகுண்டநகரத்தை விரும்புகின்றவர்களாயுமிருக்கின்ற பொய்கையார்முதல் ஸ்ரீராமாநுஜர் பர்யந்தமான பக்தர்களின் அவதாரம்முதலிய வ்ருத்தாந்தங்களை யானறிந்தபடி சொல்லுகின்றேன். பாலிலுள்ள ஆவலினால் பாத்திரத்தின் தாழ்மையைக்கருதாது அப்பாத்திரத்தையுங் கைப்பற்றுதல்போலவே, பரமஸாதுக்களான பெரியோர்கள் திவ்யஸூரிகளிடத்திலுள்ள ஆசையினால் எனது சொல்லையுங் கேட்கவேண்டும்.

யாவராலும் புகழத்தக்க மகிமையையுடையதும், தேவர்களால் வணங்கப்பெற்றதும், வாயுமுதலிய பூதங்கள் அகங்காரம் மகத்தத்வம் இவைகளின் அவ்பக்தரூபத்தால் ஏழுகோட்டைகளாகச் சூழப்பெற்றதும், ப்ரக்ருதிக்குமேற்பட்டதும் ப்ரம்மருத்ராதிகளாலும் சொல்லுதற்கரியதும், சென்றவர் திரும்புதற்கிடமற்றதும், மூன்றுபாதங்களின்வடிவுடையதுமான ஸ்ரீவைகுண்டமென்னும் உலகம் ஒன்றுள்ளது. எந்த லோகத்தினால் ஆதிதேவனும் *முகுந்தனென்னும் பெயரைப்பெற்றனனோ, எதனருகில் விரஜையென்று ப்ரஸித்திபெற்ற திவ்யநதியொன்றிருக்கின்றதோ, அந்த நதியானது சம்சாரமென்னுங் காட்டுத்தீயினால் தகிக்கப்பெற்ற ஜீவர்களின் தாபத்தைப் போக்கத்தக்கது. அது, செந்தாமரைக் கண்ணனான எம்பெருமானுடைய கருணையே ஜலரூபமாய்ப்பெருகி விரஜையென்ற பெயருடன் ஜீவர்களின் ஜன்மவாசனையாகிய புழுதியைப்போக்கடிக்கின்றதாகி, தன்னிடத்தில் மூழ்குகின்ற சேதனர்களின் யாதநாசரீரத்தை அடியோடழித்து, பஞ்சோபநிஷன்மயமான திவ்யசரீரத்தைக் கொடுக்கின்றது. எவ்விடத்திலுள்ள ஆராமங்களில் பகவத்ப்ரீதிக்காக நித்தியசூரிகள் விருக்ஷரூபத்துடன்கூடியவர்களாய் நிழலாலும் புஷ்பங்களாலும் முக்தர்கட்குபகாரஞ்செய்கின்றனரோ, எவ்விடத்தில் ஸ்வர்ணமயமான கல்ஹாரம், கமலம் உத்பலம், முதலிய

*முகுந்தன்—என்பதற்கு மோக்ஷத்தைக் கொடுக்கின்றவன் என்று பொருள்.

புஷ்பங்களுடன் ப்ரகாசிக்கின்ற ஐரம்மதீயமென்ற சிறந்த தடாகமொன்று விளங்குகின்றதோ, அத்தடாகத்தின் கரையிலுள்ள அரசமரத்தின்குளிர்ந்தநீழலில் அழகியவடிவுள்ள ஐந்நூறுஅப்ஸரஸ்த்ரீகள் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். அம்மங்கையர்கள் திவ்யசரீரத்துடன் வருகின்ற முக்தர்களை உயர்ந்த வஸ்திராபரணங்களாலும் நற்சுண்ணம் சந்தனம் முதலியவற்றாலும் அலங்கரிக்கின்றனர். எந்தவிடத்தில் ஆதிவாஹிகர்களால் அர்ச்சிராதிமார்க்கத்தைக்கடந்து கணக்கற்ற பக்தர்கள் வசிக்கின்றனரோ, எந்தவிடத்தில் அழகிய உத்யானவநங்களில் நித்தியஸூரிகளே குயிலுருவத்துடன் கூடியவர்களாய் பரப்ரும்மம் நாராயணனையன்றி வேறில்லை என்று கூவுகின்றனரோ, எவ்விடத்தில் மந்தாரவ்ருக்ஷங்களின் பூங்கொத்துக்களில் ரஸத்தைப்பருகி வண்டுகள் மதுரத்வனியுடன் ரீங்காரஞ்செய்கின்றனவோ, எவ்விடத்திலுள்ள தேமாமரங்களின் சோலைகளில் சாரிகைகள் பகவத்குணங்களையே மதுரமானத்வனியுடன்பாடி முக்தர்களின் செவிகட்கு இன்பத்தையளிக்கின்றனவோ, அவ்விடத்தில் தேஜோமயமான நகரம் ஒன்றிருக்கின்றது.

அந்நகரத்தை ஸாதுக்களனைவரும் *அயோத்தியை யென்றும் அபராஜிதையென்றும் காரணப்பெயருடன் கூடியதாகவும், பக்திப்ரபத்திகளின் பிரதிநிதியாகவும், புத்தியின் தெளிவைத்தரத்தக்கதாகவும், முக்திக்ஷேத்திரமாகவும் கூறுகின்றனர். அன்றியும் அந்நகரம் சமுத்திரங்களே தன்னை வழிபடுதற்காக வந்திருக்கின்றனவோவென்று தோன்றும்படி பற்பலரத்னங்களினாற்செய்த ஆயிரம் ஆவணங்களினாற் சூழப்பெற்றதாய் விளங்குகின்றது. அது தன் கோபுரங்களிற்கட்டியசைகின்ற கொடிச்சீரைகளினால் மற்றை லோகங்களின் அநித்தியத்தன்மையைப்பற்றித் தன் கைகளா லிகழ்வதுபோலக் காணப்படுகின்றது. அந்நகரிற்கட்டியிருக்கின்ற ரத்னதோரணங்கள் காந்தியினால் இந்திரவில்லின் எழிலை யநுஸரிக்கின்றன. அங்குள்ள ஸ்படிகமயமான ரதவீதிகள் மாடங்களின் ரத்னகாந்திகளுடன்கூடி ஆதிசேஷன் தனது பணாமுடிகளின் ரத்னங்

---

*அயோத்தியை யென்பதற்கு யுத்தஞ்செய்தற்கியலாததென்றும் அபராஜிதை யென்பதற்கு அபஜயம் செய்யப்படாததென்றும் பொருள்.

களின் காந்தியோடு விளங்குந்தோற்றத்தைக் காட்டுகின்றன. அவ்விடத்தில் லக்ஷ்மீநாராயணர்களுக்குப் ப்ரியத்தை விளைக்கத்தக்க பற்பலரத்னங்களினாலமைக்கப்பெற்ற செய்குன்றுகள் அநேகவிதமான தேவதருக்களைச் சிகரத்திலுடையனவாய்ப் ப்ரகாசிக்கின்றன. அங்கு ஸ்வர்ணமணிமயமான தோரணங்களையுடையதும், வாக்கினால் வர்ணித்தற்கரியதுமான வைகுண்டமென்ற பெயரையுடைய பெரிய மாளிகை யொன்றுள்ளது.

அதில் ஆயிரம் ஸ்தம்பங்களுடன் கூடிய அழகிய மணிமயமான மண்டபத்தில் திவ்யபுஷ்பங்கள் பரப்பிய ரமணீயமான சிங்காசனத்தில், ஆயிரந்தளங்களையுடைய தாமரைமலரின் விஸ்தாரமான கர்ணிகையின் மத்தியில், சப்தசாஸ்திரத்தில் வல்லவனாகவும் ஸ்வாதந்த்ரியமென்பதை முற்றுங்கவிர்த்தவனாகவுமிருக்கின்ற ஆதிசேஷன்மீது; ஸ்ரீபூமிநீளாதேவிகளுடன் வீற்றிருப்பவனாகவும் நிரதிசயாநந்தபரிதனாகவும் ஸர்வசேஷியாகவும் ஷாட்குண்யபரிபூர்ணனாகவும், அலர்ந்ததாமரைமலர்களின் காந்தியைக் கீழ்ப்படுத்துகின்ற பாதங்களை யுடையவனாகவும், ஸௌந்தர்யமாகிய சாகரத்தில் மூழ்கிக்கிடக்கின்ற மைநாகபர்வதத்தின் சிகரங்களோவென்று தோன்றும் முழந்தாள்களையுடையவனாகவும், யௌவனமாகி உபவனத்திலிருக்கின்ற வாழைமரங்களோவென்று மதிக்கப்பெற்ற துடைகளையுடையவனாகவும், பீதாம்பரத்தினால் ப்ரகாசிக்கின்ற கடிதடத்தையுடையவனாகவும், சந்த்யாகால வெயிலுடன்கூடிய மேகத்தின் காந்திபோன்ற காந்தியையுடையவனாகவும், ப்ருஹ்மதேவனுடைய உத்பத்திக்குக் காரணமான தாமரைமலரால் ப்ரகாசிக்கின்ற நாபியையுடையவனாகவும், தன் உதரத்திற்குள்ளிருக்கின்ற மூவுலகங்களின் எல்லையோவென்று தோன்றுகின்ற மூன்றுரேகைகளை வயிற்றிலுடையவனாகவும், லக்ஷ்மீதேவியின் விலாசத்திற்காக ஏற்பட்ட கண்ணாடியோவென்று சொல்லத்தகுந்த கௌஸ்துபமணியாலும் தனது ஸ்வரூபமான ஸ்ரீவத்ஸத்தினாலும் ப்ரகாசிக்கின்ற மார்பினையுடையவனாகவும், மஹாபூதங்களின்வடிவுடைய வைஜயந்தியென்ற மாலையினாலும் மாறிமாறி ஊசலாடுகின்ற ஸ்ரீதேவியாலும் ப்ரகாசிக்கின்ற திருமார்பையுடையவனாகவும், அழகியபாற்கடலினின்று மெழுகின்ற அலைகள்

போல் இசைந்திருக்கும் பரிசுத்தமான பற்பல ஹாரங்களாலழகிய மார்பையுடையவனாகவும், காலதாமசஞ்செய்யாது தீநர்களை ரக்ஷிப்பதற்காகவே அகங்காரம் மனம் இவற்றின் ரூபமாகிய பாஞ்சஜன்னியமென்னுஞ் சங்கத்தையும் சுதர்சனமென்னுஞ் சக்ரத்தையும் கைகளில் தரித்தவனாகவும், பாம்பணைமீதுபரப்பிய இடதுகையையுடையவனாகவும் வலதுமுழந்தாளில்வைத்த வலதுகையையுடையவனாகவும், ரத்னமயமான கங்கணங்களுடனும் தோள்வளைகளுடனும் கூடிவிளங்குகின்ற அழகிய நான்குபுஜங்களையுடையவனாகவும், கஸ்தூரியணிந்த கண்டத்தையுடையவனாகவும், சௌந்தர்யமே என்னும் அரசாட்சிபுரிதற்குரிய சிங்காசனமாம் முகாரவிந்தத்தையுடையவனாகவும்,சிவந்த அதரத்தில் ப்ரகாசிக்கின்ற மந்தஹாசத்தையுடையவனாகவும், கண்களாகிய இரண்டுகடல்கட்கு எல்லையாக நடுவிலிட்ட அணையோவென்று நினைக்கத்தகுந்த நாசிகையையுடையவனாகவும், மூன்றுநிறங்களுடன்கூடியும் அகன்றும் நீண்டுமிருக்கின்ற நேத்ரங்களையுடையவனாகவும், கருணைக்கடல்களாகிய கடைக்கண் நோக்கங்களினால் உலகத்தை ரக்ஷிக்கின்றவனாகவும், தன் கையிலிருக்கும் சார்ங்கமென்னும் வில்லோவென்று நினைக்கத்தகுந்த புருவங்களுடன் விளங்குகின்றவனாகவும், மிகக்கறுத்தும் சுருண்டும் நீண்டுமிருக்கின்ற கேசத்தையுடையவனாகவும், மூவுலகங்களையும் ரக்ஷிப்பதற்கிசைந்ததும் விலைமதிப்பற்றதுமான கிரீடத்தையணிந்துகொண்டவனாகவும், தனது கருணைக்கிசைந்த சங்கல்பத்தையும் சங்கல்பத்திற்கிசைந்த ரக்ஷித்தலையும் ரக்ஷித்தற்கிசைந்த நல்லபக்தர்களையும் பக்தர்கட்கிசைந்த வைபவத்தையும் உடையவனாகவும், சமஸ்தகல்யாண குணங்களையும் உடையவனாகவும், பராத்பரனாகவும், எண்ணியபொருள்யாவும் எய்தப்பெற்றவனாகவும், ஸமஸ்த பாபங்களினின்றும் நீங்கியவனாகவும், முக்காலத்தையுமுணர்ந்தவனாகவும் மூன்றெழுத்தின் பொருளாகவும் மூன்றிடத்தையுடையவனாகவும் முக்குணங்களைக் கடந்தவனாகவும் முப்பொருள்களைக் கொடுக்கின்றவனாகவும் மூன்றுலங்கட்கு ஈசனாகவும் மூன்றடிகளால் உலகளந்தவனாகவும், குடையாகவும் ஆசனமாகவும் பாதுகையாகவும் கட்டிலாகவும் விளக்காகவும் வஸ்திரம் முதலியனவாகவுமிருக்கின்ற ஆதிசேஷனைப் பக்கத்திலுடையவனாகவும், மேற்கட்டியாகவும் தாசு

ஞகவும் விசிறியாகவும் மித்ரஞகவும் த்வஜமாகவும் தேர்முதலியன வாகவும் வேதரூபியாகவுமிருக்கின்ற கருடஞல் எதிரில் ஸேவிக்கப்பெற்றவஞகவும், லீலாவிபூதி நித்தியவிபூதிகளின் வ்ருத்தியைத் தனது வித்பையாகிற பிரம்பிற்கு உட்படும்படி நடத்துகின்றவரான விஷ்வக்ஸேனரென்ற சேனைத்தலைவரால் ஸேவிக்கப்பெற்றவஞகவும், பகவத் பக்திக்கிருப்பிடமாயிருக்கிற ஸநக ஸநந்தாதிகளா லிடைவிடாது மறைமொழிகளின் ஸ்தோத்திரங்களாற் புகழப்பெற்றவஞகவும், நகரவாயில் காவலில் வல்லவரான சண்டன் முதலியவர்களாலும் குமுதன் முதலியவர்களாலும் கஜவதனன் முதலானவர்களாலும் சூழப்பெற்றவஞ்கவும், அசுரர்களின் ப்ராணனைப்போக்குகின்றவைகளும் ஜயம்ஜயமென்று வாயிஞற்சொல்லுகின்றவைகளும் ப்ராணனுடன் கூடிவிளங்குகின்றவைகளுமான பஞ்சாயுதங்களால் உபாசிக்கப்பெற்றவஞகவுமிருக்கின்ற பகவான், சர்வலோகமாதாவும் தன்னையடுத்தவர்களை ரக்ஷிக்கின்றவளும் காரணங்கருதாத கருணையுடையவளும் என்றுங் குறைவற்றவளும் மூவுலகங்களையும் ரக்ஷித்தற்குரிய பட்டமஹிஷியுமான தேவியிஞல் மந்தஹாஸத்துடன் அழகிய மொழிகளால் வினவப்பெற்றனர்.

"நாதா! ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்ற மூன்று க்ருத்யங்களும் உம்முடையனவாயிருக்க அவற்றுள் படைத்தற்ருெழிலை ப்ரும்மாவிற்கும் சம்ஹரித்தற்ருெழிலைச் சிவனுக்கும் முன்பே கொடுத்துவிட்டு யாவையும் ரக்ஷித்தலே சிறந்ததென்று நினைத்து விஷ்ணுரூபத்துடன் தேவரீரே அதனைச் செய்துவருகின்றீர்; அன்றியும் புண்ய பாபரூபமான ஸகலகர்மங்களையும் ப்ரும்மஸ்வரூபத்தையும் வெளியிடுகின்ற அளவற்ற வேதங்களையும், அந்த வேதங்களின், அர்த்தங்களையே முடிவாய்ச் சொல்லுகின்ற சாஸ்த்ரங்களையும் கருணையுடன் செய்தருளினீர். இவ்வாறிருந்தும் உலகத்திலுள்ள ஜனங்கள் அநாதி வாஸநா தோஷத்தால் தன்னறிவிழந்தவர்களாய் வேதசாஸ்த்ரங்களை அவமதித்துத் தங்களிஷ்டத்தின்படியே கெட்டவழியிற் செல்லவும் அரசன் தனதாணையைக்கடந்து செல்கின்றவர்களை நல்வழிப்படுத்துதற்காகத் தானே நேரிற்செல்வதுபோலவே தேவரீரும் பூமியில் ராமகிருஷ்ணதிரூபத்துடன் அவதரித்தும் ஜனங்களை நல்வழியிற்செல்லும்படி செய்யாமல் ஏன் வந்தீர்?" என்று கேட்டனள்.

அப்பொழுது புருஷோத்தமனான பகவான், மந்தஹாஸத்துடன் அந்த ஸ்ரீதேவியைப்பார்த்து, "தேவி! நன்றாயறிவுறுத்தினை; சொல்லுவேன் கேட்பாயாக. நான் பூலோகத்திற் பற்பல அவதாரங்களை யடைந்திருந்தும் மூடர்களான மனிதர்கள் அசுரத்தன்மையை யடைந்தவர்களாய், அவர்கள் முன்செய்த பாவத்தாலும் பழக்கத்தாலும், என்னை மதியாது என்னுடைய நியமனத்திற்கு உட்படாதவர்களாய், துலாவிற்கட்டிய தோண்டியைப்போல் மாறி மாறி நரகத்தையும் ஜனநத்தையும் அடைகின்றவர்களாய், நான் கொடுத்த கர்மேந்திரியம் ஞானேந்திரியங்களைக்கொண்டு, சமித்தைக் கொய்யக் கொடுத்த கத்தியினாற் பசுவின்வாலையறுப்பதுபோல சப்தாதி விஷயங்களையனுபவிக்கின்றனர். ஆனால் நான் இப்போது அவர்களை ஈடேற்றுவதற்குத்தகுந்த மற்றோருபாயஞ் செய்திருக்கிறேன். அதாவது நான் இவ்விடத்தினின்றும் ஸ்ரீரங்கம்முதலிய திவ்யதேசங்களில் உன்னுடனும் பூமிதேவி நீளாதேவிகளுடனும் அர்ச்சாவதாரத்தைக் கைப்பற்றுகிறேன். மஹாபுத்திமான்களான அனந்தகருடாதி நித்யஸூரிகளும், பற்பல வர்ணங்களினுதித்தவர்களாய், பற்பல தேசங்களில் வசிக்கின்றவர்களாய், பற்பல ப்ரபந்தங்களைச் செய்தலாலும் பற்பல கைங்கர்யங்களை யனுஷ்டித்தலாலும், வேதாந்தங்களிலுள்ளவைகளும் சர்வவர்ணத்தார்க்குமுரியவைகளும் என்குணங்களைக் கூறுகின்றவைகளும் கானம்செய்வதற்குரியவைகளும் தமிழ் ரூபங்களுமான ஸ்தோத்ரங்களாலும், சப்தாதி விஷயங்களிற்பற்றிய மனத்தினராயும் கெட்ட சாஸ்திரங்களை யப்பியசிக்கின்றவர்களாயும் புறமத சித்தாந்தங்களில் மோகமுடையவர்களாயும் பிறவியென்னும் பெருங்காட்டிற் சஞ்சரிக்கின்ற யானைபோன்றவர்களாயு மிருக்கின்ற மனிதர்களை, எளிதில் எனது பக்திமார்க்கத்தையும் ப்ரபத்திமார்க்கத்தையு மடையும்படிசெய்து, கட்டுத்தறியில் யானையைச்சேர்ப்பதுபோல் என்னிடத்திற் கொண்டுவந்துசேர்ப்பார்கள். பின்பு நான் அவர்களை நித்யஸூரிகளைப்போலவே அங்கிகரித்துக்கொண்டு அவர்கள்செய்யுங் கைங்கர்யத்தையும் இவ்விடத்திலேயே அனுபவிப்பேன்" என்று சொல்லிவிட்டு, பகவான் நித்யஸூரிகளையும் முக்தர்களையும் தனது பஞ்சாயுதங்களையும் ஸ்ரீதேவிபூதேவிகளையும் தானுத்தேசித்தவிடங்கட்கனுப்பி

விட்டு ஸர்வப்ராணிகளிடத்திலுமுள்ள கருணையால், தானும் ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேசங்களில் அர்ச்சாரூபத்துடன் ஸாந்நித்யஞ் செய்தருளினன். பரமகாருணிகனான மதுஸூதனனால் நியமிக்கப் பெற்ற முக்தர்களும் நித்யர்களும் ஸ்ரீரங்கம் முதலியவிடங்களில் மறுபடி ஸம்ஸாரத்திலவதரித்தார்கள். குருவின் வாய்மொழியின்படி நடப்பது கடமையாகுமன்றோ?

[ஸ்ரீரங்கநாதனை ஸ்வாமியாகவும் வரவராதீசரென்பவரை குருவாகவும் வாதூலகோத்ரத்திலுதித்த வாதரென்பவரைஒப்பற்றபிதாவாகவும்லோகேசை யென்பவளைத் தாயாகவுமுடைய கருடவாகன பண்டிதரியற்றிய திவ்யஸூரி சரிதமென்னுங்காவ்யத்தில் முதல் ஸர்க்கம் முற்றுப்பெற்றது.]

## இரண்டாவது ஸர்க்கம்

இவ்வுலகத்திலுள்ள நகரங்களில் ப்ரஸித்திபெற்றதும் மோக்ஷத்தைக் கொடுக்கத்தக்கவைகளென்று சொல்லப்பட்ட நகரங்கள் ஏழிலும் முதன்மையாயெண்ணத்தகுந்ததுமான காஞ்சீபுரமென்னும் நகரமொன்றிருக்கிறது. யாதொரு நகரமானது தெளிந்தநீரையுடையதும் தாமரை முதலிய மலர்களுடன் கூடிப்ரகாசிக்கின்றதுமான வேகவதீ யென்ற நதியாற் சூழப்பெற்றுள்ளதோ, எந்தநகரத்திலுள்ள ரத்நமயமான கோபுரங்களின் காந்தியால் செந்நிறத்துடன் காணப்படுகின்ற வேகவதீநதியின் ப்ரவாகத்தைக்கண்ட தேவஸ்த்ரீகள் தேவகங்கை யென்று முதலில் சந்தேகித்துப் பொற்றாமரைமலர்களைக்காணுமையாலிது தேவகங்கையன்றெனத் தெளிகின்றனரோ, எந்த நகரத்தில் வரதராஜனுத்ஸவத்தில் கம்பீரமாய் முழங்குகின்ற பேரீவாத்யத்தின் சப்தத்தைக்கேட்ட மயில்கள் காளமேகங்களின் ஓசையென்றுநினைத்து சந்தோஷத்துடன் ‘கேகா’ என்று சப்திக்கின்றனவோ, எந்த நகரத்திலுள்ள ராஜக்ரஹங்கள் வானுலகளவுஞ்சென்றிருத்தலால் தன்சிரசில் கங்கையையும் சந்த்ரகலையையும் வகிக்கின்றவனுன அந்நகரத்திலுள்ள ஏகாம்ரநாதனை சிவனைப்போற்காணப்படுகின்றனவோ, எந்த நகரத்தில் அக்ரஹாரங்களிற் செய்கின்ற யாகங்களிலுண்டாகும் புகைகளைக்கண்ட மயில்கள் மேகங்களென்றெண்ணி சந்தோஷத்துடன் தோகைகளை

விரித்தாடுகின்றனவோ, எந்நகரத்தின்நடுவிலுள்ள அநந்தஸரஸென்ற தடாகத்தின் பக்கத்திலுள்ள ஹஸ்திகிரிசிகரத்தின் நடுவே புண்யகோடிவிமானத்தில் லக்ஷ்மீபதியானதேவராஜப்பெருமாள்உலகங்களைரக்ஷிப்பதில் ஜாக்ரதையுடையவராய் நித்யவாஸஞ்செய்கின்றனரோ, அத்தகைய சிறப்புவாய்ந்த காஞ்சீபுரியில் தாமரைத்தடாகத்தில் ஒரு பொற்றாமரைமலரின் நடுவினின்று ஸ்ரீபாஞ்சஜந்யரூபியான பொய்கையாழ்வார் ஸமஸ்தஜீவர்களையும் ரக்ஷிப்பதற்காக ஐப்பசிமாஸம் திருவோண நக்ஷத்ரத்தில் அவதரித்தருளினார். அதே மாஸத்தில் அவிட்டநக்ஷத்ரத்தில் ஸமுத்திரக்கரையிலுள்ள மல்லைநகரத்தில் நீலோத்பலபுஷ்பத்தின் நடுவினின்றும் கௌமோதகீ என்ற கதையின்ஸ்வரூபியான பூதத்தாழ்வாரவதரித்தார். அதே மாஸத்தில் சதயநக்ஷத்ரத்தில் மயூரபுரியில் (திருமயிலையில்) கொடிகள் சூழ்ந்த ஒருகிணற்றில் ஆம்பல்புஷ்பத்தினின்றும் பகவானது பஞ்சாயுதங்களில் நாந்தகமென்ற கத்தியின்அம்சம்பெற்ற பேயாழ்வாரென்ற திருநாமத்தையுடையவர் அவதரித்தருளினர்.

இவ்வாறு அயோநிஜர்களாய்த்தோன்றின இம்மூவரும் லக்ஷ்மீபதியின் பரிபூர்ண கடாக்ஷமடியாகப்பெற்ற ஞானத்தால் வ்ருத்தியடைந்த ஸத்குணங்களுடையவர்களாகவும், ஸகலவேதாந்தங்களையுமுணர்ந்தவர்களாகவும் பால்யம்முதல் ஸ்ரீமந்நாராயணனையே தமக்காதாரமாக மனத்திற்கொண்டவர்களாகவும், ஸகலபாரத்தையும் நாராயணனிடத்திலேயே வைத்தவர்களாகவும், தம்மைப்போன்றவர்கள் உலகத்திலிருக்கின்றனரோ இல்லையோவெனத் தேடித்திரிகின்றவர்களாகவும், எவ்விடத்திலும் பற்றற்றவர்களாகவும், ஒவ்வொருவரும் தனித்தனி சஞ்சரித்துக்கொண்டுவருங்கால் ஸ்ரீமந்நாராயணன், தனது பக்திமார்க்கத்திற் புகாதவர்களாகவும் சப்தாதிவிஷயங்களிற் பற்றிய பஞ்சேந்த்ரியங்களையுடையவர்களாகவுமிருக்கின்ற அறிவற்ற ஜனங்களின் அஜ்ஞாநத்தை நிவ்ருத்திக்கவேண்டுமென்ற திருவுள்ளத்தையுடையவனாய், ஸ்ரீவாமனக்ஷேத்ரமென்னுந் திருக்கோவலூரில் இவர்கள் மூவரையும் ஒன்றுசேரும்படி செய்து, மேகமில்லாமலிருக்கச்செய்தே பெருமழையையுண்டுபண்ணி, மூவரும் ஒருசிறுகுடிலுக்குட் புகுமாறுசெய்து தானும் அதனுள்ளே புகுந்துகொண்டு ஸம்ஸார தாபத்திலழுந்துகின்ற மனிதர்களை இவர்களின் திவ்யஸூ

க்தியாகிய அமிருதத்தைப்புகட்டி உஜ்ஜீவிக்கச் செய்யும்பொருட்டு, கரும்புத் துண்டுகளை நெருக்குவதுபோல மூவரையும் நெருக்கிப் பிடித்தனன்.

அப்பொழுது மூவரும் மிகுந்த சங்கடமுற்றவர்களாய் இங்கு நம் மூவரிலும்வேறாக மற்றொருவன்யாரோ வந்திருக்கிறானென நினைத்து, பரவஸ்து ஸ்வரூபத்தை ப்ரகாசப்படுத்துகின்றவைகளான, சூரியனை விளக்காகவும் ஞானத்தை விளக்காகவும் அனுபவத்தைவிளக்காகவும் ரூபகஞ்செய்துள்ள, பாசுரங்களை அவர்கள்முறையேஒவ்வொருவரும் அருளிச்செய்வாராயினர். உடனே பகவான் தனதுவிச்வரூபத்தை ப்ரகாசிப்பித்தான். அவ்வாழ்வார்கள் எம்பெருமானுடைய விச்வரூபத்தை த்யானித்து அதில் ஈடுபட்ட அந்தக்கரணங்களை யுடையவர்களாய்த் தனித்தனி ப்ரபந்தங்களைச்செய்தருளி ஸர்வஜனங்களையும் ரக்ஷிப்பதன்பொருட்டு யோகத்தைக்கைக்கொண்டவர்களாய் மறுபடியும் உலகத்தில் சஞ்சரித்து வந்தார்கள்.

## திருமழிசையாழ்வார் அவதாரம்.

காஞ்சீபுரத்தின் கிழக்குப்பக்கத்தில் ஸமுத்திரத்தின் மேல்கரையில் தனதுபெருமையால் ஸந்தோஷிக்கச் செய்கின்ற பிராணிகளையுடையதும் மிகவும்ப்ரஸித்திபெற்றதுமான மஹீஸாரமென்னும் க்ராமமொன்றுள்ளது. வேதங்களில் இடைவிடாது கூறப்படுகின்ற திவ்ய சரித்ரத்தையுடைய நாராயணன் மூன்றுலகங்களையும் ரக்ஷிப்பதற்காகவே அவ்விடத்தில் அர்ச்சாவதாரத்துடன் எழுந்தருளியிருக்கிறான். அதன் ஸமீபத்தில் பரிசுத்தமான தபோவனமொன்றுண்டு. அங்கு மயில்கள் பாம்புகளுடனும், சிங்கங்கள் யானைகளுடனும், புலிகள் மான்களுடனும் ஒன்றோடொன்று பகைமையின்றிச் சஞ்சரித்தன. அவ்வனத்தில் பார்கவரென்னும் மஹரிஷி தான் சிறந்ததபஸ்ஸின் ப்ரபாவத்தால் உயர்ந்தபதவியை அடைய விரும்பியவராய்ச் சென்றுசேர்ந்தனர்.

தபோநிதியான அம்முனிவர் தவம்புரிவதையறிந்த தேவேந்த்ரன், அவருடைய தபோமஹிமையால் தன் நிலைகுலைந்துவிடுமெனக் கலக்கமுற்றவனாய், அந்தத் தபஸ்ஸைக்கெடுப்பதற்காக ஒரு தேவஸ்திரீயை யனுப்பினன். இந்திரனாலனுப்பப்பெற்ற அத் தேவ

மகளும் அம்முனிரது தபோவனத்தையடைந்து, தனது பார்வை யால் அங்குள்ளமான்கூட்டங்களை வெட்கமுற்றோடச்செய்பவளாய், தேவேந்திரன் மனத்திற்கு ஸந்தோஷத்தை யுண்டுபண்ணக்கருதி அந்தத் தபோதனரின் முன்வந்து நின்று தனது கேசபாரங்களைச் சற்று நிலைகுலையும்படிசெய்தாள். அரையிற் கட்டியிருந்த சேலையை யும் சற்று நெகிழவிட்டு மேல்வஸ்திரத்தையும் சிறிது விலகுமாறு செய்துகொண்டாள். அவள் மற்றும் பற்பலவிதமான சிருங்கார சேஷ்டைகளைச்செய்துகொண்டே மந்தஹாஸத்துடன்கூடியவளாய் அம்முனிவரின் மனத்தை ஐம்பொறிகளுடனும் வேறுயோகத்திற் செல்லுமாறு செய்யலானாள்.

அவ்வாறு தன்முன்னிலையில் வந்துநின்ற தெய்வமகளின் வடி வழகைக்கண்ட முனிவருடைய அந்தக்கரணம் மன்மதபாணங் கட்கு இலக்காகி, யோகத்தைவிட்டு, விச்வாமித்ரரின்மனம் மேன கையிடத்திற் சென்றது போலாயிற்று. ஆகவே அவள் அம்முனிவ ருடன் கூடி, ஸுதர்சனும்சமுடையதான கர்ப்பத்தைத்தரித்தாள். அந்த கர்ப்பம் அவள் வயிற்றினின்று தைமாசம் மகநக்ஷத்திரத் தன்று பூமியில் விழுந்தது.விழவும்,ஜராயுவினால்மூடப்பட்டுவிளங்கிய அந்த மாம்சபிண்டத்தை அவள் அவ்வனத்தின்சமீபத்திலுள்ள பிரப்பம்புதர்சூழ்ந்த கிடங்கினில் வைத்துவிட்டு, தான் வந்தவாறே திரும்பிச் சென்றனள். அம்முனிவரும் அப்பொழுதே தீர்த்தயாத் திரையாகப் புறப்படலாயினர். பின்பு நிர்ஜனமான அவ்வனத்திற் கிடந்த அந்தக்கர்ப்பம் தனது ஆவரணத்தைப்பேதித்துக்கொண்டு அக்கிடங்கினிற் கருடன்போலக்குழந்தைவடிவத்துடன் பசியால் வருந்தி ஸ்தன்யபானஞ் செய்யவேண்டுமென்ற எண்ணத்தினால் தானேயழுதுகொண்டிருந்தது.

அப்போது அந்த மஹீஸாரபுரத்திற்கு நாதனாக எழுந்தருளியுள்ள எம்பெருமான் அழுதுகொண்டிருக்கும் குழந்தையிடம் வந்து தனது கருணைகடாக்ஷங்களால் அதன் பசிதீரும்படி பார்த்தருளி, உடனே மறைந்து போயினர். எம்பெருமானுடைய பிரிவையாற்றாது அக்குழந்தை மறுபடியும் அனும்மைப்போல் அழுதுகொண்டிருந் தது. அப்போது பிரம்புவிற்று ஜீவனம்செய்யும் ஜனங்கள் அக் காட்டிற்குப் பிரம்பறுப்பதற்காக வந்தவர்கள், அழுகின்றகுழந்தை யின் தீனஸ்வரத்தைக்கேட்டு அது பூனையின்குரலென்று ஸந்தேக

ஹித்து, தங்கள் பாஷையால் 'இதுபாகம்' என்று சொல்லிக்கொண்டு சமீபத்தில் வந்துபார்த்துக் குழந்தையென்றறிந்து அதற்குப் பாக மென்றே பெயர்வைத்து க்ருஹத்திற்கெடுத்துச்சென்று 'இக்குழந் தையை நன்றாய் வளர்க்கவேண்டு' மென்று தங்கள் ஸ்திரீகளிடங் கொடுக்க, அவர்களும் முற்காலத்தில் நந்தகுலத்தில் ஸ்ரீக்ருஷ்ணனை கோபியர் வளர்த்துவந்ததுபோல் வளர்த்துவந்தனர். அவ்விடத் தில் அக்குழந்தை பகவானுடைய கருணையாகிற அமுதத்தைப் பருகி வளர்ந்துகொண்டு, பால்முதலிய ஆஹாரங்களில் ஆசையற்றதாய் வாய்பேசாமலும் அழாமலு மிருப்பதுடன் தனது ஞானோதயத் தால் எல்லாப்பொருள்களையும் தான் அடைந்ததாகவே எண்ணிக் கொண்டு த்ருப்தியோடு, நீறுபூத்ததழல் போலிருந்தது.

அதன்பின்பு அம்மஹீஸாரபுரத்தில் வசிப்பவரும் அறிவிற் சிறந்தவரும், புத்திரனில்லாதவருமான ஒரு சூத்ரமுதியவர் அக் குழந்தையின் அத்புதமானசரித்திரத்தைக்கேட்டு, அதைப் பார்ப் பதற்காகப் பாலை *உபஹாரமாக எடுத்துக்கொண்டு குழந்தைவளிக் கும் சுளகுசெய்வோன் வீட்டிற்கு வந்து, திவ்யதேஜோமயமாய் விளங்குகின்ற அக் குழந்தையைக்கண்டு ஆச்சர்யமுற்று மிகுந்த பக்தியுடன் அக்குழந்தையின் கால்களில் விழுந்து வணங்கி, தான் கொணர்ந்த பாலைப்பருகியருளுமாறு வேண்டிக்கொண்டார். உடனே அக்குழந்தை அவருடைய எண்ணத்தைப் பரிபூர்த்திசெய்யவேண்டு மென்று நினைத்து அந்தப்பாலை வாங்கிப் பருகிவிட்டு அவரைப் போகும்படி யனுமதிசெய்தது. மறுபடியும் அந்த வ்ருத்தர் இவ்வித மே சிலதினங்கள் பாலைக்கொண்டுவந்து கொடுத்து அக்குழந்தையை நன்றாய் ஸந்தோஷிக்கச்செய்து, பின்புமொருநாள் தன் வயதுமுதிர்ந் த மனைவியுடன்வந்து வழக்கம்போல்பால்கொணர்ந்துஸமர்ப்பித்தனர்.

அப்போழுது அக்குழந்தை இவ்விருவரும் புத்திரனைக்கருதி நம்மிடம் வந்திருக்கிறார்களென அறிந்து, தான் உண்டுமிஞ்சியபாலை அவ்விருவருக்குங்கொடுத்து அதனைப் பருகும்படி யனுமதிசெய் யவே அவர்களும் அந்தப்பாலை உட்கொண்டனர். உடனே அவ்விரு

---

*உபஹாரமென்பது குரு, அரசன் முதலியோர்களைக் கண்டுகொள்வதற் காகக் கையிற்கொண்டு செல்லும் பழம்முதலியனவாம்.

வரும் தமது முதுமைத்தன்மை நீங்கி யௌவனப்பருவத்தை யடைந்ததோடு, அந்தச்சூத்ரஸ்திரீயும் கர்ப்பவதியாகி ஹரிபக்தியிற் சிறந்த வித்வானான ஒருபுத்ரனைப்பெற்றனள். மஹாதேஜோவானாகிய அந்தப்புத்திரனால் அந்தச் சூத்ரஸ்திரீ முற்காலத்தில்விதுரனால் அவனுடைய தாய் விளக்கமுற்றதுபோல் மேன்மை யடைந்து விளங்கினாள்.

பின்பு அக்குழந்தையின் பிதா அதற்குக் கணிக்ருஷ்ணன் (கணிகண்ணன்) என்று பெயரிட்டு ஸகலகலைகளையும் கற்பித்தார். அக் கணிகண்ணரும் பார்கவமுனிவரின் புத்ரரான திருமழிசையாழ்வாரின் பாதசேவைசெய்துகொண்டு பகவத்பக்தியிற் சிறந்தவராய் விளங்கினார். அதுநிற்க,

அந்தப் பார்க்கவபுத்ரர் பகவத்கடாக்ஷகருணாம்ருத பானத்தால் த்ருப்திபடைந்த மனஸையுடையவராய், ஆகாரம் முதலியவற்றிலும் ஆசையற்றவராய், ஸந்தோஷத்தோடு பிரம்புக்காரர்களின் குலத்தில் வளர்ந்து வந்தனர். மஹாஸமர்த்தரான அந்த யோகிச்வரர் எல்லோரையும் மயங்கும்படி செய்வதற்காகவே பிரம்புக்காரர்களின் குலத்திற்குத் தகுந்த தொழிலிலும் கல்வியிலும் பற்றுடையவராய், புண்யக்ஷேத்திரமான அந்தமஹீஸாரபுரத்தில் சுளகுகளைப் பின்னிவிற்றுக்கொண்டு காலங்கழித்தார். இங்ஙனம் பிரம்புக்காரர்களின்குடியில் வஸிப்பவராகஇருந்தும், ஆகாயத்திற்சூரியன் ப்ரகாசிப்பதுபோல் அவர் யாவர்க்கும் அறிவையூட்டுகின்ற தமது தேஜோவிசேஷத்துடன் விளங்கித்தோன்றினார். மற்றும் அவர் சிலவனத்திலும் குகையிலும் வாஸம் செய்பவராகி, அஷ்டாங்கயோகத்திற் செலுத்திய சித்தவிருத்தியுடையவராய் நிறைந்த ஞானமாகிற சூர்யப்ரகாசத்தினால் அகத்திருளைநீக்கி வாயுக்களின் மார்க்கங்களை வயிற்றின்வழியே செல்லவிடாது தகைந்து தட்டின்றி சமாதியோகத்தையடைந்தவராய், தமது சிந்தனையை இடைவிடாது பரப்ரும்மத்தினிடத்திலேயே செலுத்துவாராயினர்.

இவ்விதம் அந்தயோகியானவர் தவத்தை வளர்ப்பதற்காகவே ஏழுஸ்தானங்களை ஏற்படுத்திக் கொண்டு, அவ்விடத்தில் தனித்தனி குகையில் வஸித்து சந்தோஷத்துடன் எழுநூறு வருஷங்களைப்

போக்கினர். பின்பு அம்முனிவர் சைவம் ஆர்ஹதம் பௌத்தம் முதலிய புறச்சமயங்களிற்புகுந்து அந்தந்தச்சமயத்தின் கருத்தைப் பின்பற்றியவராயிருந்தனர். இவ்வாறு நெடுநாட் சென்றபின் அந்தந்த மதத்தின் உண்மையின் ஸாரத்தையறிந்தனர். பின்பு வ்யாஸர் கபிலர், அக்ஷபாதர், கணாதர், பதஞ்சலி, ஜைமினி என்ற இவர்கள் கூறிய சாஸ்த்ரங்களையுமறிந்து அவற்றுட் புகுந்தவராய், குத்ருஷ்டிசித்தாந்தத்தையுமறிந்தனர். இவ்விதமொவ்வொரு சித்தாந்தத்தின் ரஹஸ்யமுத்ரையை வெளியிடுதலாகிய விளையாட்டில் வல்லவராய் மஹாதேஜோவிசேஷத்துடன் கூடிய பார்க்கவமுனிவரின் புதல்வர் நூறு வருஷங்களைப் போக்கிவிட்டு சைவம் முதலிய சித்தாந்தங்களிற் கூறப்பட்ட தெய்வங்கள் யாவும் நிலையில்லாதனவென ஆராய்ந்து அம்மதங்களை யெல்லாங் கைவிட்டு, வேதாந்தங்களின் ரஹஸ்யத்திற்கு நிதர்சனமாயுள்ளது வைஷ்ணவமதமென்றறிந்து அதனையே கைப்பற்றினர். தவத்திற்குறைவிடமாகிய அம்முனிவர் ஸமஸ்தலோகங்கட்கு மாதிகாரணமாயிருக்கின்றவன் லக்ஷ்மீபதியென்றறிந்து அவன் சரணாரவிந்தங்களில் விசேஷமான பக்தியையுடையவராய் அஷ்டாங்க யோகாப்யாஸத்துடன் மூவுலகங்கட்கும் காரணமவனே யென மனதில்பாவித்தனர். அப்போது பரமகாருணிகனான ஸர்வேச்வரன் அம்முனிவரின் பரமபக்தியைக் கண்டு விச்வரூபத்துடன் ஸேவைஸாதித்தான். அதுமுதல் அம்முனிவர் பக்திஸாரரென்னும் பெயரைப்பெற்றனர். அந்தபக்திஸாரர் எம்பெருமானது விச்வரூபத்தை ஸேவித்து ஆனந்தசாகரத்தில் மூழ்கினவராய், பகவத்ஸந்நிதியில் "நான் சாக்கியம் ஆர்ஹதம் முதலிய மதங்களிலெல்லாம் ப்ரவேசித்திருந்தேன்; ஸர்வசாஸ்திரங்களையும் கண்டறிந்தேன்; என் பாக்யவசத்தால் விஷ்ணுவே பரதத்வமென்று கண்டுகொண்டேன்." என்று சொல்லிக்கொண்டு அவ்விடத்தினின்றும் பரிஸுத்தமான மற்றொரு தபோவனத்தையடைந்து தவம்செய்துகொண்டிருந்தனர்.

அப்போது பார்வதியும் சிவனும் வ்ருஷபாரூடர்களாய்ச் செல்கின்றவர்கள் அவ்வனத்தில் தவம்செய்து கொண்டிருக்கும் பக்திஸாரமுனிவரைக் கண்டனர். அவ்விருவர்களில் பார்வதியானவள்

பரமசிவனைப் பார்த்து, நாதா! "இவ்வனத்தில் உக்ரமாய்த் தவம் புரிந்துகொண்டிருக்கின்றவன் யாரென வறிந்து செல்வோம்" என்று சொல்லவே தனது பார்யையான பார்வதியின்சொல்லைக்கேட்டசந்ர சேகரன் யோகீச்வரரிடம் வந்து முனிவரரே! 'யான் மஹேச்வரன்; இங்கு வந்திருக்கிறேன். அறியீரோ? உமக்கு இஷ்டமானவரத்தைக் கேட்பீர் தருகின்றேன் என்றனர். அதைக்கேட்ட பக்திஸாரர் சிரித்துக்கொண்டு சிவனைப்பார்த்து 'ஊசிசெல்கிறவழியே நூல்செல்லும்படி வரந்தரக்கடவீராக' என்றனர். இவ்விதம் முனிவர்கூறிய பரிஹாசமொழிகளைக் கேட்டதும் சிவன் கோபாவேசத்துடன் "இம்முனிவனையும் மன்மதனைப்போல் எரித்து விடவேண்டும்" என்று நினைத்தவுடனே அவர் நெற்றிக்கண்ணினின்றும் ஜ்வாலைகளுடன் கூடியபெருந்தீயானது கிளம்பிற்று. அதனைக்கண்டதும் அம்முனிவர் தம்கால்களிரண்டையும் நீட்டினர். அக்கால்விரல்களினின்றும் அக்நிஜ்வாலையுடன் கூடிய ஸூர்யாக்நிகட்கும் அதிகமான தேஜஸ் என்று சொல்லத்தக்க அநேகம் எரிதோன்றி எரிக்கத்தொடங்கிற்று. அதைச் சகிக்கமுடியாத சந்த்ரசேகரன் புஷ்களாவர்த்தமென்னும் மேகங்களைவர்ஷிக்கும்படி செய்து எங்கும் ஜலப்ராளயமாகச் செய்தனர். அப்போது அம்முனிவர் ஸ்ரீமந்நாராயணனிடத்திற் செலுத்திய மனத்தையுடையவராய் வருஷாகாலத்தில் அசைவற்றிருக்கும் மலைபோல் சற்றும் சலியாதிருந்தனர். அதனைப்பார்த்ததும் சிவன் பார்வதியைநோக்கி அன்பிற்குரியவளே! "பகவத் பக்தர்களான பாகவதர்களை என்னால் ஜயிக்கமுடியாது. அம்பரீஷன் கோபத்தினால் அத்ரிமஹரிஷியின் புத்ரன் ஜயிக்கப் பெற்றானன்றோ!" என்று சொல்லிப் பக்திஸாரமுனிவரின் தேஜோமகிமையைப்பற்றி ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு தனது பத்நியான பார்வதிதேவியுடன் வ்ருஷபாரூடராய் தேவர்கள்வணங்கத் தன்னிருப்பிடஞ் சென்றனர்.

இரண்டாவது ஸர்க்கம் முற்றுப்பெற்றது.

## மூன்றுவது ஸர்க்கம்.

பின்பொருநாள் பார்க்கவமுனிவரின் புத்திரரான பக்திஸாரர் பரப்ருஹ்மத்தினிடத்திற்பற்றிய மனத்தையுடையவராய் ஒரு கிழிந்தவஸ்திரத்தைத் தைத்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது கொங்கணஸித்தர் என்பவர் இயல்பாகத் தாம்சென்று திரிகிறமுறைப்படி ஒரு புலிவாகனத்தின்மேலேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ச் சஞ்சரித்துத் திரிகிறகாலத்தில் இவரிருக்குமிடத்திற்கு நேராகவந்தவுடன் இவரது தபோமகிமையால் ஸித்தரது புலிவாஹனம் செல்லாது நின்றது. அப்பொழுது ஸித்தர் "ஓஹோ! இஃதென்ன ஆச்சர்யம்! நமது வாஹனம் விரைந்துசெல்லும் கதியைத் தடுப்பவர் விண்ணுலகத்திலும் ஒருவருமில்லையே; இப்படியிருக்க இம்மண்ணுலகத்தில் எவரிருக்கின்றுர்"? என்று வியாகூலமுற்றவராய் தமது திருஷ்டிகளை நாற்புறத்திலுஞ் செலுத்திப்பார்த்துவிட்டுக் கீழேயிருக்கின்ற பக்திஸாரமுனிவரைக்கண்டு தம் வாஹநத்தினின்றிறங்கிவந்து பக்திஸாரரைப் பார்த்து முனிவரரே! 'இந்தக்கிழிந்த வஸ்திரத்தைத் தைத்துக்கொண்டிருப்பதென்? இதை யெறிந்துவிட்டு நானனுக்ரகித்துக் கொடுக்கின்ற வேறுவஸ்திரத்தைப் பெற்றுக்கொள்வீர்' என்று திவ்யமான வஸ்திரத்தினுற் செய்யப்பட்ட ஒரு கஞ்சுகத்தைச் சந்தோஷத்துடன் பக்திஸாரரிடத்தில் கொடுத்து, அதன்மேலும் சூரியன்போல் ஒளியுடன்ப்ரகாசிக்கின்றதும் தானணிந்துகொண்டிருக்கின்றதுமான ஒரு ரத்னத்தையுங் காண்பித்து அந்த ரத்தினத்தின் அளவுள்ளதும் இரும்பைப் பொன்னுக்கத் தகுந்ததுமான ஒரு குளிகையுங் கொடுத்தனர்.

அப்பொழுது பக்திஸாரர் சிரித்துக்கொண்டு 'இஃதெனக்கு வேண்டியதில்லை'யென்றுசொல்லித் தமது காதிலுள்ள குரும்பையை எடுத்து அக்கொங்கணரின் குளிகையைப்போலவே செய்து 'இக்குளிகை எத்தகைய இரும்பையும் மாற்றுயர்ந்த தங்கமாக்கிவிடும்; இதைத்தருகிறேன் பெற்றுக்கொள்வீர்' என்றனர். அப்பொழுது அக்கொங்கணர் பக்திஸாரரின் மஹிமையைக்கண்டு அதிசயித்து 'இஃதென்ன! இவர்காதிற்குரும்பையே நமது குளிகையினுஞ் சிறந்ததாகக் காணப்படுகின்றதே' எனநினைத்துப் பக்திஸார

ரின் பாதங்களில் வீழ்ந்துவணங்கி அவரனுக்ரஹத்தைப் பெற்றுக் கொண்டு தமது வாஹனத்தின்மீதேறி ஆகாயத்திற் சென்றனர்.

பின்பு பக்திஸாரரும் அங்கிருந்துசென்று ஒரு குகைக்குள் நெடுநாளாகத் தவம்புரிந்துகொண்டிருந்தனர். அப்பொழுது அரண்யங்கள்தோறும் சஞ்சரித்துக்கொண்டுவருகின்ற பொய்கை யார் பூதத்தார் பேயாழ்வார் என்றமூவரும் வெகுதூரத்திலிருந்தே தமது ஞானத்ருஷ்டியால் குகைக்குள்வஸிக்கின்ற பக்திஸாரரை ஒரு தேஜோரூபமாக அறிந்தனர். அப்போது அம்மூவர்களில் பூதத்தார் பேயாழ்வார் என்ற இருவரும் 'ஆஹா! இஃதென்ன? யாவராலும் பூஜிக்கத்தக்கதாய் விளங்குகின்ற இந்த தேஜோவிசேஷமானது எந்த மஹாத்மாவினுடைய எதிரில் வ்ருத்தியடைந்துகொண்டிருக் கின்றதோ?' என்று சொல்லிக்கொண்டு தாங்கள் வந்தபடியே சென்ற னர். அவர்களில் பொய்கையார்மாத்திரம் அந்தத் தேஜோவிசேஷ மிருக்குங் குகையின் சமீபத்திற்சென்று ஞானத்ருஷ்டியால் நன்கு யறிந்து குகைக்குட்சென்று 'பார்க்கவபுத்திரரே! சுகமாயிருக்கின் றீரா?' என்றுகேட்க, பக்திஸாரமுனிவரும் பொய்கையாரைப் பார்த்து 'தாமரையிலுதித்தவரே! வந்தீரா!' என்றனர். இவ்விதமிரு வரும் சொல்லிக்கொண்டு ஒருவரையொருவர் தெண்டன் ஸமர்ப்பித் துக் கண்களிலாநந்தபாஷ்பம்பெருக சந்தோஷத்துடனொருவரோ டொருவர் ஆலிங்கனஞ்செய்துகொண்டு அவ்விருவரும் க்ஷேமவிருத் தாந்தம் விசாரித்து முடிந்தபின் பரப்ருஹ்மத்திற்சென்ற மனஸை யுடையவர்களாக இருந்தனர். இவ்விதம் முகுந்தனையே சிந்திக்கின்ற வர்களான அவ்விருவர்களின் சிநேகமானது நீருடன் நீரும் தேனுடன் தேனுங்கலந்ததுபோ லொற்றுமை யுடையதாயிருந்தது.

பின்பு அவ்விருதபோதனர்களும் கீழைச்சமுத்திரத்தின் மேற் கரையெல்லையிலுள்ளதும் மைலாபுரியென்ற நகரத்திற்கு அலங்கார மாயுள்ளதும் பாபங்களனைத்தையும் போக்கத்தக்கதுமான கைரவ தீர்த்தத்தையடைந்து அக் கைரவதீர்த்தத்தின்கரைக்கு அலங்கார மாய் விளங்குகின்ற கேசரவிருக்ஷத்தினடியிலிருந்துகொண்டு பற்பல விதமான §ஸமாதிகளைச் செய்துகொண்டு மிகுந்த சுகத்தை அனுப

§ஸமாதியென்பது தியானிக்கப்படும் வஸ்துவினிடத்தில் ஒரேநிலையாய் மனத்தை நிறுத்துதலாம். இது, தியானபேதத்திலொன்று.

வித்தனர். அப்போது பொய்கையாரிடத்திற் பலவிதமான ஸமாதி பேதங்களைக் கேட்டறிந்த பக்திஸாரமுனிவர் தமது யோகமஹிமை யால் அவ்விடத்திலேயே திருப்பதிமுதலிய நூற்றெட்டுத்திவ்ய தேசங்களிலுள்ள எம்பெருமான்களையும் வரவழைத்தனர். இவ் விதம் பலநாட்கழிந்தபின்பு பொய்கையார் தன்படியே வேறிடத்திற் கெழுந்தருளினர்.

பக்திஸாரர்தாம் ஊர்த்துவபுண்ட்ரம் தரித்துக்கொள்வதற்காக நிர்மலமான திருமண்கிடையாமல் மிகவருத்தமுற்றனர். அப்போது மூன்றுலகங்களையும் ரக்ஷிப்பதில் வல்லமைதங்கிய திருக்கண்களை யுடைய திருவேங்கடமுடையான் பக்திஸாரமுனிவரின் ஸ்வப்நத்தி லெழுந்தருளித் திருமண்ணிருக்குமிடத்தை அருளிச்செய்தனர். உடனே தபோநிதியாகிய பக்திஸாரமுனிவர் திருமண்ணிருக்கு மிடஞ்சென்று பிறரால் அடைதற்கரிய சுவேதமிருத்திகையைக் கொண்டுவந்து கேசவாதி திருநாமங்களை உச்சரித்து நெற்றிமுதலிய இடங்களில் துவாதசோர்த்துவபுண்ட்ரங்களைத் தரித்துக்கொண்டு களிப்புற்றிருந்தனர்.

அதன்பின்பு இவர் காஞ்சிபுரத்திற் கெழுந்தருளி அவ்விடத் தில் ஸயனித்துக்கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானைத் தமது திவ்யஸூக்திகளால் ஸ்தோத்ரஞ்செய்து அந்நகரின் ஸமீபத் திலிருக்கின்ற பெரியகுகையிலிருந்துகொண்டு கணிகண்ணருடன் காலங்கழித்தனர். இவ்விதம் பக்திஸாரர் ஸமாதிசெய்துகொண்டு குகைக்குள் வஸிக்குங்கால் வயதுசென்ற ஒருகிழவிவந்து தினந் தோறும் அக்குகையின் வாயிலைநன்றாய் அலகிட்டுக் கோமயங்கரைத் துத் தெளித்துப் பரிமளமான புஷ்பங்களாலும் அக்ஷதங்களாலும் அலங்கரித்துவந்தனள். இப்படியிருக்கும்போ தொருநாள் பக்தி ஸாரர் ஸமாதியினின்றெழுந்து வெளியில்வந்து அக்கிழவியைப் பார்த்து ‘உனக்கு வேண்டியதைக் கேட்பாய்; சந்தோஷத்துடன் தருகிறேன்’ என்றனர். அக்கிழவி முனிவரரைப்பார்த்து ஸ்வாமீ! ‘என்னிடத்தில் தேவரீருடைய அநுக்ரஹங் குறைவற்றிருக்குமா னல் தேவரீரது கடைக்கண்பார்வையால் எனது கிழத்தன்மையை மாற்றி ஒளிமிகுந்த யௌவனஸம்பத்தைத் தயையுடன் எனக்குக்

கொடுக்கவேண்டும்' என்றனன். உடனே பக்திஸாரர் தமது திவ்ய கடாக்ஷத்தினால் அப்பொழுதே அவளை யுவதியாகச்செய்தனர். அவள் தேவஸ்த்ரீயினுஞ் சிறந்தவடிவழகுடையவளாய் உல்லாசத்துடன் ப்ரகாசித்தனள்.

இவ்விதம் ஸர்வாங்க சுந்தரியாய்க் காணப்படுகின்றவளை அந்த ராஜ்யாதிபதியான அரசன்கண்டு மன்மதபாணங்கட்கிலக்காகி அவளை மணம்புரிந்துகொண்டனன். உலகத்தில் அழகியவஸ்துவானது எவர்கள் மனத்தையும் கவராதிருக்குமோ? அவ்வழகிய மங்கையை மணம்புரிந்துகொண்ட அவ்வரசன் நெடுநாட்சென்றபின் கிழத்தன்மையால் தனது இந்திரியங்களெல்லாந்தளர்ந்து சோர்வடைவதையும், தன்பத்நியின் யௌவனம் மாத்திரம் சற்றுங்குறைவுபடாதிருப்பதையும் கண்டு தன்தேவியைப்பார்த்து அன்பிற்குரியவளே! 'இவ்விதமான யௌவனம் மனுஷ்யஸ்திரீகளிடத்திற் காணப்படவில்லையே; இப்படியிருக்க நீமாத்திரங் குறைவுபடாத இந்த யௌவனதசையை யடைந்திருப்பதன் காரணமென்ன?' என்று கேட்டான். அதற்குஅவள் அரசனைப்பார்த்து நாதா!' நானொரு முனிவரின் கடாக்ஷத்தினால் இப்படிப்பட்ட யௌவனநிலைமை அடைந்திருக்கிறேன். இது நிற்க; அம்முனிவரின் சிஷ்யரான கணிகண்ணனென்ற ஒரு ஸத்கவிஞர் இருக்கின்றனர்; அவரைச் சந்தித்தால் உடனே அவர் மூலமாய் நீரும் அம்முனிவரரின் அநுக்ரஹத்தைப்பெற்று யௌவனப்பருவத்தை அடையலாம் என்றனள்.

இவ்வாறு தன் மனைவிசொல்லியதைக் கேட்டதும் அவ்வரசன் கணிகண்ணரையழைத்துவரச்செய்து கணிகண்ணரே! கவீந்த்ரரே! 'யான் உமது குருவைப் பார்க்கவிரும்புகிறேன்; அவரை நம்மிடம் அழைத்துவருவதுடன் இப்போது நீர் என்னைப்பற்றி அன்புடன் ஒரு கவிதையுஞ் சொல்லவேண்டுவன்' என்றனன். இப்படிச்சொல்லிய அரசனைநோக்கி கணிகண்ணனென்னும் நற்கவிஞர் கோபத்தாற் சிவந்தகண்களையுடையவராய் அரசே! 'எனது வாக்கானது ஹரியைத்தவிர்த்து மற்றொரு மனிதனையோ அல்லது தேவனையோ புகழ்வதற்கு முயலாது; யான் இதனை ஒரு பெரிய நியமமாகக்கொண்டுளேன்; அன்றியும் எனது குருவும் மற்றொருவர் க்ருஹத்திற்கு வா-

மாட்டார்' என்றனர். அக்கணிகண்ணர்சொல்லியதைக் கேட்டதும் அரசன் கோபத்துடன் அவரைப்பார்த்து, கணிகண்ணு! 'நான் சொல்லியபடி செய்யாவிட்டால் நீயும் உன் குருவும் இப்போதே எனது ராஜ்யத்தினின்றும் வெளியேறிவிடவேண்டும்' என்று குரூரமாய்ச் சொன்னான்.

இவ்விதம் அரசன் சொல்லவே கணிகண்ணர் பக்திஸாரயோகியிடஞ்சென்று வணங்கி நடந்தவிருத்தாந்தம் அனைத்தையுந்தெரிவித்துவிட்டுத் தான் ஊரைவிட்டு வெளியேற யத்தனிக்கவே, பக்திஸாரர் கணிகண்ணனைப்பார்த்து, கணிகண்ணு! 'நானும் சீக்கிரம் நீ செல்கின்ற வழியைப்பின்பற்றி வருகிறேன்; பின்பு அச்சுதனும் நிச்சயமாய் என்னைப் பின்பற்றிவருவார்; அவரைப் பின்பற்றித் தேவர்கள்யாவரும் வருவார்கள்' என்று சொல்லிக்கொண்டு பக்திஸாரர் சீக்கிரமாக அக்குகையினின்றும் வெளியேறிச்சென்று காஞ்சீநகரத்திற்குநாதனாய் ஆதிசேஷன்மீது சயனித்துக்கொண்டிருக்கின்ற பகவானான எம்பெருமானைப்பார்த்து ஸ்வாமீ! 'கோபத்துடன் கணிகண்ணனென்ற வித்துவான் இவ்விடம்விட்டுப் புறப்படுகின்றான்; நீரும் இவ்விடத்தைவிட்டுப் பன்னகப்படுக்கையையெடுத்துக்கொண்டு என்னுடன் வரவேண்டும்' என்றகருத்துள்ள பாட்டைச் சொல்லிக்கொண்டு வெளியேறினர்.

காஞ்சீபுரத்தினின்றும் பக்திஸாரர் புறப்படவே ஸமஸ்த தேவர்களுடன் பன்னகசாயியான எம்பெருமானும் பக்திஸாரருடன் மற்றொரு கிராமத்திற்கு எழுந்தருளினர். உடனே காஞ்சீபுரமெங்கும் இருள்மயமாயிற்று. அப்பொழுது அரசன் தன்னுடைய குற்றத்தால் இவ்விதம் நேர்ந்ததென்பதையறிந்து கலக்கமுற்றவனாய்த் தானும்வர்கள் சென்றவிடத்தையே நாடிச்சென்று கணிகண்ணர் பக்திஸாரரிருவரையும் வணங்கி 'நான்செய்த அபராதத்தைப் பொறுத்தருளவேண்டும்' என்று அவர்களைச் சமாதானஞ்செய்து அழைத்துவரவே பன்னகசாயியான எம்பெருமானும் ஸமஸ்த தேவர்களுடன் எழுந்தருளினர். பக்திஸாரருடன் திரும்பிவந்த கணிகண்ணர் காஞ்சீபுரத்திற்கு அதிபதியான எம்பெருமானைப் பார்த்து, காஞ்சீநாத! மாதவ! 'இவ்விடத்தில் பன்னகப்பாயலைப்

பரப்பி நித்திரைசெய்யவேண்டும்' என்ற பொருளடங்கிய பாசுரத்தை யருளிச்செய்தனர். அப்படியே யெம்பெருமானுஞ்சயனித்துக்கொண்டனர். அதுமுதல் காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுக்குச் சொன்னவண்ணஞ்செய்பவரென்ற பொருளடங்கிய யதோக்தகாரியென்ற பெயரைக் கூறுகின்றனர்.

பின்பு அந்த பக்திஸாரர் தன்மனத்திலுள்ள பக்தியே வெளிவந்ததுபோன்றதும், மூவுலகங்களையும் தனது திருமேனியாகவுடையமுராரியின் விஷயமுமான ப்ரபந்தத்தைத் தமிழ்பாஷையாற் செய்தருளிப் பெரிய தம்பாமகிமையுடன் ப்ரகாசிக்கின்றவராய் அக்காஞ்சீநகரத்தில் எழுநூறு வருஷங்களைக் கழித்தனர், பின்பு அந்த பக்திஸாரர் நின்றும், சயநித்தும், உட்கார்ந்துகொண்டும் ஸேவை ஸாதிக்கின்ற லக்ஷ்மீபதியைப் பக்தியுடன் தன்மனத்திலெழுந்தருளப்பண்ணிக்கொண்டு சோழதேசத்திற் ப்ரவேசித்துக் காவேரியின் கரைக்கு அலங்காரமாய்விளங்குகின்ற திருக்குடந்தைக்கெழுந்தருளி அவ்விடத்தில் ஆதிசேஷன்மீது சயனித்திருக்கின்றவரும் த்ரிலோகங்களையும் ரக்ஷிப்பதில் வல்லவருமான ஆராவமுதனென்ற திருநாமத்தையுடைய எம்பெருமானை ஸேவித்து அப்பெருமானைப் பார்த்து ஹேப்ரபு! ஆதிசேஷனது மெல்லிய சரீரத்தில் சயனித்துக்கொண்டு எதற்காக நித்திரைசெய்கின்றீர்? மூவுலகங்களையும் வயிற்றினின்றும் வெளியிட்டதாலுண்டான ச்ரமத்தினலோ? சத்துருக்களைக் கொன்றதனுலுண்டான வருத்தத்தினலோ? கடல் கடைந்ததனுலுண்டான சிரமத்தினலோ? அல்லது பூமியை உத்தாரணஞ்செய்ததனுலுண்டான ஆயாசத்தினலோ? அல்லது மூன்றுலகங்களையும் அளந்ததனுலுண்டான சிரமத்தினலோ? அல்லது தண்டகவனத்திற் சஞ்சரித்ததனுலுண்டான சிரமத்தினலோ? தெரியவில்லை. ஜகத்ப்ரபுவே! இதின் காரணத்தை சேஷசயனத்தினின்றெழுந்து சந்தோஷத்துடன் எங்கட்குச் சொல்லவேண்டும் என்று ப்ரார்த்தித்தனர். இவ்விதம் ப்ரார்த்திக்கின்ற பக்திஸாரரைப்பக்தவத்ஸலரான ஸர்வேச்வரன் சயனத்தினின்றும் தனது தலையைத்தூக்கிக் கடாக்ஷித்துக் கருணையுடன் அவருக்கு விச்வரூபஸேவை ஸாதித்தனர்.

உடனே பக்திஸாரர் அநந்தவேதாந்தங்களிற் கூறியிருக்கின்றபடி எம்பெருமானைத் தனது வாக்கினால் ஸ்தோத்ரஞ்செய்தனர். பின்னும் அவர் எம்பெருமானை நினைத்துத் தாமரைக்கண்ணனை எவனை நான் மயிலாபுரியிலுங் காஞ்சீநகரத்திலும் புஜகேந்திரசயனத்திலும் கண்டேனோ அவனையே இப்பொழுது எனது தவத்தின் பயனால் திருக்குடந்தையிலுங் கண்டுகொண்டேன் என்று ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு சலனமற்ற பஞ்சேந்த்ரியங்களையுடையவராய் ஆயிரத்திருநூறுவருஷங்களை அவ்விடத்திற்கழித்தனர்.

பின்பு பக்திஸாரர் அங்கிருந்து பெரும்புலியூருக்கெழுந்தருளினர். இந்தயோகி அவ்வூர் வீதியிற்செல்லும்போது அங்கு வேதாத்யயனஞ்செய்துகொண்டிருந்த பிராமணப்பிள்ளைகள் இவரைக்கண்டதும் ஓஹோ! இவன் முன்பு சுளகுவிற்றுக்கொண்டுதிரிந்த சூத்திரனன்றோ என்று சொல்லிக்கொண்டு வேதமோதுவதை நிறுத்திவிட்டுப் பேசாமலிருந்தனர். பின்பு அந்தயோகீச்வரர் சற்றுதூரஞ்செல்லவே மறுபடியவர்கள் வேதபாட்த்திற்கு ஆரம்பிக்கும்போது முன்பு வேதவாக்யத்தை நிறுத்தியவிடம்தெரியாமல் நினைவுமாறிப்போகவே, அவர்களனைவரும் இஃதென்ன ஆச்சரியமாயிருக்கின்றதென்று சொல்லிக்கொண்டு வருத்தத்துடன் அந்த பக்திஸாரயோகியைப் பின்பற்றியோடினர். தம்மைப் பின்பற்றியோடிவருகின்றபிள்ளைகளைக்கண்டதும் பக்திஸாரர் நின்றுகொண்டு அவர்கள் கருத்தைத் தாமேயறிந்துகொண்டு அங்கிருந்ததொரு கருப்பு நிறமுள்ள நெல்லை நகங்களாற்கிறியெறிந்தனர். உடனே அச்சிறுவர்கள் 'கருப்பு நெல்லை நகங்களாற்பிளத்தல்' என்றபொருளுடைய வேதவாக்கியத்தில் 'நாம் நிறுத்திவிட்டோம்' என்று நினைத்து பக்திஸாரரின் ப்ரபாவத்தைப் புகழ்ந்துகொண்டே சென்றனர்.

இப்படி அந்நகரில் இவர் வரும்போது அப் பெரும்புலியூர்க் கோயிலிலுள்ள எம்பெருமான் பக்திஸாரர் எந்தெந்த வீதியில்வருகின்றாரோ; அந்தந்தத்திசையில் தனது திருமுகத்தைத்திருப்பினர். அப்போது பகவத்ஸந்நிதியில் திருவாராதனஞ் செய்துகொண்டிருந்த ஹரிபாதரென்பவர்பார்த்து 'இஃதென்ன ஆச்சர்யம் இவ்

ஹூரில், பக்தியுடன் கூடியயோகிகளில் எவரோ விளையாட்டாக உலா வித்திரிகின்றனர்போல் தெரிகின்றது; அதனாலன்றோ எம்பெருமான் திருமுகமண்டலம் இவ்விதம் காணப்படுகின்றது'. என்று நினைத்து வெளியில் வந்து நான்குபுறத்திலும் பார்த்து பக்திஸாரரைக்கண்டனர். உடனே ஹரிபாதர்*புளகமுற்றசரீரத்தையுடையவராய் பக்திஸாரரின் திருவடிகளில் வீழ்ந்துவணங்கி ஸ்வாமீ! உமது ப்ரபாவத்தை இங்கெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் அடியேனுக்குக்காண்பித்தனர். அதனாலேயே தேவரீரை ஸேவித்துக்கொள்ளும்படி நேர்ந்தது. இதுநிற்க; 'அடியேன் இங்கு ஒருயாகம் நடத்திவருகிறேன்; தேவரீர் அவ்விடத்திற்கெழுந்தருளி அங்குச்செய்யும் அக்ரபூஜையை அங்கிகரிக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தனர். இவரும் ஹரிபாதரின் சொற்படி அவர் யாகஞ்செய்யுமிடஞ்சென்று, அர்க்யம் முதலியவற்றா லுபசரிக்கப்பெற்றவராய், முனிவரர்கள் வீற்றிருக்கும்அழகிய ஆசநத்தில் அங்குள்ளவர்களான யாகஞ்செய்விப்போர்களின் முன்பு வீற்றிருந்தனர். அப்போது ஹரிபாதர் முற்காலத்திற் சிசுபாலன்முதலிய அரசர்களின்முன்னர் தருமபுத்திரர் யதுகுலோத்தமனான கண்ணபிரானுக்கு எவ்விதம் அக்ர பூஜைசெய்தனரோ அவ்விதமே செய்தனர். இவ்வாறு பக்திஸாரயோகியை உபசரித்ததனால் அங்குள்ளவர்கள் கோபத்துடன் கொடியசொற்களைச் சொல்லி ஹரிபாதரை நிந்தித்துக்கொண்டு யாகத்தைநிறுத்திவிட்டு விரைவில் வெளியே சென்றனர்.

அப்போது மஹாவைபவத்தையுடைய பக்திஸாரர் தம்மை, 'சக்தியற்ற முனிவன்' என்று அங்குள்ளவர் இகழ்ந்ததைக் கண்டு பொறாது தமது மஹிமையை வெளியிடவேண்டுமென்ற எண்ணத்துடன் எம்பெருமானைக் குறித்து 'சக்கரக்கையனே! பகவானே! லக்ஷ்மிநாயகனே! அநாதரவுடன் என்னை இகழ்ந்தவர்களின் சொற்களைப் பொய்யாக்குதற்காக என்னுடைய இதயகமலத்தினின்றும் இங்கு வெளிவந்து உன்திருவுருவத்தைக் காண்பிக்கவேண்டும்' என்னும் பொருளடங்கிய கவிதையைக் கூறினர். இப்படிச் சொல்

---

*புளகம்-மயிர்சிலிர்த்தல்.

லியவுடனே தாமரைக் கண்ணனான பகவான் பஞ்சாயுதங்களால் ப்ரகாசிக்கின்ற கைகளையுடையவனும் லக்ஷ்மீ ஸஹிதனும் சேஷசயனத்துடன் நான்முகன் முதலானதேவர்கள்சூழ ப்ரத்யக்ஷமாகி யாகத்தையும் பயன்பெறச்செய்து மறைந்து சென்றனர். செல்லவே பக்திஸாரரும் ஸ்ரீரங்கமுதலிய திவ்யதேசங்களில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான்களை ஸேவிக்கவேண்டுமென்றெண்ணினர். ஸர்வ ஜகத்பதியான பரமபுருஷன் பக்தியிற் சிறந்த பார்க்கவயோகியின் ஹ்ருதயத்தினின்றும் வெளிவந்ததும் அங்குள்ளயாவரும் பாவத்தின் நீங்கியவர்களாய் அந்தக்ஷணமே பக்திஸாரரின் சரணங்களில் வீழ்ந்து வணங்கினர். உலகத்தில் நேர்மையான பக்தியுடையவரின் குணவிசேஷங்களில் ஈடுபடாதிருப்பார் எவரேனும் உண்டோ?

மூன்றாவது ஸர்க்கம் முற்றுப்பெற்றது.

---

## நான்காவது ஸர்க்கம்.

## நம்மாழ்வார்வைபவம்.

பாண்டிய மண்டலத்திற் கிழக்குச்சமுத்திரத்தின் மேல்கரையில் குருகையென்னும் பெயரையுடையதொரு நகர மிருக்கின்றது. அந்நகர் துவாபரயுகத்தில் குருவம்சத்திலுதித்த அரசனால் பரிபாலிக்கப் பெற்றதாய்க் குருகையென்றபெயருடன் கூடியதாய், தாம்ரபர்ணிநதி சூழப்பெற்றதாய், யாவராலும் புகழப்படுவதாய் விளங்கியது. தாம்ரபர்ணி நதியானது தன்னிடத்திலுள்ள முத்துக்களைத் தன் அலைகளாகியகைகளால் எந்தநகரத்திற்கு புஷ்பாஞ்சலிசெய்வது போல் வாரியிறைக்கின்றதோ, எந்தநகரத்தில் வேதாந்தத்தை நன்குணர்ந்தவர்களா லறியத் தக்கவனும் ஸ்ரீதேவியால் ப்ரகாசிக்கின்ற திருமார்பையுடையவனும் ப்ரபந்நர்களின் துன்பத்தை நீக்குகின்ற வைத்தியனுமான புருஷோத்தமன் முன்னரே எழுந்தருளி யிருக்கின்றானோ; எந்த நகரத்திலுள்ள மாளிகைகளில் கட்டியிருக்கின்ற கொடிச்சீரைகள் தேவகங்கையின் அலைகளில் பொருந்திவீசுகின்ற மந்தமாருதத்தினாலசைந் தூசலாடுகின்றதாய் விளங்குகின்றனவோ, எந்த நகரத்தில் இந்திரநீலமணிமயமான உயர்ந்த மாடங்களில் உலாவுகின்ற ஸ்த்ரீகள் மேகங்களில் தோன்றுகின்ற மின்னல்களோவெனும் சந்தேகத்தை விளைவிக்கின்றனரோ, எந்த நகரத்தில்

தத்தந் தவத்தின் மகிமையால் எம்பெருமானை ப்ரத்யக்ஷமாய்க் காண்கின்றவர்களும் வேதாத்யயனபரர்களும் வேதாந்தத்தை யுணர்ந்தவர்களுமான ப்ராஹ்மணர்கள் நித்திய வாஸஞ்செய்கின்றனரோ, எந்த நகரத்தில் நான்கு வருணத்தினரும் எப்போதும் பகவானிணையடிகளிலுள்ள பக்தியினால் ப்ரகாசிக்கின்ற மனஸையுடையவர்களாகவும் ப்ரபந்நர்களாகவும் விளங்குகின்றனரோ, எந்த நகரத்தில் விசேஷமாய் நாலாவது வருணத்தவர் விஷ்ணு பக்தியிற் சிறந்தவர்களாகவும் யுகத்தின் இயல்பிற்குத் தகுந்தபடி தர்மத்தையும் செல்வத்தையும் சம்பாதிப்பதில் விருப்பமுற்றவர்களாகவு மிருக்கின்றனரோ, அந்த நகரத்தில் வழுதி நாட்டிற்கு அதிபதியும் அளவற்ற ஸத்குணங்கள் நிறைந்தவரும் பாகவதர்களிற் சிறந்தவருமான நான்காவது வருணத்தினர் ஒருவர் இருந்தனர். அவருக்கு தர்மதரன் என்றொரு புத்ரர் ஜனித்தனர்.

அவர்தன் பெயருக்கேற்றபடி கலியுகத்திற் சிதைந்துபோன தர்மங்களை யெல்லாம் நிலைநிறுத்தும் தன்மையை யுடையவராயிருந்தனர். அவருக்குச் சக்ரபாணியென்றொரு புதல்வர் ஜனித்தனர். அவரும்தன் பெயருக்கிசைந்தபடி சக்ரபாணியாகிய பகவானிடத்தில் மாறாத பக்தியுடையவராய்த் தம் செல்வம் அனைத்தையும் சாதுக்களுக்கே உபயோகித்து வந்தனர். அவருக்கு ரத்தினதரன் என்றொரு புத்திரருண்டானார். அவர் ஜனங்களை த்ருப்தி செய்வதில் மிகவும் விருப்பமுள்ளவர். அவரும் மதியிற் சிறந்த செங்கண்ணன் என்ற புத்திரனைப் பெற்றனர். அச்செங்கண்ணனென்பவர் தமது புண்ணிய விசேஷத்தால் புருஷோத்தமனான எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளிற்பற்றிய மனஸையுடையவரும் அழகிய புகழாலும் செல்வத்தாலும் திசைகளைப் பரிமளிக்கச் செய்கின்றவருமான பொற்காரி என்ற புத்திரனை யடைந்தனர். அவருக்குக் காரி என்றொரு புத்திரர் ஜனித்தனர். அவர் நல்லியற்கை யுடையவராகவும் பகவத் பக்தியுடையவராகவும் இருந்தனர். அவர் யௌவந நிலைமையடைந்ததும் திருவாழ்மார்ப னென்பவரின் கன்னியான உடையநங்கையார் என்ற புண்ணியவதியை விவாஹஞ் செய்து கொண்டனர். பர்த்தாவின் பணிவிடையையே முக்யமாகக் கருது

கின்றவளும் பகவத் பக்தியால் ப்ரகாசிக்கின்றவளும் அழகிய குடில கேசங்களை யுடையவளுமான அவ்வுடையநங்கையார் புத்திரனை யடையவேண்டுமென்ற எண்ணமுடையவராயினர்.

இப்படி யிருக்கும் ஸமயத்தில் உடையநங்கையார் தான் பிறந்த க்ருஹத்திற்குச் சென்றிருந்து திரும்பி வரும்போது வழியில் திருக்குறுங்குடி எம்பெருமானை ஸேவித்து எனக்குப்புத்திரனை யனுக்கிரஹிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தனர். அங்குள்ள ஸர்வக்ஞனை எம்பெருமான் உடையநங்கையாரைக் கடாக்ஷித்து, 'புத்திரி! நானே உனக்குப் புத்திரனாக ஜநிக்கிறேன்; நீசெல்வாய்; கவலைப்படவேண்டா' என்றருளிச் செய்தனர். இதைக் கேட்டதும் உடையநங்கையார் பரம சந்தோஷத்துடன் தன் பர்த்தாவின் க்ருஹத்தையடைந்தனர். உடனே திருக்குறுங்குடி நம்பியான எம்பெருமான் தன் சேனாபதியான விஷ்வக்ஸேநரை உடையநங்கையாரின் கர்ப்பத்தில் ஜநிக்கும்படி நியமித்தனர். பின்பு சிலகாலஞ் சென்றதும் அவ்வுடைய நங்கையார், கீழ்திசையானது சூரியனைக் கர்ப்பத்தில் வஹித்ததுபோலவும் தேவகீதேவியார் யதுகுலநாதனை கண்ணபிரானைக் கர்ப்பத்தில் வஹித்ததுபோலவும் சேனைமுதலியாரைத் தன் கர்ப்பத்தில் வஹித்தனர். அப்போது அவ்வுடைய நங்கையாரின் திருமேனியானது வெளுத்த கன்னங்களையுடையதாகவும், கருத்த ஸ்தன நுனிகளையுடையதாகவும், சஞ்சலமுடைய கண்களை உடையதாகவும் காணப்பட்டது. நீலோத்பலங்கள்போன்ற நேத்திரங்களையுடைய உடையநங்கையாரின் உதரத்திற் காணப்படுகின்ற ரோமரேகையானது வயிற்றுக்குள் இருக்கின்ற விஷ்வக்ஸேநரின் கையினின்றும் உயரத்தூக்கிக் காண்பிக்கப்பட்ட அவருடைய கல்விப்பிரம்புபோல் ப்ரகாசித்தது. அம் மான் விழியாரின் உதரத்திலுள்ள மூன்று ரேகைகளும் மறைந்தன. இடையானது கண்களாற் காணும்படியிருந்தது. நாஸ்திக வாதங்களினால் மறைபட்டிருந்த ப்ரும்மத்தை எவன் அவதரித்து உண்டென்று ஸ்தாபிக்கப் போகின்றானோ அதுபோலவே உடையநங்கையாரின் கர்ப்பமானது, ஜனங்களால் இல்லையென்று சொல்லப்பட்டிருந்த நங்கையாரின் இடையை உண்டென்று சொல்லும்படி செய்

தது. அவ்வுடையநங்கையாரின் ஸ்தனங்கள் ஜனிக்கப்போகிற குழந்தை நமது பாலைப் பருகமாட்டாதென்று தம்மையிகழ்ந்து கொண்டு வருத்தத்தினால் தமது முகங்களில் பெரும்பாலும் கரு நிறத்தை வஹித்தன.

இவ்விதம் பூர்ணகர்ப்பவதியான உடையநங்கையார் கலியுக ஆரம்பத்தில் வைகாசி மாஸத்தில் வெள்ளிக்கிழமை விசாகநக்ஷத்திரத்தில் கற்கடக லக்னத்தில் புத்திரனைப் பெற்றனர். அக்காலத்தில் வித்வான்களின் மனம் மகிழ்ச்சியடைந்தது. திக்குகளெல்லாம் ப்ரகாசித்தன. நதி தடாகங்களிலுள்ள தண்ணீர் தெளிவுற்றது. மிகுந்த பரிமளத்துடன் குளிர்ந்தகாற்று சுகமாய் வீசிற்று. ஆகாயத்தினின்றும் இந்திரன் முதலிய தேவர்கள் மந்தார புஷ்பங்களை மாரி போலப் பொழிந்தனர். க்ருஹங்களில் யாகஞ்செய்கின்றவர்களின் யாக அக்கியானது ஹோமஞ்செய்த பொரிகளுடன் ப்ரதக்ஷிண ஜ்வாலைகளுடன் ப்ரகாசித்தது. அப்போது வராஹமூர்த்தியாகிய பகவான் ப்ரசவக்ருஹத்தையடைந்து ஜனித்திருக்கின்ற குழந்தைக்கு ஞானத்தை அளித்தனர். எந்த முஹூர்த்தத்தில் உடைய நங்கையார் புத்திரனைப் பிரசவித்தனரோ அதே முஹூர்த்தத்தில் ஆதிசேஷனும் உறங்காப்புளி உருவுடன் அங்கணத்தில் உத்பவித்தனன். லக்ஷ்மீபதியின் க்ருபையால் திவ்ய ஞானத்தையடைந்த அக் குழந்தை தாயின் முலைப்பாலையும் ஆஹாரத்தையும் அழுகையையும் வெறுத்தது. முலைப்பால் முதலிய வெறுக்கத்தக்க வஸ்துக்களை மறுத்தலால் தாய் தந்தையர்கள் அக்குழந்தைக்கு மாறன் எனத் தமிழ்ப்பெயரிட்டனர்.

பகவத்ஞானத்தால் நிறைந்த அறிவையுடைய மௌநியான காரி நந்தனர் உடனே உண்டாகி வளர்ந்திருக்கின்ற புளியமரத்தின் அடியை அடைந்தனர். அடைந்ததும் அம்மாறன் தனக்கிணையான ஞானமுடையவர் ஒருவரையும் தன்முன்பு காணாததால் இனி என் செய்வதென்ற நினைவுடன் புளியமரத்தினடியில் மௌனியாய் வீற்றிருந்தனர். பின்பு மாறன் என்செய்யப்போகின்றானென்பதை அறிந்துவரவேணுமென்று பகவான் பரமபதத்தினின்றும் லக்ஷ்மீ தேவியுடன் கருடன்மீதெழுந்தருளினர். வேதங்கட்கும் விஷயமா

காத ஸர்வேச்வரன் தனது த்ருஷ்டிக்கு விஷயமாகவே மாறன் ஆநந்தபாஷ்பங்களுடன்கூடிய கண்களையும் மயிர்க்கூச்சலுடன் கூடிய சரீரத்தையுமுடையவராய் ப்ரகாசித்தனர். அப்போது பரம புருஷனான எம்பெருமான் உலகத்தை ரக்ஷிப்பதற்காக நான்கு வேதங்களையும் தமிழ்மொழியால் இம்மாறன் மூலமாய் வெளியிட வேண்டுமென்றெண்ணி இவரைக் கடாக்ஷித்தான். உடனே மாற னும் எம்பெருமானுடைய அநுக்ரஹத்தால் தத்வஜ்ஞானத்தை யடைந்து ஸகல சாஸ்த்ரங்களையு முணர்ந்தவராகவும் ஸமஸ்த வேதங்களின் கரையைக்கண்டவராகவும் ஆயினர். உடனே எம் பெருமான் மறைவுற்றான்.

பின்பு மாறன் பரமானந்தபரிதராகவும், நிச்சலமான பஞ்சேந் திரியங்களையுடையவராகவும் பதினாறுவருஷங்கள்வரை அங்கிருந் தனர். வருஷங்கள் பதினாறும் பூர்ணமானவுடன் நிறைந்த மடுவி னின்று ப்ரவாஹம் வெளிவருவதுபோல் மாறனிடத்திலுள்ள பர மானந்தமானது வாக்கின்வடிவுடன் வெளிவந்தது. உடனே மாறன் பகவத்குணங்களால் அழகிய சில பாசுரங்களைச்செய்து அந்த ரஸத் தில் மூழ்கியவராய் மோஹித்து மறுபடி தெளிவுற்று வெண்ணெய் திருடுந் தொழிலுடன் மண்ணுலகில் அவதரித்த கண்ணன் வடிவழ கில் ஈடுபட்டவராய் எழுந்தருளியிருந்தனர்.

---

## மதுரகவி ஸூரிவைபவம்.

பாண்டியமண்டலத்திற்கு அலங்காரபூதமான திருக்கோளூ ரென்று ஒருதிவ்ய தேசம் உள்ளது. ஸ்ரீய:பதியான பரமபுருஷன் ஆதிசேஷன்மீது அறிதுயில்புரிந்தருளுவதாயும், வேதாந்தத்தை உணர்ந்தவர்களான வேதியர்கள் பகவானது சரணங்களை த்யானித் தலாற் பாவமற்றவர்களாய் வசித்தற்கு இடமாயும் இருப்பது அந்தத் திருப்பதியேயாகும். எவ்விடத்தில் ஹோமத்தினால் எழுகின்ற அக்நி யின் பெரும்புகை ஆகாயத்திற்சென்று தேவகங்கையை யமுனை யென்று சந்தேகிக்கச் செய்கின்றதோ, எந்த ஸ்தலத்தில் நான்குவே தங்களையும் பாராயணஞ் செய்கின்ற ப்ராஹ்மணர்களான ஸ்ரீவைஷ்

ணவர்கள் இடைவிடாது யாகங்களைச் செய்துவருகின்றனரோ, அந்த திவ்யதேசத்தில் அத்தகைய ஸ்ரீவைஷ்ணர்களுக்குள் சிறந்தவரும் சாமவேதத்தை அத்யயனம் செய்பவரும் நாராயணனையே புகலிடமாகக் கொண்டவரும் வித்வானும் பூர்வசிகை யுடையவருமான ப்ராஹ்மணோத்தமர் ஒருவரிருந்தனர்.

அப்பெரியவருக்குப் புத்திரராக, சேனநாதரான குமுதனென்னும் திருநாமமுடைய நித்யஸூரியொருவர் சித்திரைமாதம் சித்திரை நக்ஷத்திரத்தில் அவதரித்தனர். சிறந்த அமிழ்கப் பெருக்கினையுமிகழத்தக்க வாக்விலாசத்தையுடைய அவருக்குத் தந்தையார் மதுரகவி யென்று திருநாமம் சாற்றினர். அந்த மதுரகவியார் தாயின் கர்ப்பத்திலிருக்கும்போதே சேஷசயனனான எம்பெருமானுடைய அநுக்ரஹத்தால் பரதத்துவத்தை அறிந்து அஷ்டாங்க யோகத்தைக் கைப்பற்றினவராய் மனதினால் அவ்வெம்பெருமானையே த்யானித்துக் கொண்டு அவ்வூரில் வஸித்துவந்தார். பின்பு அம்மதுரகவியார் பூமியில் அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களின் திருக்கோயில்களையும் தீர்த்தங்களையுங் கண்டு ஸேவித்து அங்கங்கே சிலகாலம் வீற்றிருந்தருளி மற்றும் பூதலத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களின் திருமாளிகைகளையும் தீர்த்தங்களையும் ஸேவித்துக் கொண்டவண்ணமே ப்ரதக்ஷிணமாய் ஸஞ்சரித்தனர்.

இவ்விதமாக அவர் ஸஞ்சாரஞ் செய்தகாலத்தில் ஒருநாள் தென்திசையில் சூரியதேஜஸ்ஸிலும் மிகுந்த ப்ரகாசமுள்ள ஒரு தேஜோ விசேஷமானது அவருடைய கண்களுக்குத் தோன்றிற்று. அந்த ஒளியினைக் கண்டதும் மதுரகவியார், 'ஓஹோ! இவ்வுலகத்தில் மஹாதேஜோ விசேஷமுள்ள ஒரு யோகீச்வரர் வசிக்கின்றாராகவேண்டும்' என்று தன்மனத்தினுள் நிச்சயித்துக்கொண்டு, அவ்வுண்மையைச் சென்று காணவேண்டுமென்ற எண்ணத்துடன் நித்யதரித்திரன் நிதியை அடைந்ததுபோல் மிகவும் சந்தோஷத்துடன் திருக்குருகூர் நகரை நாடிவந்தனர். மதுரகவியார் தன்னை நாடிவருவதை ஞானத்ருஷ்டியினால் அறிந்த குருகைநகர்க்கதிபரான சடகோபர் அம்மதுரகவியிடத்துள்ள பரமக்ருபையால்

யோகாப்யாசத்தை விட்டுக்கண்களை விழித்துப்பார்த்தனர். பார்க்கவே அக் காரிமாறப்பிரானுடைய திவ்யகடாக்ஷத்தினால் மதுரகவியார் ஸம்பூர்ணஜ்ஞானத்தை அடைந்து அவரைத் தமது குருவாகவும் தெய்வமாகவும் நினைத்து சரணம்புரிந்து, தான் அவர்க்கு சிஷ்யனாகி ஸர்வஜனங்கட்கும் உரியதான த்ராவிடவேதத்தை அவரிடத்திற் கேட்கவேண்டுமென்று ப்ரதீக்ஷித்திருந்தார். கெட்டநோக்கத்தை யுடையவர்களின் புறமத சித்தாந்தத்தை நிராகரித்து *சடர்களைக் கோபிக்கின்ற தன்மையால் சடகோபரென்றும் பராங்குசரென்றும் ஸாதுக்களாற் கூறப்படுகின்ற பெயரினையுடைய காரியின் புத்திரரான மாறன் தன்னிடத்தில் தமிழ்வேதத்தைக் கேட்க விரும்புகின்ற மதுரகவியாருக்கு அத்தமிழ்வேதத்தின் மஹிமையைக் கூற ஆரம்பித்தனர். "ஹேமதுரகவியே! பர வ்யூக விபவ அந்தர்யாமி என்ற நான்கு ஸ்வரூபத்தையுடைய எம்பெருமானுக்கு முறையே வேதம்,பஞ்சராத்திரம்,இதிஹாசம்,ஸ்மிருதி முதலியவை ஸ்தோத்திரங்களாகின்றன. மரம் சிலைவடிவான அர்ச்சாவதார எம்பெருமானுக்கு வேதார்த்தங்கள் அடங்கிய தமிழ்ப் பாஷையானது ஸ்துதியாகின்றது. கிருதயுகத்தில் தியானத்தினாலும் திரேதாயுகத்தில் யோகத்தினாலும் துவாபரயுகத்தில் பூஜித்ததாலும் எந்தப்பலனையடைகின்றானோ மனிதன்,அதேபலனைக் கலியுகத்தில் எம்பெருமானை ஸ்தோத்திரஞ் செய்தலால் அடைகிறான். முன்பு பகவான் வியாசராகத்தோன்றி பாரதத்தை எவ்விதம் அருளிச்செய்தனனோ, அதுபோலவே இப்பொழுது ஸர்வஜனங்களையும் ரக்ஷிப்பதற்காக வேதார்த்தங்களடங்கிய தமிழ் ப்ரபந்தத்தை என் மூலமாகச் செய்தருளினன். நான்கு வேதங்களின் அர்த்தங்களடங்கிய நாலு ப்ரபந்தங்களையும் இப்போது நேராக என்னிடமிருந்து கேட்பாயாக;" என்றுசொல்லி அப்பராங்குசர் வேதார்த்தத்தைத் தமிழ் மயமாகச் செய்து, மேகம் சமுத்திரத்தினின்றும் நீரை க்ரஹித்து நல்லருசியுடையதாக்கி வர்ஷித்தல்போல் வர்ஷித்தனர்.

அந்த நாலு ப்ரபந்தங்களில் பகவத்குணங்கள் நிறைந்ததான முதலாவது ப்ரபந்தம் ருக்வேதார்த்தமயமான நூறு பாசுரங்க

*சடர்-வஞ்சகர்.

ளடங்கிய திருவிருத்த மென்பது. இரண்டாவது ப்ரபந்தமான திரு வாசிரியம் ஏழுகாண்டங்கள் அடங்கிய யஜுர் வேதத்தின் பொருளை யுட்கொண்டதாய் ஏழு பாசுரங்களால் அமையப்பெற்றது. மூன்றா வது ப்ரபந்தமான பெரியதிருவந்தாதி அதர்வணவேதத்தின் பொருள் அடங்கியதாய் எண்பத்தேழு பாசுரங்களால் அந்தாதியாக இயற்றப் பட்டுள்ளது. நான்காவது ப்ரபந்தமான திருவாய்மொழியானது சாம கானரசவடிவு அமைந்ததாகவும், பரப்ருஹ்மத்தின் பரதத்துவம் முதலிய ஐந்து நிலைமைகளையும் வெளியிடுகின்றதாகவும், கானஞ் செய்வதற்கு உசிதமாகவும் கேட்கத்தகுந்ததாகவும் ரஸப்பெருக் குடன் கூடியதாகவும், முக்தர் பக்தர் முமுக்ஷுக்கள் இவர்களின் மனதிற்கு ஆனந்தத்தை வ்ருத்திசெய்கின்றதாகவும், ஆயிரம் பாசுரங்களால் அமைந்து விளங்குகின்றது. இப் ப்ரபந்தமானது நேராக பரதத்வத்தை ப்ரகாசப்படுத்துகின்றது. இதன் முதல் பாசுரத்தின் மூன்றடிகளில் ஸர்வசாஸ்த்ரங்களின் உத்பத்திக்கு ஹேதுவான ப்ரணவ ஸ்வரூபமான மூன்று அக்ஷரங்கள் (அகார-உகார-மகாரங்கள்) தனித்தனியாகக் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ப்ரபந்தத்திலுள்ள மற்றைப் பாசுரங்களால் முடிவற்ற உபநிஷத்துக் களாற் சொல்லப்பட்ட கர்மங்களின் நிரூபணமும் ப்ருஹ்மத்தின் நிரூபணமும் காண்பிக்கப்பட்டது. இன்னும் இதிலுள்ள பாசுரங் களால் இவ்விடத்தில் உறங்காப்புளியின் கொப்புக்களில் வீற்றிருக் கின்ற அர்ச்சாக்ருதி யெம்பெருமான்களின் மஹிமையுந் தனித் தனியே சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட நாலு ப்ரபந்தங்களையும் சதுரரான மதுரகவி கள் மாறனிடங் கேட்டதும் தன்னையும் உலகத்திலுள்ள ஜனங்களை யும் பயன்பெற்றவர்களாக நினைத்தனர். பின்பு தேவுமற்றறியேனென்று மாறனையன்றி மற்றொன்றையுமறியேனென்று கூறுகின்ற மதுரகவி கள், 'மஹாமாயனான தாமோதரனிலும் குருகூர்நம்பியான என்னா சார்யனிடத்தில் என்மனம் மிகுந்த சந்தோஷத்தை யடைகின்றது; அவன் திருநாமத்தைச் சொல்வதால் என் நாவில் அமிருதம் ப்ர வஹிக்கின்றது;' என்ற கருத்தடங்கிய "கண்ணிநுண் சிறுத்தாம்பி னாற் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்" என்பது முதலிய பத்துப்

பாசுரங்களைத் தமது ஆசார்யன்விஷயமாய் அருளிச்செய்தனர். பின்பு பராங்குசர் அங்குள்ள ஸ்ரீவைகுண்டம் முதலிய எட்டு திவ்ய ஸ்தலங்களிலும் எழுந்தருளியிருக்கிற ஆதிபுருஷனான பகவானை ஆராதித்துக்கொண்டு காலத்தைக் கழித்தனர். ஆதிபுருஷனான எம்பெருமான் ப்ரீதியோடு அநுக்ரஹித்தருளின மகிழம்பூமாலையை அவர் அணிந்துகொண்டதனால் அவரை வகுளாபரணரென்று யாவரும் வழங்கிவருகிறார்கள்.

அதுநிற்க; மதுரகவிகள் பெருமைதங்கிய தன்வாக்குவிலாசங்களினால் வகுளாபரணரை ஸ்தோத்திரம்பண்ணிக்கொண்டும் அப்பராங்குசரின் திவ்யஸூக்திகளையே எப்பொழுதும் கானம்செய்துகொண்டும் காலத்தைக்கழித்தனர். இவ்விதம் பரமஞானிகளான பராங்குசரும் மதுரகவிகளும் லோகோபகாரத்தில் ஜாகரூகர்களாய் சந்தோஷத்துடன் திருக்குருகூர்நகரில் உறங்காப்புளியின் நிழலில் பகவதனுபவம்பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்கள்.

நான்காவது ஸர்க்கம் முற்றுப்பெற்றது.

---

ஐந்தாவதுஸர்க்கம்

## குலசேகராழ்வார்வைபவம்.

கேரளதேசத்தில் அத்புதமான கோழிக்கூடு என்றொரு நகரமிருக்கின்றது. எந்த நகரத்திற்கு சமுத்திரமே பெரும்பாலும் அழகாக விளங்குகின்றதோ, எந்தநகரத்தைப் பார்க்கும்போது முற்காலத்தில் ப்ரஹ்மதேவன் அமராவதிநகரத்துடன் இந்நகரத்தைத் துலையில்வைத்து நிறுக்குங்கால் இதன்பெருமை அதிகரித்ததால் இந்நகர் நிறுவையிற் றாழ்வுற்றும் அமராவதிநகரின்மஹிமை குறைந்திருத்தலால் அதுமேலே சென்றதெனத் தோன்றுகின்றதோ, எந்த நகரத்தின் கடைவீதிகளிற் குவித்திருக்கின்ற ரத்னங்களைக் காணும்போது ரத்நாகரமென்ற பெயருடைய சமுத்திரம் தன்னிடத்துள்ள ரத்னங்களைத் தன் அலைகளாகிற கைகளினா லிந்நகருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்து கொடுத்திருக்கின்றதெனத் தோன்றுகின்றதோ, எந்தநகரத்தில் உயர்ந்தமாடங்களில் வசிக்கின்றவர்களும்

மன்மதப்போர்க்கலவியால் சிரமமுற்றவர்களுமான ஸ்திரீகளின் சிரமத்தை தேவகங்காநதியின் அலைகளிற் பொருந்திவீசுகின்ற மந்தமாருதம் நீக்குகின்றதோ, எந்தநகரத்தில் நான்கு வர்ணத்தினரும் முகுந்தனை மனதில் த்யானிக்கின்றதனால் வேறு பற்றற்றவர்களாகவும் அஜ்ஞானத்தின் நீங்கி மோக்ஷத்தையே விரும்புகின்றவர்களாகவும் மஹாநுபாவர்களாகவும் வாசஞ்செய்கின்றனரோ, அந்தநகரத்தில் சோகுலத்தைப்பிரகாசிக்கச்செய்கின்றவரும் ஸ்ரீகௌஸ்துபாம்சம் பெற்றவருமான குலசேகரரென்றபெயரையுடைய ஓரரசர் மாசிமாசம் புனர்வசுநக்ஷத்திரத்தில் எம்பெருமானுடைய பரிபூர்ண கடாக்ஷத்திற்குப் பாத்திரமாய் அவதரித்தனர்.

எவர் இவ்வுலகனைத்தையும் தனது புஜத்தில் வஹித்து அரசாட்சி செய்யுங்கால் ஆதிசேஷனும், ஆதிகூர்மமும் ஸப்தகுலாசலங்களும், அஷ்டதிக்கஜங்களும் தமதுவருத்தம்நீங்கி சந்தோஷித்தனவோ, உலகத்திற் கொடியதென்று வீணுச்சொல்லப்படுகின்ற கத்தியானது எந்த அரசருடைய கையிற்பொருந்துதலால் போரில் பகைவர்களைக்கொன்று அவர்களைத் தேவலோகத்திலுள்ள அப்ஸரஸ்திரீகளுடன் சந்தோஷிக்கச்செய்கின்றதோ, எந்த அரசரின் பெருங்கொடையானது தேவதருக்களுக்கு அதிக வெட்கத்தை யுண்டுபண்ணியதால் அவ்விருக்ஷங்கள் மண்ணுலகத்தினர் கண்ணிற்குத்தோன்று தேவலோகத்தில் தமது கொம்புகளைத் தாழவிட்டுக்கொண்டு ப்ரக்கியாதி பெற்றிருக்கின்றனவோ, அக்குலசேகரமஹாராஜர் நவரஸங்கள் நிறைந்த காவியங்களிலும் ஸர்வசாஸ்திரங்களிலும் ஆதரவுடையவராய்க் கீர்த்திமிகும்படி பூமியைப் பரிபாலித்துவந்தனர்.

ஸகலஸத்குணங்களும்நிறைந்த அம்மஹாராஜருக்குப் பகவத்பக்தியதிசயத்தால் பாகவதர்களிடத்திலும் பக்தியுண்டாயிற்று. அதனால் அவர் அரமனையந்தப்புரம்வரை பாகவதர்கள் வரில் எவரும் தடைசெய்யாதிருக்கும்படி ஆஜ்ஞாபித்ததுடன், தன்னிடம்வந்த பாகவதர்களை ஸர்வவிதத்தாலும்உபசரித்துசந்தோஷிக்கச்செய்தனர். அன்றியும் அவர் பகவத்பக்தியதிரேகத்தால் மதயானையின்மேலிருந்து அரசாளும்வரையுள்ள தன்பாக்யத்தையும் கூரிய கழுநுனியில்வசித்தலாகவேநினைத்தனர். அவர் எம்பெருமானுடையதசாவதாரங்களில்

ஸ்ரீராமகிருஷ்ணர்களிடத்திலும் அர்ச்சாவதார எம்பெருமான்களில் ஸ்ரீரங்கநாதன் திருவேங்கடமுடையான் இவர்களிடத்திலும் அதிகமான பக்திமுத்ரையை நிலைநிறுத்தினர். அதிலும், ஸ்ரீ ரங்கநாதனிடத்தில் விசேஷபக்தியுடையவராய் 'எம்பெருமானுடைய கைங்கரியத்தைச் செய்கின்றவர்களுள் நானுமொருவனுக எப்போதாவேனோ?' என்றும், 'எப்போது பகவத்பக்தர்களின் திருவடிகளைப்பூஜிப்பேனோ?' என்றும் அவர் எப்பொழுதும் தம்வாக்கினுற் சொல்லிக் கொண்டே இருந்தனர்.

இப்படியிருக்கும்போதொருநாள் அரசரின்கோசக்ருஹத்தினின்றும் விலையுயர்ந்த வொரு ரத்நாபரணத்தைக் காவலாளர்களறியாமல் ஒருவன் அபஹரித்துச்சென்றனன். அதனையறிந்த கோசக்ருஹாதிபதியானவன் மஹாராஜரின் ஆபரணம் களவுபோனதனுல் அதிக வருத்தத்துடன், தன்மனதில், "வாயில்காவலரின் தடையின்றியெங்குஞ்சஞ்சரிக்கின்ற ஸ்ரீவைஷ்ணவர்களே அதனையபஹரித்திருக்கவேண்டும்" என்றுநினைத்து, அரசரிடம்வந்து' "மஹாராஜ! உங்களாபரணத்தை அபஹரித்துக்கொண்டுசென்றவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களேயன்றி வேறெருவருமில்லை" என்று தெரிவித்தனன். இவ்விதம் அவன் சொல்லியதைக்கேட்டதும் குலசேகரமஹாராஜர் கோபத்துடன் தன்வேலைக்காரனைப்பார்த்து, "ஹே துஷ்டா! நீ பாகவதர்களான ஸ்ரீவைஷ்ணவர்களின்பேரில் ஏன் வீண்பழி சுமத்துகின்ருய்? அவர்கள் இவ்வுலகத்தையே த்ருணமாய் நினைக்கின்ற உத்தமர்களன்ருே? அவர்கள் நமதாபரணத்தைப் பார்த்திருக்கவே மாட்டார்கள். இப்படியிருக்க அதனை எதற்காக அவர்கள் திருடப்போகின்றனர்? அவர்கள் நமதாபரணத்தையபஹரிக்கவில்லையென்று நானே அவர்களுக்காக உறுதிகூறுகின்றேன்" என்றுசொல்லிப் பாம்பின்குடத்தைக் கொண்டுவரும்படிசெய்து ஸபையிலுள்ளோர்கள் யாவருமறியும்படி அக்குடத்திற் கையைவிட்டுப் பாம்பைப்பிடித்தனர். அப்போது கொடிய விஷத்தையுடைய அந்த ஸர்ப்பம் அவரை ஒன்றும் செய்யாதிருந்தது. உடனே அவர் நிரபராதிகளான ஸ்ரீவைஷ்ணவர்களிடத்தில் குற்றங்கற்பித்த தம்வேலைக்காரர்களையே தண்டிக்கவேண்டுமென்று ஆஜ்ஞாபித்தனர்.

அப்போது பரமகாருணிகனான ஸ்ரீரங்கநாதன் அக்குலசேகரமஹாராஜருக்குப்பாகவதர்களிடத்திலுள்ள பரமபக்தியைக்கண்டு அனுக்ரஹிக்கவேண்டுமென்ற திருவுள்ளத்துடன் வேதம் முதலியவற்றாலும் அறியப்படாத தனது திவ்ய ஸ்வரூபத்தைப்ரகாசிப்பித்தார். உடனே அக்குலசேகரபூபதி ஸ்ரீ ரங்கநாதனனுக்ரஹத்தால் தத்வஜ்ஞானத்தையடைந்து தமிழில் நூறுபாசுரங்களடங்கிய பெருமாள்திருமொழியென்ற திவ்யப்ரபந்தத்தைச் செய்தருளினர். [வேதாந்தங்களின் பொருள்களடங்கிய அந்தப்ரபந்தத்திலுள்ள நூறு பாசுரங்களில் முப்பதுபாசுரங்கள் ஸ்ரீ ரங்கநாதன் விஷயமானவை. எழுபதுபாசுரங்கள் திருவேங்கடமுடையான், ஸ்ரீகண்ணபிரான், ஸ்ரீரகுநாதன் இவர்கள்விஷயமானவை.] பின்பு சேரகுலத்தைப்ரகாசிக்கச்செய்யவந்தவதரித்தகுலசேகரமஹாராஜர் ஸ்ரீநீளாதேவியினம்சம்பெற்றவரும் ஸ்ரீ ரங்கநாதனிடத்திற் பற்றிய மனமுடையவருமான தமது கன்னிகையை ஜகதீச்வரனான ஸ்ரீ ரங்கநாதனுக்கே விவாஹஞ்செய்துகொடுத்துத்தன் ஸம்பத்தையும்அப்பெருமானுக்கு ஸ்த்ரீதனமாக ஸமர்ப்பித்தனர். பின்பு அவர் தம்ராஜ்யத்தில் தம் குமாரனையபிஷேகஞ் செய்துவிட்டுப் பரமஸாதுக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடன் ஸ்ரீ ரங்கம் முதலிய திவ்யதேசத்தி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமான்களை ஸேவிக்கவேண்டுமென்ற திருவுள்ளத்தோடெழுந்தருளியிருந்தனர்.

## ஸ்ரீபட்டநாதர் வைபவம்.

இப்பூமண்டலத்தில் பாண்டியராஜனாற் பரிபாலிக்கப்பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூரென்ற ஒரு ப்ரஸித்திபெற்ற நகரமிருக்கின்றது. யாதொருநகரத்தின் செல்வத்தைக்கண்டு வெட்கத்தால் தேவர்களின் நகரமானது மஹாமேருவை யடைந்ததோவென்று உலகத்தாரால் நினைக்கத்தக்கதாக இருக்கின்றதோ, எந்த நகரத்திலுள்ள ரத்னமயமான மாடங்களின்மீதிருக்கின்ற ஸ்த்ரீகளின் முகசந்திரனில் தோன்றுகின்ற மந்தஹாஸமாகிய சந்த்ரிகையானது ஆகாயத்தில் தேவகங்கையைச்சேர்ந்த ஆம்பலோடைகட்கு ஆனந்தத்தைச் செய்கின்றதோ, எந்த நகரத்தின் வீதிகள்தோறும் சஞ்சரிக்கின்ற யுவதிகளின் பிறழ்கின்ற கடைக்கண்கள் ஆம்பல் புஷ்பங்களுடன் நீலோத்

பலமலர்களைச் சேர்த்துக்கட்டிய மாலைகளால் அமைந்த தோரணங்களின் அழகைச்செய்கின்றனவோ, எந்த நகரமானது அழகிய முத்துக்களாலும் ரத்னங்களாலுமியற்றியக்ருஹங்களின்மிகுந்தகாந்தியுடன் கூடிவிளங்குகின்றதோ, எந்த நகரமானது அழகினால் தேவலோகத்தையும்செல்வத்தினலளகாபுரியையும் பரிஹஸிக்கின்றதோ, எந்த நகரில் எம்பெருமான் உலகனைத்தையும் பரிபாலிப்பதில் ஜாக்ரதையுடையவனாய்த் தன்னை வணங்குகின்ற ஜனங்கட்குத் தனது கடைக்கண்களாற் குறைவற்ற சந்தோஷத்தைச் செய்துகொண்டு ஆலிலையின்மேல் சயனித்துக்கொண்டிருக்கின்றனனோ, எந்த நகரத்தில் எம்பெருமானுக்கு ப்ரீதியை யுண்டுபண்ணவேண்டுமென்று சங்கேதஞ்செய்துகொண்டு கங்கை யமுனை ஸரஸ்வதியென்ற மூன்று நதிகளும்சேர்ந்து வந்து திருமுக்குளமென்ற வியாஜத்தினால் ஸர்வஜனங்கட்கும் அபீஷ்டபலனைக் கொடுக்கின்றனவோ, அந்த நகரத்தில் லக்ஷ்மீபதியின் கடாக்ஷத்திற்கு லக்ஷ்யமானவரும் வேதஸ்வரூபியான கருடாம்சம் பெற்றவரும் ஸத்குணங்களிற் சிறந்தவருமான பெரியாழ்வாரென்பவர் ஆனிமாசம் ஸ்வாதீநக்ஷத்ரத்தில் அவதரித்தனர்.

எவரை ஸத்புருஷர்கள் யாவரும் அளவற்ற கருணைக்கிருப்பிடமாயிருப்பதினாலும் சகலகலைகளுக்கு மாச்ரயமாயிருப்பதினாலும் நிரங்குசஸ்வபாவத்தை யுடையவராயிருப்பதினாலும் விஷ்ணுசித்தரென்ற திருநாமத்தையுடையவராகச்சொல்லுகின்றனரோ எவர் பகவத்பக்தர்களில் முதல்வர்களான ப்ரஹ்லாதன் கஜேந்த்ரன் விபீஷணன் முதலானவர்களினும் மேலாகப் பரமபுருஷனான எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளில் விசேஷபக்தியைச் செய்தனரோ அந்த விஷ்ணுசித்தர் வடபத்ரசயனரான எம்பெருமானை 'நாம் ஸ்வரூபாநுகுணமான எவ்விதகைங்கர்யத்தைச்செய்து த்ருப்திசெய்விப்போம்' என்றெண்ணி எம்பெருமானுடைய தசாவதாரங்களையும்பற்றியாலோசித்துப் பார்த்து ஒன்பதாவதான அவதாரத்தில் ஸ்ரீகண்ணபிரான் தனதுசத்ருவான கம்ஸனுக்கு மாலைகட்டிக்கொடுக்கின்றவனுடைய க்ருஹத்திற்குத் தானே எவற்றை விரும்பிச்சென்றனரோ அப்படிப்பட்ட மாலைகளை நாமும் நல்ல

புஷ்பங்களால் உண்டுபண்ணி வடபத்ரசயனரான எம்பெருமானைச் சந்தோஷிக்கச்செய்யவேண்டும், என்று நிச்சயித்துக்கொண்டு அழகிய நந்தனவனமொன்றுபண்ணி அந்தநந்தனவனத்திலுண்டாகின்ற புஷ்பங்களால் தினந்தோறும் மாலைகளைக்கட்டி எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்து ஆராதித்துக்கொண்டுவந்தனர். இது நிற்க,

இவ்வுலகில் செல்வம் நிறைந்த அளகை நகருக்கிணையான மதுரை யென்றொரு நகரமுண்டு. எந்த நகரத்திற்கு நேராக இரவில் சந்திரன் ஆகாயத்தில் வரும்போது நகரத்தின் மேல்மாடங்களில் வஸிக்கின்ற மங்கையர்களின் முகங்கட்கும் சந்திரனுக்கும் வேற்றுமைகாணாது சந்திரனுடைய பத்நியாகிய ரோஹிணீதேவி திகைக்கின்றனளோ எந்தநகரத்தில் மதயானைகள் கால்களில்பூட்டிய சங்கிலிகளையுடையனவாய் மேகங்களுடன் வீதிகள்தோறும் மந்தகதியுடன் ஸஞ்சரிக்கின்றனவோ எந்தநகரத்தின் மேன்மாடத்தின் சாளரங்களிற் காணப்படுகின்ற சூரிய மண்டலமானது மேல்மாடத்திற்குள் விளையாடிக்கொண்டிருக்கின்ற ஸ்திரீகளுக்கு மணிமயமான கண்ணாடியாயிருக்கின்றதோ எந்தநகரில் மேல்மாடங்களின் சாளரங்களின்வழியாய் வெளியே செல்கின்ற கரியஅகிற்புகைகளினொழுங்கானது சிறையில் வாசஞ்செய்த பயத்தால் வெளியே ஓடுகின்ற மேகபந்திபோலிருக்கின்றதோ அந்த மதுரைமாநகரில் ஸகல நற்குணங்களாலும் புகழ்பெற்றவனும் மிகுந்த கீர்த்தியுடையவனும் சந்திரகுலத்தரசர்களில் சிறந்தவனுமான வல்லபதேவனென்ற பெயரையுடைய பாண்டியராஜன் அரசாட்சி செய்தனன். அவ்வரசன் ஒருநாளிரவினில் நகர்சோதனைக்காகத் தனித்து ரதவீதியிற்செல்லும்போது ஒரு வீட்டுவாயிற்குவெளியிற் படுத்து நித்திரைசெய்கின்ற ஒருப்ராஹ்மணனை எழுப்பி, 'நீர்யார்? க்ருஹத்தின் வாயிலில் ஏன் படுத்துறங்குகின்றீர்?' என்றனன். அதற்கந்த ப்ராஹ்மணன் அரசனைப்பார்த்து 'நான்ப்ராஹ்மணன்; கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பிவந்தேன். சிரமத்தினாலபார்ந்து நித்திரை செய்தேன்' என்றனன். அவனது விருத்தாந்தத்தைக்கேட்டதும் அரசன் தன்மனதில் இவன் சொல்லுகின்ற வாக்சாதுரியத்தாலிவன் வித்வானாக இருக்கவேண்டுமென் றெண்ணிக்கொண்டு அந்தப்ராஹ்

மணனைக்குறித்து அந்தணரே! இப்பொழுது நீர் ஏதேனுங் கற்றறிந்த விஷயத்தி லொன்றைச் சொல்வீர் என்றனன்.

இவ்விதம் அரசனால் வினவப்பெற்ற அந்தப்ராஹ்மண சிரேஷ்டன் அதிகம்பீரமான தோற்றத்துடன் காணப்படுகின்ற இவன் இந்நகரத்திற்கு அரசனாகவேயிருக்கவேண்டும் என்று நினைத்துச் சந்தோஷத்துடன் அரசனைப்பார்த்து இந்திரனுக்கிணையான பலத்தினையுடைய அரசே! இப்போது யான் சொல்லுகின்ற மங்கள கரமான வசனங்களைக்கேட்பீராக; "ஒருவன் வருஷாகாலத்திற்கு வேண்டுவனவற்றை எட்டு மாதங்களில் தேடிவைத்துக்கொள்ள வேண்டும்; இராவிற்காகவேண்டியதைப் பகலில் தேடிவைத்துக் கொள்ளவேண்டும்; கிழப்பருவத்திற்கு வேண்டியவற்றை யௌவந தசையிலே சம்பாதித்துவைத்துக்கொள்ளவேண்டும்; பரலோகத் திற்காகவேண்டியகார்யங்களை இந்த ஜன்மத்திலேயே செய்து கொள்ளவேண்டும்" என்ற பொருளடங்கிய ஒரு சுலோகத்தைச் சொன்னான்.

அதனைக்கேட்டதும் வித்வானான அரசன் தன்மனதில் 'நமக்கு இம்மைக்கு வேண்டுவனவற்றில் யாதொன்றுமே தேடவேண்டிய தில்லை. ஆனால் மறுமைக்கு வேண்டுவனவற்றுக்குச் சீக்கிரத்தில் ப்ரயத்னஞ்செய்யவேண்டும்.' என்று நினைத்துக்கொண்டு வருத்தத் துடன் மறுபடி தனது அரமனைக்குச் சென்றனன். பின்பு மறுநாள் காலையில் அரசன் ஸபையில் தன் புரோஹிதரான செல்வநம்பி யென் பவரையழைத்து, குருவே! இதுவரை நான் இம்மைப்பயனையே பெரிதாக எண்ணிக்கொண்டு காலத்தை வீணாய்க்கழித்துவிட்டேன்; ஆதலால் இனிமேல் தத்வஜ்ஞானத்தால் அடையவேண்டிய புரு ஷார்த்த ஸித்தியானது எவ்வாறுண்டாகுமோ அதனை எனக்குக் கூறவேண்டும் என்றனன். இவ்விதமரசன் சொல்லவும் புரோஹிதர் அரசனைப்பார்த்து மஹாராஜ! பரமாத்மஸ்வரூபத்தை யறிவதென் ருல் எளிதன்று; ஆனால் தர்மங்களையறிந்த மஹான்களிடத்தினின் றும் வேதங்களினால் நிச்சயிக்கப்பெற்ற பொருள்களைக்கேட்டறிந்து அதன்மூலமாய்ப் பரதத்வ லாபம் பெறவேண்டும் என்றனர். அர சனும் அதற்குச்சம்மதித்து அப்படியே செய்வோமென்று சந்தோ

ஷத்துடன் மிகுந்ததிரவியங்களடங்கிய முடிப்பை ஸபையிற்கட்டி வைத்து 'இந்தக்கிழியை மஹான்களாக இருக்கின்றவர்கள் எனக்கு ஸத்கதியில் நேர்ந்துள்ள சந்தேகத்தை அறுத்து அதன்பின் அறுக்க வேண்டும்' என்றனன்.

இப்படியிருக்கும்போது ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபத்ரசாயியான எம்பெருமான் 'ஸ்ரீவிஷ்ணுசித்தர்மூலமாய்ப் பரமார்த்தங்களை வெளியிட்டு லோகோபகாரஞ் செய்யவேண்டும்' என்ற திருவுள்ளத்துடன் பெரியாழ்வாரைப் பார்த்து 'வாரீர் விஷ்ணுசித்தரே! இப்போது மதுரையில் அரசன் தத்வார்த்த நிச்சயத்திற்காக பஹுத்ரவ்யங்களை சுல்கமாகக் கட்டிவைத்திருக்கிறான். நீரிப்போதே மதுரைக்குச்சென்று அரசனால் கட்டப்பட்டிருக்கும் கிழியைச் சேதித்துவரவேண்டும்' என்றனர். அதைக்கேட்டதும் ஆழ்வார் எம்பெருமானைப்பார்த்து ஸ்வாமீ! வேதார்த்தங்களின் உண்மையையறிந்த மஹான்களால் செய்யக்கூடிய காரியத்தை மண்வெட்டி வேலை செய்ததால் தழும்பு பட்டிருக்கிற என் கையைக்காட்டி சாதித்துவிடலாமோ? என்றனர். இப்படிச்சொல்லுகின்ற ஆழ்வாரைப் பார்த்து ஸர்வேச்வரன் 'வேதாந்தங்களின்ஸாரத்தை வெளியிடுவது உமது பாரமன்று; அதற்கு நானிருக்கிறேன். நீர்இப்போதே மதுரா நகரஞ்சென்று கிழியைக் கைப்பற்றிக்கொள்வீர் என்றருளிச்செய்தனன்.

இவ்விதம் பரமாசார்யனான எம்பெருமானால் நியமிக்கப்பெற்ற விஷ்ணுசித்தர் ஸ்ரீராமபிரானது நியமனத்தால் ஆஞ்சநேயன்கடலைக் கடந்து சென்றதுபோல வேகவதீநதியைக்கடந்து மதுரைக்குச் சென்று அரசன்ஸபையை யடைந்தனர். ஸ்ரீவிஷ்ணுசித்தரைக்கண்டவுடன் செல்வநம்பியென்னும் ராஜபுரோஹிதர் அரசனுடனெழுந்திருந்து விஷ்ணுசித்தரைவணங்கி அர்க்கியம் முதலியவுபசாரங்களால் அவரை சந்தோஷிக்கச் செய்தனர். அப்போ தங்குள்ள வித்வான்கள் அனைவரும் அசூயையினால் அரசனை நிந்திக்கத்தொடங்கினர். அந்தச்சமயத்தில் செல்வநம்பி விஷ்ணுஸித்தரின்சமீபத்தில்வந்து அவரைச் சரணமென்றடைந்து ஸ்வாமீ! 'வேதாந்தங்களின் உட்பொருளாகிய சரமபுருஷார்த்தத்தை இப்போது வெளி

யிட்டருளவேண்டும்; என்று ப்ரார்த்தித்தனர். அப்போது ஸ்ரீவிஷ்ணுசித்தர் முற்காலத்தில் பிரம்மாவின் அநுக்ரஹத்தால் வால்மீகிமகரிஷியானவர் ஸகல வேதார்த்தங்களையு மறிந்ததுபோல் எம்பெருமான் அநுக்ரஹத்தால் ஸகல வேதார்த்தங்களையுங் கண்ணால் கண்டதுபோல் மனத்திற்கண்டனர். உடனே ஸ்ரீவிஷ்ணுசித்தர் வேதாந்தத்தின் முடிவான பொருளை ராஜஸபையிலுள்ளோர் யாவரும் ஆச்சர்யப்படும்படி வெளியிட பஹுத்திரவியங்களடங்கிய கிழியறுபட்டு ஸ்ரீவிஷ்ணுசித்தரின் சமீபத்தில் வந்து விழ்ந்தது.

இதைக்கண்டதும் அரசன் மிகவும் ஆச்சர்யமுடையவனாய் விஷ்ணுசித்தரை யானையிலேற்றிவைத்து ஸகல சைநியங்களுடனும் வித்வான்களுடனும் தானும் பின்சென்றுகொண்டு விஷ்ணுசித்தரை நகர்வலஞ் செய்வித்தனன். இவ்விதம் தன் பரமபக்தரான விஷ்ணுசித்தர்நகர்வலம்வருகின்றமஹோத்ஸவத்தைப்பார்க்கவேணுமென்ற பகவான் ஸ்ரீதேவியுடன் கருடன்மீதெழுந்தருளி, பிரம்மாதிதேவர்கள் சூழ அந்த மதுராநகரத்திற்கு நேராக ஆகாயத்தில் விஷ்ணுசித்தர்க்கெதிரே ஸேவை ஸாதித்தனர். எப்பெருமானைக் கண்டதும் விஷ்ணுசித்தர் பரமானந்த பரவசராய் 'ஈதென்ன ஆச்சர்யம்! காலதேசங்களாலளவிடப்படாத ஆதிவஸ்துவானது இப்போது இவ்விடத்தில் எவ்விதங் கண்கட்கு விஷயமாயிற்று' என்று ப்ரேமாதிசயத்தால், எம்பெருமானுக்கு ஏதேனும் தீங்கு நேருமோவென்று சந்தேகித்துக்கொண்டு தனது வாக்கினால் மங்களாசாஸனம் பண்ணினார்.

ஸ்ரீவிஷ்ணுசித்தர் மற்றொருவராலும் அடையத்தகாத மேன்மையை அடைந்திருந்தும் எம்பெருமானிடத்துள்ள தமது பக்திவிசேஷத்தால் தாழ்ந்தவராகவே காணப்பட்டனர். ஏனெனில் உலகத்தில் நல்ல நெற்பயிர்கள் நன்றாய்க்கதிர் முதிர்ந்ததும் தலைவணங்குகின்றனவேயன்றி வரகு முதலிய புன்பயிர்கள் வணங்குகின்றனவில்லை யன்றோ! ஸ்ரீவிஷ்ணுசித்தர் எம்பெருமானிடத்தில் ஸர்வக்ஞத்வம், ஸர்வரக்ஷகத்வம், ஸர்வசக்தித்வம் முதலிய குணங்களிருந்தும் வெளியில் ப்ரகாசமாய்க் காணப்படுகின்ற ஸர்வேச்வரனுடைய ஸௌந்தர்யம் முதலிய குணங்களைக்கண்டு மோஹித்து அப்போது தான் வீற்றிருந்த யானையின்மீது போட்டிருக்கும் மணிகளையே

தாளங்களாகக் கையிலெடுத்துக்கொண்டு ஸ்ரீமாலாகாரபீடத்தினின்றும் மாலையை க்ரஹித்துக்கொண்டு சாணூரனுடன் போர் புரிந்து வெற்றிபெற்ற புஜங்களையுடைய எம்பெருமானுடைய புஜங்களுக்கும், அவன் திருமார்பில் வீற்றிருக்கும் ஸ்ரீதேவிக்கும், அவனது திவ்யாயுதங்களான சங்கசக்ரங்கட்கும், நித்ய மங்களாசாசனம் பண்ணிவிட்டு மறுபடியும் அவர் கிருஷ்ணாவதாரத்தி லீடுபட்ட மனசையுடையவராய் எம்பெருமான் கோபாலர்களின் வம்சத்தில் ஜனித்தது தொடங்கி அவனுடைய ஸமஸ்த லீலைகளையும் அனுபவித்தனர்.

அதன்பின், எம்பெருமானுடைய அனந்தமான திவ்ய லீலைகளின் அனுபவாதிசயத்தாலுண்டான ஸ்ரீவிஷ்ணுசித்தரின் சந்தோஷமே மனதினின்றும்வெளிவந்து லோகோபகாரத்தின்பொருட்டுத் தமிழ் வாக்ரூபமான ப்ரபந்தமாயிற்று. பின்பு ஆகாயத்தில் காணப்பட்ட எம்பெருமான் தன்னுடைய சக்தி விசேஷத்தை அவ்விடமுள்ள அர்ச்சாவதாரத்தில் வைத்துவிட்டு அப்படியே மறைந்து சென்றனன். அவ் விஷ்ணுசித்தரும் வல்லபதேவராஜனால் உபசரிக்கப்பெற்று ஸ்ரீவில்லிபுத்தூருக் கெழுந்தருளினர்.

அப்போது அங்குள்ளார் யாவரும் நகரை நன்றலங்கரித்து சந்தோஷத்துடன் ஸ்ரீவிஷ்ணுசித்தரை எதிர்கொண்டு வந்தனர். விஷ்ணுசித்தரும் வந்தவர்களெல்லோரையும் உபசரித்துப் பேரானந்தத்துடன் நகருட்சென்று வடபத்திரசயனரின் ஸன்னிதிக் கெழுந்தருளி எம்பெருமானை ஸேவித்துத் தான் ஜயத்துடன் கொண்டுவந்த தனத்தையும் யானையையும் பெருமானுக்கென்றே ஸமர்ப்பித்துப் பரமானந்தத்துடன் தன் திருமாளிகைக் கெழுந்தருளினர். இவ்விதம் வல்லபதேவராஜன் கோஷ்டியில் மகாவித்வானான ஸ்ரீபட்டநாதர், சாஸ்திரார்த்தங்களை யெல்லாம் ஒற்றுமைப்படுத்தி ஸ்ரீலக்ஷ்மீபதியே பரதத்வமென்று வெளியிட்டு ஸர்வஜனங்களும் உஜ்ஜீவிக்கும்பொருட்டுப் பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு என்னும் இரண்டு திவ்யப்ரபந்தங்களையும் செய்தருளி வீதியார வருவானை சர்வேச்வரனுக்குப் புஷ்பகைங்கரியம் செய்துகொண்டெழுந்தருளியிருந்தனர்.

ஐந்தாவதுஸர்க்கம் முடிந்தது.

## ஆருவது ஸர்க்கம்.

## தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்.

---

சோழதேசத்திற் காவேரிக்கரையில் மண்டங்குடி யென்றொரு பெரிய கிராமமிருக்கின்றது. அந்தக் கிராமத்தில் எழுநூறு பிராமணர்கள் வசித்தனர். அவர்களில் சில ப்ராமணசிரேஷ்டர்கள் ருக்வேதிகளாகவும், சிலபெரியோர்கள் எஜுர்வேதத்தை யுணர்ந்தவர்களாகவும், மற்றையோர் சாமவேதகானஞ்செய்வதில் வல்லவர்களாகவும், முன்குடுமியை யுடையவர்களாகவு மிருந்தனர்.

அந்தக் கிராமத்தி லெழுந்தருளியிருக்கின்ற லக்ஷ்மீபதியான ஸர்வேச்வரன், பரமபதத்தில் வசிக்கின்ற நம்மை இக்கலியுகத்திலுள்ள மனுஷ்யர்கள் காணமுடியாதவர்களாக இருக்கின்றன ரென்றெண்ணியே, ஜனங்களின் புண்ணிய விசேஷத்தால் எழுந்தருளியிருக்கின்றனனென்றெவனக் காணப்படுகின்றனன். அவ்வூரில் வாயுமுதலிய தேவர்கள், கிருஹங்கள் தோறும பிராமணர்கள் நடத்தும் யாகங்களில் ஹவிர்பாகத்தைப்பெற்றுக்கொள்ள வேண்டுமென்றே அங்குள்ள குடும்பிகளாக ஆயினர் போலக் காணப்படுகின்றனர்.

அந்தக்கிராமத்தில் பிராமண சிரேஷ்டரான ஒரு பாகவதருக்கு மார்கழி மாசம் கேட்டைநக்ஷத்திரத்தில் எம்பெருமான் திருமார்பினி லணிந்துள்ள துளசிமாலையினம்சம் பெற்றவரான விப்ரநாராயணரென்ற பெயரையுடைய ஒருபுத்திரர் ஜனித்தனர். இவரை மாதாவின் கர்ப்பத்திலிருக்கும்போதே ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீதேவியின் முககமலத்தில் விளையாடும் வண்டுகளாகவும், அளவற்ற கருணையுடன் கூடியவைகளாயுமிருக்கின்ற தனது கடைக்கண்களால் கடாக்ஷித்தருளினன். இந்த விப்ரநாராயணர் ப்ராப்த காலத்தில் தமபிதாவினால் உபநயனஞ்செய்விக்கப் பெற்றுக் கல்விக்கடலின் கரைகண்டவராய் சம்சாரத்தில் பற்றற்றவராய் ஸ்ரீரங்கநாதனை ஸேவித்துக்கொண்டு எம்பெருமானுடைய அந்தரங்க கிங்கரர்களில் முதன்மை பெற்றவராய் பிக்ஷையெடுத்து ஜீவனம் பண்ணிக்கொண்டு ஸ்ரீபுண்டரீகனென்னும்பாகவதரின் கிருத்தியத்தை அவர் திருவுள்ளத்திற் கனுகூலமாய்ச்செய்யவேண்டுமென்ற எண்ணத்

னுடன் திருமுடிக்குரையென்ற பெயரையுடையதின் (ஸ்ரீரங்கத்தின்) மேற்கெல்லையில் பற்பல விருக்ஷங்களையும் துளசி முதலிய திவ்ய கந்தமுள்ள புஷ்பச்செடிகளையும் வைத்து உண்டுபண்ணி அந்த நந்தவனத்திலுண்டாகின்ற புஷ்பகதம்பங்களால் எம்பெருமான் திருவடிகள்வரை தொங்கக்கூடிய மாலைகளைக்கட்டி எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்து எம்பெருமானுக்கேற்பட்டிருக்கின்ற தாமோதரனென்னும் பெயரைக் காரணப்பெயராக்கினர்.

இப்படி விப்ரநாராயணர் திருமாலைக்கைங்கர்யம்பண்ணிக்கொண்டிருக்குங்காலத்தில் ஸ்ரீரெங்கநாதன், பக்தர்களிடத்தில் தனக்குள்ள ப்ரேமாதிசயத்தை வெளியிட்டுக்காட்டி இவரை ரக்ஷிக்க வேண்டுமென்ற திருவுள்ளமுடையவனாய் ஒரு விளையாட்டைச் செய்ய நினைத்தான். ஆகவே காவேரியின் வடகரை ப்ரதேசத்தில் தேவஸ்திரீயின் அம்சம்பெற்றவளான தேவதேவி யென்றொரு வேசை, தனது வடிவழகால் யாவரையும் மயங்கச்செய்து, அவரவர் வர்ணாச்ரம தர்மங்களை யழிக்கின்றவளாய் ஜனித்து விளங்கினள்.

அவள் ஒருநாள் உறையூரரசனிடஞ் சென்றுவிட்டு தன் வேலைக்காரிகளுடனும் தன் தமக்கையுடனும் திரும்பி வரும்போது வழியில்வந்த சிரமந்தீர்தற்பொருட்டு ஸ்ரீரெங்கநாதனுடைய உபவனத்தில் ஒருமரத்தின் கீழ்த்தங்கியிருந்தனள். அப்போது அவள் தன் தமக்கையைப்பார்த்து, "அக்காள்! இந்த உபவனத்தினழகைப் பார்; இது எங்களை ஆநந்திக்கச் செய்கிறது; குபேரனுடைய சைத்திரரதமென்னும் உத்தியானத்தையும் பரிஹஸிக்கின்றதாய் விளங்குகின்றது; இதிலுள்ளவிருக்ஷங்கள் வண்டுகளின் இன்னிசைகளால் நமது நல்வரவை விசாரிகதுப் புஷ்பங்களாலர்க்கியங்கொடுத்தும், புஷ்பரசங்களினால் பாத்தியங்கொடுத்தும், உபசரிக்கின்றன; இந்த உத்தியானத்தில் மன்மதன்வில், நாண், அம்பு, ரதசக்கிரம், குதிரைகள், காஹளவாத்தியம் முதலிய போர்க்கருவிகளிருத்தலால் மன்மதவீரன் இதில் விளையாடுகின்றனன். இவ்வுபவனத்தில் பிரியாளம், தண்டேகளி, ரசாலம், சாலம், தமாலம், மாலதி, அதிமுக்தம், முதலிய

விருக்ஷங்கள் புஷ்பரசத்தின் பரிமளங்களால் வண்டுகட்கு மதத்தை யுண்டுபண்ணுகின்றன. இவ்வுபவனலக்ஷ்மியென்னும் மங்கையானவள் கொடிகளாகிய கைகளையும் புஷ்பதூளிகளாகிய* அங்கராகத்தையும் மலர்களாகிய மந்தஹாசத்தையும் புதிய தளிர்களாகிய அதரத்தையும் உடையவளாய்க் குயில்களின் இன்னிசையால் இங்கு வருகின்றவர்களை ப்ரத்திபக்ஷமாய் நல்லவரவுசொல்லி யுபசரிக்கின்றனளோ வெனத்தோன்றுகின்றது. அக்காள்! இங்குள்ள வாபிகளில் மலர்ந்திருக்கின்ற அரவிந்தம் இந்தீவரம் கல்ஹாரம் முதலிய புஷ்பங்களின் பரிமளத்துடன் கூடிவருகின்ற மந்தமாருதமானது எதிர்கொண்டுகாண வருகின்ற பந்துவைப்போலவே சந்தோஷத்தையளிக்கின்றது. இவ்வுபவனத்தைக் கண்டமாத்திரத்திலேயே என் சிரமமெல்லாம் நீங்கிவிட்டது. இப்படியிருக்க, இந்த ஆராமத்தினுள்ளே ப்ரவேசித்தது இன்னும் அதிக ஆனந்தத்திற்கே ஹேதுவாகின்றது" என்று கூறினள்.

இப்படிச்சொல்கின்ற தேவதேவியை நோக்கி, சிரித்த முகத்துடன்கூடிய அவள் தமக்கையானவள் மிகவும் ஆதரவுடன், "சகோதரீ! நீ என்ன இலேசாய்ச்சொல்கின்றனை. இவ்வுபவனமானது வேட்டையாடி பெழுந்தருள்கின்ற ஸ்ரீரங்கராஜரின் சிரமத்தையே போக்கடிக்கின்றதே. இப்படியிருக்க வழிநடந்துவந்த நமது வருத்தத்தை நீக்கிற்றென்பது என்ன ஆச்சரியம்" என்றனள்.

இவ்விதம் அவ்விருவரும் அந்த ஆராமத்தின் அழகைப்பார்த்த வண்ணமே சம்பாஷித்துக்கொண்டு வரும்போது அவ்விடத்தில் வேலைசெய்துகொண்டிருக்கின்ற விப்ரநாராயணரைக் கண்டார்கள். அவர் தமது அங்கமெங்கும் வளர்ந்திருக்கின்ற ரோமங்களை யுடையவராகவும், வளர்ந்து தொங்குகின்ற மீசையையுடையவராகவும், வெளுத்த பற்களை யுடையவராகவும், கழுத்தில் துளசி தாமரை மணிகளை அணிந்துகொண்டவராகவும், வெட்டப்பட்டிருக்கின்ற சிறு குட்டத்தினின்றும் குடத்திற் றண்ணீர் கொணர்ந்து புஷ்பச்செடிகட்கும், புஷ்ப விருக்ஷங்கட்கும் தாம் கட்டியிருக்கின்ற

* அங்கராகம்-சரீரத்தில் பூசும் குங்குமம் முதலியன.

பாத்திகளில் தண்ணீர் பெருக்கிவிட்டு மறுபடியும் குளத்தினின்றும் தண்ணீர் கொணர்ந்து கொட்டுகின்ற கைங்கரியத்திலேயே பற்றிய மனசையுடையவராக இருப்பதையும், அழகிய வடிவுடன் கூடியவளான தான் சமீபத்தில் வந்திருப்பதைக்கண்டும் அவர் சற்றுங் கவனியாதிருப்பதையும் நினைத்து தேவதேவி யென்பவள் ஆச்சரியத்துடன் தமக்கையைப்பார்த்து, "அக்காள்! இவரென்ன அலியா? அல்லது ரிஷியா? என்ன காரணத்தால் முன்னிற்கின்ற என்னையும் பார்க்கின்றாரில்லை" யென்றனள். அதற்கவள் தன் வடிவழகால் கர்வங்கொண்டிருக்கின்ற தங்கையைப்பார்த்து, "சகோதரி! இவரறிவற்றவருமன்று; விவேகசூன்னியருமன்று; இவர் ஸ்ரீரங்கராஜனுடைய நித்தியகைங்கர்யத்திலீடுபட்டவர். உன் சௌந்தர்யத்தாலிவர் மனம் விகாரமடையாது. இப்பொழுது இவ்விடத்தில் நீ உனது சிருங்கார விலாச சேஷ்டிதங்களால் இவரை வசப்படுத்துவாயாகில் நீ பெருபவதிகளிற் சிறந்தவள். உனக்கு நான் அடிமைத்தொழில் செய்கின்றேன்" னென்றனள்.

இதனைக்கேட்டவுடன் இளையவள் தமக்கையை நோக்கி "அக்காள்! நீ சொல்லியபடி நானிவரை என் வசப்படுத்தாவிடில் நானுனக்கடிமைத்தொழில் செய்யும் வேலைக்காரியாகின்றேன்" னென்று சொல்லித் தன்னுடன் வந்த வேலைக்காரிகளையும் தன் தமக்கையையும் தம்மிருப்பிடம் செல்லும்படி சொல்லியனுப்பிவிட்டு, அவள் தன்னரையிலுடுத்திய வஸ்திரத்தைத்தவிர மற்றைவஸ்திரத்தையும் பிரகாசிக்கின்ற தனது ஆபரணங்களையுங் கழற்றி ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டு அம்மெல்லிய சரீரத்தையுடைய வடிவழகுடையாள் விப்ரநாராயணரிடம் வந்து அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி "ஸ்வாமீ! நான் வேசையர்குலத்தில் பிறந்தவள், பொருளாசையுள்ள எனது தாயார் என்னை எல்லோரையுஞ் சேரும்படி நியமித்தனள். நச்வரமான பொருளுக்காக நான் பலரையுஞ் சேர்வதில் இஷ்டமில்லாதவளாய் என் தாயையும் பந்து ஜனங்களையும் விட்டுநீங்கி உயர்ந்த பொருளையடைய வேண்டியதற்காக தேவரீரையே கதியாக அடைந்தேன். அகிஞ்சனையும் சரணமடைந்தவளுமான என்னை இந்த உபவனபரிபாலன கைங்கர்யத்தில் நியமித்துவிட்டு தேவரீர் தினந்தோ

றும் ஸ்ரீரங்கநாதனுக்குப் புஷ்பமாலை கொண்டு சமர்ப்பித்துவிட்டு பிக்ஷைபெடுத்துக்கொண் டெழுந்தருளவேண்டும். இதுவே என் பிரார்த்தனை'' யென்றனள்.

இவ்விதஞ்சொல்லிய அவ்வேசையின் இனிய மொழிகளைக் கேட்ட விப்ரநாராயணர், தாம் செய்யும் உபவன கைங்கர்யத்திற்கு உதவியாக வந்தாள் இவள் என்ற சந்தோஷத்தினால் அவளைப் பார்த்து, ''பெண்ணே! உனது இஷ்டத்தின்படியே செய்வாய்'' என்று அவளை சந்தோஷிக்கச்செய்து, புஷ்பச்செடிகட்குத் தண்ணீர் விடுதல் முதலிய கைங்கர்யத்தில் அவளை நியமித்துவிட்டு, தாம் ஸ்ரீரங்கராஜனுக்கு தினந்தோறும் மாலை கொண்டுசமர்ப்பித்து வருவதுடன், தாம் தினந்தோறும் பிக்ஷைபெடுத்துக்கொணர்ந்த ப்ரசாதத்தை யெம்பெருமானுக்கு அமுது செய்யப்பண்ணித் தாமும் அமுது செய்தபின் மிஞ்சின ப்ரசாதத்தை அவளுக்கும் கொடுத்துவந்தனர். அவளும் தான் செய்யவேண்டிய காரியங்களிற் குறையின்றி அங்கு வெட்டப்பட்டுள்ள சிறு குட்டங்களில் பெருக்கியிருக்குந் தண்ணீரைத் தினந்தோறும் குடத்திலெடுத்துவந்து பாத்திகளில் பெருக்குவதும் பூச்செடிகட்குக் களைபறித்து எறிவதும் முதலியவற்றைச் செய்துகொண்டு வந்தனள்.

இவ்விதமவள் ஒரு குளத்தினின்று மற்றொரு குளத்திற்குச் சென்று குடத்தில் தண்ணீர் கொணர்ந்து விருக்ஷங்களுக்குத் தண்ணீர் விடுகின்ற காலத்தில், விப்ரநாராயணரின் திருவுள்ளத்திற்கு அளவற்ற திருப்தியை யுண்டுபண்ணினள். இப்படிச் சிலகாலஞ் சென்றபின் ஒருநாள் பெருமழை பெய்ய ஆரம்பித்தது. ஆரம்பிக்கவே, அவ்விப்ரநாராயணர் தாமிருந்த பர்ணசாலைக்குட் சென்றதும் மழையில் நனைந்துகொண்டு வெளியிலிருக்கின்ற தேவதேவியையும் பர்ணசாலைக்குள் வரும்படி நியமித்தனர். உடனே அவளும் பர்ணசாலைக்குட்சென்றனள். செல்லவே அவ்வழகிய வடிவுடையாளை நேரில் தன் சமீபத்தில் கண்டதும் விப்ரநாராயணரின் திருவுள்ளமும் இளகிற்று. நெருப்பின் சமீபத்தில் வெண்ணெய்க்கட்டி யிளகா திருப்பதுண்டோ?

இவர் திருவுள்ளம் திரிந்ததையறிந்ததும் அவள் அங்கு வீற்றிருக்கின்ற விப்ரநாராயணரின் பக்கலில் உட்கார்ந்துகொண்டு அவருடைய திருவடிகளைத் தன்கைகளால் மெதுவாய்ப் பிடித்துக்கொண்ட வண்ணமே, "ஸ்வாமி! அடியேனுக்கு ஏதேனுமொரு பரமஹிதகரமான விஷயத்தை உபதேசிக்கவேண்டும்" என்று சொல்லித் தன் கடைக்கண்பார்வைகளால் ஏதுசமயமென்று சமீபத்திலிருக்கின்ற மன்மதனை வில்லில் பாணங்களைப் பூட்டும்படி கூறினள். அம்மெல்லியலாளின் கடைக்கண்ணோக்கத்தினால் செய்த அனுமதியைப் பெற்றுக்கொண்ட மகரத்வஜன் இன்னிசை நாணினையுடையதும் லட்சியபந்தவருக புஷ்பாயுதங்களை யுடையதுமான கரும்புவில்லைக் கையிலெடுத்தனன். அப்போதே விரைவில் மீனுபவன் யுத்தசன்னத்தனுக வெழுந்தனனென்பதற் கறிகுறியாக அவ்விடத்தில் குயில்களென்னு மெக்காளங்களின் பேரொலியுண்டாயிற்று. அத்துடனங்குள்ள புஷ்ப விருக்ஷங்களின் மகரந்தத்துளிகளின் பரிமளத்துடன் கூடியதும் சந்தனவிருக்ஷங்களினிடையே சென்று வருகின்றதுமான மந்தமாருதமும் வீசிற்று. அன்றியும் அங்கு புஷ்பித்திருக்கின்ற விருக்ஷங்களிலுள்ள வண்டுகளினின்னிசையானது காமன் வில்லிற் பூட்டிய நாணின் ஒலியென்ற சங்கையை வெளிப்படுத்திற்று.

அந்தச் சமயத்தில் விப்ரநாராயணர் மனதில் மன்மதன் பிரவேசித்தானென்பதை ப்ரத்யக்ஷமாய் அறிந்த அப்பங்கயக்கண்ணாள் சீக்கிரத்தில் புஷ்பமயமான படுக்கையை யமைத்துத் தானும் ஸர்வாபரணங்களையுமணிந்துகொண்டு விப்ரநாராயணரின் சமீபத்தில்வந்து நின்றனள். அப்போதவள் சாணையிலிட்டு விளங்குகின்ற மன்மதனுடைய நீண்ட கத்தியைப்போலக் காணப்பட்டனள். அப்படியில்லாவிடில் பரமவிரக்தரான விப்ரநாராயணரின் அந்தக்கரணம் எவ்வாறு அவளிடத்தில் பற்றியதாகும்?

இவ்விதம் அலங்கரித்துக்கொண்டு தன் சமீபத்தில் வந்து நிற்கின்ற அம்மங்கையின் செங்கையைப்பற்றியபோது அவ் விப்ரநாராயணரின் ஹஸ்தத்திலுண்டான வேர்வைஜலமானது, தன்னிடத்தினின்றும் நீங்காதிருந்த விரக்தியென்பது தன்னை விட்டு நீங்

கிற்றென்பதற்கு அறிகுறியாக அவராலிடப்பட்ட நீர்க்கடன் தன்மையையநுசரித்தது. அத்தருணியை அவர் ஆலிங்கனஞ்செய்தவுடன் அவராங்கங்களிலுண்டான மயிர்க்கூச்சல்கள், முதலில் தேவதேவியைக் காதலித்தவுடன் அவர் மனதில் மன்மதனால் நாட்டப்பட்டிருந்த பாணங்களே வெளிவந்தனவோ வெனக்காணப்பட்டன. அக்கருங்கண்களையுடையவளின் அங்கங்களைப் புல்லியதால் விப்ரநாராயணரின் சரீரத்திலுண்டான நடுக்கமானது அவரந்தக்கரணத்தினின்றும் தைரியம் வெளிப்போந்ததென்பதைச் சொல்லால் கூறாது கூறிற்று.

இவ்விதம் விகாரத்தை யுண்டுபண்ணிய அவள், ஒருபோதும் ஸ்திரீ விஷயத்தையேயறியாத அவ்விப்ரநாராயணரின் திருவுள்ளத்தையும், மன்மதப்போரின் வைபவத்தால் தன்வசமாக்கக்கருதினள். உடனே காமனு மிதுதான் சமயமெனக் கருதித் தன் கணைகளை யிடைவிடாது ப்ரயோகிக்கத் தொடங்கினன். தொடங்கவே அவ்விருவரும் சிருங்காரரசசாகரத்தில் மூழ்கியவர்களாயினர். அந்த சமயத்தில் தேவதேவியென்பவள் விப்ரநாராயணராகவோ, விப்ரநாராயணரே தேவதேவியாகவோ, அல்லது அவ்விருவரும் மன்மதனாகவோ அல்லது அம்மூவருமே சிருங்காரரசமயமாகவோ ஆயினரென்பதை யாவருமறியாராயினர். இவ்விதமாக அவ்விருவரும் க்ஷணமும்பிரியாதவர்களாய் அங்குள்ள அழகிய லதாக்ருஹங்களிற் பற்பல விதமாய் க்ரீடித்துக்கொண்டு காமன் கர்வத்தை யடக்குகின்றவர்களாய் சிலதினங்களை ஒருக்ஷணம் போலவே கழித்தனர்.

பின்பு அந்த தேவதேவியென்பவள் தனது சிருங்காரவிசேஷத்தால் ஸ்ரீவிப்ரநாராயணரைத் தன்வசமாக்கிக்கொண்டு, முற்காலத்தில் விபண்டகமுனிவரின் புத்திரரான ரிசியசிருங்கரை வாராங்கனைகள் வனத்தினின்றும் நகரத்திற் கழைத்துச்சென்றதுபோலவே விப்ரநாராயணரை அவ்வுபவனத்தினின்றும் தன்னுடைய நகரத்திற் கழைத்துச்சென்று தன் வீட்டிலிருக்கின்ற தமக்கையைப் பார்த்து, 'அக்காள்! இதோ பார் என் ப்ரதிக்ஞையை நிறைவேற்றிவிட்டேன்' என்று கூறி, விப்ரநாராயணர் அவர் தலையணை, படுக்கை

முதலிய சாமான்களுடன் தன்னைப் பின்பற்றி வருகின்றதையும் தன் சகோதரிக்குக் காட்டினள். அப்பொழுது அங்குள்ள தேவ தேவியின் தோழியர்கள் அனைவரும் அவளுடைய சாமர்த்தியத்தை யும் ரூபலாவண்யத்தையும்பற்றிப் புகழ்ந்து கொண்டாடினர்.

இவ்விதம் அவள் தனது தோழிகளால் புகழப்பெற்றவளாய் விப்ரநாராயணருடன் கிரஹத்தில் ப்ரவேசித்து, ஸ்ரீ விப்ரநாராயண ரைத்தன் வசமாக்கிக்கொண்டு, அவருடைய ப்ரும்மசர்ய தர்மங்களை யெல்லாம் அடியோடழித்து 'இவர் காமுகராய்த் திரிகின்றார்' என்று பலருமறியும்படி செய்து, தான் அவரிடத்தில் மிகவும் பற்றுள்ள வள் போலவே பற்பல ரதிவிசேஷங்களால் சிலநாள் அவருடன் போகித்து அவருடைய சகல சொத்துக்களையும் அபஹரித்துக் கொண்டு, பின்பு அவரிடத்திற் சற்றும் பற்றற்றவளாய், இன்னும் தான் அவரிடத்தில் பொருள்பெறவேண்டுமென்ற ஆசையினால், ஸ்ரீ விப்ரநாராயணரைத் தன் வீட்டிற்குள் வரவேண்டாமென்று வெளி யேற்றி விட்டனள். அவரும் வருத்தத்துடன் கூடியவராய் அவள் வீட்டுவாயிலை விட்டகலாது வெளியே யிருந்தனர்.

இப்படி யிருக்கும்போது அன்று ராத்திரி ஸ்ரீ ரெங்கநாதன் ஸ்ரீ தேவியுடன் ஏகாந்தத்தில் கேளிகலாசக்தராக இருக்கின்றவர், காரணமில்லாது, மந்தஹாசம் செய்தனர். அப்போது ஸ்ரீ தேவி யானவள் எம்பெருமானைப் பார்த்து, 'நாதா! இப்போது மந்த ஹாசஞ் செய்த காரணமென்ன? என்றனள். அதற்கு ஸர்வேச்வரன் தன்தேவியைக்குறித்து, 'ப்ரியை! சொல்கிறேன்கேள் தினந்தோறும் நமக்குப் புஷ்பமாலை கொண்டுவந்து ஸமர்ப்பிக்கின்ற பக்தன் விப்ர நாராயணன் வேசையினிடத்தில் ஆசையுற்றவனாய்த் தன்னிடத் துள்ள பொருள்களை யெல்லா மிழந்ததுமன்றி, அக்கணிகையினால் நிராகரிக்கப்பட்டு வருந்திய மனத்துடன் அவள் வீட்டு வாயிலை விட்டு அகலாதிருக்கின்றான்' என்றனர். அதனைக் கேட்டதும் ஸ்ரீ தேவி எம்பெருமானைப் பார்த்து, 'நாதா! விப்ரநாராயணன் எப்படி விஷயாசக்தனானான்? ஆஹா! ஜகத்தையே மோஹிக்கச் செய்கின்ற உமது திருவிளையாட்டிற்கும் இக்குழந்தை யொருபொருளோ? ஸ்வாமி! இப்போது இவனாசையைப்பூர்த்திசெய்து இவன் பாவத்தை

யும் போக்கி முன்போலவே இவனைத் தேவரீருடைய க்ருபைக்குப் பாத்திரமாக்கி ரக்ஷிக்கவேண்டும்' என்றனள்.

இவ்விதஞ் சொல்லிய ஸ்ரீ தேவியின் வசனங்களைக் கேட்டவுடன், ஸ்ரீ ரெங்கராஜன், லீலாமானுஷவிக்ரஹயுக்தனாய்த் தன் முன் வைத்திருந்த ஸ்வர்ணபாத்திரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, அக்கணிகையின் க்ரஹத்திற்குப் புறப்பட்டனர். உலகத்தில், பூஜிக்கத்தக்க பெரியோர்கள் தம்மை ஆசிரயித்தவர்களிடத்தில் தமது கௌரவத்தை வெளியிடமாட்டார்களன்றோ? ஸ்ரீ ரெங்கராஜன் அவ்வேசையின் க்ரஹஞ் சென்றதும் வாயிலில் நின்றுகொண்டு, 'ஹே தேவதேவி! நான் விப்ரநாராயணரின் சொற்படி வந்திருக்கின்றேன்; என் பெயர் அழகியமணவாளன்; கதவைத் திறப்பாயாக' என்றனர்.

இச்சொற்களைக் கேட்டதும் அவள் வந்து கதவைத் திறந்து அவரை க்ரஹத்திற்குள் அழைத்துச் சென்றனள். உள்ளே சென்றதும் ஸ்ரீரெங்கராஜன் அக்கணிகையைப்பார்த்து, 'ஹே தேவதேவி! உன்னிடத்தில் காமமுற்றிருக்கின்ற விப்ரநாராயணர் இதை என்னிடங் கொடுத்தனுப்பினர்; இதனை வாங்கிக்கொள்' என்று சொல்லி சுவர்ணபாத்திரத்தை அவள் கையிற் கொடுக்கவே, அவள் அதை சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு, 'அழகியமணவாளரே! விப்ரநாராயணரை சீக்கிரம் இங்கழைத்துக்கொண்டு வாரும்' என்றனள்.

உடனே ஸ்ரீ ரெங்கநாதன் வெளியே சென்று 'விப்ரநாராயணரே!, தேவதேவி உம்மையழைத்துவரச்சொன்னாள்; வாரும்' என்றனர். கர்ணாம்ருதமான அச்சொற்களைக்கேட்ட விப்ரநாராயணர் சந்தோஷத்துடன் விரைவில் தேவதேவியின் க்ரஹத்திற்குள் செல்ல, அவளும் அவரை எதிர்கொண்டுவந்து அழைத்துச்சென்றனள். சென்றதும் அன்றிரவில் அவ்விருவரும் சுகமாய் கிரீடித்துக் கொண்டிருந்தனர். விப்ரநாராயணர் வேசையின் க்ரஹத்திற்குள் ப்ரவேசித்ததும் ஸ்ரீ ரெங்கநாதன் ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருளினர்.

பின்பு மறுநாட்காலையில் பகவத்ஸந்நிதியில் வைத்திருந்த சுவர்ணபாத்திரத்தைக் காணாமையால் அங்குள்ள அர்ச்சகபரிசாரகர்களும்,

சுவர்ணபாத்திரம் சுவர்ணாபரணங்கள் வைத்திருக்கின்ற அதிகாரிகளும், ஒவ்வொருவரும்பயமுற்றவர்களாய் சுவர்ணபாத்திரம் காணாமற்போன விதத்தைச் சாரர்கள் மூலமாய் விசாரித்ததில், அந்தப் பாத்திரத்தை முதலில் ஒரு பிராமணர் கொண்டு சென்று தேவதேவியினிடத்திற்கொடுத்ததாகவும், அது இப்போதவள்வீட்டிலிருக்கின்றதென்றும் தேவதேவியின் தோழியொருத்தி பாத்திரத்தை அவள் வீட்டிற் பார்த்ததாகவும், தெரிந்துகொண்டு, உடனே உறையூர் நகரஞ்சென்று அரசனிடம் நடந்தவிருத்தாந்தத்தைத் தெரிவித்தனர்.

உடனே அரசனும் ஸ்ரீவிப்ரநாராயணருடன் அக்கணிகையையும் வருத்தி, அவள் வீட்டிலிருக்கின்ற சுவர்ணபாத்திரத்தையும் கொண்டு வரச்செய்து, தேவதேவியைப் பார்த்து அரசன் கோபத்துடன், 'ஹே தேவதேவி! இந்த சுவர்ணபாத்திரத்தை எப்பொழுது எவன் உனக்குக் கொடுத்தான்? உண்மையைச் சொல்' என்றனன். அதற்கவள் 'மகாராஜ! அந்தப் பாத்திரத்தை இந்த ப்ராமணர் தான் கொடுத்தார்' என்றனள். உடனே விப்ரநாராயணர், 'அரசே! நானிவளிடங் கொடுக்கவில்லை இஃதுண்மை' என்றனர். அப்போது தேவதேவி அரசனைப்பார்த்து, 'மகாராஜ! இவருடைய தூதனொருவன் கொணர்ந்து என்னிடத்தில் கொடுத்தான்' என்றனள். அதற்கு விப்ரநாராயணர் 'எனக்குத் தூதனொருவனுமில்லையே!' என்றனர்.

இவ்வித மொருவர்க்கொருவர் மாறுபட்டுச் சொல்கின்ற வியவஹாரத்தைக்கேட்டதும் அரசன் தன் மந்திரியை நோக்கி, மந்திரி! இந்த சுவர்ணபாத்திரத்தை எம்பெருமான் சன்னிதியிற் சேர்த்துவிட்டு, இதை யபஹரித்தவனை நன்றாய் விசாரித்தறிந்து சுவர்ணத்தைத் திருடியவர்கட்கு விதிக்கப்படுந் தண்டனையைச் செய்வாயென்றனன். மந்திரியும் அரசனுத்திரவின்படி அவ்விருவரையும் தானழைத்துச் சென்று விசாரித்ததில், விப்ரநாராயணரே அந்தப் பாத்திரத்தைத் திருடிக்கொணர்ந்து வேசையினிடங் கொடுத்தாக நிச்சயித்து, அவருக்கு மறுநாள் தண்டனைவிதிப்பதாகத் தீர்மானித்தனுப்பினன்.

இப்படியிருக்கும்போது அன்று ராத்திரி அரசன் ஸ்வப்னத்தில் ஸ்ரீ ரெங்கநாதனெழுந்தருளி 'அரசே! எனது பக்தன் விப்ரநாராயணனுக்கு சந்தோஷத்தை யுண்டுபண்ணவேண்டுமென்று நானே அந்த சுவர்ணபாத்திரத்தை தேவதேவியிடங்கொடுத்தேன்; விப்ரநாராயணன் தண்டனைக்குரியவனல்லன்; வேசைக்கென்று கொடுத்துவிட்ட அந்தப் பாத்திரமும் நமக்கு வேண்டியதில்லை' என்றருளிச்செய்தனர். காலையிலெழுந்தவுடன் அரசன் எம்பெருமானுக்குத் தன் பக்தர்களிடத்திலுள்ள பரமகாருண்யத்தை நினைத்து ஆச்சர்யத்துடன் தன் சபைக்குச் சென்றதும், ஸ்ரீரெங்கநாதன் ஸ்வப்னத்திலருளிச்செய்த விஷயத்தை ஸபையிலுள்ளோர் யாவருமறியும்படி சொல்லி, ஸ்ரீவிப்ரநாராயணரைப் பற்பல விதமாயுபசரித்தனுப்பினன்.

பின்பு ஸ்ரீவிப்ரநாராயணர் தனக்குள், 'ஆஹா! ஸர்வசேஷியான ஸ்ரீ ரெங்கேசன் நான் செய்த அபராதத்தையறிந்து, அரசன் ஸ்வப்னத்திலெழுந்தருளி இவ்விதம் நியமிக்கும்படி நேர்ந்ததே! யென்று ஆச்சர்யத்துடன் கூடியவராய், அந்தக்ஷணமே அவ்வேசையையும் அவளிடத்துள்ள ஆசையையும் வேருடன் களைந்துவிட்டு, ஸ்ரீ ரெங்கத்திற்கெழுந்தருளி * அகம்யாகமனதோஷ நிவர்த்திக்காக சுருதிஸ்மிருதிகளிற் சொல்லப்பட்ட ப்ராயச்சித்தங்களை க்ரமப்படி செய்து முடித்தபின், பகவத்பக்தர்களான பாகவதர்களின் ஸ்ரீபாததீர்த்தத்தையும் ஸ்வீகரித்துக் கொண்டனர். அதுமுதல் ஸ்ரீவிப்ரநாராயணர் § பக்தாங்கிரிரேணு என்ற திருநாமத்தை யுடையவராயினர்.

எம்பெருமானுடைய வனமாலிகையின் அம்சம் பெற்றவரும் வித்வானுமான தொண்டரடிப்பொடியார், வேதாந்தங்களை யுணர்ந்தவர்களாற் புகழப்பெற்ற திருப்பள்ளியெழுச்சி, திருமாலை, என்ற திவ்யப்ரபந்தங்களை ஸ்ரீரங்கநாதன் விஷயமாயருளிச் செய்தனர். முற்காலத்தில் சதாநீகமுனிவர் சௌநகரிடத்தில் எம்பெருமானுடைய திருநாமங்களனைத்தையுங் கேட்டனர். இப்போது ஸ்ரீ

---

* அகம்யாகமனம் - சேரத்தகாதவளைச் சேர்த்தல் § பக்தாங்கிரிரேணு- தொண்டரடிப்பொடி.

ரெங்கநாதன் தன்னுடைய திருநாமங்களனைத்தையும் தொண்டரடிப்பொடியாரின் ப்ரபந்தத்தில் கேட்டனர். ஸ்ரீரங்கேசபக்தர்களின் சரணங்களிற் பொருந்திய பக்தியையுடையவரும் ப்ரும்மதேவன் முதலியவர்களால் வணங்கப்பெற்ற சரணங்களையுடையவருமான தொண்டரடிப்பொடியார், அர்ச்சாவதாரங்களெல்லாவற்றிலும் ஸ்ரீ ரங்கநாதனே பரதத்வமென்று மிகவுமனதிற் கருதுகின்றவராய், பதிவிரதையான ஸ்திரீ பர்த்தாவினிடத்தில் பக்தி வைப்பதுபோல், ஸ்ரீ ரங்கநாதனிடத்திற் சிறந்த பக்தியுடையவராயெழுந்தருளியிருந்தனர்.

பின்பு அந்த தேவதேவியென்ற கணிகையானவள் காமாதி விஷயங்களில் விரக்தராயெழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீவிப்ரநாராயணரை நேரில் கண்டதினாலும் பாண்டவ தூதனான ஸ்ரீரெங்கநாதனே தன்னிடம் தூது வந்ததினாலும், தானும் பரம விரக்தையாய் அந்த சுவர்ண பாத்திரத்துடன் தன்னிடத்திலுள்ள சகல திரவியங்களையும் ஸ்ரீரெங்கநாதனுக்கே சமர்ப்பித்தனள்.

திவ்யஸூரி சரிதம் 6-வது ஸர்க்கம் முற்றிற்று.

---

## 7-வது ஸர்க்கம்.

## உறையூர் நாய்ச்சியார் வைபவம்.

காவேரியின் தென்கரையருகில் சோழராஜனாலாளப்படும் உறையூரென்ற பெயருடைய பழமையான ஒருபட்டணமுண்டு. எந்நகரத்தில் ரத்னமணிமயமான பூமியில் ராத்திரிகாலத்தில் ப்ரதிபலிக்கின்ற நக்ஷத்திரங்கள் வெற்றிவீரனான காமன் கரும்புவில்லை வளைக்குங்காலத்தில் முறிபட்டு அவ்வில்லின் கணுக்களினின்றுஞ் சிதரிக்கிடக்கின்ற முத்துக்களின் தன்மையை வஹித்தனவோ, எந்த நகரமானது மித்திரன், காலாநிதி, மங்களன், புதன், குரு, கவி, போகி, கேதுக்களுக்கு உறைவிடமாய் மந்தன் ஒருவனுமேயின்றி இப்புவியில் இந்திரனுடைய அமராவதி யென்ற நகரத்தின் எழிலையடைந்ததோ, அந்நகரில் சூர்யவம்சத்திலுதித்த தர்மவர்ம னென்ற அரசன்குலத்திலுண்டான சோழராஜ னொருவன் தன் ஒளியால்

சத்துருக்களனைவரையும் ஜயித்து இப்பூமி முழுதுமாண்டுகொண்டிருந்தனன். அவ்வரசன் பூமியையாளும்போது ஆதிசேஷன் பூபாரமனைத்தையுந் தாங்குகின்ற பொறையை அவனிடமொப்பித்துவிட்டுத் தன் தலைகளை யசைத்துக்கொண்டு அவ்வசரன் சிறந்த குணங்களைப் புகழ்ந்து வீணாகானம் செய்துகொண்டிருந்தனன். அவ்வரசன் பெரும்புகழாகிய கடலில் தோன்றுகின்ற ஆகாயமானது பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கின்ற பங்கயக்கண்ணனின் அழகை வெளிப்படுத்திற்று. அவ்வரசன் திக்விஜயத்திற்குச் செல்லும்போது அவன் சைநியத்திலுள்ள குதிரைகளாலெழுந்தூளிகளால் சமுத்திரம் முழுதுமே ஜலம்வற்றிப் புழுதியாகிப் பின்பு அந்த சைநியத்திலுள்ள யானைகளின் மதஜலங்களால் நிரப்பப்பெற்றது. அவ்வரசன் அதிபுத்திமானாகவும் ஸ்ரீரங்கநாதனிடத்திற் பற்றிய மனசையுடையவனாகவுமிருந்தனன்.

அவன் தனது தவத்தின் மகிமையால் * கமலாகரத்திலுதித்த § கமலையைத் தான் புத்ரியாகவடைந்தனன். அதிசுந்தராங்கியான அவ்விராஜகன்னிகை யௌவன நிலைமையடைந்தபின் ஒருநாள் தனது சகிஜனங்களுடன் உத்தியானஞ் சென்று உல்லாசமாய் விளையாடிக் கொண்டிருக்கும்போது, வேட்டைக்காக அங்கெழுந்தருளிய ஸ்ரீரங்கநாதனைக் கண்டனள். சுருதிகட்கும் விஷயமாகாத அப்பரமபுருஷனை அவள் தன் கண்களாற் காணவே, எம்பெருமானிடத்தில் மிகுந்த ஆசையுள்ளவளாய் அடங்காத சந்தோஷத்துடன் தன் பிதாவிடம் வந்து, 'பூபதியே! நான் ஸ்ரீரெங்கநாதனுக்கே பார்யையாக வேண்டும்; வேறு புருஷனிடத்தில் என் மனஞ் செல்லவில்லை; ஆதலால் நீரென்னை யவருக்கே பாணிக்ரஹணஞ் செய்துகொடுக்கவேண்டும் என்றனள்.

இப்படிச் சொல்கின்ற தன் புத்ரியின் சொற்களைக் கேட்ட அரசன் மிகவும் ஆச்சரியமுள்ளவனாய், 'ஆஹா! நமது கன்னிகையின் அபிப்ராயம் பரமாத்மாவான ஸ்ரீரங்கேசனிடத்திலன்றோ சென்றிருக்கின்றது. இதுவும் நம்முடைய பாக்கியவிசேஷந்தான்'

* கமலாகரம் - தடாகம் § கமலை - லக்ஷ்மீ.

என்று நினைத்துக்கொண்டு, சோழராஜன் சர்வாபரணபூஷிதை யான தன் கன்னிகையை ஸ்ரீ ரெங்கநாதனுக்கே விவாஹஞ் செய்து கொடுத்து, பற்பல உபசாரங்களுடன் தன் சம்பத்திற்கேற்றபடி சுவர்ணமயமான சமஸ்தவஸ்துக்களையும் ஸ்திரீதனமாகக் கொடுத்து தேவஸ்திரீகளிலுஞ் சிறந்த வடிவழகுடையவர்களும் சர்வாபரண பூஷிதைகளுமான நூற்றுக்கணக்கான அநேகம் பரிசாரிகைகளையும் மணிமயமான மண்டபம் கோட்டை கோபுரங்களுடன் கூடிய ஸ்தல விசேஷங்களையும் சகல தனங்களையும் ஸ்ரீ ரங்கநாதனுக்கே சமர்ப்பித்தனன்.

## திருப்பாணாழ்வார் வைபவம்

பின்பு அவ்வுறையூரில்* அந்திமகுலத்தில் ஸ்ரீலக்ஷ்மீபதியின் திருமார்பிலுள்ள ஸ்ரீவத்ஸமென்ற மறுவின் அம்சத்திலுதித்த வரும், ஸ்ரீரங்கநாதன் கடாக்ஷத்திற்கு லக்ஷ்யமானவரும், பாண னென்ற திருநாமத்தையுடையவருமான நற்கவிஞர் கார்த்திகைமீ ரோகணி நக்ஷத்திரத்தில் தாயின் வயற்றினின்றும் பூமியிலுத்பவித் தனர். அவர் குழைந்தையாயிருக்குங்கால் ஒருபோதும் அழுவ தில்லை. அவரெப்போதுந் தன் வாக்கினால் பகவானுடைய திவ்ய நாமங்களையே கீர்த்தனஞ்செய்துகொண்டும், பகவத் குணங்களையே ஸ்தோத்திரஞ் செய்துகொண்டும், மனசினால் அவன் சரணகமலங் களையே தியானித்துக் கொண்டும், கையினால் வீணையை மீட்டிக் கொண்டும் ஸ்ரீரெங்கநாதனை பஜித்தனர்.

கானஞ் செய்கின்றவர்களிற் சிறந்தவரான அவர், சலியாத பக்தியின் தன்மையால் தன்னைக் கைசிககானத்தில் பற்றுடைய சண்டாளனாகவே மனதில் நினைத்துக்கொண்டு, ஸ்ரீரெங்கநாதனே கெதியென்று ஸ்தோத்திரஞ் செய்கின்றவராய் காவேரியின் தென் கரையோரத்தையே ரெங்கஸ்தலமென வந்தடைந்து, தினந்தோறும் நடுராத்திரியில் ஸ்ரீரெங்கநாதனைக் குறித்து மணிவீணையால் சங் கீத சாஸ்திர விதிப்படி சமயோசித கானத்தைச் செய்துகொண்டு

* அந்திமம் - கடைசி.

வந்தனர். கர்ணாம்ருதமான இவருடைய கானத்தைக் கேட்டதும் சேஷசயநரான எம்பெருமான் நித்திரை தெளிந்து தனக்குள்ள அன்பின் மிகுதியை ஸ்ரீதேவியிடத்திலும் காண்பித்தனர். பாண கவிஞரின் இனிய கானத்தைக் கேட்ட சந்தோஷத்தால் மலர்ந்திருக்கின்ற எம்பெருமானுடைய கடைக்கண் பார்வையானது ஸ்ரீதேவியின் முககமலத்தில் வண்டின் தன்மையை அநுசரித்தது.

அந்த பாணகவிஞரின் மதுரமான கானத்தைக் கேட்ட ஸ்ரீதேவி, எம்பெருமானைப்பார்த்து, 'நாதா வெளியிலிருந்து கானஞ்செய்துகொண்டிருக்கின்ற மனதிற்கினிய பக்தனை யந்தரங்கனுகச் செய்துகொள்ளவேண்டும்' என்றனள். அதற்கு பகவானும் அப்படியே செய்கிறேனென்று சொல்லித் தன் பக்தரான லோகசாரங்க முனிவரைப்பார்த்து, 'முனிவரே! வெளியில் கானஞ்செய்துகொண்டிருக்கிற நமது பாணனை உமது தோளாகிய ரதத்திலேற்றிக் கொண்டு நம்மிடம்வந்து சேரவேண்டும்' என்றனர்.

உடனே லோகசாரங்கமுனிவர் காவேரியின் அக்கரைசென்று கானஞ்செய்துகொண்டிருக்கிற பாணரை பலாத்காரமாய்த் தன் தோளிலேற்றிக்கொண்டு விரைவில் எம்பெருமான் சமீபத்தில் கொண்டுவந்து சேர்த்தனர். ஸ்ரீபாணர் முனிவரின் தோளிலிருக்கும்போது மனதில் ஸ்ரீதேவி சகிதனுன எம்பெருமானை தியானித்துக்கொண்டு பகவானுடைய திருவடி முதல் திருமுடிவரை வர்நனையுள்ள பத்துப்பாசுரங்களை ஸ்ரீரங்கநாதன்விஷயமா யருளிச்செய்தனர்.

---

## திருமங்கையாழ்வார் வைபவம்.

சோழமண்டலத்தில் கிழக்கு சமுத்திரத்தின் மேல்கரையில் காவேரியோரத்தில் திருவாலியென்றொரு நகரமிருந்தது. எந்த நகரத்தில் தனது தவத்தின் பரிபாகத்தால் ஸ்ரீதேவி பில்வவநத்தின் நடுவில் கருணைநிறைந்த கண்களையுடைய கண்ணபிரானுலிடையீடின்றி ஆலிங்கனஞ்செய்யப்பெற்றனளோ, எந்த நகரத்தின் சமீபத்

தில் நிர்மலமான ப்ரதேசத்திலிருபக்கங்களிலும் ப்ரவஹிக்கின்ற சிலம்பாறுகள் அந்நகரத்திற்குப் புதிதாயணிந்திருக்கின்ற ஹாரத்தின் தன்மையை யனுசரிக்கின்றனவோ, அந்நகரத்தின் சமீபத்தில் கருணைதங்கிய லக்ஷ்மீபதியின் திருக்கண்களின் விலாசத்தால் பரிபூர்ண வைபவத்தையுடைய திருக்குரையலூரென்றொரு நகரமிருந்தது.

அந்நகரில் 4-வது வர்ணத்தவர்களிற் சிறந்தவரும் நீலனென்ற பெயரையுடையவரும். புருஷோத்தமனுன பகவானுடைய கோதண்டத்தின் அம்சம்பெற்றவருமான ஒருவர் கார்த்திகை மாசம் கார்த்திகை நக்ஷத்திரத்திலவதரித்தனர். அவர் ஜனநகாலத்தில் பகவத்கடாக்ஷம்பெற்றிருந்தலா லவரிடத்தில், அரணிமரத்தி லக்நிகணங்கள் மறைந்திருத்தல்போல், பகவத்தியானம் முதலிய சத்குணங்கள் மறைந்திருந்தன. எவரை மங்கையர்கள் மன்மதனென்றும், யாசகர்கள் கல்பதருவென்றும், பகைவர்கள்கூற்றுவனென்றும், கவிஞர்கள் நாற்கவிவல்லோனென்றும் பலவாறுப் கூறுகின்றனரோ, எவர் சோழராஜனுல் நியமிக்கப்பெற்றவராய்த் தன் தேஜோவிசேஷத்தினுல் ஜனங்களைத் தனதாக்ஞை தவறுதிருக்கும்படி நடத்தினரோ, எவருடைய கிரஹத்தில் காற்றினுங்கடிதில் செல்கின்ற வேகத்தையுடைய குதிரைகளும் மதகபோலங்களையுடைய மாதங்கங்களும் பகைவரைவெல்கின்ற படர்களும் மனதிற்கினிய மகாலக்ஷ்மியும் வாசஞ்செய்தனரோ, அவர் மகா தேஜோவிசேஷத்துடன் கூடியவராகவும், சரணுர்த்திகளாய்த் தன்னைவந்தடைகின்ற அரசர்களாற் சூழப்பெற்றவராகவும் பூமியை யாண்டுவந்தனர்.

அக்காலத்தில் திருவாலி நகர்க்கு சமீபத்தில் செல்வத்தினுல் ப்ரசித்திபெற்ற திருநாங்கூரென்றொரு திவ்யதேசமிருந்தது. அங்கு பதினொரு ஸ்தலங்களிலெம்பெருமான் தானே சான்னித்யஞ் செயகின்றனர். அவிடத்தில் திருவெள்ளக்குளமென்றொரு புஷ்கரணியுண்டு. அது அலர்ந்த தாமரைமலர்களின் பரிமளத்தாற் சூழப்பெற்ற வண்டினங்களையுடையதாகவும், ஆம்பல் நீலோத்பலம் முதலிய புஷ்பங்களுடன் கூடியதாவுமிருந்தது. அத்தடாகத்திலுள்ள கலஹம்சங்களின் இன்னிசையானது, தேவலோகத்தினின்

றும் நீர்விளையாட்டிற்காக அங்குவந்திருக்கின்ற அப்ஸரஸ்திரீகளின் சிலம்பொலியுடன் வேற்றுமையின்றிக் காணப்பட்டது. அதில் நீர் விளையாடுகின்ற அப்ஸரயுவதிகளின் அங்கங்களிற் பூசியிருக்கின்ற நற்சுண்ணங்களழிந்திருந்தும் அத்தடாகத்திலுள்ள ஆம்பல் புஷ்பங்களின் நிர்மலமான தூளிகள் மறுபடியும் மங்கையர்கட் கங்கராகத் தன்மையை யடைந்தன.

பரகாலருக்கு விசேஷ ஞானத்தையுண்டுபண்ணவேண்டுமென்ற திருவுள்ளத்தையுடைய எம்பெருமானால் ஸ்ரீ வைகுண்டத்தினின்றும் பூமியில் செல்வாயென்று நியமிக்கப்பெற்றவளும், சர்வேச்வரனுக்குச் சாமரம் சேவிக்கின்ற திவ்விய ஸ்திரீகளிற் சேர்ந்தவளுமான ஒரு கன்னிகை அந்த தடாகத்திலுள்ள ஒரு அல்லிமலரில் ஜனித்தனள். இப்படியிருக்கும்போ தக்குளத்தில் ஸ்நாநத்திற்காக வந்தவரும் வைத்தியர்களிற் சிறந்தவருமான ஒரு பாகவதர் அழகிய மனுஷ்யசரீரத்துடன்கூடிய அக்குழந்தையைக் கண்டனர். கண்டதும் அவர் தனக்குக் குழந்தையில்லாததினால் ஆச்சர்யத்துடன் கூடியவராகவும் அதி சந்தோஷ பரிதராகவும் அக்குழந்தையை யெடுத்துக்கொண்டு தன் கிரஹத்திற்குச்சென்று, அக்குழந்தையை வளர்க்கும்படி தன் மனைவியிடம் கொடுத்தனர். பின்பவ்விருவரும் அக்குழந்தையால் மிகுந்த சந்தோஷமுடையவர்களாய் ஆலோசித்துப்பார்த்துக் குமுதவனத்திலுண்டானதால் அக்குழந்தைக்குக் குமுதவல்லி யெனப்பெயரிட்டனர். அக்குமுதவல்லியென்னுங் கன்னிகை வைத்தியரின் கிரஹத்தில் பகவத் பக்தியுடன் கிரமமாய் விருத்தியடைகின்றவளாய், மன்மதசாஸ்திரத்தின் மர்மமனைத்தையும் வகையுடன் கூறுகின்றதும் எல்லோரையும் மோகிக்கச்செய்கின்றதுமான பருவத்தையடைந்தனள். அப்போது அக்குமுதவல்லியின் தாய்தந்தையர்கள் நாளுக்குநாள் வளர்கின்ற யௌவனப்பருவத்தையுடையவளும் இன்ன குலமென் றறியப்படாதவளுமான இக்கன்னிகையை யாருக்கு விவாஹித்துக்கொடுப்பதென்ற சிந்தாகுலத்தையுடையவர்களாயிருந்தனர்.

இப்படியிருக்கும்போது ஒருநாள் பரகாலர் அங்குள்ளவர்களால் பரமாத்புதரூபசம்பத்தையுடைய அக்குமுதவல்லியின் வடி

வழகைக்கேட்டு சஞ்சலமுற்ற மனதையுடையவராய், தன் மனதிற்குள், 'இதென்னவத்புதம்! இவ்வூரிலுள்ள மனிதர்கள் யாவரும் நெடுநாளாகவே அந்தவைத்தியரை மகப்பேறற்றவரென்று சொல்லுகின்றனர்; ஆதலாலக்கன்னிகை அவ்வைத்தியருக்கு ஜநித்தவளில்லையென்று நிச்சமாய்த் தெரிகின்றது; இப்படியிருக்க அவளெப்படி அவ்வைத்தியரின் புத்திரியாயினள்?' என்று சங்கித்துக்கொண்டு தான் வைத்தியரின் கிரஹத்திற்குத் தன்படியே செல்கின்றவர்போல் சென்றனர்.

சென்றதும் அவ்விடத்திலதிரூபலாவண்யத்துடன் ப்ரகாசிக்கின்ற அக்கன்னிகையைக்கண்டு மன்மதபாண பரவசராய் அப் பரகாலர் தம்மனசில், 'ஆஹா! தேவ ஸ்திரீகளிலுஞ் சிறந்த வடிவழகுடைய இக்கன்னிகைதானென்ன * இந்திரஜால பிஞ்சிகையோ? அல்லது யோகீச்வரர்களின் பஞ்சேந்திரியங்களாகியகவாடங்களைத் திறக்குங் %குஞ்சிகையோ? அல்லதுமன்மதனனுப்பிய சாசனமோ?' என்றுலோசித்துக்கொண்டு வைத்தியரைப்பார்த்து, மிகவும் ஆதரவுடன், 'வைத்தியரே! யாவராலுமதிசயிக்கத்தக்க செளந்தர்யவதியான இக்கன்னிகை முநிவர்க்கு நிகரான உமக்கு எவ்விதம் புத்திரியாயினள்?' என்றனர்.

அதற்கந்த வைத்தியர் பரகாலரைக்குறித்து 'கவிவல்லுநரே! இக்கன்னிகையின் விருத்தாந்தத்தைச் சொல்லுகின்றேன் கேளும்; யானொருநாள் ஸ்நாநத்திற்காக குமுதம் உத்பலம் முதலிய புஷ்பங்கள் நிறைந்திருக்கும் வெள்ளைக்குளமென்னும் புஷ்கரணிக்குச் சென்றேன்; அவ்விடத்தில் ஓர் ஆம்பல்புஷ்பத்தின் நடுவில் ஜநித்திருந்த இந்த சுமுகியைக் கண்டெடுத்தேன்; அதுமுதல் நான் மகப்பேறில்லாததினுலுண்டான வருத்தத்தை இவளால் நீக்கிக்கொண்டேன்; மஹா மஹிமைதங்கிய கண்ணுவ மஹரிஷியினுச்ரமத்தில்,

---

* இந்திரஜாலபிஞ்சிகை - இந்திரஜாலஞ்செய்கின்றவர்கள் தம் தொழிலுக்குச் சாதனமாய்வைத்துக்கொள்ளும் மயிற்றோகை முதலியன.

% குஞ்சிகை - திறவுகோல்.

† அப்ஸரஸினிடத்தி லுதித்தவளான சகுந்தலை எவ்விதம் வளர்ந்துவந்தனளோ அவ்விதமே § அப்ஸரஸினிடத்தி லுதித்தவளான இக்கன்னிகையு மென்கிரஹத்தில் வளர்ந்து வருகின்றனள்; யாதொரு பாவமுமற்ற இவ்வழகிய கன்னிகை இப்போது யௌவந நிலைமையை யடைந்திருக்கின்றனள்; ஆனுலிவள் இவ்வுலகத்தில் தன் மனதிற்கிசைந்து நடக்கின்ற எந்தப் புருஷனைக் கணவனுக அடையப்போகின்ருளோ அறியேன்:' என்றனர்.

இவ்விதம் சொல்லிய வைத்தியரைக்குறித்துப் பரகாலர், சந்தோஷத்துடன், 'வைத்தியரே! நானுமது புத்ரியின் மனசையனுசரித்து அவளிஷ்டத்தின்படி நடக்கிறேன்; நீரிவளை எனக்கு பார்யையாகும்படி நியமிப்பீராக:' என்றனர். அதற்கு வைத்தியர், 'அப்படியானுல்சொல்லுகிறேன் கேளும்; இவள் பால்யம்முதல் பெரியதொரு நியமம் வைத்துக்கொண்டிருக்கின்ருள்; அதாவது எந்தப்புருஷன் தன்னிருபுஜங்களிலும் பகவானது சங்கசக்ரங்களினுல் * அங்கிதனுகவும் தினந்தோறுந் தம்படியாய் வருகின்ற வைஷ்ணவர்களெல்லோரையும் அழைத்துபசரித்து போஜனஞ் செய்விக்கின்றவனுகவுமிருக்கின்ருனே, அப்படிப்பட்ட புருஷனையே என் புத்திரி தன்பதியாக அடைவாளென்றனர்.

இதனைக்கேட்டவுடன் பரகாலர் தான் கொண்டிருந்த சைவத்தன்மையை நீக்கி ஒப்பற்ற வைஷ்ணவத்தன்மையையடைந்து, அக்நிசாக்ஷியாய் அந்த வைத்தியரின் கன்னிகையை விவாஹம் செய்துகொண்டு, வைஷ்ணவஸ்வரூபத்துடன் தன் மனைவியான குமுதவல்லியைக் கைப்பற்றிக்கொண்டு, தன் கிரஹத்திற்குவந்து தடையில்லாத அன்னதானத்தினுல் சகலமான பாகவதர்களையு முபசரித்து வந்தனர்.

இப்படியிருக்கும்போது ஒருநாள் குமுதவல்லியார் தினந்தோறும் ஆயிரம் பாகவதர்களுக்கு ஆஹாரஞ்செய்வித்தாலன்றித் தா

---

† அப்சரசு - தேவலோகத்திலுள்ளவேசை.

§ அப்சரசு - நீர்த்தடாகம்.

* அங்கிதன் - அடையாளஞ்செய்யப்பெற்றவன்.

ஹாரஞ் செய்வதில்லையென்று ப்ரதிக்ஞை செய்துகொண்டனர். அதற்கும் பரகாலர் சம்மதித்தவராய்த் தன் கையிலுள்ள பொருள்களனைத்தையுஞ்செலவுசெய்ததுடன் அரசனுக்குச்செலுத்தவேண்டிய பொருளையும் ஹரிபக்தர்களின் ஆஹாரவிஷயத்திற்செலவுசெய்தனர். இவ்விதஞ் செலவு செய்கின்றாரென்பதைத் தெரிந்தவுடன், சோழராஜன் தனக்குச் செல்லவேண்டிய தனங்களையெல்லாங் கைப்பற்றவேண்டுமென்று நினைத்துத் தனது படர்களிடம் சாசனமொன்றெழுதிக்கொடுத்து, பரகாலரை யழைத்துவரும்படி கோபத்துட னுத்தரவு செய்தனுப்பினன். அனுப்பவே சோழராஜனா லனுப்பப்பட்ட படர்கள் பரகாலரிடம்வந்து அரசனாலனுப்பப்பெற்ற சாசனத்தை யவரிடங்கொடுத்து பரகாலரைப்பார்த்து, 'ராஜப்ரதிநிதியாய் விளங்குகின்ற ப்ரபுவே! அரசருக்குச் செலுத்தவேண்டிய பொருளனைத்தையுங் கொடுக்கவேண்டு'மென்று வணக்கத்துடன் கேட்டனர். இடைவிடாது பகவத்பக்தர்கள் விஷயத்தில் சகல தனத்தையுஞ் செலவு செய்ததனால் கையிலொரு பொருளுமில்லாது தரித்திரராக இருக்கின்ற பரகாலர் தமது கிரஹத்தைச் சூழ்ந்துகொண்டும் தம்மெதிரில் வந்து நிற்கின்றவர்களுமான அரசனேவலாளர்களை தம்மிடத்துள்ள வீரர்களால் துரத்தியடித்தனர்.

இவ்விதம் பரகாலரால் நிராகரிக்கப்பெற்ற ராஜபடர்கள் யாவரும் கோபத்துடன் சென்று ராஜாக்ஞையைக்கடந்து தங்களையுமடித்துத் துரத்தியதைப்பற்றி சபையிலிருக்கின்ற அரசனிடந்தெரிவித்தனர். உடனே அரசன் கோபத்துடன் தன் சமீபத்திலிருக்கின்ற சேனாதிபதியைப்பார்த்து பலத்தினால் கர்வமுற்றிருக்கின்ற அந்த துஷ்டனை இப்போதே நீ சைநியத்துடன் சென்று பிடித்துக் கட்டிக்கொண்டு வந்து சேரவேண்டுமென்றனன். உடனே சேனாதிபதி மஹாராஜ! உத்திரவின்படியே செய்கிறேன் என்று அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு, துரங்கங்களாகிய தரங்கங்களையுடையதும் சலிக்கின்ற சாமரங்களாகிய நுரைகளையுடையதும் மத † சிந்துரமாகிய மந்தமலையையுடையதுமான சேநாசமுத்திரத்துடன்சென்று, பரகாலர் வசிக்கின்ற நகரத்தைச் சூழ்ந்துகொண்டனன்.

---

† சிந்துரம் - யானை.

சைநியம்வந்து நகரத்தைச் சூழ்ந்துகொண்டிருப்பதைக்கண்ட பரகாலர், சற்றும் பயமற்றவராய் சில போர்வீரருடன் தாமொரு சிறந்த குதிரைமீதேறிச்சென்று, தன் கையிற் பிடித்த கத்தியினால் தம்மை எதிர்த்துவந்திருக்கின்ற போர்வீரரையெல்லாம் சிங்கம் தனது நகங்களினால் யானைகளைக்கிழித்தெறிவதுபோல் கிழித்தெறிந்தனர். அப்பொழுதச்சேநாதிபன், பரகாலரின் புஜபல பராக்கிரமத்திற்காற்றாது, சகலவிதமான ஆடம்பரங்களையு மொடுக்கிக்கொண்டு பலத்துடன் ரணகளத்தினின்றும் திரும்பியோடினன். இவ்விதம் அரசன் சேநாதிபதி தன் சைநியங்களுடன் வெருண்டோடியதைக் கண்ட பரகாலர், இனிமேல் சோழராஜனே சைநியத்துடன் நமக்கெதிரியாக வருவானென்றெண்ணி, அரசனுடன் போர்புரிவதற்காகவேண்டிய யுத்தவீரரை சித்தப்படுத்திக் கொண்டனர்.

இஃதிவ்விதமிருக்க, யுத்தத்தில் அபஜயமடைந்து திரும்பிச்சென்ற சேனாபதியானவன் நடுக்கத்துடன்கூடிய தன் சரீரத்தாலும், வாட்டமுற்று வணங்கியிருக்கின்ற முகத்தினாலும், கத்கதத்துடன்கூடிய கண்டத்தினாலும் பரகாலரின் ப்ரபாவத்தை முதலிலுரைத்தனன். பின்பவன் தன் வாக்கினால் அவர் வலிமையைக் கூறினன். அஃதிரட்டுறமொழிதலாயிற்று. இவ்விதம் சோழராஜன் பரகாலரால் தனக்குநேர்ந்த அவமானத்தைக்கேட்டு, கோபத்தினால் கண்களில் லக்நிஜ்வாலையையுடையவனாய் யுத்த விருத்தாந்தத்தைக் கேட்டுச் சினத்துடனெழுகின்ற பல சைநியங்களுடன் நான்காவதுவருணத்திலுதித்தவரான பரகாலரை ஜயிப்பதற்காகச் செல்லவேண்டுமென்று நினைத்தனன்.

7-வது சர்க்கம் முடிந்தது.

8-வது சர்க்கம்.

அதன்பின் சகலமான அரசர்களாலும் வணங்கப்பெற்ற சோழராஜன் சந்தோஷத்துடன் யுத்தத்திற்கெழுகின்ற பல சேனைத்தலை

வர்கள்சூழத் தன் சைநியங்களுடன் மேகம்போல் விளங்குகின்ற தூர்யவாத்தியங்களின் பேரொலியால் திக்குகளையும் அஷ்டகுலாசலங்களின் குகைகளையும் முழங்கச்செய்துகொண்டு புறப்பட்டுப் பரகாலருடன் யுத்தத்திற்காரம்பித்தனன். ஆரம்பிக்கவே பரகாலரும் தமது சைநியத்துடன் தாமொரு குதிரையின்மேலேறிக்கொண்டு கையிற் பிடித்த கத்தியையுடையவராய் அரசனோடெதிர்த்து, தடாகத்தில் மதயானைபுகுந்து கலக்கியதுபோல், போர்க்களத்தில் புகுந்து அரசன் சைநியங்களையெல்லாம் நாசஞ்செய்தனர்.

அப்போது சோழராஜன் தன்சைநியம் பரகாலரின் பலத்திற்காற்றாது அபஜயமடைவதையறிந்து இவரை எப்படியாவது வஞ்சனையால் தான் ஜயிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பரகாலரின் சமீபத்தில்வந்து, போர்வீரரே! உமதுபராக்ரமத்தைக்கண்டு சந்தோஷித்தேன்; இனிமேல் நானொரு தீங்குஞ்செய்யவில்லை; உமக்கு உண்மையாய்ச் சொல்கிறேன்; நீரிங்கேவாரு, மென்றனன். அதற்குப் பரகாலரும் சம்மதித்து தமது சைநியத்துட னரசன்சமீபத்தில் வந்தனர். வந்ததுமரசன் 'பரகாலரே! நீர் போரில்காட்டியபராக்கிரமத்தினால் நான் மனமகிழ்சியடைந்தேன்; நீரெனது ஆக்ஞையைமீறிச் செய்ததையெல்லாம் பொறுத்தேன்; ஆனால் ராஜ்யத்தினின்றும் நீரபஹரித்துக்கொண்ட பொருள்களையெல்லாம் சீக்கிரத்தில் நமக்குக்கொடுத்துவிடவேண்டு' மென்றுசொல்லிக்கோபத்துடன் அரசன் தன் சமீபத்திலிருந்த மந்திரியைப்பார்த்து, 'மந்திரீ நமது திரவியத்தைக்கொடுக்கும்வரை இவரைச் சிறைப்படுத்துக்கொள்வா' யென்றுத்தரவளித்தனன். உடனே மந்திரி தன் பக்கத்திலிருந்த சைநியங்களுடன் சூழ்ந்து பரகாலரைப் பிடித்திழுத்துக்கொண்டு எம்பெருமான் லக்ஷ்மீசஹிதனா யெழுந்தருளியிருக்கின்ற திருவாலி திருநகரிக்குச்சென்றனன். அவிடம் சென்றதும் அம்மந்திரி பரகாலரிடத்தினின்றும் சீக்கிரத்தில் பணத்தைக் கைப்பற்றவேண்டுமென்ற எண்ணத்துடன் தன் வேலைக்காரரைப்பார்த்து மூன்று நாள்வரை இவருக்கு போஜனஞ்செய்வியாதிருங்களென்றனன். அவர்களுமப்படியேசெய்ய பரம கருணாநிதியான சர்வேச்வரன் ஆஹாரமின்றி

வருந்துகின்ற பரகாலரின் ஸ்வப்நத்தி லெழுந்தருளி, 'ஆழ்வீர்! வருந்தவேண்டாம்; அரசனுக்குக் கொடுக்கவேண்டிய தனத்தை யெல்லாம் தருகிறேன்; காஞ்சீபுரம் வந்து நம்மிடம் பெற்றுக்கொள்வீர்' என்றருளிச்செய்தனர்.

உடனே பரகாலர் பரமகாருணிகனான எம்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய இவ்வருத்தியால் ஆச்சர்யபரவசராய் ப்ராதக்காலத்திலெழுந்ததும், தம்மைச் சைநியத்துடன் சூழ்ந்துகொண்டிருக்கிற மந்திரியைப்பார்த்து, 'நீங்களெல்லோரு மெதற்காக வீணில் வருந்துகின்றீர்கள்; காஞ்சீபுரத்திற்கு வாருங்கள்; உங்களுக்குக்கொடுக்கவேண்டிய தனத்தையெல்லாம் கொடுத்துவிடுகிறேன்' என்றனர். மந்திரியும் அதற்கு சம்மதித்துத் தன் சைநியத்துடன் பரகாலரைக் காஞ்சீபுரத்திற் கழைத்துச்சென்றனன். அவ்விடஞ்சென்றும் தனத்தைக் காணாமைபால் பரகாலர், 'ஆஹா! ஸர்வேச்வரனான எம்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திவ்யஸூக்தியும் பொய்யாயிற்றே நம தவிஷயத்தில்; இனி என்செய்வது?' என்று துக்கிதராய் வருந்தினர். அப்போது வரதராஜன் பரமகிருபையுடன் பரகாலரைக் கடாக்ஷித்து 'ஆழ்வீர்! வருந்தவேண்டாம்; இப்போது உமக்கு வேண்டிய தனம் வேகவதீநதிக்கரையி லிருக்கின்றது; அவ்விடத்திற்சென்று கைப்பற்றிக்கொள்வீர்' என்றனர்.

உடனே பரகாலர் பரமசந்தோஷத்துடன் மந்திரியை யழைத்துக்கொண்டு வேகவதீநதிக்கரை சென்றதும் அங்கு கண்டெடுத்த திரவியங்களை மந்திரியிடத்திற் கொடுத்து அரசனுக்குச் செல்லவேண்டிய பொருளனைத்தையும் பெற்றுக்கொண்டதற் காதாரமாக மந்திரியின் கைப்பட ஒரு பத்திரிகையையும் பெற்றுக்கொண்டனர். மந்திரியும் இஃதென்ன ஆச்சரியமாக இருக்கிறதென்று நினைத்துப் பரகாலரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு அரசனிடஞ்சென்று நடந்த விருத்தாந்தத்தை யெல்லாம் தெரிவித்தனன். சோளராஜனும் தனது கோசக்ருஹத்திற்கு வந்து தனத்தைப்பார்த்து பெருமகிழ்ச்சியுடையவனாய், தன் மனதில் பரகாலரை, முற்காலத்தில் பகவதனுக்ரஹத்தால் வஸ்திராபத்தைப் பெற்று யாவரும் புகழும்படி ப்ரகாசித்த திரௌபதியாகவே நினைத்து உபசரித்து,

பாகவத்பக்தரான பாகாலரை மூன்றுநாள்வரை யுபவசிக்கும்படி செய்ததாலுண்டான தோஷநிவிருத்திக்காக அந்த திரவியத்தை யெல்லாம் ஸ்ரீவைஷ்ணவர்கட்கே தானஞ்செய்து, பாகாலரையுங் கிருஹத்திற் கனுப்பினன்.

அதன்பின் பாகாலர் கிருஹத்திற்குச் சென்றதும் தமது தேவி யைப்பார்த்து, 'தேவி! ராஜகோபத்தினால் நேர்ந்த விபத்துக்களெல் லாம் ஸ்ரீவைஷ்ணவாராதனத்தால் திருவுள்ளமுகந்த ப்ரணதார்த்தி ஹரனான ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யகடாக்ஷத்தினால் விலகிப் போயின' என்றுசொல்லி, குமுதவல்லியின்கணவனான பாகாலர், இனி நாம் ராஜதனத்தை யபஹரிப்பது யுக்தமன்றென்று கருதி, வழிப்பறிசெய்து கிடைத்தபொருளினால் ஸ்ரீவைஷ்ணவாராதனத் தைச்செய்துவந்தனர். பின்னும்அவர் கூர்மையுள்ள வாளாயுதத்தினை யுடையபல போர்வீரர்களுடன் க்ரூர மிருகங்கள் வசிக்கின்ற வனத் தில் சஞ்சரித்துக்கொண்டு வனமார்க்கங்களிற் செல்கின்றவர்களின் பொருள்களைக் கவர்ந்துகொண்டும், அங்குள்ள கொடியமிருகங்களை வேட்டையாடிக்கொண்டும், ஹரிபக்தர்களினாராதனத்திற்காகப்பின் னும் வழிச்செல்பவர்களின் பொருள்களையபகரிப்பதற்காக அவர்கள் வரவை யெதிர்பார்த்துக்கொண்டும், தன்னைச்சேர்ந்த வீரர்களையெல் லா மாங்காங்கு வநத்தில் நியமித்துவிட்டுத் தாமும் மரங்களின் நுனிகளிலேறிக்கொண்டு சஞ்சரித்தனர்.

8-வது ஸர்க்கம் முடிந்தது.

---

## 9-வது ஸர்க்கம்.

## ஸ்ரீ ஆண்டாள் வைபவம்.

ஸ்ரீவில்லிபுத்தூ ரென்ற திவ்யநகரத்தில் மிகவுமழகியதோர் நுத்தியானவந மிருந்தது. அவ்வுத்தியானமானது அசோகம், மந்தாரம், பாடலி, ரசாலம், தமாலங் கேசரம் முதலிய பற்பல விரு க்ஷங்களாற் சூழப்பெற்றுச் சூரிய கிரணங்களை மறைக்கின்றதாக

வும், அங்கு வசிக்கின்ற பக்ஷிகட்கெப்போதும் ஆநந்தத்தையே விளைவிக்கின்றதாகவும், அங்குள்ள மாமரங்களின் மகரந்தத்தை மாந்திமதித்திருக்கின்றமதுகரங்களின்வரிசையால்வியாபிக்கப்பெற்ற மல்லிகைக்கொடிகளின் பந்திகளையுடையதாகவும், சந்தனதருக்களாலமைந்த வேலிகளில் சஞ்சரிக்கின்ற சர்ப்பங்களின் தலைகளில் உள்ள ரத்தினகாந்தியால் பிரகாசிக்கின்றதாகவும், நன்றாய்க் கனிந்த நாவற் கனிகளின் ரஸத்தையும் மாதுளங்கனிகளின் ரஸத்தையும் பருகிக் கர்வமுற்றிருக்கின்றகிளிகளின் இனிய சதுரமொழிகளுடன் கூடியதாகவும், பச்சிலைமரங்களின் பந்திகளில் வசிக்கின்ற மயில்களின் கேகா வென்னும் வேரொலியை யுடையதாகவும், திக்விஜயத்திற்காகப் புறப்படுகின்ற காமனதுகாஹளவாத்தியமாய்க் காணப்படுகின்ற குயில்களினொலியுடன் கூடியதாகவும், இடைவிடாது கரைபுரண்டோடுகின்ற மகரந்தமாகிய மாநதியிற் படிந்த வண்டுகளின் ஜங்காரத்வனியை யுடையதாகவும், புஷ்பதூளிகளால் விசித்திரமாகவும் விஸ்தாரமாகவுமமைக்கப்பெற்ற மேற்கட்டியின் விலாசத்தை யுடையதாகவும், பரிசுத்தமான சிறந்த இதழ்களின் பச்சை நிறத்தையுடைய துளசிவனத்தால் சுத்திசெய்யப்பெற்ற மற்றை யிடத்தையுடையதாகவு மிருந்தது.

அவ்வுத்தியானத்திற்குச் சென்ற ஸ்ரீவிஷ்ணுசித்தர் நாற்புறமும் பார்த்துக்கொண்டவண்ணமே அதினுட்சென்று அங்குள்ள புதிய மலர்களை சங்க்ரஹித்துவைத்துவிட்டு, அங்கோரிடத்தில் துளசிவனத்தை நன்றாய் ஸம்ரக்ஷிக்கவேண்டுமென்ற திருவுள்ளமுடையவராய், மண்வெட்டியால்வெட்டினர். வெட்டவே, ஆடிமாசமும் பூரநக்ஷத்திரமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் அந்தத் துளசீவன மத்திய பூமியினின்றும் திவ்யாங்க சுந்தரியான ஒரு பால கன்னிகை யுத்பவித்தனள். அப்போது தனது காந்தியால் நாற்புறமும் பச்சைநிறமாகச் செய்கின்ற அக்குழந்தையை ஸ்ரீவிஷ்ணுசித்தர் கைகளிலெடுத்துக்கொண்டு பரமாநந்தபரிதராய்த் தமக்குள் 'ஆஹா! துளசி யிருக்குமிடத்தில் அயோநிஜையா யுத்பவித்த இக்குழந்தை, முன்பு ஜானகிதேவி பூமியினின்றும் உத்பவித்ததுபோலெவ்வித முத்பவித்தனள்!' என்று நினைத்து ஆச்சர்யமடைந்தனர்.

அப்போது ஆகாயத்தினின்று ஒரு வாக்குண்டாயிற்று. அது, "ஹே விஷ்ணுசித்தரே! பூர்வகாலத்தில் வராஹாவதாரஞ் செய்தருளிய எம்பெருமானால் உத்தாரணஞ் செய்யப்பெற்ற பூமிதேவியானவள் வராஹரூபியான சர்வேச்வரனைப்பார்த்து, 'ஸ்வாமி! உமது திருவுள்ள முகக்கவேண்டுமென்று கருதுகின்றவர்கள் எந்தக்காரியத்தைச் செய்யவேண்டும்?' என்றனள். அதற்கு பகவான் பூதேவியைப்பார்த்து, 'ஹே மேதிநீதேவி! நான் சொல்கிறேன் கேள்; என்னை ஸ்தோத்திரத்தினாலும் நறுமலர்மாலைகளாலும் எவர்கள் பூஜிக்கின்றனரோ அவர்கட்கு அழிவற்ற சம்பத்தைக் கொடுக்கின்றேன்; புஷ்ப கைங்கர்யஞ் செய்கின்றவர்கட்கும் பலனைக்கொடுக்கின்றேன்; அவர்களை வித்வான்களால் ஸ்தோத்திரஞ்செய்து ஆதரிக்கப்பெற்றவர்களாகவும் புகழப்பெற்ற நற்குணங்களையுடையவர்களாகவும் செய்விக்கின்றேன்' என்றனர். அதுமுதலவள் தான் பூமியிலவதரிக்கவேண்டுமென்று ஆவலுடையவளாகவிருந்தும் தன் குணங்கட்கிசைந்து தன்னை வளர்க்கின்றவரில்லாமையா லிதுவரை இவ்வுலகி லவதரியாதிருந்தனள். அந்த பூதேவியே இப்போது சிசுத்தன்மையை யடைந்து முராரியான பகவானை ஸ்தோத்திரமலர்களால் மனமகிழச்செய்வதற்காக இத்துளசீவனமத்தியத்தினின்றும் உத்பவித்திருக்கின்றனள். ஆதலா லிக்குழந்தையை நீர் கொண்டுசென்று வளர்க்க வேண்டும்" என்று கூறிற்று.

கூறவே, ஸ்ரீவிஷ்ணுசித்தர் முற்காலத்தில் ஜநகமஹாராஜர் சீதையைப்பெற்று மகிழ்ந்ததுபோலவும் பாற்கடல் லக்ஷ்மீதேவியைப்பெற்றுச் சந்தோஷித்ததுபோலவும் தரித்திரன் பெருநிதியைப் பெற்றானந்தித்ததுபோலவும் அக்கன்னிகையைப்பெற்று ஆநந்தித்ததுடன், ஸ்ரீவிஷ்ணுசித்தர் அக்குழந்தையை மார்பிலணைத்துக் கொண்டு தன்கிருஹத்திற் கெழுந்தருளித் தமது தர்மபத்நியிடத்தில் நடந்த விருத்தாந்தத்தையெல்லாம் சொல்லி, 'தேவி! மங்களகரமா யுத்பவித்திருக்கின்ற நமது புத்ரியை நன்றாய் வளர்க்கவேண்டும்' என்று கூறித் தமது தேவியின் கையிற்கொடுத்தனர். ஸ்ரீவிஷ்ணுசித்தரின் தேவிகளும் அக்கன்னிகையைப் பெற்றுக்கொண்டு பேராநந்தமடைந்தனர். அதன்பின் இவ்விதம் நடந்த விருத்தாந்

த்தைக் கேட்டவர்களான ஸமஸ்ததேசத்திலுள்ளவர்களும் தமது தாரபுத்திராதிகளுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் வந்து விஷ்ணுசித்தரின் புத்ரியைக்கண்டு மகிழ்ந்து, 'மங்கள ஸ்வரூபையான இக்கன்னிகை யினால் ஸ்ரீவிஷ்ணுசித்தர் மாத்திரம் சுகிருதஞ்செய்தவரன்று; இவ் வுலகத்திலுள்ள நாமெல்லோருமே சுகிருதஞ்செய்தவர்களானோ' மென்று சொல்லிக்கொண்டு, தங்கள் தங்கள் விபவத்திற்கேற்றபடி உத்ஸவங்கொண்டாடினர். விஷ்ணுசித்தரும் தமது கிருஹத்திற்கு வந்தவர்களையெல்லா மவரவர்கட்கேற்றபடி திரவியத்தா லுபசரித் தனுப்பினர்.

பின்பு அவர், தங்குழந்தை கமலக்கண்ணனான எம்பெருமான் விஷயத்தில் வாக்கைச் செலவிடப்போகிறாளென்று நினைத்தே அதற்கிசைந்தபடி குழந்தைக்குப் பெயரிட்டனரோவென்று உலகத் தார் நினைக்கும்படி, நல்ல சுப முகூர்த்தத்தில் * கோதா (கோதை) என்று பெயரிட்டனர். பின்பு சிலநாள் சென்றதும் விஷ்ணுசித்தர் தமது புத்திரியின் இடதுகையிலுள்ள உத்தமலக்ஷணங்களைக்கண்டு இவள் திரிலோகநாதனுக்கே பத்நியாவாளென்றும், தளிர்போற் சிவந்த இவள் பாத பங்கஜங்களிலுள்ள சுபலக்ஷணத்தைப்பார்த்து இவள் சகல தேவமாதர்களின் கேசத்திலணிந்திருக்கின்ற புஷ்பங் களால் பூஜிக்கப்பெற்ற சரணங்களையுடையவளாவாளென்றும் மகிழ் ச்சியடைந்தனர்.

பின்பொருநாள் நித்திரைசெய்வதற்காகக் குழந்தையைச் சுவர் ணமயமான தொட்டிலிலிட்டுச் சிற்சில கதைகளைச்சொல்லி நித்திரை செய்விக்க, ஓயாதழுகின்றபோது, ஸ்ரீகண்ணபிரானுடைய திவ்ய சரித்திரத்தைச்சொல்லவே அதனைக்கேட்டவுடன் குழந்தை சந்தோ ஷத்தினால் மந்தஹாசத்துடன் கூடிய முகாரவிந்தத்தையுடையதாய்க் காணப்படவே, அதனைக்கண்டு மாதா பிதாக்கள் முதலிய யாவ ரும் ஆச்சரியமடைந்தனர்.

இவ்விதஞ் சிலநாள்கள் சென்றபின் ஸ்ரீகோதை தன் பாதங் களிலொலிக்கின்ற சிலம்புகளையுடையவளாய் பூமியிற் கைகளை

* கோதா - வாக்கைக்கொடுக்கின்றவள்.

யூன்றித் தவழ்ந்துகொண்டும், தன் முகத்தைக்கண்டு தாமரை மலரென்றாவலுடன்வந்து சூழ்ந்துகொண்டிருக்கின்ற வண்டுகள் போற்காணப்படுகின்றனவும் முகத்திற்கு நேராய்த் தொங்குகின்றனவுமான அளகங்களை யடிக்கடி தன் கைகளால் விலக்கிக்கொண்டும், ஸ்ரீவிஷ்ணுசித்தரின் கிருஹத்தின் வாயில்முற்றங்களில் புழுதியில் விளையாடிக்கொண்டும் இருந்தனள். அப்போது விஷ்ணுசித்தர், அழகிய மந்தஹாசத்துடன் ப்ரகாசிக்கின்ற முகமண்டலத்தையுடையவளாகவும், நெற்றிக்கு நேராய்த் தொங்குகின்ற ரத்தினச் சுட்டியையுடையவளாகவும், புழுதிபடிந்த சரீரத்தையுடையவளாகவுமிருக்கின்ற கோதையைத் தழுவியெடுத்து உச்சிமோந்துபார்த்து மனமகிழ்ந்தனர்.

அன்றியும் குழந்தையான ஸ்ரீகோதை மணிமயமான திண்ணையில் பிரதிபிம்பமாய்க் காணப்படுகின்ற தன் முகத்தையே தாமரைமலரென்றெண்ணிக்கொண்டு அதனை யாசையுடனுற்றுப்பார்த்துக் கையினாலதைக் கவர்வதற்கெத்தனிக்கின்றவளாகவும், ரத்தினமயமான சுவரில்காணப்படும் தன்னுருவத்தைப் பார்த்து வேறொரு குழந்தையென நிச்சயித்துக்கொண்டு கைசம்ஞை செய்துகூப்பிட்டும் பின்பு அக்குழந்தை தன்னை யழைக்கின்றதாக நினைத்து அதின் சமீபத்தில் செல்கின்றவளாகவும், தன் செவிலித்தாயின் கைவிரல்களைப் பிடித்துக்கொண்டு மெல்ல மெல்ல எழுந்து இரண்டுமூன்றடி நடந்தும் பின்பு தடுமாறிக் கீழேயுட்காருகின்றவளாகவும், செவிலித்தாய் சொல்கின்ற வசனத்தின்படியே தானும் 'அப்பா அம்மா' வென்று சொல்லிக்கொண்டும் 'கோவிந்த கோவிந்த' வென்று கூறிக் கைத்தாளமிட்டுக்கொண்டும் தன் தாய்தந்தையர்கட் கானந்தத்தை யுண்டுபண்ணினள்.

பின்னும் குழந்தைப்பருவத்தினளாகிய ஸ்ரீகோதை, முற்காலத்தில் காகம் தனக்கபராதஞ்செய்ததென்று கருதியே அதனை வாவென்றழையாது, பறக்கின்ற கருடனைப்பார்த்து 'வா! வா!' என்றழைத்தனள். அன்றியும் அவள் எம்பெருமானுடைய மனதினின்றும் ஜநித்தவனான சந்திரனைப்பார்த்து ஆதரவோடு 'அம்புலி!

வர் வா!' என்றழைத்தனள். அன்றியும் பாலப்பருவத்தையே அணியாகவுடைய கோதாதேவி தன் தோழிகளோடு ரதவீதிகளிற் சென்று விளையாடும்போது புழுதிகளால் மலைகளையும் வனங்களையும் சமுத்திரங்களையுமுடைய உலகத்தை யுண்டுபண்ணி, அதில் தனக்கொரு க்ருஹத்தையுங் கட்டிவைத்துக்கொண்டு, நீலோத்பலமலர்களை யடுப்பாகவும் அவ்வடுப்பிற்குள் செண்பகமலர்களை நெருப்பாகவும்போட்டு, அவ்வடுப்பின்மேல் புஷ்பரஸங்கள் நிறைந்த தாமரைமலரை ஜலத்துடன்கூடிய சமையல்பாத்திரமாகவும்வைத்து, அந்தப் பாத்திரத்தில் மாதுளங்கனிகளின் விதைகளை யரிசியாகவுமிட்டுச் சமையல் செய்வது முண்டு.

அன்றியும் ஸ்ரீகோதை ஆண் பெண்ணுருவமைந்த இரண்டு பொம்மைகளை மணக்கோலஞ் செய்துவைத்துக்கொண்டு, அவற்றில் பெண் பொம்மையை ருக்மிணியாகவும், ஆண் பொம்மையை ஸ்ரீ கிருஷ்ணனாகவும் பாவித்து, ருக்மிணீதேவிக்கு சுயம்வரம் நடக்கும்போது பலராமருக்கும் சிசுபாலனுக்கும் யுத்தம் நடந்து முடிந்து விவாஹம்நடப்பதாகவும், அந்த விவாஹத்தில் ஸ்படிகமயமான வேதிகையின் நடுவில் நற்பவழங்களை யக்கினியாகவும் செஞ்சந்தனச் சுள்ளிகளை சமித்துக்களாகவும் பாவித்துக்கொண்டு, அந்த ஹோமகுண்டத்தில் முத்துக்களைப் பொரிகளாக ஹோமஞ்செய்து, அவ்விருவருக்கும் விவாஹம் நிறைவேறியதாய் விளையாட்டை முடித்தனள்.

இஃதன்றியும் சிறந்தவிலாசவதியான ஸ்ரீகோதை சகிகளுடன் ரத்தினமயமான பந்தை யெடுத்துக்கொண்டு உட்கார்ந்துகொண்டும் சுற்றிக்கொண்டும் நின்றுகொண்டும், முன்சென்றும் பின்சென்றும் பக்கங்களில்சென்றும் விளையாடுவதும் முழங்கால்களாற் பந்தை யடிப்பதும் பந்தைத் தன்னிருகைகளாலும் மாறிமாறியடிக்கும்போது சிரமத்தினால் வேர்வையுண்டாகவும் சிதைந்தகேசம் அவ்வேர்வையுடன் பொருந்தவும், அந்தசமயத்தி லிடையிடையே யவிழ்கின்ற வஸ்திரத்தையும் மேகலையையும் கேசபாரத்தையும் காற்சிலம்பினையும் மார்பிலணிந்துள்ள ஹாரங்களையும் விளையாட்டைநிறுத்தாமலே முன்னிருந்தபடிசெய்துகொண்டும் விளையாடுவதாகவிருந்தனள்.

ஸ்ரீ கோதை தன் தோழிகளுடன் கழலாடும்போது தான் தோல்வியடையவே, அப்போது அவள் தோழிகள் ஸ்ரீ கோதையைப் பார்த்து, 'கோதாய்! நீ தோற்றுபம்மா; உன் பர்த்தாவின் பெயரைச் சொல்' என்று கூறவே, அவள் வெட்கத்தினால் தலை குனிந்து கொண்டு 'வடபத்ரசயந' னென்று மெல்லச்சொல்லினள். பின்பு ஸ்ரீ கோதை பன்னாங்குழியிலுள்ள பதினாலு குழிகளிலும் முத்துக்களையே நிரப்பிக்கொண்டு சகிகளுடன் விளையாடும்போது குழிகளிலுள்ள முத்துக்களையெல்லாம் ஓரே குழியில் வரும்படி செய்து முறையாய்க் குழிகள் தோறும் நன்னான்கு முத்துக்களாய்க் கவர்ந்து வெற்றிபெற்றதுமன்றி, மங்களகரமான அங்கசௌந்தர்யமுள்ள ஸ்ரீ கோதை, மூன்று நிறங்களையுடையனவும் சுவர்ணமயமானவைகளுமான மூன்றம்மனைகளைக் கைகளிலெடுத்து உயரப்போட்டுக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்தவண்ணமே விளையாடும்போது பாடவேண்டிய பாட்டுக்களைத் தான் வேறு விஷயமான பாட்டுக்களாகப் பாடாமல், யாவரையும் மோஹிக்கச்செய்கின்றவைகளும் முராரியான எம்பெருமானுடைய திவ்யசரிதங்களைப்பற்றியவைகளுமான பாசுரங்களையே இன்னிசையுடன் கானஞ்செய்துகொண்டும் விளையாட்டை முடிப்பாள்.

இப்படியிருக்கும்போது, ஸ்ரீ கோதையின் பிதாவான ஸ்ரீ விஷ்ணுசித்தர் எம்பெருமானுக்குக்கென்று வைத்திருந்த புஷ்பமாலையை அவர் எம்பெருமானுக் கொண்டுபோய்ச் சமர்ப்பிப்பதற்குமுன்பே, கோதை தன் கூந்தலி லணிந்துகொண்டு கிருஹத்திற்குள்ளிருக்கின்ற கிணற்றின் சமீபத்திற்சென்று நின்றுகொண்டு தன் திருமுக மண்டலத்தினழகை ஜலத்திலுற்றுப் பார்த்துவிட்டு மறுபடியும் புஷ்பமாலையை முன்னிருந்த இடத்திலேயே வைத்துவந்தனள். இவ்விதம் தினந்தோறும் கோதையின் கூந்தலிலணிந்துகொண்ட பூமாலையை ஸ்ரீவிஷ்ணுசித்தர் தாம் அறியாது எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கவே, அம்மாலையினால் பகவானுக்குண்டான சந்தோஷம் முன்பு ஸ்ரீவிஷ்ணுசித்தர் கோதையின் குழலில் சூடாமல் கொணர்ந்து ஸமர்ப்பித்த மாலையினால் ஏற்படவில்லை. பின்பு ஸ்ரீ கோதை தானு முபவனஞ்சென்று புதிய நறுமலர்களைப் பறித்துக் கொணர்ந்து தானே மாலையாகக்கட்டி, தன் பிதாவுக்குத்தெரியாமல் தன் கேசத்திற்சூடி அழகு பார்த்துவிட்டுப் பின்பு ஸ்ரீவிஷ்ணுசித்தரிடத்திற் கொடுத்து எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கும்படி கொடுத்துவந்தனள்.

இவ்விதமாகச் சிலகாலஞ்சென்று பாலப்பருவம் நீங்கியபின், நீண்ட திருக்கண்களையுடைய கோதை, புராரியின் நேத்திரத்தினா லெரிபட்ட மன்மதனை முராரியினால் மறுபடியும் ஜீவிக்கும்படி செய்வதற்காகவே புதிய யௌவநாரம்பத்தை யடைந்தனள். அடையவே ஸ்ரீ கோதையின் திருமேனியில், ஸ்தநங்களாகிய சக்ரவாகங்களின் விலாசத்துடன் கூடியதும், காமனால் கலக்கமுற்றுப் பிறழ்கின்ற கண்களாகிய கருங்குவளைமலர்களை யுடையதும், முறையே சென்று ஸ்ரீமந்நாராயணனென்னுங் கருங்கடலை யடையப்போகின்றதும் ஆகிய புதியதொரு தேஜோமயமான நதியானது விருத்தி யடைந்தது. அப்போது யாதொரு பிரயத்தினமுமின்றி யுடம்பிற்கேற்பட்ட ஆபரணமாகவும் மகரகேதநனின் மகாஸ்திரமாகவும் முராரியான பகவானுடைய நேத்திரங்கட் கானந்தப்பெருக்காகவு மிருக்கின்ற யௌவநமானது ஸ்ரீ கோதையின் திவ்யசரீரத்தில் வ்யாபிக்கவே புதிய யௌவநப்பருவத்தையுடைய கோதையின் சரீரமானது விலாசத்துடன் கூடிய புருவங்களையும் நீண்ட கண்களையும் ஸ்தநபாரத்தால் நுடங்கிய நுண்ணிடையையும் உன்னத ரோமாவளியையும் குடிலகேசத்தையு முடையதாக விளங்கிற்று.

அன்றியும் ஆழ்ந்த நாபியாகிய தடாகத்தை யுடையதும் ப்ரகாசிக்கின்ற புஜங்களாகிய கொடிகளையுடையதும் நேத்திரங்களாகிய வண்டுகளையுடையதுமான கோதையின் வடிவமானது, விளையாட்டிற்காக வமைத்த மன்மதனுடைய உபவனமாக ஆயிற்று. ஆனால் மாரன் தான் வெற்றிபெறுதற்குக் கோதையின் கடைக்கண்பார்வையே லக்ஷ்யந்தவறாத பாணமாகச் செய்துகொண்டனனென்பதுதான் யுக்தமானது. இவ்வாறன்றி அவன் புஷ்பங்களையே கணைகளாகக் கைக்கொள்வானாகில் உலகங்கட்கெல்லாம் ஈசனான பகவானை ஜயித்தவனென்னுங் கதை எவ்வாறு பொருந்தும்? மான்விழியாளான ஸ்ரீ கோதையின் கேசங்களில் சூடிக்களைந்த புஷ்பமாலையையணிந்துகொண்ட புருஷோத்தமன் பொறுமையுடன் குரூரமாய்ப் பார்க்கின்ற ஸ்ரீதேவியையும் லக்ஷ்யஞ்செய்யாது சந்தோஷமடைந்தனர். இத்தகைய பெருமைதங்கிய கோதையின் கூந்தல்களே புண்ணிய முடையன. அழகிய நயனங்களையுடைய கோதையின் சௌந்தர்ய

மாகிய நதியில் விளையாடுகின்ற சக்ரவாக பக்ஷிகளோவென்று வியவஹரிக்கத்தகுந்த ஸ்தநங்களிரண்டும் ஸ்ரீகோதையின் உதரத்திலிருக்கின்ற ரோமலதையின் பூங்கொத்துகட் கிணையாக ப்ரகாசித்தன. இவ்வித திவ்யாங்கசுந்தரியான ஸ்ரீகோதை தினந்தோறும் காந்தியுடன் சந்திரலேகை விருத்தியடைவது போலவும் பரிமளத்துடன் சந்தனக்கொடி படர்ந்தெழுவது போலவும் பகவானிடத்திற் பற்றிய மனோபாவத்துடன் ஸ்ரீவிஷ்ணுசித்தரின் திருமாளிகையில் வளர்ந்து வந்தனள்.

இவ்விதம் சிலநாட் சென்றபின் அதனினு மதிகமாய் விருத்தியடைகின்ற யௌவந சம்பத்தினாலழகிய திருமேனியையுடைய ஸ்ரீகோதையின் திருவுள்ளமானது ஷாட்குண்ய பரிபூர்ணனாகவும் சிதாநந்த ஸ்வரூபனாகவும் வேதங்கட்கெல்லாம் ஆதியாகவும் விளங்குகின்ற எம்பெருமானிடத்தில் மிகவும் பற்றுடையதாயிற்று. உலகத்தில் சலியாத ஸ்வபாவமுடையவர்களின் சித்தமானது இயற்கையில் இனிதான வஸ்துவினிடத்திற் பெரும்பாலும் பற்றுகின்றதன்றோ?

ஒன்பதாவது ஸர்க்கம் முற்றுப்பெற்றது.

---

## பத்தாவது ஸர்க்கம்.

---

ஒருநாள் ஸ்ரீவிஷ்ணுசித்தர் பரிமளத்திற்சிறந்த மாலைகளால் வடபத்திரசயனரான எம்பெருமானை ஆராதித்துவிட்டு வந்து தம் க்ருஹத்தி லெழுந்தருளியிருக்கும்போது தனது பஞ்சேந்திரியங்களின் வியாபாரமனைத்தையும் முராரியான பகவானிடத்தில் ஈடுபடச் செய்கின்றவளான ஸ்ரீகோதை பகவத் குணங்களைக் கேட்க வேண்டுமென்ற ஆவலுடையவளாய்த் தன் பிதாவைப் பார்த்து, 'ஐயா ஜகத்ரக்ஷணத்தில் வல்லமையுடையவைகளான எம்பெருமானுடைய சகல சரித்ரங்களையும் விசேஷமாய்த் தேவரீர் அறிந்திருக்கிறீர்; ஆதலால் இவ்வுலகில் அர்ச்சாவதாரத்தையுடைய எம்பெருமானின் ஆலயங்கள் இத்தனையென்பதையும் அந்தத் திவ்யாலயங்

களின் வைபவங்களையும் இப்போது எனக்குச் சொல்லவேண்டும்' என்றனள்.

இவ்விதம் ப்ரீதியுடன் கேட்கின்ற புத்திரியின் சொற்களைக் கேட்ட ஸ்ரீவிஷ்ணுசித்தர் தமது புத்திரிக்கு எம்பெருமான்களின் வைபவங்களைச் சொல்லவேண்டுமென்ற திருவுள்ளத்துடன் புத்ரியைப்பார்த்துக் 'குழந்தாய்! இப்பூவுலகில் அர்ச்சாவதார எம்பெருமானுடைய ஆலயங்கள் நூற்றெட்டிருக்கின்றன. இவற்றின் வைபவத்தைக்கேட்டோர்கட்கு மோக்ஷம் கைவசமாயிருக்கின்றது' என்றும், ஒவ்வொரு திருக்கோயிலின் விருத்தாந்தங்களையும் சொல்லிக்கொண்டுவரும்போது ஸ்ரீகோதை மதுராநகரத்திற் கதிபதியான கண்ணன் சரித்திரத்தைக் கேள்வியுற்றதும் ஆச்சரியமடைந்தனள். அதன்பின் சுந்தரராஜனுடைய சரித்திரத்தைக் கேட்கும்போது மங்களவடிவுடைய ஸ்ரீகோதையினங்கமெங்கும் புளகாங்கிதமாயிற்று. பின்பு திருவேங்கடமுடையான் திவ்யசரித்திரத்தைக் கேட்கும்போது ஸ்ரீகோதையின் அழகிய திருமுகமண்டலத்தில் மலர்ச்சி யதிகரித்தது. பின்பு ஸ்ரீரங்கராஜன் மகிமையைக்கேட்டவுடன் தாமரைதளம்போன்ற கண்களையுடைய கோதை அதிகாநந்தத்தையுடையவளாய் ஸ்ரீரங்கராஜன் ப்ரபாவமாகிய திவ்யாமிருதபானத்தினல் திருப்தியடையாதவளாய் மந்தஹாசத்துடன் தன் பிதாவைப்பார்த்து, 'ஐயா! ஸ்ரீரங்கநாதனுடைய பரிசுத்தங்களான சகல சரித்திரங்களையும் விஸ்தாரமாய் அடிக்கடி சொல்லவேண்டும்' என்று கூறினள்.

அப்போது ஸ்ரீவிஷ்ணுசித்தர் தம்முடைய புத்ரிக்கு ஸ்ரீரங்கநாதனிடத்தில் பரமபக்தியிருக்கிறதென் றறிந்துகொண்டு சந்தோஷத்துடன் புத்திரியைப் பார்த்து, 'குழந்தாய்! சாவதானமாய்க் கேள்; பரமதயாநிதியாயும் தேவதேவனாயு மிருக்கின்ற ஸ்ரீரங்கநாதன் சரித்ரத்தை ஆதிமுதற் சொல்கின்றேன்; முன்பொருகாலத்தில் பிர்ம்மாவின் தபோவிசேஷத்தால் சந்தோஷமடைந்த பன்னகசயநனான பகவான் நான்குவேதங்களின் வடிவுடைய உன்னத சிகரங்களினால் அழகியதும் ப்ரணவஸ்வரூபமானதும் ரங்கமென்ற பெயரையுடையதுமான விமாநத்துடன்கூடியவராய்ப் பாற்கடல் நடுவினின்றும் உத்பவித்தனர்.

இவ்விதம் பாற்கடலினின்றெழுந்தருளியவரும் சகலஉபநிஷத்திற்கும் மூலபூதருமான பகவானை பிர்ம்மதேவர் சத்தியலோகத்திற்கெழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்று பிரீதியுடன் ஆராதித்து வந்தனர். பின்பு அந்த சத்தியலோகத்தில் பிர்ம்மாவானவர் பகவத்பிரீத்யர்த்தமாக ஒரு யாகஞ்செய்ய ஆரம்பித்தனர். அந்த யாகத்திற்காக தேவர்கள் அசுரர்கள் மகரிஷிகள் முதலிய யாவரும் வந்து சேர்ந்தனர். அப்போது சூரியவம்சாதிபதியாயும் பிரகாசிக்கின்ற சத்குணங்களையும் பராக்ரமத்தினையுமுடையவரும் மநுவின்புத்திரருமான இக்ஷ்வாகு மகாராஜரும் அங்கு வந்தனர். வந்ததும் அவ்விடத்தில் ப்ரணவாகார விமானத்தில் ஆதிசேஷன்மீது சயனித்துக்கொண்டிருக்கிற பராத்பரனான பகவானை ஸேவித்ததும் இக்ஷ்வாகுமகாராஜர் கமலாசநரான பிர்ம்மாவைக்குறித்துத் தபசுசெய்து ஸ்ரீரங்கேசனைத் தம் குலதெய்வமாக எழுந்தருளப் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று நினைத்தனர்.

இப்படியிருக்கும்போது அவ்விடத்தில் யாகம் முடிந்ததும் இக்ஷ்வாகு மகாராஜர் பிரம்மாவினு லனுப்பப்பெற்றவராய்த் தாம் திரும்பிவரும்போது அயோத்தியா நகரத்தை ரங்கநிலயமாகவே நினைத்துக்கொண்டு அயோத்யைவந்து சேர்ந்தனர். உடனே அவர் பிரம்மாவைக்குறித்து அரிய தபஸைச்செய்யவே அத் தபஸின்மஹிமையால் தாம் நினைத்தபடியே ஸ்ரீரங்கநாதனைத் தங் குலதெய்வமாகப் பெற்றுப் பரமாநந்தமடைந்தனர். அதுமுதல் பரம புருஷனான எம்பெருமான் சூர்யவம்சத்தரசர்களான இக்ஷ்வாகுமகாராஜர் முதல் தசரதசக்ரவர்த்திவரையுள்ள அரசர்களால் ஆராதிக்கப் பெற்றுவந்தனர்.

அதன்பின் ராவணசம்ஹாரம் பண்ணின பரமபுருஷனான ஸ்ரீராகவன் விபீஷணனுக்கு லங்காராஜ்யத்துடன் ரங்கவிமானத்திலெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானையும் அனுக்ரஹித்தனர். விபீஷணரும் ஸ்ரீரங்கநாதஸ்வரூபனான ரகுநாதனு லனுக்ரஹிக்கப்பெற்ற பகவானை ப்ரணவாகாரவிமானத்துடன் அயோத்தியினின்றும் லங்காநகரத்திற்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரும்போது வழிநடுவில் விபீஷணர் கர்மாநுஷ்டானத்தை முடித்துக்

கொண்டுபோகவேண்டுமென்ற எண்ணத்துடன் காவேரியின் மணல் மயமான சந்திரபுஷ்கரணிக்கரையில் பகவானை எழுந்தருளப்பண்ணி விட்டுத் தாம் தமது நியமத்தை முடித்துக்கொண்டு மறுபடி எம் பெருமானை எழுந்தருளப்பண்ண ஆரம்பிக்கவே அவ்விடத்தினின் றும் விமானம் பெயர்க்கமுடியாமற் போயிற்று.

அப்போது பரமபக்தரான விபீஷணர் வருத்தத்துடன் ஒன் றுந்தோன்றாது நிற்கவே ஆகாயத்தில் ஓர் அசரீரிவாக்குண்டா யிற்று. அது விபீஷணரைக்குறித்து 'ஹே! விபீஷண! என் விமா னம் அசையாதிருப்பதைப்பற்றி நீ திகைக்கவேண்டாம், பெரிய தான இக்காவேரியின் மத்தியபூமியானது என்மனத்திற்குப் பிரிய மாயிருக்கின்றது; இங்குள்ள ஒன்பது புண்ணியதீர்த்தங்களில் வசிக்கின்ற ரிஷிகளின் சிறந்த தபசையும் தர்மவர்மனுடைய தபசை யும் பயன்பெறச் செய்வதற்காக இம்மணல் ப்ரதேசத்தில் ஆதி சேஷன்மீது யான் உனது லங்காநகரத்தைப் பார்த்தவண்ணமே யோகமுத்திரையுடன் சயனித்துக்கொண்டிருக்கிறேன்; நீ வருந்த வேண்டாம் லங்காநகரஞ் செல்வாய் என்று சொல்லிற்று.

இதனைக்கேட்டதும் பக்தி பரவசரான விபீஷணர் பகவந்திய மனத்தின்படி நடப்பதுதான் நமதுகடமை என்று நினைத்துக் கொண்டு லங்காநகரம் போய்ச்சேர்ந்தனர். அதுமுதலிதுவரையும் சர்வவியாபியான எம்பெருமான் *சப்தாவரணபூஷிதமான ஸ்ரீரங்க மென்னுந் திவ்யதேசத்தில் புன்னைமரங்களாலலங்கரிக்கப்பெற்ற சந்திரபுஷ்கரிணிக்கரையில் வசிக்கின்றவராய்ச் சோழராஜன் கந் நிகையாய் இப்பூமியிலவதரித்த ஸ்ரீதேவியை விவாஹித்துக் கொண்டு பதினான்கு உலகங்களையும் பரிபாலிக்கின்றனர். அன்றி யும் ஜகன்மோகனமான திவ்யாங்க சௌந்தர்யத்தையுடைய ஸ்ரீரங்கநாதன் சோழராஜபுத்ரிக்கு அழகிற்சிறந்த மணவாளனாக வமைந்ததினால் அழகிய மணவாளனென்னுந் திருநாமத்தையு மடைந்தனர்.

குழந்தாய்! நவக்ரஹங்களிலும் சூரியன் எவ்விதஞ் சிறந்த வனோ அதுபோலவே சர்வவியாபியான பகவானுக்கு நூற்றெட்டு

---

* சப்தாவரணம் - ஏழுதிருமதில்கள்

திவ்யதேசங்களிலும் ஸ்ரீரங்கமென்னுந் திவ்யதேசமே சிறந்ததாகயிருக்கின்றது. ஸ்ரீ ரங்கராஜனுடைய ஆக்ஞையானது தேவர்களின் சிரசினால் மாத்திரம் வஹிக்கப்படுகின்றதன்றி அர்ச்சாவதாரத்துடன் எழுந்தருளியிருக்கின்ற மற்ற எம்பெருமான்களின் சிரங்களாலும் வஹிக்கப்படுகின்றது. ஸ்ரீரங்கநாதனுக்கு மற்றைய நூற்றேழு திவ்யதேசங்களும் தமது விளையாட்டிற்காக நாற்புரத்திலும் அமைந்திருக்கின்ற உபவனங்களின் தோற்றத்தை வெளிப்படுத்துகின்றன.

கோதாய்! முக்தர்களா லனுபவிக்கப்படுகின்றவனும் கருணைக் கடலாகிய திருக்கண்களையுடையவனும் நாதனுக்கும் நாதனுய் விளங்குகின்றவனுமான ஸ்ரீ ரங்கேசனுடைய மகிமையானது வாக்கிற் கெட்டாதது. என்று தன் பிதாவின் மூலமாய் ஸ்ரீ ரங்கராஜன் வைபவத்தைக் கேள்வியுற்றதும் ஸ்ரீகோதை ஆதித்தனிடத்தில அரவிந்தப் பொய்கைபோல் அரங்கனிடத்தில் ஆசையுற்றவளாய் அவனையே யனுபவிக்க வேண்டுமென்ற எண்ணத்தால் அவ்வம்புஜாக்ஷி எம்பெருமானையே மனத்தில் நினைத்துக்கொண்டு வேறு நினைவுகளை விலக்கிவிட்டனள்.

இவ்விதம் கோதை ஸ்ரீகேசவனையே தியானிக்கின்றவளாய் ஜகமனைத்தையும் அவன் மயமாகவே கண்டனள். காணவே 'சர்வம் விஷ்ணுமயம்ஜகத்' என்றுசொல்லுதல் வீண்போகாதாயிற்று. பின்பு மறுபடியும் ஸ்ரீகோதை வணக்கமுற்றவளாய் சந்தோஷத்தோடு தன் பிதாவைப்பார்த்து, 'ஐயா! குல கன்னிகைகள் கோவிந்தனைக் கணவனுக அடைவதென்றால் அது எப்படிக் கைகூடுமென்றனள். அதற்கு விஷ்ணுசித்தர் 'குழந்தாய்! முற்காலத்தில் கோபிகைகள் காமபரவசர்களாய் மார்கழி நோன்பு நோற்றுக் கண்ணபிரானைக் கணவனுக வடைந்தனர். நீயும் அவ்விதம் செய்வாயாகில் உன்னையும் பகவான் பத்நியாக அங்கீகரித்துக்கொள்வர்' என்றனர்.

இவ்விதம் பிதா சொல்லியதைக் கேட்டதும் ஸ்ரீ கோதை மார்கழி நோன்பு நோற்கும் வகையை மனத்தில் ஆராய்ந்து தானுங் கோபியரின் தன்மையை யடைந்து மார்கழி விருதத்தை வெளிப்

படித்துகின்றதும் முப்பதுபாசுரங்களால் ப்ரகாசிக்கின்றதும் கானஞ்
செய்தற் கிசைந்ததுமான திருப்பாவை யென்ற திவ்யப்ரபந்தத்தை
யருளிச்செய்தனள். மறுபடியும் ஸ்ரீகோதை எம்பெருமானிடத்
திலுள்ள மிகுந்த காதலால் பகவத் குணாதிசயங்களைத் தான் கேட்
டிருந்தபடி வெளியிடுகின்ற நவரச பரிபூர்ணமான நாச்சியார்திரு
மொழி யென்னும் திவ்யப்ரபந்தத்தை நூற்றுநாற்பது பாசுரங்க
ளாற் செய்தருளினள். பிறவிமார்க்கத்தின் சிரமத்தை நீக்குதற்காக
வும் ஜகத்திலுள்ளோர்கள் உஜ்ஜீவிப்பதற்காகவும் ஸ்ரீவிஷ்ணுசித்
கரின் கன்னிகையால் இவ்விரண்டுப்ரபந்தங்களும் அருளிச்செய்யப்
பெற்றன. முயற்சியினால் தன் மனோரதசித்தியைப் பெறுதவளும்
சீக்கிரத்தில் ஸ்ரீரங்கநாதனை யடையவேண்டுமென்ற திருவுள்ள
முடையவளுமான ஸ்ரீகோதை தன்மனத்தில் ஸ்ரீரங்கபதியான எம்
பெருமான் தயவுடன் கூடியவராய் ஆலிங்கனாதிகளால் நமது யௌ
வன சம்பத்தை யெவ்வித மங்கீகரிக்கப் போகின்றாரோவென்று
சிந்தித்துக்கொண்டு ஒருநாளிரவில் திருக்கண் வளர்ந்தனள்.

இவ்விதம் நித்திரை புரிகின்ற தாமரைக்கண்ணாள் ஸ்வப்னத்
தில் தான் நினைத்தபடியே ஸ்ரீரங்கநாதனை ப்ரத்யக்ஷமாயனுப
வித்தவள் போன்றவளா யனுபவித்தனள். உடனே விழித்துக்
கொண்டதும் பகவானுடைய பிரிவையாற்றாது மிகவும் வியாகுல
முற்றனள். அப்போது மன்மதனு மிதுசான் சமயமென்று கருதிப்
பற்பல பாணங்களை ப்ரயோகித்து ஸ்ரீகோதையை அறிவு கலங்
கும்படி செய்தனன். செய்யவே, அவ்வம்புஜாக்ஷியின் சரீரம் அகா
ரணமாய் நடுக்கமுற்றது. அந்நடுக்கமானது அநங்கன் வில்லொலி
யைக் கேட்டதனாலுண்டாயதோ வென அறிவுறுத்திற்று.

பின்பு ஸ்ரீகோதை விழித்துக்கொண்டு நன்றாயறிவுற்றதும்
ஸ்ரீரங்கநாதனைக் காணவில்லையே யென்ற கவலை அவள்மனதில்
பதிந்துவிட்டதனால் விரஹவேதனையையுடைய ஸ்ரீகோதைக்கு
அன்னபானாதிகளிலும் வஸ்திராபரணாதி அலங்காரத்திலும் சகீ
ஜனங்களுடன் உல்லாசமாய் விளையாடுவதிலும் சற்றும் சந்தோஷ
முண்டாகவில்லை. கோதையின் முககாந்தியால் ஜயிக்கப்பெற்ற சந்
திரனும் சமயம் வாய்த்ததென்று தன் கிரணங்களா லவட்குத் துன்
பத்தை யதிகரிக்கச் செய்தனன்.

பின்பு ஸ்ரீ கோதை தன் மாதா பிதாக்கட்குப் பயந்துகொண்டு விரஹவேதனையை நீக்கவேண்டுமென்று தன்தோழிகளுடன் சண்பகாராமஞ் சென்றனள். அவ்வுபவனமானது குயில் முதலிய பக்ஷிகளின் இன்னிசை நிறைந்ததாகவும் மிகவு முயர்ந்து வளர்ந்திருக்கின்ற பூகம் புன்னாகம் கேசரம், சம்பகம், ரசாலம், தாலம், தமாலம் முதலிய பற்பல விருக்ஷங்களாற் சூழப்பெற்றதாகவு மிருந்தது. ஸ்ரீ கோதை தன் சகிஜனங்களுடன் அவ்வுபவனத்திற் சென்றதும் சகிந்தற்கரிய விரஹவேதனையை யுடையவளாய் மிகவும் வருத்தமுற்றனள். ஆனால் ஸ்ரீ கோதை தன் விரஹதாபத்தைநீக்கிக்கொள்ளவேண்டுமென்ற எந்தஎண்ணத்துடன்உபவனத்தையடைந்தனளோ அது நெருப்பையணைக்க நினைத்து அதில் நெய்யைப் பெய்தது போல் ஆயிற்று. அப்பொழுது அங்கு வீசுகின்ற மந்தமாருதத்தினால் ஸ்ரீ கோதையின் விரஹானலம் விருத்தியடைந்தது. இதனால் அனலிற்கு வாயு அமர்ந்த சகாயனென்பது உண்மையாயிற்று. மன்மதன் மலர்க்கணைகளையுடையவனென்பதை யறியாது ஸ்ரீ கோதை சந்தனதருக்கள் நிறைந்த அச் சம்பகாராமத்தைச் சார்ந்ததும் சங்கடத்திற்கே இடமாயிற்று. அப்போது இளமைப்பிராயத்தையுடைய ஸ்ரீ கோதையானவள் வசித்தற்கிசைந்த அவ்வாராமத்தினை மாரவீரனது அஸ்திரசாலையாகவும் அவ்விடத்திற் கூவுகின்ற கோகிலங்களின் * கோலாஹலத்தை § ஹாலாஹலமாகவு மெண்ணினள். அன்றியும் அவள் அங்குள்ள மந்தாரவிருக்ஷங்களின் மலர்களின்மதுவை வாரிக்கொண்டு வருகின்ற மந்தமாருதத்தினால் வருத்தமுற்றனள். அன்றியும் விரஹவேதனையால் வெளுத்தும் இளைத்துமிருக்கின்ற ஸ்ரீ கோதையின் மெல்லிய சரீரமானது பிரதமதிதியிற் காணப்படுஞ் சந்திரகலையின் நிலையை யநுசரித்தது.

இப்படியிருக்கும்போது வைகுண்டத்தில் பகவானுக்குச் சாமர கைங்கரியஞ் செய்கின்றவளும் இப்புவியிலொரு ப்ராமணனுக்குக் கன்னிகையாய் ஜநித்தவளும் அனுக்ரஹையென்ற பெயரையுடைய

---

* கோலாஹலம்—தூரத்திற் செல்வதும் பலவிதமுமான துலக்கமில்லாத ஒலி.
§ ஹாலாஹலம் — ஒருவகையான விஷம்.

வளுமர்ன கோதையின் சகியானவள் எம்பெருமானது பிரிவையாற்ருது வருந்துகின்ற கோதையின் வேதனையை விலக்கவேண்டுமென்ற எண்ணமுடையவளாய் மன்மத தாபத்தினல் வருந்திமெலிந்த அங்கங்களையுடைய ஸ்ரீகோதையைப்பார்த்து, 'சகிகோதே! நான்உன்னிடத்திலுள்ள சிநேகத்தால் கேட்கிறேன்; நீயுமென்னிடத்தில் உண்மையைச் சொல்லவேண்டும்; உலகத்தில் அன்னியர்களின் சுகதுக்கங்களைத் தமதாகநினைக்கின்றவர்கள் பிறர்களின் விருத்தாந்தத்தைக் கேளாதிருப்பார்களா? சகி! உன்மனதில் சிந்தையோ குடிகொண்டிருக்கின்றது; சரீரத்திலும் ஏதோவொருவிதமான மிகுந்ததாபமுமிருக்கின்றது; உன்மனதை ரமிக்கச்செய்கின்றவன் யார்? சொல். உன்சரீரமோ அழகுகுன்ருமலிளைத்திருக்கின்றது; நீ ஏன் தளிர்கள் பரப்பிய சயநத்திற் படுத்துக்கொண்டிருக்கிருய்? மந்தமாருதங்களினுலும் சந்திரகிரணங்களாலும், மன்மதபாணங்களாலும் உன் மனமெவ்விதம் நடுங்குகின்றது? சகி! உன்தோழியர்களையும் தாய்தந்தையர் முதலிய பெரியோர்களையும் வஞ்சித்து மறைந்துகொண்டு எந்தப் புண்யசீலனை யௌவனபுருஷன் உன்னை இன்புறச்செய்துகொண்டு மனதிற் குடிகொண்டிருக்கிருன்? சொல்' என்றனள். அப்போது ஸ்ரீகோதை வெட்கத்துடன் கூடியவளாய்த் தன் சகியைப்பார்த்து சகி! என்னை இன்புறச்செய்கின்ற புண்யசீலன் ஸ்ரீமந்நாராயணனைத்தவிர என்மனதில் வேறெருவருமில்லை யென்றனள்.

இதனைக்கேட்டது மநுக்ரஹை தன்மனதில், ஆஹா! கோதையின் சித்தம் புருஷோத்தமனை பகவானிடத்தில் யீடுபட்டிருக்கிறதென்றறிந்துகொண்டு கோதையைப் பார்த்துப் பிரியத்துடன் சகிகோதே! நீ உண்மையைச் சொன்னுய்; நானறிந்துகொண்டேன். ஆனல் இப்போது நான் சொல்வதைக்கேள். அர்ச்சாவதாரரூபத்துடன் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான்களை யெல்லாம் நான் படத்திலெழுதிவைத்திருக்கிறேன். இவர்களில் உன்மனதிற்கிசைந்த எம்பெருமானைச் சொல்வாயென்று கூறித் தானெழுதியிருக்கிற எம்பெருமான்களின் படங்களையெல்லாம் நன்ருய்க் காட்டினள். காட்டவே ஸ்ரீகோதை படத்தில் ஸ்ரீரங்கநாதனைப் பார்த்த

11

வுடன் வேட்கத்தால் தலைகவிழ்ந்து கீழே பார்த்தவளாகயிருந்தனள். அப்போதநுக்ரஹை யென்னுந்தோழி தனக்குள் ஸ்ரீகோதையின் சித்தத்தைக்கவர்ந்த புருஷோத்தமன் அழகியமணவாளனென்று எண்ணிக்கொண்டு வெட்கத்தால் வணங்கிய முகத்தினையுடைய கோதையைப்பார்த்து சகிகோதே! நான்விச்வசிக்கத்தக்கவளென்றிருந்து என்னிடத்தில் உன் அநுக்ரஹமுமிருக்குமாயின் நடந்த விருத்தாந்தத்தை மறையாமலென்னிடஞ் சொல்லவேண்டும். உனது முக்கியமான கருத்தின் முடிவு ஸ்ரீரங்கநாதனிடத்திலிருக்கின்றதேயானால் சீக்கிரத்தில் அந்த பகவானையே உன் சமீபத்திற்கழைத்து வருகிறேனென்றனள்.

இவ்விதம் தோழி சொல்லிய கர்ணாம்ருதமான சொற்களைக் கேட்டவுடன் ஸ்ரீகோதை மந்தஹாசமென்னும் வியாஜத்தால் தன் சகிக்கு முத்தாரத்தை பரிசளிக்கின்றவள்போல் தன் தோழியைப் பார்த்து 'பிரியசகி! நான்பரமபுருஷனுடைய பிரிவையாற்றாது மிகவும் வருந்துகின்றேன்; என்னை ரக்ஷிப்பதற்காகவே நீ இப்பூவுலகத்திலவதரித்திருக்கிறாய்; ஆதலால் எனக்கிஷ்டமானகாரியத்தைமுடிப்பதில் நானுன்னை சர்வேசுரனுடைய பத்நியாயும் புருகாரபூதையாயுமிருக்கிற லக்ஷ்மீதேவியாகவேயறிகிறேன்; என்பிராணனுன் கைவசமாக விருக்கின்றது; சகி! நீப்ரத்தியக்ஷமாகவே என்தேஹஸ்திதியையும் வயசையும் சமயோசிதமாயறிகின்றாய்; இவற்றை யெல்லாமுள்ளபடி ஸ்ரீரங்கேந்துவினிடத்திற் சொல்லவேண்டும்' என்றனள். இவ்விதம் ஸ்ரீகோதையினால் திடமாய் நியமிக்கப் பெற்றவளான அநுக்ரஹை யென்பவள் அவ்விதமே செய்கிறேனென்று சொல்லி ஸ்ரீகோதையைத் தண்டன் சமர்ப்பித்துச் சென்றனள்.

பத்தாவது சர்க்கம் முடிந்தது.

---

## 11-வது சர்க்கம்.

---

பின்பொருநாள் ஸ்ரீரங்கராஜன் ஒலிக்கின்ற வண்டினங்களை யுடையதும் கூவுகின்ற குயில்கூட்டங்களுடன் கூடியதும் நகரத்

திற்கு வெளியிலுள்ளதுமான * கிரீடாவனத்தின் நடுவிலுள்ள மண்டபத்திற் கெழுந்தருளி அவ்விடத்தில் எம்பெருமான் மத்தியான காலம்வரை நடத்தவேண்டிய காரியங்களை நடத்திவிட்டு அந்தரங்கர்களான சிலகைங்கர்யபரர்களுட னெழுந்தருளியிருந்தனர். அப்போது பகவான் மந்தமாருதத்தாலசைக்கின்ற மாதவி, சூதம், சம்பகம், புன்னை முதலியவற்றால் நிறைந்ததும் மன்மதனுக்கு மஹோத்ஸாஹத்தை வளர்க்கின்றதுமான வசந்தருதுவின் வைபவத்தைக் கடாக்ஷித்தனன். உடனே மன்மதனும் இதுதான் சமயமென்று கருதி மந்தமாருதமாகிய தனது ரதத்தின்மேலேறிக்கொண்டு மதித்திருக்கின்ற குயில்களாகிய அழகிய காஹளவாத்தியங்களையுடையவனாய் வசந்தனென்னும் தன் மந்திரியோடு சந்தோஷத்துடன் மாதவன்முன் வந்துதோன்றினன். தோன்றவே தாமரைக்கண்ணனான சர்வேச்வரன் மகரகேதனுடைய பாணங்களால் வஞ்சிக்கப்பெற்ற மனசையுடையவனாய் சஹிக்கற்கரியவிரஹவேதனையால் வாடிய திருமேனியுடன் ஏதோ ஒன்றைச் சிந்தித்துக்கொண்டெழுந்தருளியிருந்தனன்.

இப்படியிருக்கும்போது ஸ்ரீகோதையின் அந்தரங்கதாதியான அநுக்ரஹையென்பவள் பகவான் எழுந்தருளியிருக்கிற கேளீவனஞ்சென்றதும் தாமொரு கொடிகளடர்ந்த குடிசையின் நடுவில் மறைந்திருந்துகொண்டு ஸ்ரீரங்கராஜன் சமயத்தை எதிர்பார்த்திருந்தனள். அப்போது ஸ்ரீரங்கநாதன் இளந்தளிர்கள் பரப்பிய மஞ்சத்தில் சயனித்துக்கொண்டு துன்பத்துடன் புரள்கின்ற திருமேனியையுடையவராயிருந்தனர். இப்படியிருப்பதைக் கண்டதும் அநுக்ரஹை ஒருவிதமான சம்சயத்துடன் ஆஹா! இஃதென்ன ஆச்சர்யம்! எம்பெருமானுடைய திவ்யசரீரமானது விரஹாநலத்தால் வாடியதாகவும் புஷ்பமயமானமஞ்சத்தில் அடிக்கடிபுரள்கின்றதாகவும் கசக்கிய பச்சிலைமரத்தின் தளிரின் தன்மையையுடையதாகவுமிருக்கின்றது. இவருடைய திருவள்ளம் எதனையோ சிந்திக்கின்றதாகவும் தெரிகின்றது. கண்களிரண்டும் இமையாமலுமசைவற்றனவாகவுமிருக்கின்றன. திருமுகமோ மயிர்க்கூச்சலுடன்கூடிய

* கிரீடாவனம்—விளையாடுதற்குரியவனம்.

தாகயிருக்கின்றது. இவரது அங்கமெங்கும் வேர்வையையுடையதாகவும் பயத்தையடைந்திருக்கின்றதாகவுந்தெரிகின்றது. ஆகலால் ஸ்ரீரங்கராஜன் * சாத்விகவிகாரத்தை யடைந்திருக்கின்றனர். இதனால் அழகிய திருமேனியையுடைய இவ்வெம்பெருமான் நிச்சயமாய்த் தம்திருவுள்ளத்தில் பிரியமுள்ள ஒருஸ்திரீயை அநுபவித்திருக்கின்றனர். அவள் நமது தோழியோ? அல்லது வேறெவளோ? தெரியவில்லை. ஆனதால் உண்மையாய் இவருடைய அபிப்ராயத்தையறிந்தின் பின்புதான் நமது ப்ரியசகியினத்தகைய வசனத்தையும் அவளுடைய நிலைமையையும் இவரிடந் தெரிவிக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு அவ்வநுக்ரஹை ஸ்ரீரங்கநாதன் சமீபத்தையடைந்தனள். அடைந்ததும் அவள் தன்னிருகைகளையும் கூப்பிக்கொண்டு எம்பெருமானைப் பார்த்து ஸ்ரீரங்கேசா! அடியேன் ஸ்ரீவிஷ்ணுசித்தரின் புத்ரியின் நியமனத்தின்படி ஸ்ரீவில்லிபுத்தூரினின்றும் வந்திருக்கிறேன். என்று சொல்லி வணக்கத்துடன் ஸ்ரீரங்கராஜன் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்தனள்.

இவ்விதமநுக்ரஹை சொல்லிய கர்ணாம்ருதமான சொற்களைக் கேட்டதும் பகவான் பல்லவதல்பத்தினின்றும் மெல்ல வெழுந்து 'சற்றுமுன் நமது வலது கடைக்கண் துடித்ததின் பலனை இப்போதடைந்தோம்' என்றெண்ணிக்கொண்டு அவ்வநுக்ரஹையைப் பார்த்து ஒப்பற்றவடிவழகுடைய மங்கையே! கோதையும் விஷ்ணுசித்தரும் சுகத்துடன் கூடியிருக்கின்றார்களா? பட்டநாதனின் பக்கலிலிருந்து வந்திருக்கின்ற நீவாட்டமுற்றிருக்கின்ற என் மனதைச் சந்தோஷிக்கச் செய்கின்றாய்; இப்போது நீவந்தகாரணமென்னோ? சொல்வாயென்றனர்.

இவ்விதமநுராகத்துடன் ஸ்ரீரங்கராஜனால் வினவப்பெற்ற அநுக்ரஹையென்றவள் தேவா! தேவரீருடைய கிருபாவிசேஷத்தால் ஸ்ரீவிஷ்ணுசித்தர் கோதையுடன் சுகமாகயிருக்கின்றார். ஸ்வாமீ! ஸ்ரீகோதை தன்கூந்தலிலணிந்துகொண்டதனால் விசேஷவாசனையுடன் கூடிய இப்பூமாலையைத் தனது வந்தனங்களுடன்

* சாத்வீகவிகாரம்—சத்துவகுணத்தால் உண்டான சிருங்காரம் முதலிய ரசங்கட்கநுகுணமான கருத்தின் பேதம்.

ஸ்ரீகோதை தேவரீருக்கு *உபஹாரமாக அனுப்பியதோடு ஒருநாள் ராத்திரி தேவரீர் லீலாசயநத்தில் ஸ்ரீகோதையைச் சேர்ந்தனுபவித்ததாகவும் அவ்வநுபவமே இப்போது ஸ்வல்பதிநங்களில் என்னாலநுபவிக்கப்படுகிறது. ஹே ரங்கநாயகா! என்று என்மூலமாய் அவள் தேவரீரிடந்தெரிவிக்கும்படி என்னையனுப்பினள்.

இப்போது ஸ்ரீகோதை தேவரீருடைய பிரிவினாலுண்டான கொடிய வேதனையை நீக்கிக்கொள்வதற்காகத் தன் சகிஜனங்களுடன் சம்பக உபவனத்திற்குச் சென்றவள் அவ்விடத்தில் தன் சகிகளாற் செய்விக்கப்பெற்ற புஷ்பசயநத்தில் சயனித்துக்கொண்டு வருந்துகின்றனள். ஸ்வாமீ! ஸ்ரீகோதையின் வடிவழகைப்பற்றியும் இப்போது அவளிருக்கின்ற நிலைமையைப்பற்றியும் விஜ்ஞாபித்துக் கொள்கிறேன். கேட்டருளவேண்டும். தாமரைமலர்போன்ற கண்களையுடையவளும்,வெளுத்தமந்தஹாசத்தையுடையவளும் தேவேந்திரனுடைய ஐராவதகஜத்தின் மஸ்தகம்போன்ற ஸ்தநங்களையுடையவளும், வீணாநாதம்போன்றினிய குரலுடன் சம்பாஷிக்கின்றவளும் அலர்ந்ததாமரைமலரின் காந்தியை அபஹரிக்கின்ற முகத்தையுடையவளும், நீண்டுமகன்றும் ப்ரகாசிக்கின்ற கண்களின்முன் நிற்கின்ற மன்மதனையுடையவளும், நிறைந்த யௌவநமாகிய சந்திரோதயத்தினால் விளங்குகின்ற அழகாகிய கடலிலுதித்த சங்கம்போன்ற கழுத்தினையுடையவளும், மாரன்மஹிமையென்னும் வாரிதிக்குச் சந்திரிகையாகவும் மானிடர்களின் கண்களுக்கு §அமுதவர்த்தியாகவும் ப்ரஹ்மதேவன் ஸ்திரீகளை சிருஷ்டிக்குந்தொழிலிற் தேர்ந்தவனென்பதைத் தெரிவிக்கின்றவளுமான ஸ்ரீகோதை இப்போது கண்ணீர் ததும்புகின்ற கண்களையுடையவளாகவும், மனவாட்டத்தால் மழுங்கிய மந்தஹாசத்தையுடையவளாகவும், சஹித்தற்கரிய விரஹாநலத்தால் தஹிக்கப்பெற்ற முத்துமாலையையுடையவளாகவும், காமத்தினால் மனம்வேறுபட்ட கலகஹம்சத்தின் கண்டஒலி போன்ற †கத்கதஸ்வரத்தையுடையவளாகவும், சஹித்தற்கரிய பெருமூச்சுடன் கூடியவளாகவும், காமராஜனின் கூரியபாணங்களால்

---

* உபஹாரம் - உயர்ந்தோர்களைக்கண்டுகொள்வதற்காக கொண்டுசெல்லும் புஷ்பம் முதலியன.

§ அமுதவர்த்தி - அமிருதமயமான கண்மை.

† கத்கதஸ்வரம் - தழுதழுத்தகண்டத்தினொலி.

சற்றுந் தயவின்றி நாட்டப்பெற்ற சரீரத்தையுடையவளாகவுமிருக்கின்றனள். தேவ! இத்தகைய எனது சகி தேவரீருடைய பதாம் புஜங்களைச் சேரவேண்டுமென்ற எண்ணத்தினால் தன்மீது புஷ்ப பாணங்களைப் பிரயோகிக்கின்ற மன்மதனைக் குறித்துக் கைகுவித்த வண்ணம் ப்ரணயவசனங்களைக்கூறி யாசிக்கின்றனள். நாதா! சிறந்த சிருங்காரசேஷ்டிதத்தையுடைய என் சகி புஷ்ப தூளிகளால் தான் விளையாடுதற்கென்றமைத்திருக்கின்ற கிரஹத்தை யழிப்பதற்காகத் தேவரீருடைய வரவை விரும்புகின்றனள்.

ஹேயதுநாதா! முற்காலத்தில் கோபிகைகள் எந்த *பாவனையைக்கொண்டு தேவரீரை யடைந்தார்களோ அந்த பாவனையையும் அத்தகைய கோபிகைகளின் வடிவத்தையுமுடையவளாய் இப்போது ஸ்ரீகோதை தேவரீருடைய பாதகமலங்களை யடையவிரும்புகின்றனள். பகவானே! அவள் கோபிகைகளைப்போல் பாவனை செய்வதில் தேவரீரைக் குளக்கரையில் குருந்தமரத்தின் கொப்பிலிருக்கின்றவாராக நினைத்துக்கொண்டு தன் கைகளைக்கூப்பித் தலைமீதுவைத்துக்கொண்டவண்ணம் தேவரீரால் கவர்ந்துகொள்ளப்பட்ட வஸ்திரத்தை உம்மிடத்தில் யாசிக்கின்றாள். இன்னும் அவள் தேவரீருடைய பிரிவையாற்றாது கண்ணீருடன் கூடியவளாய் மிகவும் ப்ரயாசத்துடன் தேவரீருடையவரவென்னும் மஹோத்சவத்திலாசைகொண்டவளாய் முத்துக்களைமண்டலாகாரமாய்ச் செய்துகொண்டு தேவரீரைக் கூடுதற்குக் குறிப்பார்க்கின்றனள். இஃதன்றியும் ஸ்ரீகோதை அச்சம்பகவனத்திலுள்ள கோகிலங்களைக் குறித்துக் குயில்களே! இவ்விடத்தில் எனது நாயகன் வரவேண்டுமென்று இப்போதுகூவுங்கள். உங்களுக்கு நல்லகனிவர்க்கங்களைக் காணிக்கையாகக்கொடுக்கிறேன். இல்லையென்றால் உங்களை இவ்வனத்தினின்றும் வெளியேற்றிவிடுவேனென்கின்றனள். இஃதன்றியும் அச்சம்பகவனத்தில் நித்திரை செய்யும்போது ஸ்ரீகோதை விவாஹ காலத்தில் தேவரீர் கையாற்றன்கையைப் பற்றுவதும் தன் கையில் தேவரீர் காப்புக்கட்டுவதும் பொரியை அக்னியில் ஹோமஞ்செய்வதும் தேவரீருடன்சென்று அம்மி மிதிப்பதும் முதலிய காரியங்கள்

* பாவனை—பாவித்தல், எண்ணம்.

நடப்பதாக பாவித்துக்கொள்கின்றனள். இன்னுமவள் அங்குள்ள
வாவியில் வசிக்கின்ற ஹம்சத்தைப்பார்த்து தேவரீரிடத்திலுள்ள
பாஞ்சஜன்னியமென்னுஞ்சங்கமென்று தன் மனதில் நினைத்துக்
கொண்டு ஹே சங்கமே! அழகியதும் சிறந்ததுமான என்ப்ராண
நாதன் திருமுகமானது தாமரைமலரின் பரிமளத்தையுடையதா? அல்
லது பச்சைக்கற்பூரத்தின் பரிமளத்தையுடையதா ? சொல்லென்று
கேட்கின்றனள். இஃதன்றியும் ஹே தேவ! அவள் உமது காந்தி
போல் அழகிய மேகசமூகங்களை ஆகாயத்திற்கண்டதும் சந்தோ
ஷத்தையுடையவளாய்த் தன்னிலைமையைத் தேவரீரிடத்தில் நேரில்
சொல்வதுபோலச் சொல்கின்றனள்.

அன்றியுமவள் தன் சகிகளைக்குறித்து தோழிகாள்! அறிய
வில்லையா? நீங்கள் ப்ராணநாதரின் பிரிவினால் பரிதவிக்கின்ற என்னை
ஸ்ரீரங்கராஜனுடைய கிரீடோபவனத்திலாவது வடவேங்கடமாமலை
முதலிய திவ்யஸ்தலங்களிலாவது கொண்டுசேர்த்துவிடுங்களென்
றுஞ்சொல்கின்றாள். பின்னும் ஸ்ரீகோதை தேவரீரையே நினைத்துக்
கொண்டு எம்பெருமான் தன்கையினில் *சங்கைவைத்துக்கொண்டே
அதனால் திருப்தியடையாது என் கையிலிருக்கிற † சங்கையுமேன்
விரும்புகின்றார். அப்படியானால் அவர் என் கண்முன் வரட்டுமென்
றும், ஐயோ! இஃதென்ன அநியாயம். கடல்சூழ்ந்த பூமியையும்
மூவுலகங்களையும் ரக்ஷிப்பதிலும் சிக்ஷிப்பதிலும் வல்லவரும் மஹா
தனிகருமான ஸ்ரீரங்கராஜன் இப்போது என் கையினின்றும்
எப்படி வளையை யபஹரித்தனரென்றும், ஸ்ரீரங்கராஜன் முன்னம்
வாமனாவதாரஞ்செய்துமஹாபலியின்கையினின்று *கங்கணத்தைக்
கிரஹித்துக்கொண்டனர். அதுபோதாதென்று ஆலோசித்துக்
கொண்டோ இப்போது என்கைக் § கங்கணத்தையும் யாசிக்
கின்றனரென்றும், ஸ்ரீராமாவதாரத்தில் ஜனகராஜ புத்திரிக்காகக்
கடலிலணைகட்டி அரக்கர்களையுங்கொன்று மறுபடி அவளையடைந்
தனர். இத்தன்மையையுடைய ஸ்ரீரங்கராஜன் என்னை ஏன் நினைக்
கின்றாரில்லையென்றும், எவர் இழிவான வராஹாவதாரத்தை எடுத்

* சங்கு—பஞ்சாயுதங்களிலொன்று.

† சங்கு—கைவளை.

தும் ப்ரளயசாகரத்தால் மூழ்கிய பூதேவியை உத்தாரணஞ்செய்து ரக்ஷித்தனரோ அவர் இப்போது சோகசாகரத்தில் மூழ்கிக் கிடக்கின்ற என்னை ஏன் நினைக்கின்றாரில்லை. ஐயோ! முன்பு மகாவிரோதியான சிசுபாலன் சமீபத்தினின்றும் பலாத்காரமாய் ருக்மிணீதேவியை யபஹரித்துக்கொண்டு சென்றனரன்றோ. தம்மை விரும்புகின்ற காமினிகளிடத்தில் கருணையுடையவராகயிருக்கின்ற ஸ்ரீரங்கராஜன் என்னையேனுபேக்ஷிக்கின்றனர். ஆஹா! கஜேந்திரன் கௌதமபத்நீ விபீஷணன் திரௌபதி முதலான தீநர்களை ரக்ஷித்த கருணாமூர்த்தியான ஸ்ரீரங்கராஜனுடைய நிர்மலமான கீர்த்தியை எளியவளான யானே இப்போது மலினமாக்கப் போகின்றேன். ஸர்வேச்வரன் என்னைப்பார்த்து, நான் உன் பிரிவினில் எவ்விதத்திலும் ஜீவிக்கமாட்டேனென்று என்னிடஞ்சொல்லிவிட்டு நெடுநாளாகியுமென்னை நினைத்தாரில்லையே. அவர் இரட்டை நாவினையுடைய பன்னகப்படுக்கையின் பழக்கத்தினால்தான் இவ்விதம் சொல் தவறினரோவென்று என் சகி தேவரீரிடத்திலுள்ள காதலைக் காண்பிக்கின்ற பற்பல வசநங்களைச் சொல்லிக்கொண்டு தேவரீர் திருவடிகளிலுள்ள ஆசையினால் ஜீவன்போயிருக்கின்ற நிலைமையிலிருந்தும் தன் பிராணனைவிடுகின்றாளில்லை யென்றனள்.

இவ்விதமநுக்ரஹையென்பவள் ஸ்ரீகோதையின் நிலைமையைக் குறிப்பிடுகின்றனவும் ப்ரணய *பங்கியை வெளியிடுகின்றனவுமான சொற்களைச்சொல்லவே அவற்றைக்கேட்டவுடன் பகவான் வருத்தத்தினாலும் மகிழ்ச்சியினாலும் வசீகரிக்கப்பட்ட மனசையுடையவராய் அநுக்ரஹையைக் குறித்து ஹே அநுக்ரஹே! மன்மதன் உன் சகியினிதயத்தில் மாத்திரம் தனது பாணங்களை ப்ரயோகிக்கின்றானென்று எண்ணவேண்டாம். என்னையும் இவ்விடத்தில் அவன் தனது பாணங்களால் வருத்துகின்றனன். நான் உன் சகியனுபவிக்குந்துன்பத்தினும் அதிகத்துன்பத்தையே யனுபவிக்கின்றேன்.

---

* கங்கணம்—ஜலத்திவலை.

§ கங்கணம்—கைவளை.

ஆனால் நானெப்போது மென்மனதிலுன் சகியை பாவித்துக்கொண்டவனாய்ப் பிருங்ககீடக்ரமமாக இப்போதவள் வடிவினனாயினேனாதலால் ஜீவனோடிருக்கின்றேன். இல்லையென்றால் எப்படியவளைப் பிரிந்து ப்ராணனைத் தரிப்பேன். ஹே அநக்ரஹே! முன்பொரு கோபஸ்திரீ என்னையே சிந்தித்துக்கொண்டு தன் பிராணனை யிழந்தனள். இப்போததன்பயனாக நானுமுன்சகியை மனதில் நினைத்துக்கொண்டே அத்தகைய நிலைமையை யனுபவிக்கின்றேன். இளமான்விழியளே! முன்பு இபல்பாய்ப் பசுமைநிறம்வாய்ந்த என்சரீரம் உன் சகியைப்பிரிந்ததனால் இப்போது வெளுத்திருக்கின்றது பார். மெல்லியலாளே! வலிமைதங்கிய எனது பஞ்சாயுதங்களும் மன்மதனுடைய மெல்லிய ஐந்துபாணங்களை ஜயிப்பதற்கு முடியாதொழிந்தன. இதற்குக்காரணமுன் சகி கோதையின்கடைக்கண்பார்வையின் வைபவமேயன்றி வேறில்லை. ஹே! அநக்ரஹே! சந்திரிகை முதலியவற்றில் பயப்பட்ட என் மனம் சரீரத்தினின்று ப்ராணனைவிடுவதற்கெண்ணியபோதிலும் உன் சகியை ஒருபொழுதும் இழப்பதற்கு என் மனத்திற்கு விருப்பமில்லை. ஆதலினால்தான் யானுயிருடனிருக்கிறேன். என் ப்ராணனிலும் சிறந்தவளன்றோ உன் சகி. ஆஹா! தென்றலானது மன்மதாக்நியை வளர்த்தற்கேதுவாயிருந்தும் அத்தென்றல் ஸ்ரீகோதையின் கூந்தலில் ப்ரகாசிக்கின்ற பூமாலையின் பரிமளத்தை வஹித்திருத்தலால் அத்தென்றலையும் என் சரீரம் அணையவிரும்புகின்றது. மெல்லியலே! ப்ரகாசிக்கின்ற கேசரங்களையுடையதும் உன் தோழியின் கூந்தலிலணிந்திருந்ததுமான இப்பூமாலையானது ப்ரகாசிக்கின்றதும் மயிர்க்கூச்சலுடன் கூடியதுமான அவளது அழகிய கைபோல் எனக்கு மிருதுவாக இருக்கின்றது. உன் சகியால் *உபாயனமாகக்கொடுக்கப்பட்டதும் அவள் கூந்தலிலணிந்திருந்ததுமான இப்பூமாலை என் கண்களுக்குச் சந்திரிகையாகவும், என் மனதிற்கு ரசாயனமாகவும், என்னுடம்பிற்குப் புத்தமுதாகவும், என் ஜீவிதத்திற்கு ஒருகாரணமாகவுமிருக்கின்றது.

ஹே †சாருபாஷிணி! ஒன்று சொல்கிறேன் கேள். இன்னுஞ்சிலநாட்களில் பராங்குசரிடத்தினின்றும் காதுகட்கு அமிருதத்தை

* உபாயனம்—சந்தோஷத்தைச்செய்யத்தகுந்ததும் பெரியோர்களைக் காண்பதற்காகக்கொண்டு கொடுக்கப்படுவதுமான புஷ்பம் பழம் முதலியன.

† சாருபாஷிணி—இனிமையாய்ப் பேசுகின்றவள்.

வர்ஷிக்கின்றதும் சானஞ்செய்வதற்குரியதுமான பாசுரங்களின் பங்கியைக்கேட்கவிரும்புகின்றவர்களாய் எனது வடிவினரான நூற்றெட்டு திவ்யதேசத்திலுள்ளவர்களும் குருகைநகருக்கு வந்துசேருவார்கள். பொய்கையார் முதலிய என் பக்தர்களு மங்குவருவார்கள். உன் சகி கோதையுடன் வித்வானான விஷ்ணுசித்தரு மங்குவரப்போகின்றனர். அவ்விடத்திலென்பக்தர்கள் யாவரும் சபையில் என் நிலைமையையும் உன் சகியின் நிலைமையையும் கண்டு உண்மையிஃதென்றறிந்து சீக்கிரத்தில் எங்களிருவரையுஞ்சேர்த்துவைப்பதற்கு ஏதேனுமோராலோசனை செய்வார்கள். குருகைநகரில் இப்போது நடக்கின்ற சுவயம்வரத்தில் பட்டநாதன், சடகோபன், பொய்கையார் முதலியவர்களான கோதையின் குருக்களின் நியமனத்தின்படி குருகைநகரில் கோதையின் பாணிக்ரஹண மஹோத்ஸவம் நடக்கப்போகின்றது; என்று பகவான் அனுக்ரஹை என்பவளிடத்தில் அருளிச்செய்து ஸ்ரீகோதையின் ப்ரீதியின்பொருட்டு கஸ்தூரியினுல் பரிமளிக்கின்றதும் மிகவும் சிறந்ததுமான கல்ஹாரமலர் மாலையையும், ஸ்ரீரங்கராஜனென்று திருநாமமுத்திரையிட்ட மோதிரத்தையும் அவளிடங்கொடுத்தனர்.

உடனே அவ்வனுக்ரஹை ஸ்ரீரங்கராஜன் திருவாய்மலர்ந்தருளிய சொற்களைக்கிரஹித்துக்கொண்டு அவரால் அனுக்ரஹிக்கப்பெற்ற முத்திரை மோதிரத்தையுங் கல்ஹாரமலர்மாலையையும் பெற்றுக்கொண்டு மேகபங்தியானது கோடைகாலத்தால் கொதித்திருக்கின்ற பூமியையடைந்ததுபோல் மன்மதனுற் பீடிக்கப்பெற்ற கோதையை வந்தடைந்து ஆச்வாசப்படுத்தற்காரம்பித்தனள். பின்பு ஸ்ரீகோதை அனுக்ரஹையினிடத்தினின்றும் ஸ்ரீரங்கராஜன் அடையாளத்துடன் அவர் திருவாய்மலர்ந்தருளிய திவ்யவசனங்களையுங் கேட்டு சூர்யோதயத்தை எதிர்பார்த்திருக்குந் தாமரையோடைபோல் ஸ்ரீரங்கராஜனுடைய சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனள்.

11-வது சர்க்கம் முற்றுப்பெற்றது.

---

* பங்கி—விந்யாசம் அல்லது வரிசை.

## 12-வது சர்க்கம்.

இப்படியிருக்கும்போது வித்வானான ஸ்ரீவிஷ்ணுசித்தர் தமது புத்ரியின் யௌவனவயசையும் அவளுக்கு எம்பெருமானிடத்தி லுள்ள அநுராகத்தையும் நன்றாய் ஆலோசித்துப்பார்த்துத் தமது புத்ரியை சர்வேச்வரனான பகவானுக்கே பாணிக்ரஹணம் செய்துகொடுக்கவேண்டுமென் றெண்ணிக்கொண்டு பெரியவரான ஸ்ரீசடகோபரின் அநுமதியின்படி அவர்முன்பே ஸ்ரீகோதையின் பாணிக்ரஹண மஹோத்ஸவத்தை நடத்தவேண்டுமென்ற திருவுள்ள முடையவராய், பாண்டியதேசாதிபதியான வல்லபதேவனென்னும் பெயருடைய தமது சிஷ்யனுடனும் புத்ரி கோதையுடனுங் குருகை நகரத்தையடைந்து அவ்விடத்தில் ஜ்யேஷ்டராயெழுந்தருளியிருக் கின்ற *வகுளாபரணரின் திருவடிகளில் சந்தோஷத்துடன் அம்மூ வரும் தண்டன்சமர்ப்பித்தனர்.

உடனே வகுளாபரணரும் கருணைக்கடலாகிய தமது கண் களால் ஸ்ரீகோதையைக் கடாக்ஷித்தனர். பின்பு வகுளாபரணர்தாம் திருவாய்மலர்ந்தருளிய திராவிடசூக்தி §நிபந்தனத்தைக் கேட்பதி லாசையுள்ளவர்களாய் அங்குவந்து உறங்காப்புளியின் கொம்பு களின் நடுவில் வீற்றிருக்கின்றவர்களான அர்ச்சாவதார எம்பெரு மான்களையும் அவ்வெம்பெருமான்களை சேவிப்பதற்காக ஆகாயத் தில்வந்திருக்கின்ற பிர்ம்மேந்திராதி தேவர்குழாத்தையும் கண்டனர். பின்பு அவ்வகுளாபரணர் அவ்விடத்தில் வந்திருக்கின்ற பொய்கை யார் பூதத்தார் பேயார் பக்திசாரர் தொண்டரடிப்பொடியார் குல சேகரர் மதுரகவிகள் என்ற இவர்களிடஞ்சென்று அவர்களொரு வர்க்கொருவர்செய்துகொள்ளும் வந்தன மஹோத்ஸவத்தைக்கண்டு களித்தனர். அவ்வகுளாபரணரைக்கண்டதும் பொய்கையார் முதலிய பக்தர்கள் பராங்குசருடைய பாதாரவிந்தங்களில் பக்தி யுடன் வீழ்ந்துவணங்கி அப்பராங்குச ரருளிச்செய்த திவ்யப்ரபந்

---

* வகுளாபரணர்—மகிழம்பூமாலையை ஆபரணமாகவுடையவர்.

§ நிபந்தனம்—ப்ரபந்தம்.

தங்கள் நான்கையும்கேட்டபின் தாங்கள்செய்தருளிய ப்ரபந்தங்களை யும் ஸ்ரீபராங்குசரிடம் விண்ணப்பஞ்செய்து கொண்டனர்.

பின்பு சடகோபர், பொய்கையார் முதலிய பக்தகணங்களுடன் ஸ்ரீகோதை திருவாய்மலர்ந்தருளிய ரசபரிதமான இரண்டு ப்ரபந் தங்களையும் கேட்டுவிட்டு ஸ்ரீகோதையின் யௌவநதசையையும், அவளது தீனதசையையும் அவள் எம்பெருமானிடத்திலீடுபட் டிருப்பதையும் கண்டானந்தித்தனர். உடனே சடகோபர் சுயம்வர மேற்படுத்தி ஸ்ரீகோதையை அர்ச்சாவதார எம்பெருமான்களில் சிறந்த *வரனுக்கே விவாஹஞ்செய்துகொடுக்கவேண்டுமென்ற திரு வுள்ளத்துடன் சுவயம்வரமுண்டுபண்ணும்பொருட்டு வல்லபராஜ னையும் மதுரகவியாரையும் நியமித்தனர். அவ்விதம் சடகோபரால் நியமிக்கப்பெற்ற அவ்விருவரும் நேராய்த்தொங்குகின்ற சாமரங் களாலும் விசித்திரமான மேற்கட்டிகளாலும் அழகியதும் சுவர்ண மயமான நூற்றெட்டுமஞ்சங்களின்காந்தியால் ப்ரகாசிக்கின்றது மான மணிமண்டபத்தை யமைத்தனர். அம்மண்டபத்தில் சுயம்வர மஹோத்ஸவத்திற்குரிய சகல பதார்த்தங்களையும் சேர்த்துவைத்துக் கொண்டு இப்பூமண்டலத்திலுள்ள சர்வாலயங்களிலுமுள்ள தேவர் களையும் சமஸ்தமான ரிஷிகளையும் பகவத் பக்தர்களையும் அரசர் களையும் குருகைநகருக்கு வரவழைத்தனர். அப்போதிப்புவியில் ஆநகவாத்தியத்துடன் தேவதுந்துபிகளும் வழங்கின. இவ்வுலகி லுள்ள † வாராங்கனைகளுடன் தேவஸ்திரீகளும் நர்த்தனஞ்செய் தனர். இம்மண்ணுலகிலுள்ள மனிதர்களின் கானங்களுடன் விண்ணு லகில் கின்னரர்களின் கானமுமொன்றுபமைந்தன. இவற்றைக்கண்டு மனிதர்களும் தேவர்களும் சந்தோஷித்தனர்.

அப்போது மதுரகவியும் வல்லபராஜனும் ரத்தினகாந்தியுடன் ப்ரகாசிக்கின்ற மஞ்சங்களில் அர்ச்சாவதாரரூபிகளான ஸ்ரீரங்க ராஜன் முதலிய எம்பெருமான்களைப் பரமபக்தியுடன் எழுந்தரு ளப்பண்ணி அவ்வெம்பெருமான்களுக்குச் சாஸ்திரவிதிப்படி மிக வும் சிறப்புடன் சர்வவிதத்தாலும் ஆராதனஞ்செய்தனர். பின்பு

* வரன்—மாப்பிளை.

† வாராங்கனை—வேசையர்.

அவ்விருவரும் ஸ்ரீகோதையை விவாஹத்திற்குரிய சிறந்த ரத்தினாபரணங்களாலலங்கரித்தனர். அவ்விதமலங்கரித்தலானது சித்திரை வைகாசி மாசங்கள் மலர்களால் மாதவிக்கொடியை வளம்படச்செய்ததுபோலவும் சந்திரசூரியர்கள் தமது கிரணங்களால் விண்ணிடத்தை விளங்கச்செய்தல்போலவுமிருந்தது. இவ்விதமலங்கரிக்கப்பெற்றவளான ஸ்ரீகோதையானவள் தன் முன் சடகோபர் முதலிய பிதுர்வர்க்கத்தினரும் தனது பின்பக்கத்தில் விமலை முதலிய மாதுர்வர்க்கத்தவரும் தன்னிருபக்கங்களிலும் அனுக்ரஹை முதலிய சகீஜனங்களும் சூழ சுவயம்வர மண்டபத்தை யடைந்தனள்.

அங்கு ஸ்ரீகோதையின் மித்திரபாயெழுந்தருளியிருக்கின்ற சடகோபர் மஞ்சங்களின்மத்தியில் வீற்றிருக்கின்ற எம்பெருமான்களை அங்குள்ள பக்தர்களான ஆழ்வார்களோடு தாமும் தண்டன்சமர்ப்பித்தெழுந்து புத்திரியான ஸ்ரீகோதையின் கரபல்லவத்தைப்பிடித்துக்கொண்டு இவ்வெம்பெருமான்களைப் பாரென்று ஸ்ரீகோதையிடம்சொல்லிக் குழந்தாய்! உன்னிடத்திலுள்ள அன்பினாலுன்சுவயம்வரத்திற்காக வைகுண்டமென்னுந் திவ்ய நகரத்தினின்றும் பாற்கடலினின்றும் புராணபுருஷர்களான எம்பெருமான்களிலெவரும் தமது தேவிமார்களுடனும் தேவர்கள் நித்தியசூரிகள் முநீச்வரர்களுடனும் இதோ நமது முன்பு காணப்படுகின்றனர். அன்றியும் சோழதேசத்தினின்று நாற்பது எம்பெருமான்களும், பாண்டியதேசத்திலிருந்து பதினெட்டெம்பெருமான்களும், கேரளதேசத்தினின்றும் பதின்மூன்றெம்பெருமான்களும், மத்திய தேசத்தினின்றும் இருபத்திரண்டெம்பெருமான்களும் வடக்குத்தொண்டைரத்தினின்றும் பதினொரெம்பெருமான்களுமிங்கெழுந்தருளியிருக்கின்றனர். இவ்வெம்பெருமான்களிலொருவரை நீ கணவனாகவரிப்பாய்; என்று கோதையைப்பார்த்துக்கூறிப் பின்பு சடகோபர் அனுக்ரஹையைப்பார்த்து ஹே அனுக்ரஹே! முன்பு விஷ்ணுசித்தரால் கூறப்பட்டிருக்கின்ற குணங்களையும் சரித்திரங்களையுமுடைய எம்பெருமான்களையெல்லாம் கிரமமாக நீ கோதைக்குக் காண்பிப்பாயென்று நியமித்தனர்.

அப்போது மான்விழியளான ஸ்ரீகோதை ஸ்ரீவத்ஸமென்ற மறுவினாலும் கௌஸ்துபமணியாலுமழகிய திருமார்பினையும் நான்கு புஜங்களையுடையவர்களும் சங்கசக்ரங்களைத் தரித்துக்கொண்டவர்

களும் பச்சைநிறத்துடன் ப்ரகாசிக்கின்றவர்களும் ஒரேவிதமான
ரூபத்துடன் கூடியவர்களுமான எம்பெருமான்களைப்பார்த்து அவர்
களில்தனக்கிஷ்டமானஎம்பெருமான்களையறியமுடியாதவளாயினள்.
இப்படியிருக்கும்போது அங்குள்ள எம்பெருமான்களின் பெயர்கள்
அவர்களின் திவ்வியசரித்திரங்களிவற்றின் விருதுடன்கூடிய காஹள
வாத்தியங்களின்ஒலி தனித்தனிகேட்கவே அவற்றில் ஸ்ரீரங்கராஜன்
விருதைக்கேட்டவுடன் தருணியான கோதை அதைத் தன் செவி
கட்கின்னமுதாக எண்ணி மகிழ்ந்தனள். அப்போதங்குள்ள எம்
பெருமான்களனைவரும் மாரன்துவஜமோவென்று மதிக்கத்தகுந்த
தும் தங்கள் கண்கட்கு ரசாயனமாகக் காணப்படுகின்றதுமான ஸ்ரீ
கோதையின் திருமேனியைப்பார்த்துத் தாங்கள் லக்ஷ்மீபதியென்று
மூன்றுலகத்தாரால் வெகுமதிக்கப்பெற்றிருப்பதினும் கோதையின்
கேள்வனென்று கூறப்படுவதே சிறந்ததெனத்திருவுள்ளம்பற்றினர்.
அன்றியுமவர்கள் ஸ்ரீகோதையின் திருமுகமண்டலம் வேர்வையுற்
றிருப்பதையும் அவள் பெருமூச்சுவிடுவதையும் அவள்கபோலங்கள்
வெளுத்திருக்கின்றதையும் கண்டு இவள்மன மெவ்விடத்திலோ
மூழ்கிக்கிடக்கின்றதென்றெண்ணினர்.

அப்போதந்த சுவயம்வரமண்டபத்திலெழுந்தருளியிருக்கின்ற
எம்பெருமான்களின் திருமார்பில் ப்ரகாசிக்கின்ற கௌஸ்துபமணி
யாகிய கண்ணாடியில் காணப்படுகின்ற கோதையின் சரீரத்தின் ப்ரதி
பிம்பமாகிய அறிகுறியால் இவள் எமது இதயத்திற்கே இசைந்த
வளென்று ஒவ்வொரெம்பெருமான்களும் கூறாமல்கூறினர்போ
லிருந்தனர். அன்றியும் ஸ்ரீகோதையை ஆவலோடுபார்த்தவர்களான
எம்பெருமான்களின் திருமேனிகளிலுண்டான சிருங்கார சேஷ்டை
கள் சந்திரனைக்கண்ட சாகரத்தின் தத்தளித்தல்கள்போலுமிருந்
தனர். அப்போதவ்விடத்திலெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான்
களில் ஒருவர் தமது பாஞ்சஜன்யமென்ற சங்கத்தைப்பார்த்து இது
ஸ்ரீகோதையின் கண்டத்திற்கிணையாயிருக்கின்றதெனக்கருதி அத
னைக்கையாலடிக்கடி தழுவினர். மற்றொருவர் தமது கரத்திலுள்ள
சக்ராயுதத்தை இது ஸ்ரீகோதையின் நாபிக்கிணையாயிருக்கின்ற
தென்றெண்ணிக்கொண்டு சந்தோஷத்துடனதனைப்பார்த்தனர். மற்

றொருவர் தமது நந்தகமென்னும் கட்கத்தைக்குறித்து இது கோதையின் கடைக்கண்களின் அம்சம்பெற்றுள்ளதென்று ஆவலோடதனைப்பார்த்தனர். மற்றொரு எம்பெருமான் தம்முடைய சார்ங்கமென்னுந்தநுசைப்பார்த்து இது கோதையின் புருவங்களின் பொலிவைப்பொருந்தியிருக்கின்றதென நினைத்துச் சந்தோஷத்துடனதனைத் தமது கையால் தடவி *சம்பாவித்தனர். சில எம்பெருமான்கள் மஞ்சங்களிலெழுந்தருளிவீற்றிருக்கும் சமயத்தில் விலகிய ஆபரணங்களை யடிக்கடி முன்னிருந்ததுபோல் செய்துகொள்கின்றனர். சில எம்பெருமான்கள் மின்னற் கூட்டங்கள்போ லொளிமிகுந் திலங்கும் பீதகவாடைகளின் நுனிகளையுதரிக்கொண்டனர். வேறு சில எம்பெருமான்கள் தமது திருமார்பிலுள்ள கௌஸ்துபாபரணத்தைக் கடாக்ஷிக்கின்றவர்போலத் தமது முககமலங்களின் காந்தியைத் தாமே பார்த்துக்கொண்டனர். மற்றுஞ்சில எம்பெருமான்கள் மன்மதவசத்தாலுண்டான †ஹாசம் முதலிய கருத்தின் திறத்தினைத் தாம் பக்தஜனங்களுடன் சம்பாஷிப்பவர்போல அபிநயித்து மறைத்தனர்.

அப்போது எம்பெருமான்கள் நிறைந்துள்ள அந்த ஸ்வயம்வர மண்டப மஞ்சங்களின் மத்தியத்தில் ஸ்ரீரங்கேசனிடத்திற்பற்றிய திருவுள்ளத்தையுடைய ஸ்ரீகோதையானவள் மலர்ந்த விருக்ஷங்களையுடைய உபவனப்ரதேசத்தில் புதிய ஜாதீபுஷ்பத்தை விரும்பிச் செல்கின்ற பெண்வண்டுபோல் சென்றனள். இவ்விதம் செல்லும்போது கோதையுடன் செல்கின்றவளான அநுக்கிரஹை யென்றவள் பொய்கையார் வகுளாபரணர் முதலியவர்களின் நியமனத்தின்படி சகல திவ்யதேசத்தெம்பெருமான்களின் வைபவத்தையும் க்ரமமாய் ஸ்ரீகோதையிடத்தில் வணக்கத்துடன் கூற ஆரம்பித்தனள். ஆரம்பிக்கும்போது அவள் சமஸ்த தேவர்கட்குமதிபதிபதியான ஸ்ரீரங்கநாதனை தண்டன்சமர்ப்பித்துவிட்டுத் தனது ப்ரியசகியான சோதையைத் தன்னுடனழைத்துக்கொண்டு ஒவ்வொரு எம்பெருமான்களின் சமீபத்தில்சென்றதும் அந்தந்த எம்பெருமான்களின்

* சம்பாவித்தல்—மேன்மைப்படுத்தல்.

† ஹாசம்—சிரிப்பு.

சரிதங்களையும் அவரவர்களெழுந்தருளியிருக்கின்ற திவ்யதேசங்களையும், அவரவர்களின் திருநாமங்களையும், அவரவர்களின் திவ்யகல்யாண குணங்களையும் சொல்லுகின்றவளாய் ஸ்ரீகோதையைப் பார்த்து ஹே அரவிந்தாக்ஷி! இதோ முன்னே ப்ரகாசிக்கின்றார் பார்; இவ்வெம்பெருமான் ஸ்ரீதேவியின் ஜன்ம பூமியாகிய உறையூர் நகரத்திற்கதிபதி. கரிய கூந்தலையுடைய ஸ்ரீ பூமி நீளை யென்ற தேவிமார் மூவரும் இவருடைய தேஜோவிசேஷத்தால் வசீகரிக்கப் பெற்றவர்களாய் இவர் பக்கத்தைவிட்டொருபோது மகலாதிருக்கின்றனர். சகி கோதே! இவர் தஞ்சை நகருக்கதிபதியான நீலமேகப் பெருமாள். இவருடைய பக்கத்தில் பாற்கடலிலுதித்தவளான பாக்கியவதியே மின்னல்போல் ப்ரகாசிக்கின்றனள். அத் தஞ்சைநகரிலிருக்கின்ற இந்நரசிங்கர் தஞ்சனென்ற பெயருடைய அசுரனிரத்தத்தையே அங்கராகமாய்ச் செய்துகொண்டிருக்கின்றனர். ஹே சுமுகீ! இதோபார்; மணிமுக்தாநதியின் ஜலத்திவலைகளால் நக்ஷத்திரங்களுடன் கூடியதுபோல் காணப்படுகின்ற ஸ்ரீ ம்ஷ்ணமென்னுந் திவ்யநகரத்தில் எழுந்தருளியிருக்கின்றவர். இவ்வெம்பெருமான் தண்டகனென்னுமசுரனை சப் ஹரித்தவர். இவர் தமதிடுப்பில் ப்ரகாசிக்கின்ற சங்கசக்ரங்களையுடையவராகவும், வராஹவடிவத்துடன் கூடியவராகவும் காணப்படுகின்றனர்.

ஹே மான்விழிமாதே! இவ்வெம்பெருமானிடத்தில் உனது கடாக்ஷத்தைச் செலுத்துவாய். பூஷணங்களாற் ப்ரகாசிக்கின்ற அழகிய திருமேனியையுடைய இவர் அன்பிலென்ற திவ்யதேசத்திற்கதிபதியாயிருக்கின்றவர். இவரை பிருகுமஹரிஷி தன் பாதத்தினுலுதைத்துவிட்டோமே என்ற பயத்தால் நடுங்கித் தவமியற்ற அத்தவத்தின் பயனே உருவுடவன் வந்திருக்கின்றதோ என்று கருதும்படி இவ்வெம்பெருமான் பாற்கடற் கன்னியான பதுமையுடன் சேஷசயனராய்த் திகழ்கின்றனர். குழந்தாய்! இவர் கரம்பனூருத்தமர். இவர் தமது சமீபத்திலிருக்கின்ற பிருமருத்திரர்களின் வாயிலும் சிரத்திலும் முழங்குகின்ற வேதம் கங்கையிவற்றின் ஒலியுடன் பிராமணர்கள் ஓதுகின்ற வேத முழக்கத்தையும் காவேரிநதியின் ஓசையையும் செவியுற்றவண்ணமே ஆதிசேஷன் மேலேறி துயில்புரிகின்றனர். ஹே சுந்தரி! இதோ முன்னேபார்.

இவர் திருவெள்ளறைப் புண்டரீகாக்ஷர். இவர் தம்முடன் சகல ஜனங்களையும் தாமரைக் கண்ணளாகிய தமது நாயகியின் ஆக்ஞைப் படி நடக்கச்செய்தனர். பிறழ்கின்ற கண்களையுடையவளே! புள்ளம் பூதங்குடி யென்னுந் திவ்யதேசத்திற்கு அதிபதியாயிருக்கின்ற இவ்வெம்பெருமானைக் கடைக்கணிப்பாய். இவர் வல்வில்ராம னென்ற திருநாமத்தையுடையவர். இவரது ப்ராணேச்வரியான சீதாதேவியை இராவணன் அபஹரித்துச் செல்லவே போரிலவ் வரக்கனைக் கொன்று மறுபடியும் தமது தேவியைத் திருப்பிக் கொணர்ந்தனர்.

ஹே கோதே! இவ்விடத்தில் உன் கடைக்கண் நோக்கத்தினைச் செலுத்துவாய். இவ்வெம்பெருமான் புரசவனத்தின் மத்தியிலுள்ள திருப்பேர் நகரத்திற் கதிபதியாயிருக்கின்றவர். இவர் அப்பக்குடத் தில் தமது கையை வைத்துக்கொண்டும், மனைசைத் தம் பத்தினி யாகிய ஸ்ரீதேவியின் கொங்கைக் குடங்களில் வைத்துக்கொண்டும் சயனித்திருக்கின்றனர். இவர் அப்பக்குடத்தில் கையிட்டுக் கொண் டிருத்தலால் இவரை யாவரும் அப்பக்குடத்தானென்று சொல்லு கின்றார்கள். பாராய் கோதே! இவர் ஆதனூர் என்ற திவ்விய தேசத்திற் கதிபதியாயும் † இந்திரையின் கணவனுயும் எழுந்தருளி யிருக்கின்றனர். இவ்வெம்பெருமான் லோகங்களையெல்லாம் ஆண்டு அளக்கும் நாதன் ஆகையால் இவரை ஆண்டளக்குமையனென்று கூறுகின்றனர் உலகத்தார். நீ இவருடன் பன்னகசயனத்தில் நித் திரை செய்யவேண்டுமென்று எண்ணுவாயாகில் இவரது கர கமலத் தைப் பற்றிக்கொள். ஹே நுண்ணிடையாளே! பாராய் ஈங்கு தேரழுந்தூர் என்ற திவ்யதேசத்திற்கு அதிபதியாய் எழுந்தருளி யிருக்கின்ற இவர் ஆமருவியப்பன் என்ற பெயரை வஹிக்கின்ற வரான ஆதிகோபாலர். ஹே சகி இவர் சிறுபுலியூர் என்ற திவ்ய தேசத்திற்கு அதிபதி அருமாகடலமுது என்ற திருநாமத்தை யுடையவர். இவ்வெம்பெருமானுடைய திருவுள்ளத்தின் ஆழத்தை உலகில் யார் தாம் அறிகின்றார்.

† இந்திரை—லக்ஷ்மி.

ஹே சுந்தரி! இவரைப் பார் திருச்சேறை என்ற திவ்யதேசத்திற்கு அதிபதியாயிருக்கின்றவர். அரவிந்தம்போல் அழகிய கைகளையுடைய இவர் சிசுநாயகர் என்ற திருநாமத்தையுடையவர். இவரைக் குறித்துக் காவேரி, நெடுநாள் தவம்புரிந்து இவரது கடாக்ஷத்தினால் கங்கையினும் மேலாந்தன்மையை அடைந்தனள். ஹே சுமுகி! இவர் தஞ்சைசங்கமென்ற பெயருடைய நகரத்திற்கு நாதனாகவும் நாண்மதியென்று பிரசித்திபெற்றவராகவும் இருக்கின்றனர். இவரை உன் கண்களாற் பார்த்துக் களிப்படையச் செய்வாயென்று சகி சொல்லவே ஸ்ரீகோதை தன் முகாரவிந்தத்தையும் ஹஸ்தாரவிந்தத்தையும் குவியச்செய்தனள். செய்யவே மறுபடியும் அநுக்ரஹையென்னுந் தோழி கோதையைக் குறித்துப்பாராய்; அம்புஜாக்ஷி ஸ்ரீ கும்பகோணநகரத்திற்கு அதிபதியாகவும் சார்ங்கமென்னுந் தனுசைக் கையிலுடையவராகவும் சர்ப்பராஜன்மீது சயனித்துக் கொண்டிருக்கின்றனர். இவர் ஆராவமுதனென்று திருநாமத்தையுடையவர். நீ இவருடன் பொற்றாமரைக் கயத்திற்கு அருகிலிருக்கின்ற உபவனத்திற் கிரீடிப்பாயாகவென்று சொல்லவே அப்போது அம்மொழி சந்திரனால் இன்புறுகின்ற சகோரத்திற்குச் * சண்டகிரணன் ஒளிபோன்றிருந்ததேயன்றி ஸ்ரீகோதைக்கு ருசிக்கவில்லை.

மறுபடியும் அனுக்ரஹை ஸ்ரீகோதையைப் பார்த்து சகீ! திருக்கண்டிநகரத்திற் கதிபரான சௌரிப்பெருமாளைப் பார்; இவ்வெம்பெருமான் ஹரனுக்கு நேர்ந்த சாபத்தை நீக்கியதால் ஹரசாபஹரரென்ற பெயரையுடையவராயினர். இவ்வெம்பெருமானுடைய நான்கு திருக்கைகளும் ஸ்ரீதேவி பூதேவிகளின் கன்னப்ரதேசங்களில் குங்குமபத்திர ரேகைகளை ஒரேகாலத்தில் எழுதுவதற்குரியன வாயிருக்கின்றன. சகீ! இவர் திருவிண்ணகரப்பன். இவ்வெம்பெருமான் சமுத்திரராஜகன்னிகையான ஸ்ரீதேவியை மார்பணியாகச் செய்துகொண்டனர். இவர் ரோமசர் அஷ்டாவக்கிரரென்ற ரிஷிகளால் வணங்கப்பெற்றவராய் மூவடியளத்தல் என்னும் விளையாட்டினால் விரோசனன் புதல்வனான மஹாபலியின்

* சண்டகிரணன்—சூரியன்.

மதத்தை அபஹரித்தனர். கருங்குவளைக் கண்ணாய்! இவர் திருக்கண்ணபுரமென்னும் திவ்யதேசத்தை இருப்பிடமாய்க்கொண்ட சௌரிராஜப்பெருமாள். இவருடைய திருமேனியானது பத்மாதேவியின் பயோதரங்களிற் படிந்த பமராசத்தையுடையதாய் சந்திரிகையுடன் கூடிவிளங்கும் ஆகாயத்தின் தோற்றத்தை யநுசரிக்கின்றது பார். சகி கோதே! திருவாலி திருநகருக்கு நாதனான வயலாலிமணவாளனைப் பார். சகி கோதே! திருவாலி திருநகருக்கு நாதனான வயலாலிமணவாளனைப் பார். இவர் தவத்தின் மஹிமையால் அப்புராசியின் அருமைப் புதல்வியால் ஆலிங்கனஞ் செய்யப்பெற்றதனால் இவரை ஆலிமணவாளனென்று காரணப்பெயருடையவராகக் கூறுகின்றனர். சகி! நாகப்பட்டினத்திற் கதிபதியாயும் லக்ஷ்மீ சகாயனாயுமிருக்கின்ற அழகரென்ற திருநாமத்தையுடைய இவ்வெம்பெருமானை அங்கீகரித்துக்கொள்வாய். நாகபட்டினத்தின் அருகிலிருக்கின்ற சமுத்திரமானது இவரைத் தன் மாப்பிள்ளை எனக்கருதி தன் அலைகளாகிய கைகளால் இரத்தினங்களையே இவருக்கு † யௌதகமாகக் கொடுக்கின்றதோ வெனத் தோன்றும்.

சகி! இங்கே பார். இவர் திருநறையூர்நம்பி. மணிமௌக்திகையென்ற புண்யதீர்த்தக்கரையில் எழுந்தருளியிருக்கின்றனர். இப்பரிபூர்ணனான பகவான் முற்காலத்தில் மேதாவியென்ற முனிவருக்கும் லக்ஷ்மீதேவிக்கும் அவர்கள் செய்த தபோமகிமையால் ப்ரத்யக்ஷமாயினர். கோதே! ஸ்ரீதேவியின் ஸ்தநதடங்களிலுள்ள குங்குமத்தால் சிவந்த திருமேனியையுடைய இவ்வெம்பெருமான் நந்திபுரவிண்ணகரநாதன். இவரிடத்தில் உன் பார்வையைச் செலுத்துவாய். என்று சகி சொல்லவும் அவ்வெம்பெருமானையும் பார்த்துவிட்டு வேறிடஞ் சென்றனள். அதன் பின்னும் அனுக்ரஹை என்பவள் கோதையைக் குறித்துக் கருங்குவளைக் கண்ணாய்! இவர் திருவிந்தளூர் மருவினியமைந்தன். இவரை நாதனாக வரிப்பாய்; என்று சொல்ல ஸ்ரீகோதை அவ்வெம்பெருமானையும் விட்டு அபவிடஞ் சென்றனள். ஆனால் உலகத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் மனதின் திருப்தியன்றோ ஸ்வதந்திரமாக இருக்கின்றது.

† யௌதகம்—விவாஹகாலத்தில் அடையப்பட்டதனம்.

மற்றொருவர் சொல்வதில் என்ன பயனிருக்கின்றது. அதன்பின்னும் அநுக்ரஹை ஸ்ரீகோதையைப் பார்த்து. ஹே நெடுங்கண்ணாய்! தேவாதி தேவனும் திருச்சித்திரகூடத்திற்கு அதிபனுமான இவ்வெம்பெருமானைப் பார். ஸ்ரீதேவிசகிதரான இவரை மின்னலுடன் கூடி விளங்கும் மேகமென்று ஐயுற்று ஆநந்தத்துடன் தில்லை வனத்தின் எல்லைபதனிற் றிருநீலகண்டன் நடனஞ் செய்வதை என் சொல்வேன். சகீ! காழிச்சீராமவிண்ணகருக்கு அதிபனான வெண்ணை திருடும் விஷ்ணுவையும் கூடலூர் வையங்காத்த பெருமாளையும் பார். மெல்லியலாளே! திருக்கண்ணங்குடியென்ற திவ்ய தேசத்திற் கதிபனான இவரைப்பார். இவ்வெம்பெருமான் பார்த்த சாரதியென்று ப்ரசித்திபெற்ற திருநாமத்தையுடையவர். இதோ முன்னே யிருக்கின்றவரைப் பார். இவர் திருக்கண்ணமங்கை நகரில் எழுந்தருளியிருக்கும் பத்தராவியென்ற திருநாமத்தை யுடையவர். ஸ்திரீகட்கு வசப்பட்டிருக்கின்றவர். சகீ! இவர் கபிஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான் கரிரக்ஷகரென்ற பெயரையுடையவர். இவரிடத்தில் உன் திருஷ்டியைச் செலுத்துவாய். கோதே! இவர் திருவெள்ளங்குடிக்கு நாதனாகவும் ஜாநகீபதியாயுமிருக்கின்ற கோதண்டராமன். இவரை உன்பார்வையால் அங்கீகரிப்பாய்.

சகீ! இவர் எம்பெருமான்கள் பதின்மர் சூழ்ந்திருக்கும் திருநாங்கூரிலிருக்கின்றவர். மணிமாடக்கோயிலுக்கு நாதர். பக்தரல்லாதவராலடையப்படாத பாதகமலங்களையுடைய இவரை ப்ரணயத்துடன்கூடிய உன் பார்வைகட்குப் பாத்திரமாக்கிக்கொள்வாய். சகீ கோதே! திருத்தெற்றியம்பலம், வண்புருஷோத்தமம், செம்பொன்செய்கோயில், திருத்தேவனார் தொகை, அரிமேயவிண்ணகரம், வைகுந்தவிண்ணகரம், திருமணிக்கூடம், பார்த்தன்பள்ளி, திருக்காவளம்பாடி, திருவெள்ளக்குளம் இவற்றிற் கதிபதியாயிருக்கின்ற எம்பெருமான்களையும் நாகபட்டினத்தின் பக்கத்திலிருக்கின்றவர்களான வெவ்வேறு திருநாமங்களுடைய எம்பெருமான்களையும் பாராயென்று அனுக்ரஹை சொல்லவும் ஸ்ரீகோதை ஆகாயத்திலுள்ள சந்திரலேகையானது நக்ஷத்திரங்களைக் கடந்து செல்வதுபோல் அவ்வெம்பெருமான்களை யெல்லாங்கடந்து சென்

றனள். இவ்விதயாசையுடன் ஸ்ரீரங்கநாதனைக் கருதிச் செல்கின்றவளான ஸ்ரீகோதை மத்தியத்திலுள்ள மஞ்சங்களிலெழுந்தருளியிருக்கின்ற எமபெருமான்களைப் பார்த்து நன்குமதித்துக்கொண்டு செல்லுதலானது மானசசரசைக் கருதிச்செல்கின்ற அன்னப்பேடானது வழியிலுள்ள * நதங்கள் நதிகள் மடுக்களிவற்றின் ஜலப்ரவாஹத்தைப் பார்த்துக்கொண்டு செல்வது போலிருந்தது. மறுபடியும் அநுக்ரஹை யென்பவள் ஸ்ரீகோதையைப் பார்த்து ஹே மான்விழிமாதே! இவ்வெம்பெருமான் ஒலிக்கின்ற சிலம்பாற்றினையுடைய திருமாலிருஞ்சோலை மலையிலெழுந்தருளி யிருக்கின்ற அழகர். இவர் மலையத்வஜபாண்டியனது பாக்கியமாகவே யிருக்கின்றனர். இவரழகிற்கிருப்பிடமான தமது திருமேனியால் சுந்தரவல்லி தேவியின் நயனங்கட்கு சௌபாக்கியத்தை விளைக்கின்றனர். இவருடைய அழகியபுஜத்தை யடைவாயென்றனள். இவ்விதஞ் சொல்லவும் குடிலகேசங்களையுடைய கோதை சந்தோஷத்துடன் அவ்வெம்பெருமானைப் பார்த்துவிட்டு வெட்கத்தால் வணங்கியமுகத்துடன் அவ்வழகரையும் வந்தனஞ்செய்து மந்தகதியுடன் மற்றுமோரிடஞ் சென்றனள்.

அதன்பின்னும் அநுக்ரஹை ஸ்ரீகோதையைக் குறித்து கோதே! லக்ஷ்மீநாதனான இவர் திருக்கோஷ்டி நகரத்திற்கு அதிபதியான உரகமெல்லணையானென்ற திருநாமமுடையவர். இவர் திருமெய்ய நகரத்திற்கு நாயகனான சத்தியநாதனென்ற ஸ்ரீமான். இவ்விருவரையும் கடாக்ஷிப்பாய். ஹே சுமுகி! திருப்புல்லாணிக் கதிபதியான திவ்யச்சிலையாரென்ற திருநாமத்தையுடைய புருஷனை வரிப்பாய். இவர் ஆழ்கடலைத் தமது கால்களால் நடந்து கடக்கவேண்டுமென்னுங் கருத்துடையவராய் சிறந்த தர்ப்பாசநத்தின்மீது சந்தோஷத்துடன் சயநித்துக்கொண்டனர். பெண்ணே! திருத்தண்காலென்ற திவ்யதேசத்திற்குத் திலகமாயிருக்கின்ற இவரது திருமேனியை உன் கண்கட்கினிய § ரசாயனமாக்கிக்கொள்வாய். ஹே

* நதம்—கிழக்கேயிருந்து மேற்கு நோக்கிச்செல்கிற ஆறு.

§ ரசாயனம்—வைத்திய சாஸ்திரத்தில் ப்ரசித்திபெற்ற ஔஷதபேதத்தினொன்று.

68159
Q22:417
N29

கோதே! திருமோகூரென்ற திவ்யதேசத்திற் கதிபதியும் ஸ்ரீதேவி யென்னும் மின்னலாற்றழுவப்பெற்ற திருமேனியையுடையதுமான இக்கார்மேகத்தை யுன் கடைக்கண்ணால் காண்பாய். ஹே மெல்லியலாய்! பாண்டியராஜனால் பரிபாலிக்கப்பெற்ற மதுராநகரத்திற் கதிபதியான இக்கூடலழகரைக் கொள்வதற்கிசைவாய். முன்பு இவ்வெம்பெருமான் லக்ஷ்மீசகிதராய் உன்பிதாவிற்கு ப்ரத்யக்ஷமாகி அவரது மங்களாசாசனமென்னும் மலர்களாலர்ச்சிக்கப் பெற்றனர்.

கோதே! இங்குவா ஸ்ரீவில்லிபுத்தூர் நகரத்திற் கதிபதியாயும் வீதியாரவருவானுமான வடபெருங்கோயிலுடையானை வரிப்பாய். இவ்வெம்பெருமான் உனது பாலியவிளையாட்டினால் சந்தோஷித்தவராய் உன் பிதாவினால் பிரீதியுடன் தமக்குக்கொணர்ந்து சமர்ப்பித்த புஷ்பமாலையைக் காட்டிலும் உன் கேசங்களில் சூடிக்களைந்த பூமாலையினாலதிசந்தோஷ மடைந்தனரன்றோ. சகீ தாமரைக் கண்ணாய்! திருக்குருகைநகர்க் கதிபதியான பொலிந்துநின்றபிரானைப் பார். இவர் உன் சிறியதகப்பனாரான வகுளாபரணராலருளிச்செய்யப்பெற்ற திவ்யசூக்தியென்னுந் தேவாமிருதபானத்தால் எப்போதும் சந்தோஷிக்கின்றனர். கோதே! திருத்தொலைவில்லிமங்கலம், தென்திருப்பேரை, ஸ்ரீவைகுண்டம், தென்குளந்தை (பெருங்குளம்) ஸ்ரீவரமங்கை, (தோதாத்திரி) திருப்புளிங்குடி, வரகுணமங்கை, திருக்கோளூர் இந்த திவ்யதேசங்கட்கதிபர்களாய் இங்கெழுந்தருளியிருக்கின்ற இவர்கள் அரவிந்தலோசனன், மகர நெடுங்குழைக்காதன், கள்ளப்பிரான், மாயக்கூத்தன், தேவப்பிரான், காசினிவேந்து, விஜயாசநன், வைத்தமாநிதி என்ற திருநாமங்களுடையவர்களாய் ஒவ்வொரு எம்பெருமான்களும் திருக்குருகைநகரின் பக்கத்திலுள்ள திவ்யதேசங்களிலெழுந்தருளி யிருக்கின்றவர்கள். இவர்களைப் பார். சகீ! இதோ பார். இங்கிருக்கின்றவர் திருக்குறுங்குடிநம்பி நீண்டபொன்மேனி; இவர் ஏழு பிர்ம்மதேவர்களால் வணங்கப்பெற்றவர்; இவ்வெம்பெருமான் தம் பக்கத்தில் பசியுடன்கூடி வந்துநின்ற பசுபதியின் பசிதீரும்படி பிச்சையளித்து அவர் சாபத்தை யகற்றினர்.

கோதே! இவர் திருவநந்தபுரத்திற்கு நாதனான ஸ்ரீபத்மநாபன். இவரது நாபீகமலத்தில் பிர்ம்மதேவன் வண்டுபோல் வதிந்துகிடக்கின்றனர். பார். இவ்வெம்பெருமான் ப்ரகாசிக்கின்ற ரத்தினங்களுடன் கூடிய சிரங்களையுடைய ஆதிசேஷன்மீது கைலையங்கிரியிற் கார்மேகம்போல் சயநித்துக்கொண்டிருக்கின்றனர்; என்று சகி சொல்லவே நெடுங்கண்ணாளாகிய ஸ்ரீகோதை அம்புஜமலரின் காந்தியை அபஹரிக்கின்ற தன் கடாக்ஷங்களினால் அவ்வநந்தசயனனான ஆதிபுருஷனைப் பார்த்துவிட்டு வேறிடஞ்செல்ல விருப்பமுற்றனள். ஆனால் உலகத்திலுள்ள ஜனங்களின் ஊழானது தொடக்கத்தில் போலவே விளைவிலும் ஒரேதன்மையையுடையதாக இருக்குமன்றோ! பின்பு மறுபடியும் அநுக்ரஹை யென்பவள் கோதையைக் குறித்து சகி! திருவண்பரிசாரம், திருவாழ்மார்பன், தென்காட்கரையப்பன், திருமூழிக்களம், குடக்கூத்தன், திருப்புலியூர் ஆதிபுருஷன், திருச்செங்குன்றூர் சிற்றாயன் திருநாவாய் நாரணநம்பி திருவல்லவாழுறையுங்கோனார், திருவண்வண்டூர் புருஷபுங்கவனான கேசவன், வாட்டாத்தெம்பெருமான், வித்துவக்கோட்டம்மான், திருக்கடித்தானத்தப்பன், திருவாறன்விளை கஜார்திஹரன் இத்தகைய கேரளதேசத்து எம்பெருமான்களை யெல்லாம் தனியாய்ப்பார்த்து இவர்களில் உன் மநதிற்கினிய ஒருவரைக் கணவனாக வரிப்பாய்; என்று சொல்லவும் ஸ்ரீகோதை அவ்வெம்பெருமான்களையும் பக்தியுடன் பணிந்துவிட்டுப் பயோநிதியை நாடிச்செல்கின்ற * பாகீரதீ நதியானது பற்பல தேசங்களையுங்கடந்து வேறு தேசஞ்செல்லுதல் போல் வேறு மஞ்சத்தைச்செல்ல விருப்பமுற்றனள்.

மறுபடியும் அநுக்ரஹை யென்பவள் கோதையைக் குறித்து ஹே அம்புஜாக்ஷி! திருவைந்திரபுரத்தில் விளங்குந் தேவநாதனைப் பார். இவ்வெம்பெருமான் கௌஸ்துபரத்தினத்தைத் தமது மார்பாகிய மண்டபத்தில் வீற்றிருக்கும் லக்ஷ்மீதேவிக்கு மணிப்பந்தாகச் செய்தனர். ஹே மெல்லியலாய்! திருக்கோவலூரென்ற திவ்யதேசத்திற்கோராபரணமாயிருக்கும் இவ்வெம்பெருமான் வலபுரத்

* பாகீரதீ—பகீரதனால் கொண்டுவரப்பெற்ற கங்கை.

தில் சங்கத்தைத் தரித்துகொண்டவராய்க் கண்கட்குப் புதுமையை விளைக்கின்றனர். மூவடியளந்த சேவடியுடைய இம்முதல்வன் உன் சிறிய பிதாவான பொய்கையார் பூதத்தார் பேயாரென்ற மூன்று பக்தர்கட்காக ஒரு கிரஹத்தினுள்ளேவந்துதோன்றினர். இவ் வெம்பெருமானுடைய ஒரு திருவடிக்கமலத்தைப் பூமியும், மற் றொன்றினை ஆகாயமும், இவருடைய திருக்கரங்களை யெண்டிசை களும் ஆலிங்கனஞ் செய்துகொண்டன. வணங்கிய அங்கங்களை யுடையாய்! நீயும் இவரது புளகாங்கிதமான திருமேனியை ஆலிங் கனஞ் செய்துகொள்வாய். ஹே * வாமாக்ஷி! காஞ்சீபுரத்திற் கதி பதியான வரதனென்னும் பெயரினையுடைய ஒரு கார்மேகத்தை உன் கண்களாற் காண்பாய். ஹஸ்திகிரியிலிருக்கின்ற இவ்வெம் பெருமான் பிர்ம்மாவின் கண்களாகிய சாதகபக்ஷிகட்கு மிகவுமாநந் தத்தை விளைவிக்கின்றனர். இப்பேரருளாளர் இப்போதும் மேகங் களையொத்த தமது அவயவகாந்திகளால் முன்பு பிர்ம்மதேவன் செய்த அச்வமேதயாகத்திலெழுந்த புகையினால் சூழப்பெற்றிருக் கின்றனரோவென ப்ரகாசிக்கின்றனர்.

ஹே சுமுகி! உனக்கு இவரிடத்தில் பிரீதியிருந்தால் இத்தேவ பிரானின் பாணியைப்பற்றிக்கொள்வாயென்று ஆதாவுடன் சொல் லியும் ஸ்ரீகோதை அவ்வெம்பெருமானையும் விட்டகன்றனள். ஆனால் உலகத்திலுள்ள மனிதர்களின் கருத்தாவது தமக்கிஷ்டமில் லாத § விஷயத்தினின்றும் மற்றதைக் கருதுகின்றதன்றோ; மறுபடி யும் அநுக்ரஹை யென்பவள் ஸ்ரீகோதையைப் பார்த்து ஹே சுந் தரி! இங்கு தானிருக்கின்றனர் வெஃகாவென்ற திவ்யதேசத்திற்கு நாதனான சொன்னவண்ணஞ்செய்த பெருமாள். இவ்வெம்பெரு மான் வித்வானான உன் சிறியபிதாவின் சொற்படியே † போகி சய னத்தை யெடுத்துக்கொண்டு புறப்பட்டனர். அதன்பின் மறுபடி யும் அவர் சொற்படியே பாம்பணையில் பள்ளிகொண்டு துயில் புரிந் தனர். அதனால் இவர் சொன்னதைச் செய்கின்றவரென்ற காரணப் பெயர் பெற்றனர். இவரை நீ கைப்பற்றுவாயாகில் இவர் உன் சொற்

* வாமம்—அழகு.

§ விஷயம்-தேசம்; அஃதாவது இடம்.

* போகி-சர்ப்பம்.

படிசெய்து உன்னைச் சந்தோஷிக்கச் செய்வரென்று சொல்லவும் ஸ்ரீகோதை அதற்கும் இசைந்திலள். ஏனெனில் சந்திரகிரணத்தில் சக்ரவாகப்பேடு சந்தோஷிக்குமா? அதன்பின்பும் அநுக்ரஹை என்பவள் ஸ்ரீகோதையைக்குறித்துச் சிறந்தபுருவங்களையுடையாய்! காஞ்சியின் பக்கத்திலுள்ள பரமேச்வரவிண்ணகர், *திருப்பாடகம், திருத்தண்கா இவற்றிற்கு அதிபர்களான எம்பெருமான்களையும்; நீரகம், வேளுக்கை, நிலாத்திங்கள்துண்டம், காரகம், கார்வானம், ஊரகம், பேராததென்னெஞ்சு, அட்டபுயகரம், திருநின்றவூர், திருப்புட்குழி, திருநீர்மலை, திருவிடவு, திருக்கடன்மல்லை, திருக்கடிகை, திருவெவ்வுள் இந்தத் திவ்யதேசங்கட்கு அதிபர்களான. எம்பெருமான்களையும் பாராய்; இவர்கள் விசித்திரமான விபவங்களையுடையவர்களாகவும் வெவ்வேறு திருநாமங்களையுடையவர்களாகவும் கருணை நிறைந்த கண்களையுடையவர்களாகவும் § கமலா சகாயர்களாகவுமிருக்கின்றனர்; "இவர்களை நீ கணவர்களாக விரும்புவாயாகில், இவ்வெம்பெருமான்கள் மாமகள் வசிக்கின்ற தமது மார்பிடங்களுடன் மற்றைய சரீரங்களையுமுனக்களிப்பார்கள்" என்று சொல்லவும் அவள் வாக்கையும் மதியாது மற்றொரு மஞ்சத்தையடைந்தனள்.

மறுபடியு மநுக்ரஹை ஸ்ரீகோதையைப் பார்த்து, "பணிவுற்ற அங்கங்களையுடையாய்! இங்குப்பார் இம்முராரியான பகவான் கூனர் குருடர் செவிடர் முடவர் ஊமையர் பிணியுற்றவர் மலடர் முதலியவர்களின் துன்பத்தை நீக்கும் வித்தையில் வல்லவர்; இவ்வெம்பெருமான் உலகத்தை ரக்ஷித்தற்காகவே இப்பூமண்டலத்திலவதரித்திருக்கின்ற வைகுண்டமென்னும் சேஷகிரியின் சிகரத்திலுள்ள தேவதருவாக இருக்கின்றார்; இவ்வெம்பெருமான், தமது திருமார்பினையே இருப்பிடமாகக்கொண்டு அகலாதிருக்கின்ற ஸ்ரீதேவியினால் ஸ்ரீநிவாஸனென்னும் ஜகத்ப்ரசித்திபெற்ற திருநாமத்தையுடையவராயினர்; அன்றியும் ஸ்ரீரங்கத்தில் பணீந்திரமணிமஞ்சத்

* பாடகம்-பாதகடகம் என்னும் சொல் இடைக்குறையாய் பாடகமென்றாயிற்று.

§ கமலாசகாயர்-லக்ஷ்மியுடன் செல்கின்றவர்.

தில் பள்ளிகொண்டிருக்கும் பரமபதநாதனான முகுந்தனையும் சேஷ கிரி நாதனான இவரையும் ஆரியர்கள் பேதமற்றவர்களென்றே கூறு கின்றனர்; ஆதலால் விருத்தியடைகின்ற மலையருவிகளின் பேரொலி யையுடையதும், ஸ்வாமி புஷ்கரிணியில் மலர்ந்திருக்கும் தாமரை வநத்தின் வாசனையுடன் வருகின்ற மந்தமாருதத்தையுடையதும், தேவர்களால் வணங்கப்பெற்றதுமான வேங்கடகிரியின் தாழ்வரை யில் விளையாடுதற்கு இந்த *விபுவின் கையைப் பற்றுவாய்" என்ற னள்.

இவ்விதம் சகி சொல்லியும் ஸ்ரீரங்கேசனிடத்திற் பற்றிய இத யத்தையுடைய ஸ்ரீகோதை ரங்கேசனதம்சம் பெற்றிருக்கின்ற வேங் கடகிரிநாதனை வணங்கி வேறிடஞ்சென்றனள். ஏனெனில் கரும் பின் ரசமும் சர்க்கரையும் சுவையில் பெரும்பாலும் பேதமில்லா திருந்தும் உலகத்திலுள்ள ஜனங்கள் கரும்பின் சாற்றையே ஆவ லுடன் பருகுகின்றனரன்றோ?

அதன்பின்னும் அநுக்ரஹையென்பவள் ஸ்ரீகோதையைக் குறித்து, "அழகிய அளகங்களையுடையாய்! சாளக்கிராமகிரியின் சிக ரத்திற் காபரணமாயிருக்கும் இவ்வெம்பெருமானிடத்தில் உன் கண் களைச் செலுத்துவாய்; இந்த லக்ஷ்மீநாராயணன் மோக்ஷமாகிய பொருளை இப்பூமியாகிய கடைத்தெருவில் ஜநங்கட்கு விற்கும் பொருளாக வைத்துக்கொண்டிருக்கின்றனன்; ஹே இந்ீவராக்ஷி! *இந்திரையினிதயத்திற்கு இசைந்தவரும் வியத்புரியில் சயனித்துக் கொண்டிருக்கின்ற நாதனுமான இவ்விஷ்ணுவைப் பார்; நேராய்த் தொங்குகின்ற மாலையினலழகிய இவர் திருமேனியானது அருவியின் ப்ரவாஹத்துடன்கூடிய அஞ்சனகிரியினழகை யநுசரிக்கின்றது. சகி! லக்ஷ்மீதேவியினிதய கமலத்தில் விளையாடும் வண்டோவென்று மதித்தற்குரியவரான நைமிசாரண்யத்தெந்தையைப் பார்; இந்த ஆதிபுருஷன் சூதர்மூலமாய் நைமிசாரண்யவாசிகளான *தாபதர்

* விபு—ப்ரபு.
* இந்திரை—லக்ஷ்மீ.
* தாபதர்—தவம் செய்வோர்.

கட்குச் *ஸநாதனதருமத்தை யுபதேசித்தனர்; இளைத்திருக்கின்ற அங்கங்களையுடையாய்! ஏன் ஆலோசிக்கின்றனை; ஜன்னுமகரிஷியின் கன்னியான கங்கையின்கரையிலுள்ள கண்டமென்னுங்கடிநகரி லும் வண்புருஷோத்தமமென்ற புண்யஸ்தலத்திலுமெழுந்தருளி யிருக்கின்றவரும், சமஸ்தஜகத்திற்கும் நாதனும்; பற்பல வேதாந் தங்களி னெல்லையாயும் அபாயமற்றவருமான இவ்வெம்பெருமா னிடத்தில் உன் திருஷ்டியைச் செலுத்துவாய்"என்று இவ்விதமநுக் ரஹை சொல்லியும், அழகிய திருக்கண்களையுடைய ஸ்ரீகோதை வேறு கருத்தினையுடையவளாய் அந்த ஜகந்நாதனிடத்திலும் தன் இனிய பார்வையைச் செலுத்தவில்லை ஏனெனில் குயிற்பேடானது மாமரந் தளிர்த்திருக்கும்போது மற்றைமரங்களின் தளிரை மகிழ்ச் சியுடன் மோந்தேனும் பார்க்கின்றதா என்ன?

அதன்பின்பு மநுக்ரஹை ஸ்ரீகோதையைப்பார்த்து, "ஹே சுபாங்கி! இந்த ப்ரபு பதரிகாசிரமத்தில் வீற்றிருக்கின்ற நாராய ணன்; இவர் நரனுக்கு * சகாவாயிருக்கின்றவர்; தவத்திற்கெல்லா மிருப்பிடமாயுள்ளவர்; இவர் சத்வகுணத்தால் ரஜோகுண தமோ குணங்களையடக்கிரிஷிகட்கு அடிக்கடி தத்துவஞானத்தை யருள் கின்றவர். தாமரைமலரிதழ் போலும் நெடிய நேத்திரங்களையுடைய வளே! இவ்வெம்பெருமான் தேவர்களையன்றி மற்றெவர்களாலுஞ் சேருதற்கரிய * சிங்கவேள்குன்றத்திற் கதிபர்; ஹிரண்யகசிபுவை சம்ஹரித்த இவர் கோபத்தையகற்றிவிட்டு ஆனந்தவாரிதியாய் யோகமுத்திரையைக் கைப்பற்றிக் கொண்டிருக்கின்றனர்; நரசிங்க மூர்த்தியான இந்த ஸ்ரீப்ரீதிபுமபதியைக் கணவனாகச் செய்துகொள் வாய்; இவ்வெம்பெருமான் தேவசத்துருவான ஹிரண்யகசிபுவின் ஸ்திரீ ஜனங்களைத் தமது சிங்கநாதத்தால் நடுங்கச்செய்துகொண்டு அவனைத் தமது நகங்களாகிய ஆயுதங்களாற் பிளந்தெறிந்தனர். பிறழ் கின்ற கண்களையுடையாய்! அயோத்தியாநகரத்திற் கதிபதியாயும் தசரதசக்ரவர்த்தியாகிய சமுத்திரத்திற்குச் சந்திரனுயிருக்கின்ற

---

* ஸநாதனம்-எப்போதுமுள்ளது-அல்லது அசைவற்றது.

* சகா-மித்திரன்.

* சிங்கவேள்குன்றம்-அஹோபிலம்.

ஸ்ரீராமபிரானைப் பார். இவர் ஆரியையான விதேஹராஜகுமாரியைத் தவிர்த்து மற்றை ஸ்திரீஜனங்களைத் திருணமாய் நினைத்தனர். ஹே மான்விழிமாதே! இந்த ஸ்ரீமான் அஷ்டமஹிஷிகளின் கேளியை இஷ்டமாய்க் கொள்கின்ற வடமதுரைக் கதிபதியான வாசுதேவன்; இவர் தமது மாமனாம் கம்சனை வலிமையால் வென்றவர்; இம் மஹா புருஷனை யங்கீகரிப்பாய். இவர் புதியமங்கையரின் போகத்தில் விருப்பமுள்ளவர்; இடைச்சேரியிள்ளுளார்கட் கிஷ்டபந்துவாயிருப் பவரும், பாலவிளையாட்டினாலேயே வத்சாசுரன் சகடாசுரன் மருத மரம் பூதனை இவர்கள் இன்னுயிரை மாய்த்தவருமான இவரைப்பார். இவர் தமது சௌந்தர்யத்தை மனதிற் சிந்திக்கின்றவளான ஓரிடையன் மனைவியின் ப்ராணன்களை யபஹரித்தனர். துவாரகாபுரியில் வசிக்கின்ற இவ்வாசுதேவனிடத்தில் உன் பரிபூர்ணகடாக்ஷத்தைச் செலுத்துவாய். இவர் செய்யும் மன்மதக்ரீடையின் வரிசையா லிவரிடத்தில் பதினாறுயிரம் ஸ்திரீஜநங்களின் மனங்களுமொரே காலத்திற் பதிந்துகிடந்தன. அழகுடையாளே! பாம்பணையிற் பள்ளி கொண்டவரும் தேவர்கட்கெல்லாம் முதல்வருமான க்ஷீராப்தி நாதனிவர்; ஸ்ரீதேவி பூதேவிகளின் விலாசத்துடன்கூடிய மந்தஹாசம் போன்ற பாற்கடலலைகளின் *படலங்களால் அபிஷேகிக்கப்பெற்ற திருமேனியையுடையவராய் உனது முன் ப்ரகாசிக்கின்றனர். இதோபார்; இவர் வைகுண்டமென்னுந் திவ்யநகரத்திற்கதிபதியான பரமபுருஷன் இவ்வெம்பெருமானிடத்தினின்று வ்யூஹம் முதலிய வற்றால் வேறுபட்ட எம்பெருமான்களின் சமூகமானது கடலினின் றும் அலைகள் திவலைகள் குமிழிகள் நுரைகளிவற்றின் கூட்டம் போலவுமுண்டாயிற்று. ஸ்ரீரங்கேசன் மாத்திரம் அக்கடலின் முத் துப்போலவும் தோன்றி ஸ்ரீவைகுண்டநாதனுடைய அம்சத்தைப் பெற்றிருக்கின்றனர். இவரை நீ நாதனாக அடைவா'' யென்றனள்.

இவ்விதமநுக்ரஹை சொல்லவே, குடிலகேசத்தினையுடைய கோதை அங்குள்ள சர்வ எம்பெருமான்களையும் கடந்து மலர்ந் திருக்கின்ற குமுதம் நீலோத்பலம் முதலிய புஷ்பங்களைவிட்டுப் புதிய அரவிந்தமலரைநாடி அன்னப்பேடு செல்வதுபோல் அதி சந்

* படலம்-சமூகம்

தோஷத்துடன் தனக்கிசைந்த மணவாளனான ஸ்ரீரங்கநாதனை யடைந்தனள். அடைதலுமநுக்ரஹை யென்னும் சகி ஸ்ரீகோதை யைக்குறித்து, "ஹே சுமுகி! இம்மெம்பெருமான் காவிரியின் தீவி லிருக்கின்ற ஸ்ரீரங்கநகரத்திற்கதிபதியான அழகியமணவாளன். இவர் பிர்ம்மாவினத்தகைய தவத்தின் பயனாகவும், இக்ஷ்வாகு வம் சத்தினர்களின் தனமாகவும், விரும்பினோர்கட்குவேண்டும் பயனை யளிக்கின்றவராகவும், சந்திரபுஷ்கரிணிக்கரையில் ப்ரணவாகார மான அரங்க ஸ்தலத்தில் ஆதிசேஷனாகிய அரியமஞ்சத்தில் அறி துயில்புரிந்துகொண்டு யோகத்துடன் சுகாநுபவம் செய்கின்றனர். இவர் வைகுண்டத்தினின்றும் முதலில் இப்புவியில் துலக்கமுற்றனர். இவ்வெம்பெருமான் தாராகணங்களுள் சந்திரன்போலவும் ரத்தி னங்களில் கௌஸ்துபம்போலவும் அர்ச்சாவதார எம்பெருமான் களிற் சிறந்து ப்ரகாசிக்கின்றனர். கஸ்தூரீதிலகத்துடன்கூடி களங்க முற்றிலங்கும் சந்திரன்போன்ற திருமுகமண்டலத்தையுடையவரும் கல்ஹாரமாலையினால் அழகிய திருமார்பினையுடையவரும் மதனன் மதத்தையடக்கும் வடிவத்தையுடையவரும், அழகிய மந்த ஹாசத்தையுடையவருமான இவரை நீ கைப்பற்றுவாய். முன்பு நீ உன்னழகிற்கும் உருவத்திற்கும் குணத்திற்கும் ஆசைக்கும் வய திற்குமிசைந்தவரென்று எவரை ஏகாந்தத்தில் பாமாலையால் வரித் தனையோ, அத்தகைய அரங்கநாதனை இவ்விடத்திலிப்பொழுது எல்லா எம்பெருமான்களின் முன்னிலையில் இப்பூமாலையால் வரிப் பாய்" என்றனள்.

உடனே ஸ்ரீகோதை ஆநந்தபாஷ்பமாகிய மகரந்தத்தையுடை யதும் நிமிர்ந்தஇமைரோமங்களாகிய கேசரங்களையுடையதும் ப்ரகா சத்துடன்கூடிப் பிறழ்கின்ற கருவிழிகளாகிய வண்டுகளையுடையது மான கண்களாகிய நீலோத்பலமாலையை ஸ்ரீரங்கேசனிடத்தில் சமர்ப்பித்தனள். அதன்பின்பு தன் கையிலுள்ள *கல்ஹாரமாலையை சமர்ப்பித்தனள். சமர்ப்பித்தலும் அப்பொழுது அக்கல்ஹாரமாலை யானது தேவர்கள்பொழியுங் கல்பகதருவின் பூமாரியுடனும், பொய் கையார் முதலியோர்களின் ஆநந்தபாஷ்பத்துடனும், அங்கெழுந்

* கல்ஹாரம்—செங்குவளைமலர்.

தருளியிருக்கும் எம்பெருமான்களின் கண்ணோக்கத்துடனும், ஸ்ரீ ரங்கராஜன் கழுத்தினில் வீழ்ந்தது. வீழ்தலும் அம்மாலையை யணிந்துள்ள ஸ்ரீரங்நாதனுடைய அகன்ற திருமார்பானது பால சூர்யகிரணங்களுடன்கூடி ப்ரகாசிக்கின்ற ஆகாயத்தினுஞ் சிறந்ததா யிருந்தது.

அப்போது ஸ்ரீகோதையின் பாணிக்ரஹண மஹோத்சவத்தைச் சிறப்புடன் நடத்தவேண்டுமென்ற திருவுள்ளமுடைய சமஸ்தமான எம்பெருமான்களும் பிர்ம்மா முதலிய தேவர்களும் பகவத் பக்தர்களும், ஸ்ரீவிஷ்ணுசித்தர் கன்னிகையையும் ஸ்ரீரங்கேசனையும் கருடன்மீதெழுந்தருளப்பண்ணி, ஸ்ரீரங்கராஜனும் கோதையும் கருடாரூடர்களாய் முன்செல்ல மற்றெல்லாரும் பின்செல்கின்றவர்களாய், சடகோபரின் திருமாளிகைக்குச் செல்லவேண்டுமென்ற திருவுள்ளத்துடன் ராஜமார்க்கத்திற் சென்றனர். இவ்விதம் ஸ்ரீரங்கராஜன் கருடன்மீதெழுந்தருளும்போது ஆதிசேஷன் முத்துக் குடைபிடித்தனன். வாயுவும் வருணனும் இரண்டு வெண்சாமரங்களை வஹித்தனர். சந்திர சூரியர் இருவரும் இரண்டு விசிறிகளைக் கைப்பற்றினர். சிவனும் இந்திரனும் *தோத்திரத்தையும் § வேத்திரத்தையும் கைக்கொண்டனர். குபேரன் வெற்றிலைச்சம்புடத்தை விருப்புடன் வஹித்தனன்.

12-வது சர்க்கம் முடிந்தது.

---

## 13-வது சர்க்கம்.

---

இவ்விதம் ஸ்ரீரங்கராஜன் எழுந்தருளும்போது கிரஹங்கள் தோறும் வாயிற்றிண்ணைகளில் மந்தாரமலர் மாலைகளுடன்கூடி ழனதைக்கவர்கின்ற சுவர்ணமயமான பூர்ணகும்பங்கள் வைக்கப் பட்டிருந்தன. பிரபுக்களின் மாளிகைகளில் துவஜபடங்கள் வரிசையாய்க் கட்டப்பட்டிருந்தன. வீதிகளெல்லாம் புஷ்பங்கள் சிதாப்

---

* தோத்திரம்—பசு முதலியவற்றை யடித்து நடத்துதற்குரிய கம்பு.

§ வேத்திரம்—பிரம்பு.

பட்டும் பனிநீர்ப்ரவாஹத்தால் நனைக்கப்பெற்றும் தொங்குகின்ற முத்துமாலைகளையுடையதாகவும், பற்பல நிறத்துடன்கூடிய ரத்தின காந்தியால் அநேகம் இந்திரவிற்களின் தோற்றத்தை யுண்டுபண்ணுகின்றதாகவுமிருந்தன.

அப்போதம்மஹோத்ஸவத்தைக் காணவேண்டுமென்று ஆவலுடனோடிவருகின்ற ஸ்திரீகளிலொருத்தி, ஒற்றைக் காதிலணிந்த ஓலையையுடையவளாயிருந்தாள். ஒருத்தி ஒருகண்ணிலிட்டமையை யுடையவளாய்க் காணப்பட்டனள். ஒருத்தி ஒருகாலில் சேர்த்த பாதுகையையுடையவளாய் மன்மதனது எல்கையை நிலைநிறுத்துகின்றவள்போலிருந்தனள். மற்றொருமங்கை தான் மேல்மாடத்திலேறிச் சன்னலின்வழியாயம்மஹோத்ஸவத்தைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன் செல்லும்போது மணிமயமான சுவரில் காணப்படுந் தன்னுருவத்தையே தன் வேலைக்காரியென நினைத்து அவ்வுருவத்தைத் தழுவிக்கொண்டனள். மற்றொருத்தி நெற்றியிற் றிலகமணிந்துகொள்ளவேண்டுமென்று கையிற் கண்ணாடியையெடுத்தவள், ஸ்ரீரங்கராஜனை சேவிக்கவேண்டுமென்ற பரவசத்தால் கண்ணாடியிற் காணப்படுந் தனது முகத்தின் ப்ரதிபிம்பத்தில் தன் கைவிரல் நுனியிலிருந்த கஸ்தூரீதிலகத்தையிட்டனள். மற்றொருவனிதை, தன் வேலைக்காரி கையிற் செம்பஞ்சை வைத்துக்கொண்டு காலிலிடுவதற்காகக் காலைப்பற்றிக்கொண்டிருக்கும்போது, அசோகமரத்தினைப் புஷ்பிக்கச்செய்வதற்காகத் தன் கையில் வைத்துக்கொண்டிருந்த பொருளை வேலைக்காரியிடத்திற் கொடுத்துவிட்டு, அப்படியே எம்பெருமானை சேவிக்கவேண்டுமென்று விரைவிற் சென்றனள். மற்றொருமாது இடுப்பினின்றும் நழுவிவீழ்கின்ற மெல்லிய வஸ்திரத்தையும் அவிழ்ந்தும் சிதைந்துங்கிடக்கின்ற கேசபாரத்தையுமுடையவளாய்க் கோவிந்தனிடத்திற்பரமபக்தியையுடையவளாய் துக்கமின்றியும் துரௌபதியாயினள். மற்றொருவனிதை தன்னை மறந்தவளாய் பாடகத்தைத்தோளிலும் தோளணியைக் காலிலும் இடையணியைக் கழுத்திலும் முத்துமாலையை இடுப்பிலும் அணிந்துகொண்டு வந்தனள். ஸ்ரீரங்கராஜனைச் சேவிப்பதற்குச் செல்கின்ற மற்றொருமானினியினவிழ்ந்த கூந்தலினின்

றும் அவளது முதுகில் வீழ்கின்ற மலர்கள், எம்பெருமானை சேவிப்பதற்கு நீ விரைவிற் செல்வாயென்று, *புஷ்பபாணனால் ப்ரயோகிக்கப்பட்ட கணைகளோவெனக் காணப்பட்டன. வேறொரு விலாசினி மேல்மாடத்திலேறும்போது அவிழ்ந்த கூந்தலினின்று வீழ்ந்த பூமாலையுடன் எம்பெருமானெதிரில் காணப்படுகின்றவள், ஸ்ரீ கோதை தனது கூந்தலிற் சூடிக்களைந்த பூமாலையை எம்பெருமானுக்குச் சமர்ப்பித்து, இத்தகைய பாக்கியத்தை யெய்தினளென்ற பொறாமையினால், தானுமதனைப்பெற விரும்புகின்றவள்போல் ப்ரகாசித்தனள்.

அப்போதங்குள்ள மாளிகைகளின் சாளரங்கள்யாவும் கஸ்தூரீதிலகமாகிய களங்கத்தையுடையவைகளும் புன்முறுவலாகிய சந்திரிகையையுடையவைகளுமான வனிதையர்களின்வதனங்களாம் மதிகளினால் மறைக்கப்பட்டன. அப்போதந்த நகரிலுள்ள மற்றுஞ்சிலமான்விழியார் ஸ்ரீரங்கநாதனை சேவிக்கவேண்டுமென்றுவலுடையவர்களாய் வீட்டுவேலைகளுடன் வெட்கத்தையும் விட்டுத் தங்கள் கைவளைகளுடன் நெற்பொரிகளையும் வீதிகளெங்கும் சிதறினர். அந்தச்சமயத்தில் அந்நகரில் மேல்மாடங்களிலிருந்துகொண்டு கண்ணிமையாது ஸ்ரீரங்கராஜனை சேவிக்கின்றவர்களான நரர்களும் அங்குவிமானத்தில் வந்திருக்கின்ற சுரர்களும் அந்நகரிலுள்ள ஸ்திரீகளும், தேவஸ்திரீகளும், தேவர்களிவர்களென்றும் மனுஷயர்களிவர்களென்றும் நிச்சயிக்கமுடியாதவர்களாயினர்.

இவ்விதமெம்பெருமானெழுந்தருளும்போது அங்குள்ள மங்கையரிற்சிலர், 'ஸ்ரீ கோதையின் குருக்களான சடகோபர் முதலிய பக்தர்களே பாக்கியவான்கள்; திரிலோகநாதனான ஸ்ரீரங்கராஜனே இவர்கட்கு மாப்பிள்ளையாயினரன்றோ' என்றனர். வேறுசிலமெல்லியலார், 'கோதையன்றோ கன்னியரிற்புண்ணியவதி; ஸ்ரீரங்கராஜன் தன்திருமார்பினையே இருப்பிடமாய்க்கொண்ட ஸ்ரீதேவியினிடத்திலுள்ள ஸ்நேஹத்தையுமுபேக்ஷித் திப்போதிவளை ஆதரவுடனங்கீகரித்தனரன்றோ' என்றனர். இன்னுஞ்சில ஏந்திழையார், அமரர்களால் வணங்கப்பெற்ற அர்ச்சாவதார எம்பெருமான்களில் ஸ்ரீரங்க

---

* புஷ்பபாணன்—மன்மதன்.

தேவனே சிறந்தவர்; இவ்வெம்பெருமானையன்றோ ஸ்ரீகோதை தன் கையிலுள்ள புஷ்பமாலையைச் சமர்ப்பித்துச் சகலதேவர்களின்முன்னிலையில் மணவாளனாகவரித்தனளென்றனர். வேறு சில விலாசிநிகள், ஆஹா! என்ன வடிவழகு! அக்நிக்கு ஸ்வாஹாதேவிபோலவும் சங்கரனுக்கு உமையவள்போலவும் சூரியனுக்குச் சாயாதேவிபோலவும் இந்திரனுக்குச் சசிதேவிபோலவும் மன்மதனுக்கு இரதிபோலவும் ஸ்ரீரங்கராஜனுக்கு லக்ஷ்மீதேவிபோலவும் கோதையும் பாரியையாயினள் என்றனர்.

இவ்விதம் கர்ணாசாயனமான சொற்களைக் கேட்டுக்கொண்டு அங்குள்ள அறிவையரை ஸ்ரீரங்கராஜன் தமது கடைக்கண்ணோக்கங்களினால் சம்மானித்துக்கொண்டே சடகோபரின் திருமாளிகையின் சமீபத்தைச் சார்ந்தனர். அப்பொழுது ராஜகிரஹங்களின் மேல்மாடங்களிலிருக்கின்ற கருங்குவளைக்கண்ணியரால் ஸ்ரீரங்கராஜன் திருமேனியில் வீசியெறியப்பட்ட பூப்பந்துகளைக் கருடன் சிறகுக் காற்றானது எம்பெருமான் திருமேனியில் விழாமற்செய்தது. அப்போது பராங்குசர் முதலான பக்தர்கள் கருடன்மீதெழுந்தருளி வருகின்ற எம்பெருமானுக்கு நீராஞ்சனம் முதலிய திருவாராதனவிதியை அநுஷ்டித்தனர். உடனே ஸ்ரீரங்கராஜன் தமது பக்கத்தில் நிற்கின்ற பசுபதியின் பாணியைப் பற்றிக்கொண்டு பெரியதிருவடியின் திருத்தோளினின்றிறங்க, மறையோன் மங்களாசாசனஞ்செய்யவும் வகுளாபரணர் தமது திருமாளிகைக்கு வழிகாட்டவும், வாழைகமுகு முதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்றதும் தொங்குகின்ற முத்துமாலைகளுடன் கூடியதும் ஏற்றிவைத்திருக்கின்ற இரத்தினதீபங்களையுடையதுமான சடகோபரின் திருமாளிகையிலுள்ள விவாஹமண்டபத்தை யடைந்தனர்.

அடையவே சடகோபர் தொங்குகின்ற முத்துமாலைகளின் ஒளியாலி நமடங்காகச் செய்யப்பெற்ற வெண்பட்டுவிதானத்தின் விளக்கத்தினையுடைய *சதுக்கவேதியில் †பத்திரபீடத்தில் கோதை

---

* சதுக்கவேதி — நாலுதூண்களுடன் சமசதுரமாய் அமைக்கப்பெற்று விளங்குகின்ற மண்டபம்.

† பத்திரபீடம்—அரசர்கள் வீற்றிருக்கும் ஆசனம்.

யுடன் ஸ்ரீரங்கராஜனை எழுந்தருளப்பண்ணினர். உடனே பிர்ம்ம தேவன் பிரஹஸ்பதியினுலேற்படுத்திய சுபமுகூர்த்தத்தில் அவ்விரு வருடைய திருமேனிகளிலும் புண்யதீர்த்தத்தை ப்ரோக்ஷணஞ் செய்து ஆதரவுடனவ்விருவர் கைகளிலுங் காப்புக்கட்டினன். அதன்பின் பத்மசம்பவனுகிய அப்புரோகிதன் அக்நியைக் கொணர்ந்து ஆச்சியத்தால் ஹோமஞ்செய்து அவ்வக்நி சந்நிதியில் ஒத்த அன்பினரான அவ்விருவரையும் வதூவர்களாகச் சேர்ப்பித்தனன். அப்போது ஸ்ரீரங்காதிபன் சூரியன் தன் *கரத்தால் தாமரை மொட்டைத் தழுவியதுபோல் ஸ்ரீகோதையின் கையைத் தமது கரத்தால் பற்றிக்கொண்டு மிகவும் ப்ரகாசித்தனர். அவ்விருவரும் இவ்விதம் ஒருவர் கையை ஒருவர் பற்றுதற்கு முன்பே அவ்விருவர் களின் திருக்கரங்களினின்றுமுண்டான வேர்வைஜலத்திவலைகளின் பெருக்கானது அவ்விருவரும் தத்தம் அநுராகத்தை †பரிவர்த்தகம் செய்துகொண்டனர் என்பதற்கு அறிகுறியாக மன்மதனுலுண்டு பண்ணப்பட்டுக் கையினின்று மிடப்படும் தண்ணீர்த்தாரைபோல் விளங்கிற்று. அந்த விவாஹகாலத்தில் ஸ்ரீரங்காராஜனும் கோதையும் முதலில் சந்தோஷத்தினுல் ஒருவரையொருவர்நன்ருயுற்றுப்பார்த்து விட்டுப் பின்பு வெட்கத்தின் மிகுதியால் தமது பார்வையைச் சுருக்கிக் கொண்டவர்களாயினர். அதன்பின் அவ்விருவரும் காலை யில் அலர்ந்த கமலமலரைச்சுற்றி வலம்வருகின்ற கலஹம்சங்கள் போல ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்ற அக்நியை வலம்வந்தனர். வந்ததும் ஸ்ரீகோதை பிர்ம்மாவினுல் நியமிக்கப்பெற்றவளாய் மிகுந்த வெட்கத்தினுல் தமது கண்களின் பார்வையை வேறிடத்தில் செலுத்திக்கொண்டவண்ணம் அக்நியில் நெற்பொரிகளை ஹோமஞ் செய்தனள்.

அப்போது நெய்யின் பரிமளத்துடன்கூடி அவ்வக்நியினின் றும் எழுந்த புகையானது ஸ்ரீகோதையின் முகமாகிய தாமரை

---

* கரத்தாலென்பது—கையாலென்றும் கிரணத்தாலென்றுமிருபொருள் பட நின்றது.

† பரிவர்த்தனம்—ஒப்பான பொருளைக்கொடுத்து மற்றொரு பொருளைப் பெற்றுக்கொள்ளுதல்.

மலரில் சிறிதுநேரம் வண்டினங்களின் அழகினையுண்டுபண்ணிற்று. அப்போது ஸ்ரீரங்கராஜன் தமது சமீபத்திலிருந்த சங்கரன், வாசகன் இவர்களால் பிரேரிக்கப்பெற்றவராய் கோதையைத்தமது மார்பிலுள்ள கௌஸ்துப ரத்தினத்துடன் சேர்தற்கிசைந்தவளாகச் செய்யவேண்டு மென்ற திருவுள்ளத்துடன் கோதையின் பாதத்தைத்தமது நான்கு பாணிகளாலும் அம்மியில் ஆரோஹணம் செய்வித்தனர்.

இவ்விதம் ஸ்ரீரங்கராஜன் கோதையை விவாஹித்துக்கொண்டு அரனயன் முதலிய தேவர்களால் புகழப்பெற்றவராய் முற்காலத்தில் பாற்கடலினின்று முத்பவித்த ஸ்ரீதேவியைத் தேவர்கள் முன்னிலையில் பாணிக்ரஹணஞ் செய்துகொண்டு ப்ரகாசித்ததினும் சிறந்து விளங்கினர். உடனே சடகோபர் ஈசன் பிரமன் முதலிய தேவர்களைச் சம்மானிப்பதற்காக ஸ்ரீரங்கராஜனது சேனாபதியையும் மற்றைய திவ்யதேசத் தெம்பெருமான்களை சத்கரிப்பதற்கு மதுரகவியையும் வல்லபதேவபாண்டியமகீபதியையும் நியமித்தனர். அப்போது ஸ்ரீரங்கராஜன் தமக்கு மங்களாசாசனம் செய்த சடகோபர் முதலிய கோதையின் குரவர்கட்கு மோக்ஷத்தையே *சுல்கமாகக் கொடுக்கவேண்டுமென்று சந்தோஷத்துடன் திருவுள்ளம் பற்றி கோதையின் மாத்ருவர்க்கத்தினர்க்கும் அவள் சகி பரிசாரிகைகட்கும் அவரவர்கட்குவேண்டும் வரங்களையளித்தருளி ஸ்ரீகோதையுடன் சயனகிருஹத்திற் கெழுந்தருளிப் பள்ளிகொண்டனர்.

இவ்விதம் இரவு முடிந்ததும் †பிரபாதகாலத்தில் வேதங்களால் ஸ்தோத்திரஞ் செய்கின்றவர்களான சடகோபர் முதலிய பக்தர்கள் அனைவரும் மூன்றுலகங்களையும் ரக்ஷிப்பதில் ஜாக்கிரதையுடைய ஸ்ரீரங்கநாதனை ஸ்தோத்திரத்தால் துயிலெழச் செய்கின்றவர்களாய் எம்பெருமானைக்குறித்து ஸ்ரீரங்கேசா! இச்சந்திரன் தனது §பாதத்

---

* சுல்கம் — மாப்பிள்ளையின்பக்கலினின்றும் கன்னியின் பக்கத்தவர்களால் பெற்றுக்கொள்ளப்படும் பொருளாகிய ஸ்திரீ தனங்களிலொன்று (இது சீதனமெனப்படும்.)

† பிரபாதகாலம் — சூரியோதயம்வரை ஆறுநாழிகைக்காலம்.

§ பாதமென்பது—கிரணம், கால் என்றிரண்டு பொருளைத்தந்து நின்றது.

தின் சம்பந்தத்தால் வாட்டமுற்றதும் சூரியனுக்கிஷ்டமாயுள்ளதுமான தாமரையோடையின் வருத்தத்தை நினைத்துக் கோபத்துடனெழுந்து வரப்போகின்ற சூரியனுக்குப் பயந்தவன்போலத் தனது *அம்சுகத்தையும் நழுவவிட்டு அஸ்தகிரியை யடைகின்றனன். இஃதன்றியும் இச்சந்திரன் மேற்றிசையுற்று வேற்றுமங்கையை அனுபவித்த காமுகனைப்போல † அம்பரத்தினீங்கியவனாகவும், துலக்கமுற்ற களங்கத்தையுடையவனாகவும் மறைகின்றனவும் சுழல்கின்றனவுமான § தாரகைகளின் எழிலையுடையவனாகவும் காணப்படுகின்றனன். ரெங்கேசா! ஆம்பலோடை யென்ற மங்கை தனது நற்கணவனான சந்திரன் மேற்றிசையாகிய மாற்றவளிடத்தாசையுற்றிருக்கின்றா னென்பதைக்கண்டு பொறாமையுடையவள்போலக் குவிந்த முகத்துடன்கூடி யிருக்கின்றனள். உலகத்தில் எவள்தான் தன் கணவன் வேற்றுமங்கையிடத்து விளையாடிக்கொண்டிருப்பதைக்கண்டு சகிப்பாள்? ஆதித்தனுக்கு முன்னே வருகின்ற அருணனே அந்தகாரபனத்தையுமகற்றினன். உலகத்தில் பெரும்பாலும் பலவான்களை ஆசிரயித்துக்கொண்டு அவர்கட்கு முன்னே செல்கின்றவர்களுக்கு நேராய் எவன் தானிலைநிற்க வல்லவன்.

ஸ்வாமீ! அலர்ந்த தாமரைமலரின் நடுவில் கேட்கப்படுகின்ற வண்டினங்களின் ஒலி அம்மலரின் மத்தியத்தினின்றும் துயிலெழுகின்ற ஸ்ரீதேவியின் காற்சிலம்பொலியின் எழிலையெய்துகின்றது. அன்றியும் ஓர் ஆண்வண்டு குவிகின்ற குமுதமலரின் நடுவில் சுழன்றுகொண்டிருக்கும் பெண்வண்டை நோக்கி ரீங்காரஞ்செய்துகொண்டும், தன் சிறகுகளை யடித்துக்கொண்டும் அப்பெண்வண்டை விடுவிக்கின்றது. மற்றொரு வண்டானது குவிகின்ற குமுதமலரைவிட்டு இன்னிசையோடு அலர்கின்ற அம்புஜமலரையடைய விரும்புகின்றது. உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் அபாயநிலைமையிலிருக்கின்றவனை ஆசிரயிக்கின்றாரில்லையன்றோ! ஸ்வாமி! சந்திரனாகிய கணவனைக்கூடி அனுபவித்த இரவென்னும் தருணியின் அவிழ்ந்த

---

* அம்சுகம்—கிரணம், வஸ்திரம் என்றிரண்டு பொருள் குறித்து நின்றது.

† அம்பரம்—ஆகாயம், வஸ்திரம்.

§ தாரகை—நக்ஷத்திரம், கருவிழி.

கூந்தலினின்றும் ஆகாயமாகிய அமளியிற் சிதறிக்கிடக்கின்ற நக்ஷத்ரங்களாகிய மலர்களையும் அம்மங்கையின் நெற்றியிலிடப்பட்டிருந்த இருளாகிய கஸ்தூரி திலகத்தையும் ஆதித்தியன் தனதுபாதங்களால் அழிக்கின்றான். அன்றியும் காலையில் கீழ்த்திசையாகிய தருணியிடத்தில்சூரியபிம்பமாகிய அழகிய குழந்தை யுதிக்கவே குவிந்த தாமரைமலர்களாகிய சிறைச்சாலையினின்றும் வண்டுகளாகிய கள்வர்கள் விடுபட்டனர். இஃதின்றியும் இளவெய்யிலால் மிகவும் செந்நிறம் வாய்ந்து அதனால் தாமரைமலரின் நிறத்தினையுடையனவாய்க் காணப்படுகின்ற நீர்த்துளிகளை அன்னப்பேடு தாமரைமலரினுள்ளிருக்கின்ற தனது முட்டைகளென்னு மெண்ணத்தினால் அவற்றை மூக்கினாற் கௌவ அதனைக்கண்டு தாமரை மொட்டிலிருக்கின்ற ஆண் ஹம்சம் சிரிக்கின்றது.

ஹே ரங்கேசா! சூரியனே உதயகிரியின் சிகரத்தை யடைந்தனன். மிகுந்த இருளும் விலகிற்று. காலைவேளையுமாயிற்று. மலர்ந்த புஷ்பங்களினின்றும் மகரந்தம் வடிகின்றது. துயிலெழவேண்டும். ஹே ரங்கேச்வரா! நவமல்லிகைப்பூக்களின் பரிமளத்தையுடைய கீழ்க்காற்று வீசுகின்றது. தாமரைகளிற் சயனித்துக்கொண்டிருந்த அன்னங்கள் சிறகுகளையடித்துக்கொண் டெழுகின்றன. துயிலெழவேண்டும். ஹே ரங்கேச்வரா! உத்தியானமோ ஒலிக்கின்ற பக்ஷி *ஜாலங்களையுடையதாயிருக்கின்றது. கங்குலுமகன்றது. காலையும் வந்தது. கடலொலி சென்றது. தேவரீர் திருவடிச் சேவை செய்கின்ற தேவர்கள் பூமாலையைக் கைகளில்வைத்துக்கொண்டு காத்திருக்கின்றனர். துயிலெழவேண்டும். ஹே ரங்கேசுவரா! எருமைகளை யவிழ்த்துவிடும்போது கொட்டங்களில் கோபாலர்கள் செய்யும் வேணுநாதமும் விருஷபங்களின் ஹுங்காரமும் வண்டுகளின் ரீங்காரமும் திசைகளில் வியாபிக்கின்றன. துயிலெழவேண்டும். ஹே ரங்கேச்வரா! தேவரீருடைய திருக்கோயில் வாசலில் ரதங்களிலேறிக்கொண்டு பன்னிரு சூர்யர்களும், விருஷபங்களிலேறிக்கொண்டு பதினொரு உருத்திரர்களும், மயிலிலேறிக்கொண்டு அறுமுகனும், சப்தமருத்துக்களும், அஷ்டவசுக்களும்வந்து நர்த்

* ஜாலம்—கூட்டம்.

தனம் கானம் ஸ்தோத்திர மிவற்றைச் செய்துகொண்டிருக்கின்றனர். துயிலெழவேண்டும். ஹே ரங்கேசுவரா! இதோ தேவரிஷிகளும், தேவர்களும், இந்திரனும், யானையும், கந்தருவர், வித்தியாதரர், யக்ஷர் இவர்கள் குழாமும், வாயிலில்வந்து நெருங்கியிருக்கின்றனர். துயிலெழவேண்டும். ஹே ரங்கேச்வரா! நவநிதிகள் ஈன்ற காராம் பசுக்கள் கண்ணாடி முதலியவற்றுடன் தேவர்களும் தும்புருநாரதர் முதலியோர்களும் முநீந்திரர்களும் வந்திருக்கின்றனர். சூரியனும் விண்ணிற்கிளம்பி விளங்குகின்றனன். துயிலெழவேண்டும்.

ஹே ரங்கேச்வரா! மிருதங்கம் வீணை முதலிய வாத்தியங்களின் இன்னிசைகளுடன் கின்னரர் கருடர்களின் கானமும் கேட்கின்றது. கந்தருவர் சித்தர் முதலானோர்கள் தேவரீருடைய திவ்ய சபையைக்கருதி வந்திருக்கின்றனர். துயிலெழவேண்டும். காவேரிநதியாற் சூழப்பெற்ற அரங்கமாநகருக்கதிபனே! இரவியுமெழுந்தனன். தாமரைகளு மலர்ந்தன. நீராடிய மங்கையரின் கேசங்களும் வஸ்திரங்களும் உலர்ந்தன. காலையும் ப்ரகாசமாயிற்று. துயிலெழவேண்டும். என்று இவ்வர்த்தமடங்கிய பத்துத் தமிழ்ப் பாசுரங்களை ஒத்த வடிவினையுடைய மாலைகளும் துளசியும் நிரம்பி விளங்குகின்ற பூக்குடலையைத் தோளிலுடைய தொண்டரடிப்பொடியாழ்வார் திருவாய்மலர்ந்தருளினர். இவ்விதமே சடகோபர் முதலிய பக்தர்களால் அருளிச்செய்யப்பெற்றனவும் கர்ணாமிருதமுமாயுள்ளனவும் துயிலெழச் செய்கின்றவையுமான திவ்ய சூக்திகளைக்கேட்டு அரங்க நகருக்கதிபனான அம்புஜாக்ஷன் துயிலெழுந்தனன். எழுந்ததும் எம்பெருமான் காலையிற் செய்யவேண்டிய நியமங்களையெல்லாம் முடித்துவிட்டுத் தமது திருவடிகளில் ப்ரவணர்களான மற்ற எம்பெருமான்கள் தேவர்கள் நித்யசூரிகள் அமரர்கள் முதலானோர்களைக் கண்டனர். உடனே எம்பெருமான் ஸ்ரீகோதையுடன் கருடன்மீதெழுந்தருளி மற்றை யெம்பெருமான்கள் தேவர்கள் பக்தர்கள் முதலிய யாவராலு முபசரிக்கப்பெற்றவராய் ஸ்ரீரங்கநகரத்திற்குப் பிரயாணமாயினர். ஸ்ரீமானான ஸ்ரீரங்கராஜன் ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருளவேண்டுமென்று திருவுள்ளம்பற்றியவுடனே அங்கு வந்திருந்த கைங்கர்யபரர்கள் அனைவரும் சாமரம் முதலியவற்றை

யெடுத்துக்கொண்டு அவரவர்கட்குரிய வாஹனங்களிலேறிக் கொண்டு புறப்பட்டனர். அப்போது பிர்ம்மா ஹம்சத்திலும், மற்ற எம்பெருமான்கள் கருடர்கள் மீதும், சிவன் விருஷபத்திலும், இந்திரன் ஐராவதத்திலும், தேவர்கள் விமானங்களிலும், அரசர்கள் தத்தம் வாஹனங்களிலுமேறிக்கொண்டு பக்தர்களுடன் ஸ்ரீரங்கராஜனைப் பின்பற்றிச் சென்றனர். அப்போது சிறகுக்காற்றால் மேகங்களைச் சிதறிபோடச் செய்கின்ற கருடன்மேலுல்லாசமாயெழுந்தருளிச் செல்கின்ற ஸ்ரீரங்கராஜன் சந்தோஷத்தோடு ஸ்ரீ கோதையைப் பார்த்து இவ்விதம் சொல்லத் தொடங்கினர்.

பாவாய்! இதோ சந்ததருக்கள் நிறைந்திருக்கின்ற இம்மலையைப்பார். இதில் தான் கடல்நீரனைத்தையும் பருகிய கலத்தின் குமாரனான முனீந்திரன் வாசஞ்செய்கின்றனன். மெல்லியலாய்! இதோ பார். தாமிரபர்ணீநதியை சந்தனம் முத்து அகரு இவற்றால் அழகிய சரீரத்தையுடையதும் மிகவும் பரிசுத்தமுமான இந்நதியை இம்மலைநதிகளுக்கெல்லால் பதியாயுள்ள சமுத்திரராஜனுக்கு முதன் மனைவியாகச் சேர்ப்பித்தது. ஹே கோதே! விநதையின் புத்திரனான கருடனது வேகத்தால் க்ஷணப்போதில் வேகவதீநதிப்ரதேசத்தையுங்கடந்து மிகுமணத்துடன் வீசுகின்ற காற்றினையுடைய ஆராம கிரியையடைந்தனம். ஹே சுந்தரி! இம்மலைக்கெதிரேயிருக்கின்ற எனது கிரீடாகிரியைப்பார். இம்மலையைச்சார்ந்த ப்ரதேசம் ஜனங்களின் பிறவித்துன்பத்தை மாற்றுவதுடன் வேட்டையாடி வருகின்ற எனது சிரமத்தையும்நீக்குகின்றது. இவ்வுபவனகிரியானது சிலம்பாற்றின் அலைகளிற்படிந்து வருதலாற் குளிர்ந்தும் பற்பல மலர்களிற் பொருந்தி வருகின்றதனால் நறுமணங்கமழ்கின்றதாயுமிருக்கின்ற மந்தமாருதத்தை நமக்கு நேரே உபாயனமாகக்கொடுக்கின்றது. இம்மலையிலுள்ள மரங்களின் கொப்புக்களால் பிளவுபட்டுச் சந்திரமண்டலத்தினின்றும் பெருகுகின்ற அமிருத ப்ரவாஹத்தால் நிறைந்த பாத்திகளையுடைய விருக்ஷங்கள் யாவர்க்குமினிய கனிகளை அளிக்கின்றதென்பதென்ன ஆச்சரியம்! இம்மலையிலுள்ள சிலம்பாறு தங்குதற்கிடமல்லாத ஆகாய மார்க்கத்தில் செல்கின்ற கதிரவன் குதிரைகளின் சிரமத்தையும் மந்தமாருதத்தினு

லெழுந்த நீர்த்திவலைகளால் நீக்குகின்றது. இம்மலையி லிந்திரநீல மணிகளின் காந்தியினாலெங்கும் இருண்டிருப்பதைக் காணில் சூரிய கிரணங்களுக்குப் பயந்து இராத்திரியே இம்மலையைச் சரணமடைந் திருக்கின்றதோவெனத் தோன்றுகின்றது. இஃதன்றியும் இம்மலை தன்னிருபக்கங்களிலும் வீழ்கின்ற அருவிப்ரவாஹத்தாலும் இதின் சிகரத்தில் துலங்குகின்ற சந்திரபிம்பத்தினாலும் இருபுறமும் கவரி வீச வெண்கொற்றக்குடை நிழலிலிருந்து அரசுபுரியும் ஓர் அரசன் தன்மையை அறிவுறுத்துகின்றது. இம்மலைத் தாழ்வரைகளில் வீழ் கின்ற அருவிகளின் நீர்த்திவலைகளால் திக்குக்களாகிய ஸ்திரீகளின் ஸ்தனங்களாகிய மலைகளில் முத்துமாலையணிந்திருக்குந் தன்மை யைக்காட்டுகின்றது. அன்றியும் இம்மலையில் மாதவிகளின் மகரந்த வெள்ளத்தால் சிலம்பாற்றினைச்சேர்ந்த சிறு குட்டங்களும் வண்டி னங்களுடன் ப்ரவஹிக்கின்றன. மேகங்களும் விளையாடுகின்றன.

மெல்லியலாய்! சோழதேசத்திற்கும் பாண்டியதேசத்திற்கும் நடுவிலிருக்கின்றதும் யாவராலும் பிரவேசித்தற்கரியதுமான இம் மஹாரண்யத்தைப் பார். இவ்வனத்தில் இருள்கூட்டங்கள் யாவும் இரவியின் கிரணங்கட்கஞ்சாது குடிகொண்டிருக்கின்றன. தாமரை மலர்போன்ற நயனங்களையுடையாய்? இம்மலையில் மயில்கள் வாய் களிற் கௌவிக்கொண்டிருக்கின்ற சர்ப்பங்களின் படங்களின் மணி விளக்காய் ப்ரகாசிக்கின்ற குகைகளாகிய கிரஹங்களில் வேட ஸ்திரீ கள் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். அழகிய வடிவுடையாய்! காவிரிநதியின் தண்ணீரால் நனைக்கப்பெற்றதும் மந்தமாருதத்தா லூசலாடுகின்ற கமுகின் பாளைகளினின்றும் பெருகும் மதுவினால் வியாபித்தலால் மறைக்கப்பெற்ற பகற்பொழுதினையுடையதுமான சோழதேசத்தின்மீது உன் திருஷ்டியைச் செலுத்துவாய். ஹே கோதே! நதிகளனைத்திற்கும் பதியாய் விளங்குமிந்த சமுத்திரத் தைப்பார். இது மன்மதனை மாய்த்தோனுக்கு மடைப்பள்ளியாயும் *உடுபதிக்குத்பத்தி ஸ்தானமாயும் நமக்குச் சாசுவதமான சயநக் கிரஹமாயும், இப்பூமகளுக்கு ஆடையாயுமிருக்கின்றது. இதனை நதிகள் யாவும் வந்தாசிரயிக்கின்றன. இது தேவர்களின் ஆயுளை

* உடுபதி—சந்திரன்.

நீட்டிக்கச்செய்தற்குக் காரணமான தொருபொருளையு முண்டு பண்ணிற்று. இக்கடல் வாசவனது வச்சிராயுதத்திற்குப் பயந்து தன்னைச் சரணமடைகின்ற மலைகளைத் தன் அலைகளாகிய கைகளால் அழைக்கின்றதுபோலிருக்கின்றது. இது ஐராவதம் உச்சைசிரவ மென்ற யானை குதிரைகளாலிந்திரனையும், தண்ணீரால் மேகத்தினை யும், சந்திரனாற் சங்கரனையும், அமுதத்தால் அமரர்களையும். லக்ஷ்மி யாலும் கௌஸ்துபத்தினாலும் என்னையும் திருப்தி செய்தது. கற் புடைப்பாவாய்! பரோபகாரஞ்செய்வதி லிக்கடலினும் சிறந்தவர் யாரிருக்கின்றனர். உலகத்தில் இதிற்பிறந்த கற்பதரு, காமதேனு சிந்தாமணி யென்பவையும் கொடுக்குந் தன்மையிற் சிறந்தன வன்றோ!

பதுமம்போலுங் கண்களையுடையாய்! இப்பயோநிதியின் பக் கத்திலுள்ள அரணியத்திற் சஞ்சரிக்கின்றவனும் வழிச்செல்பவர் களின் பொருள்களைத் தன் வலிமையாலபகரித்து பாகவதர்களை *ஆராதித்து எனது † ப்ரசாதத்தை விரும்புகின்ற § பராந்தகனைப் பார். இப்போதிவன் வழிச்செல்பவரின் வரவை யறிவதில் வல்ல தன் ¶ யோதர்களை அரசமரத்தின் நுனியிலிருக்கச்செய்து வழிப் போக்கர்கள் ஒருவரும் வாராமையால் பகவத்பக்தர்களை % ஆராதித் தற்கிடமில்லையே யென்ற கவலையுடனிருக்கின்றான். மெல்லியலாய்! வைஷ்ணவ பக்தியினால் மனமகிழ்கின்ற யான் பராந்தகனின் *மனோ ரதத்தைப் பரிபூர்த்திசெய்து இவனையுடன் சிறியதந்தையின் இனத்திற் சேர்த்துவைத்து இவன்செய்யுங் கைங்கர்யத்தாலுண் டாகு மாநந்தத்தை அநுபவிக்கின்றேன். என்றிவ்விதம் சொல்லிக் கொண்டு கருடனாகிறகுதிரையின்மீ தெழுந்தருளியிருக்கின்ற வரும் மாப்பிள்ளை வேசத்திற்கிசைந்த பூஷணாதிகளுடன் பொலி

* ஆராதித்தல்—பூஜித்தல்.
† ப்ரசாதம்—அநுக்கிரஹம்.
§ பராந்தகன்—பகைவர்கட்கு எமனாகின்றவன்.
¶ யோதர்—யுத்தஞ்செய்கின்றவர்.
% ஆராதித்தல்—சந்தோஷிக்கச்செய்தல்.
* மனோரதம்—விருப்பம்.

16

வுறுகின்றவருமான பகவான், புரோகிதனான பிர்ம்மா தன்னைப் பின்பற்றிவரவும் சேனைமுதலியாரால் பரிபாலிக்கப்பெற்ற கஜவதனன் முதலானோர் புடைசூழவும் ஆதிசேஷன் வெண்கொற்றக் குடைபிடிக்கவும் *பார்யாசஹிதனாய் பராந்தகனுக்கு நேராய்ப் புறப்பட்டனன்.

இப்படி எம்பெருமானெழுந்தருளும்போது அரசமரத்தின்மேலிருந்த பராந்தகரின் படர்கள் சம்க்ஞைசெய்தனர். உடனே பராந்தகர் ஒரு புதரில் மறைந்திருந்தவர் தமக்கு நேராக எழுந்தருளிவருகின்ற அழகியமணவாளனைக்கண்டதும் இவரது பொருள்களையெல்லாங் கவர்ந்துகொள்ளலாமென்ற எண்ணத்துடன் விருந்தோம்புகின்றவன் விருந்தினரைக் கண்டாநந்திப்பதுபோல் அதிசந்தோஷத்தையுடையவராய் ஆயுதபாணிகளான தமது யோதர்களுடன் தம்மை நெருங்கிவருகின்ற சர்வேச்வரனைப் பார்த்து ஏன் வேஷம் பூண்டிருக்கிறாய்? இவ்வேஷத்தை யகற்றிவிடு என்று சொல்லினர். சொல்லவே அப்போது அவருடன்வந்த யோதர்கள் பராந்தகரின் விருதாவளியென்னும் *ஆனகவாத்தியத்தை முழக்க அவர் தமது கையிலிருந்த கத்தியை நீட்டி அசைத்துக்கொண்டு செல்லாதேயில்லென்று எம்பெருமானைத் தடுத்தனர்.

இவ்விதம் தடுக்கவும் எம்பெருமானுடன் வந்த யானைமுகத்தோன் முதலிய அமரகணங்களும் கோபாவேசத்துடன் யுத்தத்திற்கெழுந்தனர். எழுதலுமங்கொரு பெருங்கூச்சலுண்டாயிற்று. அப்போது அவ்வமரகணங்களின்முன் செல்கின்றவரும் எம்பெருமான் திருவுள்ளக்கருத்தை யறிந்தவருமான சேனைமுதலியார் யுத்தத்திற்கெழுந்த சுரர்களையும், கணேசன் முதலியோர்களையும் தமது கையிலிருக்கும் பிரம்பை யசைத்துப் போர்செய்யாதிருக்கும்படி சம்க்ஞைசெய்தனர். இவ்விதஞ் செய்யவே அப்போது அவ்வம்பரதலமானது தேவ கந்தருவ சித்தர்களின் ஆரவாரத்தினை யகற்றியதாகவும், வித்

* பார்யை—மனைவி.

* ஆனகம் — உத்சாகத்தை யுண்டுபண்ணும் படகமென்ற வாத்தியம். இது போர்ப்பறை யெனப்படும். விருதாவளி யென்னு மானக வாத்தியத்தை முழக்கினனென்பதற்கு விருதாவளியைக் கூறினரென்று கருத்து.

தியர்தரர்களின் வீரவாதத்தினைவிடுத்ததாகவும், மலைறபகவன் வானந்தின் சிறகொலியினைமாற்றியதாகவும், இந்திர யானையின் கர்ச்சிதத்தினையிழந்ததாகவும் இருந்தது. அப்போது பூதலமானது அறிஞர்களின் ஆடம்பத்தினின்ற கன்றதாகவும், பராங்குசாதிகளின் மௌனத்தன்மையிற் படிந்ததாகவும், பூபதிகளின் தோள்விலாசத்தைப்போக்கியதாகவும், கருடனது கால்வேகத்தைக் கடிந்ததாகவும், ஒலியினீங்கிய புள்ளினங்களையுடையதாகவும், செய்தொழிலற்ற சிங்கம் முதலியவற்றைச் சேர்ந்ததாகவும், வாயும் வழங்காமையா லசைவற்ற மரங்களைவஹித்ததாகவும் சித்திரத்தி லெழுதியதுபோ லிருந்தது. இவ்வண்ணமே எம்பெருமானும் அலைபற்ற கடல்போலசைவற்றிருக்கும்போது பரகாலர் விரைந்துசென்று எம்பெருமான் திருமேனியி லணிந்துள்ள ஆபரணங்களையெல்லாங் கழற்றி அபகரித்துக்கொண்டபின் ஸ்ரீரங்கராஜன் திருவிரலிலணிந்திருந்த முத்திரைமோதிரத்தைக் கழற்றமுடியாமையால் பராந்தகர் தமது பற்களால் கடித்து அம்மோதிரத்தைக் கழற்ற ஆரம்பிக்கவே எம்பெருமானவரைப் பார்த்து கலியாய்! என்ன காரியஞ்செய்கின்றாயென்றனன். அதனாலவர் கலியனென்ற திருநாமத்தையுங் கைப்பற்றிக்கொண்டனர். இப்படிப் பராந்தகர் தாமபஹரித்த ஆபரணங்களனைத்தையும் தமது பெட்டியில் வைத்துக்கொண்டு அப்பெட்டியைத் தாமும் தம்முடன் வந்தவர்களும் சேர்ந்து தூக்கிக்கொண்டுபோகமுயல அப்பெட்டி தரையினின்றும் பெயர்த்தெடுக்க முடியாதாயிற்று. ஆகவே பராந்தகர் மிகவும் கோபத்தையுடையவராய் கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு புரோகிதனை பிர்ம்மாவையும் எம்பெருமானையும் பார்த்து உங்களிருவரில் இந்தப் பெட்டியைத்தரையினின்றும் பெயர்த்தெடுக்கமுடியாதபடி மந்திரம் ஜபித்தது யார்? என்று கேட்டனர்.

அப்போது பிர்ம்மா பராந்தகரைப்பார்த்து அப்பா! இது இம்மாப்பிள்ளையின் காரியமேயன்றி யென்னுடையொன்றுமில்லை யென்றனர். இப்படிக்கூறிய பிர்ம்மாவின் சொற்களைக்கேட்ட பராந்தகர் அழகியமணவாளனான பகவானைப் பார்த்து இப்பெட்டியை யெடுத்துக்கொண்டு போகவேண்டும்; இதற்குரிய மந்திரத்தை யிப்போதெனக்கு நீ சொல்லாவிட்டால் கோபத்தோடிருக்கின்ற நானிந்தக்

கூரியவாளாலுன்னைக் கொன்றுவிடுவேனென்றனர். இதனைக்கேட்டதும் ஸர்வேசுவரன் பராந்தகரைப் பார்த்து அப்பா! என்னைக் கொன்றுவிடாதே. இப்பெட்டியைப் பெயர்த்தெடுத்துக்கொண்டு போவதற்குரிய மற்றொரு மந்திரத்தை நான் உனக்குபதேசிக்கிறேன்; நீ ஸ்நானம்செய்துகொண்டு வா வென்றனர். உடனே பராந்தகர் நீராடிக்கொண்டெழுந்தருளிவந்து எம்பெருமான் சமீபத்தில் நின்றனர். நிற்றலும் *அதோக்ஷஜனான பகவான் அப்பராந்தகரைத் தலைவணங்கச்செய்து கரையற்ற சம்சாரமென்னும் பெருங்கடலில் மூழ்கிய ஜனங்களைக் கரையேற்றுதவில்வல்ல அஷ்டாக்ஷரமென்னும் மகாமந்திரத்தை அவருக்குபதேசித்தருளினர். உடனே அம்மந்திரோபதேசத்தால் பராந்தகரின் அக்ஞானம் நீங்கி ஞானோதயம் விருத்தியடைந்தது. அப்போது எம்பெருமானும் அஷ்டாக்ஷரமந்திரத்தின் பொருளாகிய தமது விச்வரூபத்தை அவருக்குக் காண்பித்தனர். அப்படியே கருடன்மீது ஸ்ரீதேவியுடனும் பூதேவியுடனும் பஞ்சாயுதங்களாலலங்கரிக்கப்பெற்ற பாகுக்களையுடைய எம்பெருமானை பிர்ம்மா முதலிய தேவர்கள் ஸ்தோத்திரம்பண்ணப் பராந்தகரு மவ்வெம்பெருமானை சேவித்து ஆநந்த பாஷ்பத்தால் நிரப்பிய கண்களையும் ரோமாஞ்சத்தால் மறைக்கப்பெற்ற சரீரத்தையுமுடையவராய்த் தம் மனதிலுள்ள ஆநந்த சாகரமே ஸ்தோத்திரரூபமாய் வெளிவந்ததோவென்று தோன்றும்படி ஆயிரத்தியெண்பத்திநாலு பாசுரங்களையுடைய பெரியதிருமொழி யென்னும் முதல் ப்ரபந்தத்தைத் தமிழிலருளிச்செய்தனர். அதிலுள்ள பத்துப் பாசுரங்களால் முடிச்சுடன் திரவியத்தைக் கொடுத்ததுபோல் அஷ்டாக்ஷரத்துடன் தம்முடைய விசுவரூபத்தையும் ப்ரகாசிப்பித்தருளினன் எம்பெருமானென்று கூறியிருக்கின்றனர்.

இன்னுமந்த ப்ரபந்தத்தில் இப்பராந்தகர் கரைபுரண்டோடும் அமிருத ப்ரவாஹம்போன்றினியதான தொளாயிரம் பாசுரங்களால் ஸ்ரீரங்கேசன் பக்கத்திலுள்ள நூற்றெட்டுத்திருப்பதி யெம்பெருமான்களையும் ஸ்தோத்திரஞ் செய்திருக்கின்றனர். மற்றுமந்த ப்ரபந்

---

* அதோக்ஷஜன்—இது விஷ்ணுவிற்குக் காரணயிடுகுறிப்பெயர். 'பொறிவாயிலைந்தவித்தான்' என்ற பொருளை யுணர்த்தி நின்றது.

த்திலுள்ள நூற்றறுபத்திநான்கு பாசுரங்களால் தசாவதார எம்பெருமான்களைப்பற்றியும் அந்த ப்ரபந்தத்தில் மீதியிருக்கின்ற பத்துப் பாசுரங்களால் ஸ்ரீரங்கேசனிடத்தில் தம்மைப்பற்றி ஒரு குடிசையில் பாம்போடு உறைகின்றவன்போலவும், காற்றுலேப் புண்டு கடல் நடுவில் கவிழப்போகின்ற கப்பலிலிருக்கும் வணிகனாகவும், நதியின் வேகத்தால் சிதைபட்ட கரையோரத்திலுள்ள மரமாகவும், இருதலைக்கொள்ளியின் நடுவிலிருக்கும் எறும்புக் கூட்டமாகவும், பெருவெள்ளத்தின் மத்தியிலகப்பட்டநரியாகவும், *தாபத்திரயமென்னும் அலைகளையுடைய பிறவியாகிய பெருங்கடலில் மூழ்கிக்கிடக்கின்ற என்னை ரக்ஷிக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றனர்.

பின்னும் இருபது பாசுரங்களையுடைய குறுந்தாண்டகமென்னுமிரண்டாவது ப்ரபந்தத்தில் கண்டியூரரங்கமென்ற திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் ஜனங்களின் பிறவித் துன்பத்தை நீக்குகின்றமையால் அந்த திவ்யதேசத்திலிருப்பவர்களே பாக்கியவான்களென்றும் கூறினர். திருவெழுகூற்றிருக்கை என்ற மூன்றாவதான சித்திர ப்ரபந்தத்திலுள்ள பாசுரங்களால் சார்ங்கமென்னும் தநுசையுடைய ஸர்வேச்வரனை முன்பு மனசாலநுபவித்தேன். இப்போது அவனை வெளிப்படையாகக்கண்டு புகலிடமாக அடைந்தேனென் றருளிச்செய்தனர். அதன்பின் பெரியதிருமடல் சிறிய திருமடலென்னும் பெயருடைய நான்காவது ஐந்தாவது ப்ரபந்தங்களில் புராணபுருஷனான பகவானைச் சீக்கிரம் சேர்வதற்குரிய உபாயாந்தரத்தை யென் பாக்கியவசத்தால் கைப்பற்றிக்கொண்டேனென்று சொல்லியிருக்கின்றனர். ஆறுவது ப்ரபந்தமாகிய முப்பது பாசுரங்களையுடைய திருநெடுந்தாண்டகத்தில் கருணைக்கடலாகிய கமலாநாதனிடத்தினின்றும் தாமிஷ்டலாபத்தினை அடைந்ததின் கிரமத்தை யருளிச்செய்தனர். இவ்விதம் பராந்தகர் செய்தருளிய ஆறு ப்ரபந்தங்களையும் ஸ்ரீரங்கராஜன் சடகோபர் முதலிய ப்ரபன்

* தாபத்ரயம்—ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்பன மூன்று. இவற்றுள் ஆதியாத்மிகம் என்பது மனம் சரீரம் முதலியவற்றைப் பற்றியுண்டாகும் சோகம் மோகம் ஜ்வரம் முதலிய துக்கம். ஆதிபௌதிகமென்பது புலி சர்ப்பம் முதலியவற்றாலுண்டு பண்ணப்படும் துக்கம். ஆதிதைவிகமென்பது பெருங்காற்று முதலிய காரணங்களாலுண்டாகும் துக்கம்.

ளர்களுடன் திருச்செவிசாற்றி அதிசந்தோஷத்துடன் ஸ்ரீரங்கநகருக்குள்சென்று கோபுரவாயிலிலிருந்தபடியே திரும்பிப்பார்த்து தத்தம்முடனெழுந்தருளிய எம்பெருமான்களையும் பிர்ம்மா முதலிய தேவர்களையும் அவரவர்கட்கேற்றபடி வாக்கினாலும் சம்க்ஞையினாலும் தத்தம் ஸ்தானங்கட்குச் செல்லும்படி விடையளித்து உடன் வந்த வல்லபன் முதலான அரசர்களைத் தமது சேனைமுதலியாரால் அனுப்பிவித்துவிட்டு ஸ்ரீரங்கராஜன் தமது பக்தவர்க்கங்களுடன் கோயிலுக்குட்சென்று ப்ரணவாகார விமானத்திலெழுந்தருளியிருந்தனர்.

13-வது சர்க்கம் முடிந்தது.

---

## 14-வது சர்க்கம்.

---

அதன்பின்பு பரகாலப்ரபு விருஷபாசலபதியைச் சேவிக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் ஸ்ரீரங்கேசனிடம் விடைபெற்றுக் கொண்டு சகலசைநியங்களுடனும் வடவேங்கடமாமலையைக் குறித்துப் புறப்பட்டனர். அவர் புறப்பட்டுச் சிலநாள் வழிநடந்து நெடுந்தூரஞ் சென்றபின்பு ஒருநாள் தமது சைநியம் வழிநடந்த வருத்தத்துடன் மத்தியான வெயிலால் வாட்டமுறுவதை யறிந்து அப்பராந்தகர் தமது சைநியத்தைப் பெரியதோர் நதிக்கரையில் தங்கியிருக்கும்படி நியமிக்கவே பசியாலும் கொடிய வெயிலாலும் வருந்திய அச்சைநியத்திலுள்ளவர்கள் அந்நதியில் ஜலத்தில்மூழ்கி அதிலுள்ள இனிய தண்ணீரைப் பருகினர். சைநியத்திலுள்ள யானை முதலியவை அந்நதியிலுள்ள தாமரைத்தண்டு முதலியவற்றைப் பறித்துத் தின்றன. இவ்விதம் சைநியத்துடன் வந்து பசியால் வருகின்ற பராந்தகப்ரபுவைப்பற்றி மதுகைடபர்களை வதஞ்செய்த மகாபுருஷனான பகவான் சற்றாலோசித்துத் தாம் ஒருவழிச் செல்கின்ற வைஷ்ணவப்ராமண வடிவத்தையுடையவனாய்த் தன் கையிலொரு புஸ்தகத்தையும் தோளிலொரு ப்ரசாதமூட்டைச்சுமையையும் தரித்துக்கொண்டு தாமரை மணிமாலையையும் துளசிமாலையையும் அணிந்துகொண்டவனாய் திருமேனியில் வெண்மையான ஊர்த்துவ புண்டரங்களையும் தரித்துக்கொண்டு வயோதிகத் தன்மையால்

தளர்வுற்று மந்தகதியுடன் நடக்கின்றவன்போல் நடந்துகொண்டு அந்நதிக்கரையில்வந்து தோன்றினன்.

தோன்றவே அங்கிருந்த பராந்தகர் அந்த விருத்த ஸ்ரீவைஷ்ணவரிடம் வந்து ஸ்வாமி! உமது கையிலிருக்கின்ற புஸ்தகம் யாது? இப்போது திதிவாரம் நக்ஷத்திரம் கரணம் யோக மிவற்றை நன்ருய் விசாரித்துக்கொள்ள வேண்டுமென்ற அபிப்ராயமிருக்கின்றதெனக்கு. அவற்றைச் சொல்லவேண்டும். இஃதன்றியும் இப்போது என்னையும என் சைநியத்திலுள்ளவர்களையும் பசியானது மிகவும் வருத்துகின்றது. தேவரீர் சுமையிலிருக்கின்ற ப்ரசாதத்தைக் கொடுத்தாலும் போதும். எங்கள் பசியைத் தீர்த்துக்கொள்வோமென்றனர். அதனைக் கேட்டதும் வழிச்செல்பவராகிய ஸ்ரீவைஷ்ணவர் பராந்தகரைப் பார்த்து அப்பா! இதுமுதல் ஹரியின்திதி ஹரியின்வாரம் ஹரியின்நக்ஷத்திரம் ஹரியின்யோகம் ஹரியின்கரணமிவற்றையே சிறந்தவைகளென்று நீ எண்ணிக்கொள். இதில் சந்தேகங்கொள்ளவேண்டாம். அன்றியும் இப்போது என்னிடத்திலிருக்கிற ஒப்பற்றதான இந்த ப்ரசாதத்தை உமக்கும் உன் சைநியத்திலுள்ளவர்கட்கு மொப்பிட்டுப் பாகித்துக்கொடுக்கிறேன். இதனைப் புஜியுங்களென்று கூறிக் கருணைக்கடலாகிய எம்பெருமான் சந்தோஷத்துடன் தமது கையாலொவ்வொரு பிடியளவுள்ள ப்ரசாதத்தை அங்குள்ள ஒவ்வொருவருக்கும் கொடுத்தனர்.

தாமரைக்கண்ணுல் தயவுடன் அநுக்ரஹிக்கப்பெற்றதும் இனிமையால் தேவாமிருதத்திணுஞ் சிறந்ததுமான அந்த ப்ரசாதம் தயிர் நெய் பால் தேன் சர்க்கரை பற்பல பக்ஷணங்கள் முதலியவற்றுடன் கூடியதாய் விருத்தியடைந்தது. அதனைப் பராந்தகர் தமது சைநியத்திலுள்ளவர்களுடனமுதுசெய்து பசிதீர்ந்தவுடன் ப்ராமணசிரேஷ்டரான அந்த ஸ்ரீவைஷ்ணவரிடம் வந்து அவரைத் தண்டன் சமர்ப்பித்து அவர் சமீபத்தில் நின்றுகொண்டு ஸ்வாமி! தேவரீர் திருநாமம் யாது? தேவரீர் தேசம் எது? இங்கெதற்காக எழுந்தருளினீர்? என்றனர். அதற்கவ்வெம்பெருமான் வெண்ணிறத்துடன் ப்ரகாசிக்கின்ற தனது பற்களின் காந்திப்ரவாஹமென்றும் வியாஜத்தால் அப்பராந்தகரை அமுதக்கடலிலாழச் செய்கின்றவர்போல்

செய்துகொண்டு பராந்தகரைப் பார்த்து அப்பா! நான் வசிக்கிற இடத்தினைச் சொல்கிறேன் கேள். இவ்வுலகில் காஞ்சீபுரமென்னும் பெயரினையுடையதாய் மிகவுமழகிய ஒரு நகரமிருக்கின்றது. அந்நகரத்திற்கு மேல்புறத்திலொரு கிரஹமிருக்கின்றது. அதில்தான் வசிக்கிறேன். என்பெயர் அஷ்டபாஹுநரசிம்மன். என்று சொல்லிவிட்டு அப்படியே கண்ணிற்குத் தோன்றாது மறைந்தனன்.

மறையவே பராந்தகர் ஆ! ஆ!! இஃதென்ன வத்புதம்? பசியால் வருந்திய எனக்கும் எனது சைநியத்திலுள்ளவர்களுக்குமிவர் அன்புடனமிருதத்திற்கொப்பான அன்னத்தை யளித்தனர். அவரை நீர் யாரென்றும் கேட்டேன். அதற்கவரென்னுடன் ப்ரதிவசநங்களும் சொல்லித் தமது பெயரையுமென்னிடங்கூறினர். நிச்சயமாய் அவர் எட்டுத்தோள்களையும் பஞ்சாயுதங்களையுமுடைய நரசிங்கப்பிரானாகவே யிருக்கவேண்டுமென் றெண்ணிக்கொண்டு அப்பராந்தகர் ஆநந்தபரவசராய் அவ்வெம்பெருமானைப்பற்றி அவனே வாமனன்; அவனே யதுநாதன்; அவனே ராகவன்; அவனே வராஹமூர்த்தி. அவனே யெனக்கு மேலானதைவம் என்ற பொருளடங்கிய பத்துப் பாசுரங்களால் அவ்வெம்பெருமானை ஸ்தோத்திரஞ்செய்தனர்! அதன்பின்பு பராந்தகர் அங்கிருந்து சென்று சிலநாட்களில் ஸ்ரீவேங்கடகிரியைக் கண்டனர். அப்போது அம்மலையானது பொய்யான வேடரூபத்துடன் பொலிகின்றவனது பாதகமலங்களால் பரிசுத்திசெய்யப்பெற்ற ப்ரதேசத்தையுடையதாகவும், ஸ்வாமி புஷ்கரிணியில் மலர்ந்திருக்கின்ற தாமரைமலர்களின் மதுவின்மணம் நிறைந்த மந்தமாருதத்தையுடையதாகவும், சடகோபதீர்த்தம் ஆகாய கங்கை முதலிய புண்ணிய தீர்த்த ப்ரவாஹத்தின் ஒலியினையுடையதாகவும், ப்ரபந்நர்கள் விபத்துகளனைத்தும் பாழாயின வென்பதற்கறிகுறியாயடிக்கப்படும் பயணப்பறையொலியோவென்று கருதப்படும் வண்டினங்களின் ஓசையையுடையதாகவும், இடைவிடாது நடனஞ்செய்கின்ற பல நீலகண்டத்துவனியுடன் கூடியிருப்பதால் ஒரு நீலகண்ட நடனத்தினையுடைய கைலையங்கிரியைக் குறித்துத்

---

* நீலகண்டன் என்றசொல் மயிலினையும், சிவனையும் உணர்த்துகின்றது.

தான் வெண்ணிறத்தினையுடையதாயிடைவிடாது விழ்கின்ற தண்ணீரென்ற வியாஜத்தால் சிரித்துப் பரிஹஸிப்பது போன்று மிருந்தது.

இத்தகைய வடவேங்கடத்தினைக்கண்டதும் பராந்தகர் அத்திருமலையின்மேலேறிச் செல்லாது அதின் தாழ்வரை ப்ரதேசத்திலிருந்துகொண்டே கமலாநாதன் சரணகமலங்களைத் தம் மனதில் தியானித்துக்கொண்டவராய் அவ்விடத்திலேயே மூன்று நாள் தங்கியிருந்தனர். அப்போது சேஷகிரிநாதனான எம்பெருமான் இவரிடத்திலுள்ள *வாத்சல்யத்தால் இவருக்கு நேரே யெழுந்தருளி ஸேவைசாதித்தனன். பராந்தகரும் எம்பெருமானைச் சேவித்துத் தமதபீஷ்டங்களையெல்லாம் பெற்றுக்கொண்டு அம்மதுசூதனனைப்பற்றி மதுரமாய் ஸ்தோத்திரம்பண்ணிக்கொண்டு சேஷகிரியின் தாழ்வரையினின்றுந் திரும்பிவரும்போது மார்க்கத்திலுள்ள சகல எம்பெருமான்களையும் சேவித்துக்கொண்டு தமது சைநியங்களுடன் ஸ்ரீரங்கநகரம் வந்து சேர்ந்தனர்.

வந்ததும் பராந்தகர் ஸ்ரீரங்கராஜன் திருவடித் தாமரைகளில் தெண்டன்சமர்ப்பித்துத் திடபக்தியையுடையவராய்த் தாம் சம்பாதித்துக் கொணர்ந்த தனத்தால் கோயிற் திருமடப்பள்ளி திருமதில் முதலிய கைங்கரியங்களைச்செய்துகொண்டு வரும்போது நாலாவது திருமதில் கைங்கர்யம் நடத்துவதற்கு முன் அத்திருமதில் கட்டவேண்டிய மார்க்கத்தில் ஒரு குகையில் திட †சமாதியுடனிருக்கின்ற ஒரு யோகியைக்கண்டனர். கண்டதும் பராந்தகர் அம்முனிவரிடஞ்சென்று அவரைத் தெண்டன்சமர்ப்பித்து எழுந்து நின்றுகொண்டு வணக்கத்துடன் கூடியவராய் அம்முனிவரை ஸ்தோத்திரஞ்செய்து ஸ்வாமி! தேவரீர் இதுவரை எத்தனை எம்பெருமான்களின் திருக்கோயில்களைச் சேவித்திருக்கிறீர்? எத்தனை புண்ய

---

* வாத்சல்யம்—புதல்வர் முதலானோரிடத்திலுள்ள சிநேகத்திற்கிணையான அன்பு.

† சமாதி—தியானிக்கப்படும் பொருளிடத்தில் மனதை யொருவழிப்படுத்தி நிறுத்தல்.

தீர்த்தங்களாடியிருக்கிறீர்? என்றனர். அதற்கந்தயோகி *திலகர் தம்மிடங் கைகுவித்துக்கொண்டு பணிவுடன் கேட்கின்ற அப்பராந் தகரைப் பார்த்து அப்பா! நான் சமஸ்த புண்யதீர்த்தங்களையும் நூற்றெட் டெம்பெருமான்களின் திருக்கோயில்களையும் சேவித் திருக்கிறேன்; என்றனர். இவ்விதம் அம்முநிவர் சொல்லிய மொழி களைக்கேட்டதும் பராந்தகர் தமக்குள் 'இம்முநிவரை இவ்விடம் விட்டு வெளியேற்றினாலன்றோ திருமதில் கைங்கரியம் நடக்கும்' என்றெண்ணிக்கொண்டு அம்முனிவரைப்பார்த்து ஸ்வாமி! ஹிமால யத்தின் மேற்கு சிகரத்திலிருக்கின்ற பெரிய குகையில் வீற்றிருக் கின்றவரும், தமது நகநுனியாலிரணியனைக் கீண்டெறிந்தவரும், விரும்பியபக்தர்கட்கு வேண்டும் வரத்தை யளிக்கின்றவருமான அஷ்டபுஜ நரசிங்கப்பிரானைச் சேவித்திருக்கின்றீரோ? இல்லையோ? தெரிகின்றிலேனென்றனர். அச்சொற்களைக்கேட்டவுடனம்முனிவர் அதிசந்தோஷத்தையுடையவராய் அப்பராந்தகரிடத்தில் அதிப்ரீதியு டன் அப்பா நானவ்வெம்பெருமானைச் சேவிக்கவில்லையே போய்வரு கின்றேனென்று சொல்லி அவ்விடத்தினின்றும் புறப்பட்டனர்.

அப்போது ஙரஹரியான பகவான் பரமபக்தரான பராந்தகரின் வசநத்தைப் பொய்யாமற் செய்யவேண்டுமென்ற திருவுள்ளமுடைய வனாய் ஹிமாலயத்தின் சிகரத்திலிருக்கின்ற அக்குகையில் பராந்த கர் சொல்லியபடியே அம்முனிவர்க்குச் சேவை சாதித்தனன். அம் முனிவரும் நரசிங்கப்பிரானைக்கண்டாச்சரியமுற்றவராய் அவ்விடத் திலேயே நெடுநாள்வரையவ்வெம்பெருமானை யுபாசித்துக்கொண்டி ருந்தனர்.

இஃதிப்படியிருக்க பராந்தகர் தமது கையிலுள்ள பொருள் களை யெல்லாம் திருமதில் கைங்கரியத்தில் செலவு செய்து தந்தை விடுத்தவராகவும் புகழை யடுத்தவராகவும் பலித்தனர். இவ் விதம் தநமற்றவரான பரகாலப்ரபு முடிவுபெறுதிருந்தமூன்றுவது திருமதிலைக்கட்டி முடிப்பதற்குத்தாம் †அசக்தராய், தம்மிடத்தில் தனமில்லாததால் களவுக்கல்வியில் வல்லவர்களான தமது படர்களை

---

* திலகர்—சிறந்தவர்.

† அசக்தர்-சக்தியற்றவர்.

யழைத்து யோதர்காள்! ஸ்ரீரங்கராஜவிபுவின் மூன்றாவது திருமதிலைக் கட்டிமுடித்தற்குச் சிறிதும் பணத்தைக் காணோமே இதற்கெனசெய்வதிப்போது பணம்வருவழியைச் சொல்லுங்களென்று ரகசியமாய்க் கூறினர். இவ்விதம் சொல்லியபராந்தகரின் மொழிகளைக் கேட்ட படர்கள் ஸ்வாமீ! நாங்கள் பிறர்பொருள்களை யபஹரித்துக்கொண்டு வருவதற்குரிய எல்லாத் தொழில்களிலும் தேர்ச்சியடைந்திருக்கிறோம்; வநத்தின்வழியிற் செல்பவர்களை ப்ரஹரித்து அவர் தனத்தை யபஹரித்து விரைவிற் கைப்பற்றுவதில் மிகவும் வல்லமையுடையோம். எந்தத்தினத்தி லொருபொருளைப் பார்த்தோமோ அன்றே யதனைக் கவர்ந்துகொள்ளும் சாமர்த்தியமுடையோம் இஃதன்றியும் மந்திரசித்திபெற்றிருக்கும் நாங்கள் கதவுகளின் தாள்களைத்திறப்பதில்வல்ல மூலிகையையும் * நிதியைப்பெறுதற்குரிய அஞ்சனத்தையும் ஜநங்களை மயங்கச்செய்யுஞ் சொக்குப்பொடியையும் விளக்குகளை யணைக்கத் தக்கவிட்டில்களையும் மணற்கயிறு தோல் நண்டு கயிற்குடம்போலித்தலையிவற்றையும் திடமான சுவற்றை யிடிக்குங் கன்னக்கோலையும் வைத்துக் கொண்டிருக்கிறோம்; ஸ்வாமீ! கீழ்ச்சமுத்திரத்தின் மேற்கரைக் கோராபரணமாய் விளங்கும் நாகபட்டணமென்னும் நகரத்தில் பௌத்தகுலத்தினர்க்குரியதும் பொன்னாலாயதுமான பெரிய ஒருபுத்தவிக்கிரஹமிருக்கின்றது ஆகலால் நாமெல்லோரும் சீக்கிரஞ் சென்றங்குள்ள பொன்மயமான அவ்வுருவத்தை யபஹரித்து வருவோமென்றனர்.

இப்படிச் சொல்லிய படர்களின் சொற்களைக் கேட்டவுடன் பராந்தகர் பரமசந்தோஷத்தையுடையவராய் அப்படியே செய்வோமென்றுதாமொருகுதிரையின் மீதேறிக்கொண்டு தமது சைந்யத்துடன் புறப்பட்டு பௌத்தவேஷத்துடன் அந் நாகபட்டணத்திற் குட்சென்று அங்குள்ள பக்கன் கோயிலைக் கண்டனர். கண்டதும் அக்கோயிலுட்புகும் வாயிலிவ்விடத்திலிருக்கின்றதென்று தெரியாது அமைக்கப்பெற்றிருக்கலால் இஃதொருவராலும் பிரவேசிக்க முடியாதென்று தெரிந்துகொண்டு அப்பராந்தகர் நெடுநேரம் வரை வருந்திய மனத்தராயிருந்தனர். பின்பு அவர் அந்நகரத்திலுள்ள

* நிதி—பொருள்.

வனும் அவ்விஷயந்தெரிந்தவனுமான ஒருதச்சனைக்கண்டு அப்பா! இக்கோயிலுக்குவாயிலெங்கேயிருக்கின்றது தெரியவில்லையேயென்றனர். அதற்கவன் பராந்தகரை நோக்கி ஸ்வாமீ! இக்கோயிலுக்குட்செல்லும்வழி கோயிலின்சிகரத்தி லிருக்கின்றதென்று இதின் விருத்தாந்தத்தைத் தெரிந்தவர்கள் சொல்லுகின்றார்களென்றனன். இப்படிச் சொல்லிய தச்சன்மொழிகளைக் கேட்டவுடன் பராந்தகர் கோயிலின்மேலேறி மூடப்பட்டிருந்த கோயிலின் சிகரத்தைக்கண்டு அதினுள்ளே புகுதற் கெத்தனிக்கும்போது வாயிற் கதவுகள் உள்ளே தாளிடப்பட்டிருந்ததனால் கோயிலுக்குள் ப்ரவேசிக்கமுடியாதவராயினர். அப்போது பராந்தகர் மச்சம் கூர்மம் முதலிய தசாவதாரங்களையடைந்த பரமபுருஷனான ஸ்ரீரங்கநகராதிபதியின் சரணாரவிந்தங்களில் *சபதஞ்செய்து அக்கதவினுட்தாள்களைத் திறந்தனர். மூடப்பட்டிருந்த கதவுகள் திறக்கவும் பராந்தகர் தமக்கு மிகவும் ஆப்தரான தமது சகோதரியின் பர்த்தாவைப் பார்த்து நீர்தான் இக்கோயிலினுள்ளே ப்ரவேசிக்கவேண்டுமென்று சொல்லி அவரை அக்கோயிலின் சிரவாயிலின் வழியாயுள்ளேபுகும்படி இரும்புச் சங்கிலியை அவரிடுப்பிற்கட்டி யிறக்கினர். அவருமப்படியேஅந்த ஆலயத்தினுள்ளே பிரவேசித்தனர். அப்போது அங்குள்ள பொன்வடிவமைந்த புத்தபிம்பத்தின் பக்கங்களில் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கின்ற § ப்ரதிமைகளனைத்தும் அங்கு வந்திருக்கின்றவரைக் கண்டு சுவர்ண பிம்பத்தை யபஹரித்துக் கொண்டுபோவதற்காகவே யிவன் வந்திருக்கின்றானென்றறிந்து பயத்துடன் 'ஐயனே! இங்கிருக்கின்ற நாங்களெல்லோரும் வெண்கலம், ஈயம், பித்தளை தாமிர மிவற்றாலாகிய வடிவினையுடையோமேயன்றி; உயர்ந்த உலோஹத்தினாலமைக்கப்பெற்ற உருவத்தையுடையேமல்லோம். இதோ உமக்கெதிரில் பற்பல ஆபரணங்களையுடையதாய்க் காணப்படுகின்ற இதுதான் சுவர்ணமயமான புத்தவடிவம். ஆதலா லிதனையே கைப்பற்றிக்கொண்டு' செல்வீர் என்று

---

* சபதம்—இது பொய்படுமாயின் எனக்கிவ்வநிஷ்டம் உண்டாகுக என்பது முதலியது.

§ ப்ரதிமை—ஒப்பாக மண், கல் முதலியவற்றா லாக்கப்பெற்ற வுருவம்.

வாய்விட்டலறின. அப்போது அப்பொன்னுருவத்திலிருக்கின்றபுத்த தேவனும் 'தங்கவடிவத்தினிற் றங்கியிருத்தலாற் சங்கடம் நேர்ந்தது' என நினைந்து பறிக்கப்படும் மலரினின்றும் மதுகரம் பறந்தோடுதல் போலப் பொன்னுருவத்தைவிட்டு நீங்கித் தன்னிஷ்டப்படி வேறிடம் சென்றனன்.

அப்போது பராங்குசர் சகோதரியின் பர்த்தா பொன்மயமான அப்புத்தவுருவத்தைப் பெயர்த்தெடுத்து அதனைத் தோல்கயிற்றினால் சுற்றிக்கட்டி யிருப்புச்சங்கிலியிற் பூட்டி விட்டனர். உடனே சிகரத்திலிருக்கிற பரகாலப்ரபு சங்கிலியில் பூட்டியிருக்கிற தங்கவுருவத்தை வெளியிலிழுத்து அதனைக் கைப்பற்றிக்கொண்டு உள்ளே பார்க்கும்போது தமதுசகோதரியின்பர்த்தா அவ்வாலயத்தினின்றும் வெளியேறிவருதற்குமுடியாதவராயிருப்பதைக்கண்டு ஒரு கயிற்றை யுள்ளேவிட்டு அவரை வெளியேற்றும்போது அவர் வெளிவருவதற்குமுடியாது மிகவும் சங்கடமடையவே அப்போது புத்தர்கள் விரைவில் வந்துவிடுவார்கள் என்றபயத்தால் பராங்குசர் அவர் தலைமயிற்றைப் பற்றிக்கொண்டு வாளால் அவர் தலையைச் சேதித்து, உடலையுள்ளே தள்ளிவிட்டு அத்தலையைமாத்திரம் கைப்பற்றிக்கொண்டு முன்பேகொண்டுவந்து வெளியில் மறைத்துவைத்திருந்த ஒரு பிரேதப் பல்லக்கில் அச்சுவர்ணபிம்பத்தை தூக்கி வைத்து தம்முடன் வந்திருக்கின்ற சிலரைத் தலைமயிரை விரித்துக்கொண்டு அழுதகண்ணீருடன் கூடியவர்களாய் அப்பல்லக்கைத் தூக்கிக் கொண்டு செல்லும்படியும் மற்றுஞ் சிலரை தீச்சட்டியைத் தூக்கிக் கொண்டு அப்பல்லக்கின் முன்பு செல்லும்படியும் மற்றுஞ் சிலரை விறகுச் சுமைகளைத் தலையில் வைத்துகொண்டு செல்லும்படியும் செய்து அந்த ராத்திரியிலேயே அங்கிருந்து புறப்பட்டுச் சூரியோதயத்திற்கு முன்பே திருக்கண்ணங்குடி சென்று சற்றும் பயமற்றவராய் அவ்வூருக்கு சற்று தூரத்தில் கொள்ளிசெய்துவைத்திருக்கும் ஒரு சூத்திரன் வயலைத்தோண்டி அதி லப்புத்தவிக்ரஹத்தைப் புதைத்து வைத்தனர்.

இரவு கழிந்து சூரியனுதித்ததும் அவ்வயலை உழுகின்றவன் வந்து பயிர்செய்ய எத்தனிக்கவே பராங்குசர் அவனைப்பார்த்து நீ

யாரடா இது என்னுடைய வயலன்றோ! எதற்காக நீ யிதில்ப்ரவேசிக்கின்றாய்; உழவேண்டாம்; சோழராஜனாணை யென்றனர். அதனைக் கேட்டதும் அவ்வுழவன் பராந்தகரைப் பார்த்து ஐயா! இஃதென்ன? அநியாயம். நெடுநாளாய் நானுழுது பயிர் செய்தநுபோகஞ்செய்து கொண்டுவருகிற இந்தவயலை நீர் என்னுடையதென்கிறீர். இதைப் பற்றி இவ்வூரிலுள்ள பெரியோரிடத்திற் போய்ச் சொல்லித்தீர்மானித்துக்கொள்வோம் வாரும் ஊருக்கென்று சொல்லி அப்பராந்தகருடன் விவாதம்பண்ணிக்கொண்டு பராந்தகரை ஊருக்கழைத்துச் சென்றனன். சென்றதும் அவனங்குள்ள சபையோர் முன்பு பராந்தகரின் செய்கையைப்பற்றி முறையிட்டனன். அச்சபையோர்கள் அவ்விருவர்களின் விவாதத்தைப்பற்றி நன்றாய் விசாரித்து அவர்களைப் பார்த்து இப்போது விவாதிக்கப்படும் நன்செய் நிலத்தைப்பற்றி பிரதிவாதிக்கு லிகிதாதார மொன்றுமில்லை; விவாத விஷயமான நிலத்தை இதுவரை ப்ரதிவாதி அநுபவித்ததாகவும் துலங்கவில்லை; பிரதிவாதியின் நிலமென்று சொல்வதற்கு சாக்ஷியுமில்லை; ஆனால் இந்த ப்ரதிவாதியான பராந்தகர் இவ்வயலின்மீது பூமிசத்தியஞ் செய்வராகில் இந்நிலமிவருடையதென்று தீர்மானிப்போம் என்றனர். உடனே பராந்தகர் அச்சபையோர்களைப் பார்த்து நீங்கள் சொல்லியபடியே நான் சத்தியஞ் செய்கிறேன். சபையோர்களே! எனக்கேழாவது தலைமுறையில் வாமனனென்றொருவரிருந்தனர்; அவரதடிகளால் அளக்கப்பெற்றதிப்பூமி; நானவர்கோத்திரத்தைச் சேர்ந்தவன்; ஆதலால் இவ்வயல் என்னுடையதே; இஃதுண்மை என்றனர்.

இப்படிப் பராந்தகர் சொல்லவே அங்கிருந்த வயலுக்குடையவனான சூத்திரனும் அவ்வயலைப் பயிர்செய் தநுபோகஞ்செய்தவனும் யாதொன்றுஞ் சொல்லாமல் அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தனர். அதன்பின் பராந்தகர் அன்று பகல்முழுதும் யாதொராஹாரமுமின்றி அவ்வயலின் பக்கத்திலேயே யிருந்தனர். இவ்விதம் சத்தியம்செய்து தரணியைத் தமதென்று சாதித்துக்கொண்டு யாதொரு விதமான ஆஹாரமுமின்றியிருக்கின்ற பரமபக்தரான பராந்தகரின் நிலைமை யறிந்த பரமபுருஷனான அத்திருக்கண்ணங்குடி எம்பெரு

மான் அப்பராந்தகரிடத்தில் அதிப்ரீதியுடையவனாய் அன்றுராத்திரி தான் அமுது செய்தருளின அக்காரவடிசிலை அப்பராந்தகருக்குக் கொண்டு கொடுக்கும்படி அர்ச்சகமுகமாயருளிச் செய்தனன். அந்நியமநத்தின்படியே அந்த பகவத்ப்ரசாதத்தை அங்குள்ள கைங்கர்யபரர்கள் பராந்தகருக்கு கொணர்ந்து சமர்ப்பித்தனர். அவரும் அந்த பகவத்ப்ரசாதத்தை அதிப்ரீதியுடன் பெற்றுக்கொண்டு தம்முடன் வந்தவர்களுடன் தாமமுதுசெய்தனர்.

அதன் பின்பு பராந்தகர் அத் திருக்கண்ணங்குடி எம்பெருமான் விஷயமாய் திவ்யரஸபரிதமான பத்துப்பாசுரங்களை யருளிச் செய்து அன்று ராத்திரியே அவ்வயலினின்றும் சுவர்ண *சுகதப்ரதிமையைத் தோண்டி யெடுத்துக்கொண்டு மண்ணி ஆற்றின் வழியாய்ச்சென்று ஒவ்வொருபகலிலும் ஒவ்வொரு திவ்யதேசத்தில் தங்கி அவ்வவ்வெம்பெருமான்களைப்பற்றி ஸ்துதித்துக்கொண்டு ஒவ்வோரிரவிலும் சுவர்ணப்ரதிமையை எடுத்துக்கொண்டு தமது சைநியத்துடன் செல்லாநிற்க ஒருநாள் பிரசித்திபெற்ற திருவாலிநகரத்தைச் சேர்ந்ததும் அங்கெழுந்தருளியிருக்கும் எம்பெருமானமுதுசெய்தருளிய ப்ரசாதத்தைத் தாம் ஸ்வீகரித்துக்கொண்டபின் பராந்தகர் தம்முடன் வந்தவர்களைப்பார்த்து வீரர்காள்! இன்று முதலிரவினில் வழிகாட்டுவதற்குரியவனான ஒருவில்லாளனை நமக்குமுன் செல்லும்படி செய்யவேண்டும். இப்படிச் செய்தாலிது நமது ப்ரயாணத்திற் கநுகூலமாயிருக்குமென்றனர். அதற்கவர்கள் தங்கள் மனதில் நமக்கும் வழிகாட்டிச் செல்கின்றவனொருவன் வேண்டுமோவென்று நினைத்துக்கொண்டு அப்பராந்தகரின் சொற்களை வெகுமதியாதிருந்தனர்.

அதன்பின் அவர்களெல்லோரும் முன்போல் அன்றிரவிலும் அங்கிருந்தும் ப்ரயாணஞ்செய்யவே அத்திருவாலி நகரத்திற்கதிபனான எம்பெருமான் தமது திருக்கையில் வில்லையெடுத்துக் கொண்டு வெளியேறி அப்பராந்தகரின்முன் சென்றனன். மஹான்களின் மனம் சரணாகதர்களை ரக்ஷிப்பதில் கருணாவசப்பட்டிருக்குமன்றோ! இப்படிச்செல்லும்போது பராந்தகர் தமக்கு முன்னே

---

* ப்ரீதி-சந்தோஷம்.

* சுகதப்ரதிமை-புத்தப்ரதிமை.

அதிகம்பீரமான தோற்றத்துடன் செல்கின்ற அவ்வில்லாளனைப் பார்த்து அப்பா! நீயார்? எங்கே செல்கின்றாய் என்று கேட்க அவ்வில்வல்லோன் ஐயா! நான் திருவாலிநகரைக் காக்கின்றவன்; உங்களுக்காகவே இன்று இந்நகரைவிட்டு வெளியேறினேன்; என் பெயர் வையங்காப்போன் என்று சொல்லிக்கொண்டு விடியும் வரையும் அப்பராந்தகருடன் சென்று சூரியோதயமானவுடன் அம்மஹாபுருஷனான மாதவன் மறைந்தனன். மறைதலும் பராந்தகர் தமக்கு முன் சென்ற வில்லாளனைக் காணாமையால் நம்முடன் வந்த காவலனெங்கேசென்றானென்று தம் மனத்திற்கருதி நாற்புறமும் பார்த்து ஹே! வையங்காப்போனே! நீ யெங்கேசென்றா யென்றடிக்கடி கூப்பிட்டனர். இவ்விதம் பலதடவை கூப்பிட்டும் அவன் வராததால் அப்பராந்தகர் ஐயோ! நம்முடன் வந்தவன் பக்தவத்சலனான அப்பரமபுருஷனேயன்றி வேறில்லை யென்று நினைத்துக்கொண்டு அப்போதே அவ்வெம்பெருமான் விஷயமாய் அமிருத ப்ரவாஹத்திற்கிணையான ஸ்தோத்திரரூபமான பத்துப்பாசுரங்களை யருளிச்செய்தனர்.

அதன்பின் பராந்தகர் ஸ்ரீரங்கநகரத்திற் கெழுந்தருளியதும் தாம் கொண்டுவந்த சுவர்ணபுத்தவுருவத்தைச் சிதைத்து விற்று அந்த திரவியத்தைக்கொண்டு பெருநெற்களஞ்சியம் மணிப்ராகாரம் திருமடைப்பள்ளி கோபுரம் முதலிய கைங்கர்யங்களை ஆரம்பித்தனர். இஃதிவ்விதமிருக்க நாகபட்டணத்திலுள்ள புத்தர்கள் தங்களாலயத்தில் புத்தவிக்ரஹமில்லையென்பதை ஜன்னலின் துவாரத்தின் வழியாய்ப் பன்முறைபார்த்துத் தெரிந்துகொண்டு ஆதித்தியனைக் காணாத அம்புஜமலர்போல் வாட்டமுற்றவர்களாய் தங்கள் புத்தப் பதுமை ஆலயத்தின் சிகரத்தின்வழியாய்த் திருடப்பட்டிருக்கின்றதென்று தெரிந்துகொண்டு அவ்வாலயத்தின் மேலேறிப் பார்த்து சிகரத்தில் காணப்படும் திருடன் காலடிவைப்பைப் பற்றிக்கொண்டு அப்புத்தர்கள் மேற்கு திசையை நோக்கிச் சென்று ஸ்ரீரங்கநகரம் வந்துசேர்ந்தனர். அங்கு வந்துசேர்ந்ததும் புத்தர்கள் அவ்விடத்திலிருக்கிற பராந்தகப்ரபுவைப்பார்த்து நாம் பார்த்த கால்தடமிவனுடையதே யென்று நிச்சயித்துக்கொண்டு அவர்களனைவரும் வந்து பராந்தகரைச் சூழ்ந்துகொண்டு எங்கு செல்கிறாய் திருடா! உருக்கிவார்த்த சுவர்ணத்தாலாகிய எங்கள்புத்தவுருவத்தையேனபகரித்துக் கொணர்ந்தாய்; அதனை மரியாதையுடன் எங்களிடங் கொடுத்துவிடு

இல்லையென்றால் உன்னை விடமாட்டோமென்று சொல்லவே அப்பராகாலர் சற்றும் பயமற்றவராய், புத்தர்களைநோக்கி மிகவும் கோபாவேசத்துடன் "புத்தர்காள்! நீங்களெங்கே யிருக்கின்றீர்கள் நாமெங்கேயிருக்கின்றோம்; உங்கள் புத்ததேவனெங்கே யிருக்கின்றான்; இப்படிப் பேசுகின்ற பேச்செங்கேயிருக்கின்றது; புத்தர்காள் உங்களை தடுத்தற்கரிய குரூரகிரஹங்கள் பிடித்தலைக்கின்றனவோ அல்லது நீங்கள் சித்தப்ரமங்கொண்டிருக்கின்றீர்களோ" சொல்லுங்களென்றனர்.

அதற்கவர்கள் "நீயேன் வீணாய்ப்பிதற்றுகின்றாய்; எங்களாலயத்திற்குட்புகும் வழி கோயிலின் சிகரத்திருக்கின்றதென்பதை நன்றாய் விசாரித்துத் தெரிந்துகொண்டு நீயே சுவர்ணபிம்பத்தை அபஹரித்து வந்திருக்கிறாய்; எங்களாலயத்தினுச்சியிலும் வருகின்ற வழியிலுங்காணப்படுகின்றது உன் காலடிச்சுவட்டிற் கொப்பாகவேயிருக்கிறது; ஆதலால் நீதான் சிகரத்தின்வழியா யெங்கள் புத்தவிக்ரஹத்தைத் திருடிக்கொண்டு வந்திருக்கிறாய்" யென்று அவர்கள் சற்றுஞ் * சங்கையில்லாமல் பேராவத்துடன் பேசினர். அப்போது பராங்தகர் இனி இவர்கள் நம்மை விடமாட்டார்களென்று நிச்சயித்துக்கொண்டு அப்புத்தர்களைப் பார்த்து நீங்களேன் கூச்சலிடுகின்றீர்க ளிங்கேவாருங்களென்று சமாதானமாய்ச்சொல்லி அவர்களை யழைத்துக்கொண்டுசென்று அந்த புத்தப்ரதிமையின் சுண்டுவிரலை மாத்திரமவர்களிடத்திற்கொடுத்துக் காண்பித்து நீங்கள் ஆலோசிக்கவேண்டாம்; உங்கள் புத்தபிம்பத்தையுங்கொடுத்து விடுகிறேன். இதற்காதாரமாக ஒருபத்திரிகையு மெழுதித்தருகிறேனென்று சொல்லித் தமதுகைப்பட ஒரு பத்திரிகையுமெழுதி யவர்களிடங்கொடுத்து நீங்கள் போய்ச் சிலநாள் கழித்துவாருங்கள்; ஆலோசிக்கவேண்டாமென்று சொல்லி அவர்களை யனுப்பிவிட்டு அந்தச் சுண்டுவிரலைமாத்திரம் தாமோரிடத்தில் மறைத்துவைத்துவிட்டு அச்சுவர்ணபுத்தப்ரதிமையை மணித்திருமதில்கோபுரம் முதலிய ஆறுகைங்கர்யங்களிலு முபயோகித்தனர். இவ்விதமாக அந்தப்பராங்தகர் சுவர்ணபுத்த வுருவத்தாலும் தமது கையிலுள்ள

* சங்கை—சந்தேகம்.

பொருள்களாலும் திருமதில் முதலிய ஆறுகைங்கர்யங்களேயும் நடத்தியும்முடிவுபெறாது பொருள்வேண்டியிருந்ததால் வேலேக்காரர்களான சில்பிமுதலானவர்கட்குச் சம்பளந்தருகிறேனென்று சொல்லிக் குறையாயிருந்த கைங்கர்யத்தையும் முடிவு செய்தனர்.

வேலேநடந்தபின் வேலேக்காரர்களனேவரும் பராந்தகரிடம் வந்து சூழ்ந்துகொண்டு தங்களுக்குச் சம்பளங்கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்தித்தனர். அப்போதவர் வேலேயாளர்களேப்பார்த்து "நீங்களேன் வருந்துகின்றீர்கள்; காவேரியின் வடகரையோரத்திலிருக்கின்ற திருவெள்ளறைக்கு வாருங்கள் சம்பளம் தருகிறேனென்று சொல்லி அவர்களேத் தோணியிலேற்றிக்கொண்டு சென்று அப்பராந்தகர் தமக்குள், நாமினியென்செய்வது பகவத்விஷயத்திற்காகச்செய்யும் பாவமும் ஒருவனுக்கு க்ஷேமத்தையே கொடுக்குமென்றெண்ணிக்கொண்டு வேலேக்காரர்களேயும் நற்கதிபெறச் செய்யவேண்டுமென்ற திருவுள்ளமுடையவராய், தமக்கு மிகவும் வேண்டியவர்களான நாவிகர்களால் காவேரியில் வேலேக்காரர்களே வீழ்த்தும்படி செய்தனர்.

இஃதிவ்வாறிருக்க, புத்தர்கள் மறுபடி பராந்தகரை வந்து வளேத்துக்கொண்டு தமது புத்தவிக்ரஹத்தைக் கொடுக்கவேண்டுமென்று தடுத்தனர். அதற்கவர் முன்புகாட்டிய சுகதபிம்பத்தின் சுண்டுவிரலே மாத்திரம் அப்புத்தர்களிடத்தில் கொடுத்து இதுதானென்னிடத்திலிருந்ததென்றனர். உடனே அவர்களெல்லோரும் அரசனிடஞ்சென்று நடந்தவிருத்தாந்தமனேத்தையுந் தெரிவித்துப் புத்தவுருவத்தின் விரலேயும், பராந்தகரெழுதிக் கொடுத்திருந்த பத்திரிகையையும் கொடுத்தனர். உடனே சோழராஜன் பராந்தகரையழைத்துவரச்செய்து கோபத்துடன் அவரைப்பார்த்து, 'என்ன காரியஞ்செய்தீர்? பராந்தகரே! ஆலயங்களில் பஹுகாலத்திற்கு முன்பே ப்ரதிஷ்டைசெய்திருந்த தேவபிம்பத்தைப் பெயர்த்தெடுப்பது இவ்வுலகத்திற்கும் எமக்கும் தீங்கு விளேக்குமென்பதைத் தெரிந்து கொள்ளவில்லேயோ நீர்' என்றனன். அதற்கவர் அரசனேப் பார்த்து மஹாராஜா! வேதத்திற்குப் புறம்பான மார்க்கத்திற்செல்லும் ஜநங்கள் ஏதேனுமொரு தேவதையை யாலயத்தில் ப்ரதிஷ்டை

செய்வித்திருந்தால் அந்தபிம்பத்தைப் பெயர்த்தலால் உலகத்திற்காவது அரசனுக்காவது பெயர்த்தெடுத்தவனுக்காவது யாதொரு பாவமுமில்லையென்றனர். அதற்கரசன் 'பராந்தகரே! என்ன இவ்விதம் சொல்கிறீர். புத்ததேவன் புருஷோத்தமனான பகவானுடைய அவதாரமன்றோ! இப்படியிருக்க அறிவிற்சிறந்த நீரேயித்தகைய காரியத்தைச் செய்தீர். இதுமிகவும் அயுக்தம். ஆதலால் நீர் குற்றவாளியே' என்றனன்.

இவ்விதம் அங்குள்ளயாவருமறியும்படி அரசன் வாயாற் சொல்லவும், பரகாலப்ரபு "மஹாராஜ! நான் சொல்வதைக் கேட்க வேண்டும். எம்பெருமானான ஸ்ரீஹரி எள்ளிலெண்ணெய்போல் ஜகத்தில் வியாபித்துக்கொண்டு சர்வசராசரங்களிலும் வசிக்கின்றனன்; பரமாத்மாவான அவனையன்றி எதுவுமுள்ளதன்று; எதுவும் துலங்குகின்றதுமன்று; உயிர்க்கின்றதுமன்று; ஆனால் அவ்வெம்பெருமான் திரிபுரஅசுரர்களைத் தீர்த்துவிடவேண்டுமென்ற திருவுள்ளமுடையவனாய் முன்பு புத்தாவதாரஞ் செய்தனனேயன்றி வேறில்லை. இஃதன்றியும் மாஹாராஜ! உலகத்தில் தாயாயிருந்த போதிலும் அவள் * பூப்புடையவளாக இருந்தால் அந்நிலைமையில் புத்திரர்களின் வந்தனம்முதலிய உபசாரங்களுக்கு எப்படி உரியவளாகமாட்டாளோ அதுபோலவும், கிரஹத்திலுள்ள அக்நியாயிருந்தாலும் அது சவசம்பந்தப்பட்டால் எவ்விதம் ஜநங்களின் யாதொரு கார்யத்திற்கும் உபயோகப்படாதோ அதுபோலவும் வேதமார்க்கத்திற்கு வேறானசமயங்களில் வசிக்கின்ற ஸர்வேச்வரனான ஹரியும் வித்வான்களால் உபாசித்தற்குரியவனாகான்; என்ற இவ்வர்த்தத்தைப் பரமபுருஷனான எம்பெருமானே 'வேதத்திற்குப் புறம்பான மதஸ்தர்களால் ஆலயங்களில் ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற பிம்பங்களிலிருக்கின்ற என்னைக்கண்டு எவன் வணங்குகின்றானோ அவன் எனது ஆக்ஞையை மீறினவனாவான்' என்று சொல்லியிருக்கின்றான்;" என்று சொல்லி அப்பராந்தகர் சாஸ்திரப்ரமாணத்தாலும் பற்பல யுக்திவசனங்களாலும் பௌத்தம் முதலிய அறுசமயங்களையுங் கண்டித்துத் தம்முடன் வாதித்தவர்களான அறுசமயத்தினரை,

* பூப்புடையவள்—மாதவிடாயுற்றவள்.

யும் ஜயித்தனர். ஜயிக்கவே சோழராஜன் பரகாலரிடத்தில் அதிக சந்தோஷமுடையவனாய் மதயானை பர்யங்கமான மஹாவிபவத்தை யளித்தான். அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு அப்பரகாலர் ஸ்ரீரங்கநகரத்தையடைந்து எம்பெருமானைத் தெண்டன் சமர்ப்பித்துவிட்டு அங்கிருந்தும் தமது சைநியங்களுடன் திருவாலிநகரத்திற்கெழுந்தருளவேண்டுமென்ற திருவுள்ளமுடையவராய்ப் புறப்பட்டனர்.

இவ்விதம் பராங்கதகர் புத்தர்களை ஜயித்து சோழராஜனால் சம்மானிக்கப்பெற்றவராய்த் தமது நகரத்திற்குச் செல்கின்றவழியில் சீகாழியைச் சமீபத்ததும் அச்சீகாழிநகரில் வசிக்கின்றவரும், பார்வதியின் பயோதரங்களின் பாலைப்பருகி வளர்ந்தவரும் முக்கவி வல்லுநருமான ஞானசம்பந்தர் பராங்கதகர் எழுந்தருளுவதையறிந்து தாம் அவரைப் பார்க்கவேண்டுமென்னுங் கருத்துடையவராய்த் தமது சைனியங்கள் புடைசூழ ஜயவாத்தியகோஷத்துடன் விளங்குகின்ற விருதினையுடையவராய் அச்சீகாழியினின்று மெதிர்சென்று பராங்கதகரைக் கண்டதும் அச்சம்பந்தர் தாமேறியிருந்த குதிரையினின்று மிறங்கினர். அப்போதவ்விருவரும் க்ஷேமவிருத்தாந்தம் விசாரித்துக்கொண்டனர். அதன்பின் ஞானசம்பந்தர் பராங்கதகரின் வசனாமிருதத்தைப் பருகவேண்டுமென்ற எண்ணத்துடன் 'பராங்கதகரே! எனது நகரத்திற்கு வரவேண்டும்' என்றனர். அதற்கு அப்பரகாலப்ரபு 'சம்பந்தரே! முராரியான எம்பெருமான் திருவுருவத்தைச் சேராதிருக்கும் நகரங்களைச் சேருதல் ஒருகாலத்திலு மூசிதமன்று. ஆதலால் உமது நகரத்திற்கு யான் வருகின்றிலேன்' என்றனர். இப்படிக்கூறிய பராங்கதகரைக்குறித்து மறுபடியும் சம்பந்தர், 'பராங்கதகரே! யான் சொல்வதைக் கேட்கவேண்டும். காழிநகரத்திலும் ஹரியின் ஆலயமொன்றிருக்கின்றது. ஆனால் அவ்வாலயம் வேதத்தில் நம்பிக்கையற்ற வீணர்களால் முற்காலத்திலேயே பாழாக்கப்பெற்றது. அவ்வாலயத்திலெழுந்தருளியிருந்த எம்பெருமான் இவ்வூரில் ஒருகிரஹத்தில் அர்ச்சகரால் ஏகாந்தமாய் ஆராதிக்கப்பெற்று வருகின்றனன். இஃதன்றியும், முற்காலத்தில் ராவணவேட்டைக்காக எழுந்தருளிய ரகுநாதனான ஸ்ரீராமன் இவ்வூரில் தங்கியிருந்தனன். அதுமுதல் இவ்வூர் காழிச்சீராமவிண்ணகரென்ற பெபரை

யும் பெற்றிருக்கின்றது. ஆதலால் சங்கையின்றி இந்நகரத்திற்கு நீர் வரலாம்' என்றனர்.

உடனே பராந்தகரப்படியானால் வருகின்றேனென்று அச்சம்பந்தருடன் சீகாழிநகரஞ்சென்று அந்நகரத்திற்கதிபதியாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் விஷயமாய் இனிமைதங்கிய பத்துப் பாசுரங்களை யருளிச்செய்தனர். அதன்பின்பு பராந்தகர் தம்மாலருளிச்செய்யப்பெற்றதும் மகுடவடிவமைந்ததும் 'ஒருகுறளாய்' என்று தொடங்கப்பெற்றதுமான சித்திரகவிதையை அச்சம்பருக்குரைத்தனர். அதனைக்கேட்டதும்சம்பந்தர் அதிகசந்தோஷமுடையவராய் அப்பரகாலரைப்பற்றித் தாமொரு பாசுரத்தை யுரைத்தனர். அப்போதவ்விடத்தில் பரகாலரின் பாசுரங்களைக்கேட்டு மகிழ்ந்து தம்மை யுபசரிக்கின்றவர்களும் சிவாலயத்தைச் சிறப்புறச்செய்கின்றவர்களுமான சீமான்களைப்பார்த்து,பராந்தகர் 'பக்தர்காள்! இக்காழிச்சீராமவிண்ணகரத்திலுள்ள விஷ்ணுவாலயத்தில் முன்போலவே ஹரியை ப்ரதிஷ்டைசெய்யுங்கள். அகங்காரத்தை யகற்றிவிட வேண்டு'மென்றனர் அதற்கவர்களும் சம்மதித்து ஸ்வாமி! அவ்விதமே செய்கின்றோமென்று அங்குள்ள கோயிலில் எம்பெருமானை ப்ரதிஷ்டைசெய்தனர். அப்போது முக்கவிஞரான சம்பந்தர் மனமகிழ்வுற்ற பராந்தகரைப்பார்த்து நீரே நாற்கவிவல்லீர் என்றுகூறி * காஹளவாத்திய § கோஷத்துடன் அப்பராந்தகரின் புகழையெங்கும் பரவச்செய்து அவரை யங்கிருந்தும் திருவாலிநகரத்திற்கனுப்பி வைத்தனர்.

பின்பு பராந்தகர் திருவாலிநகரை யடைந்ததும் அங்கெழுந்தருளியிருக்கும் வேதப்பிரானை விமலனை வணங்கி விவிதோபசாரங்களால் அவ்வெம்பெருமான் திருவுள்ளமுகக்கும்படி செய்து தமது திருமாளிகைக்கெழுந்தருளித் தமது பத்தியான குமுதவல்லியாரைக் கண்ணுற்றனர். கண்டதும் அக்குமுதவல்லியார் தமது பர்த்தாவிற்குப் பகவான் விசுவரூபசேவை சாதித்தநுக்ரஹித்தது முதலிய

* காஹளவாத்தியம்—பேரிவாத்தியம்.

§ கோஷம்—ஒலி.

விருத்தாந்தங்களை விசாரித்தறிந்தவராகையால் அதிகசந்தோஷத்துடன் பர்த்தாவையுபசரித்து 'நாதா! தேவரீர் எனது பிதாவின் க்ரஹத்திற் கெழுந்தருளவேண்டு'மென்று சொல்லி அவரை நாகபட்டணத்திலுள்ள தமதுபிதாவின் கிரஹத்திற் கழைத்துச்சென்றனர். அங்குச்சென்றதும்அக்குமுதவல்லியார்நடந்தவிருத்தாந்தமனைத்தையும் பிதாவிடஞ்சொல்லியபின் மிகவும் கௌரவத்துடன் அப்பரகாலப்ரபுவின் முன்பே அக்குமுதவல்லியார் தமது பிதாவும் தாமும் மறைந்துபோயினர். அவ்விருவரும் மறையவே விண்ணில் நவரத்தின விமானத்தில் வீற்றிருக்கின்ற ஒரு திவ்யபுருஷனையும் திவ்யஸ்திரீயையுங்கண்டு பரகாலர் நமது பார்யையான குமுதவல்லியாரே தமது பிதாவுடன் இவ்விமானத்திலிருக்கின்றன ரென்றெண்ணிக்கொண்டு மிகமகிழ்ச்சியுடைய மனத்தினராய் அப்போதே அப்பராந்தகர் சகலவிஷயங்களிலும் பற்றற்றவராய் ஸ்ரீரங்கநகரத்திற் கெழுந்தருளினர்.

அங்கெழுந்தருளியதும் அவர் ஸ்ரீரங்கநாதன் திருவடித்தாமரைகளில் தண்டன்சமர்ப்பித்துத் தமது சமஸ்தபாரத்தையும் அவ்வெம்பெருமானிடத்தில் சமர்ப்பித்துவிட்டுத் தமது சாமர்த்தியத்தையும் அவ்வெம்பெருமானை யெப்போதும் பஜிக்கவேண்டுமென்ற ஆசையுடன் அவ்வர்ச்சாவிக்ரஹத்தி லர்ப்பணஞ்செய்து அவ்வெம்பெருமானிடம் விடைபெற்றுக்கொண்டு தாம் பரமபதத்தை யடையவேண்டுமென்ற திருவுள்ளமுடையவராய் அவ்விடத்தினின்றும் பத்திராசிரமமென்னும் பெயரினையுடைய திருக்குறுங்குடிக் கெழுந்தருளி அவ்விடத்தில் * நிர்விகல்பசமாதியிலெழுந்தருளியிருந்தனர்.

14-வது சர்க்கம் முற்றுப்பெற்றது.

---

* நிர்விகல்பசமாதி—அறிகின்றவன் அறியப்படுவது முதலியவற்றின் வேற்றுமையற்றதாய் தியானிக்கப்படும் வஸ்துவினிடத்தில் மனதை யொருவழிப்படுத்தி நிறுத்தல்.

## 15-வது சர்க்கம்.

அதன்பின்பு சேர சோழ பாண்டிய ராஜகுமாரிகளுடனும் ஸ்ரீதேவி ஸ்ரீகோதை இவர்களுடனு மெழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கராஜனை உபாசித்தற்கு * இருதுக்கள்யாவும் தத்தமக்குரிய தருமலர்களின் எழிலையுடையனவாயெழுந்தன. அவ்விருதுக்களில் முதல் ஸ்ரீரங்கராஜன் மன்மதனுக்கு மஹோத்ஸாஹத்தை விளைக்கின்றதும் செண்பகம், சிந்துவாரம், அசோகம், பூகம், குரவகம், கேசரம் முதலிய மலர்களின் வாசத்துடன் வீசுகின்ற மந்தமாருதத்தையுடையதும் இனிமையாய்க் கூவுகின்ற குயிலினங்களுடன் கூடியதுமான வசந்தருதுவினைக் கண்ணுற்றனன். கண்டதும் ப்ரகாசிக்கின்ற அம்மலரலர் காலவைபவத்தால் வசீகரிக்கப்பெற்ற மனத்தினையுடைய பகவான் தனது சகல அந்தப்புரஸ்திரீகளுடன் புதுமலர் கொய்யவேண்டுமென்ற திருவுள்ளமுடையவனாய் எங்கும் ப்ரகாசிக்கின்ற குயிலொலியால் வெளியிடப்பெற்ற மன்மதசாஸ்திரத்தின் பரப்பினையுடையதும் அலர்ந்த பற்பலமலர்களினின்றும் வடிகின்ற மதுரசத்தால் நிரம்பிய தருக்களின் * ஆலவாலங்களையுடையதுமான உபவனத்தை யடைந்தனன். அடைதலும் அவ்வுபவனத்தில் அநங்கனாகிய வில்வல்லோன், வளைந்திருக்கும் மரக்கொம்புகளாகிய அழகியவிற்களில் ஒலிக்கின்ற வண்டினங்களாகி, † டங்காரத்துவனியையுடைய நாணினையிசைத்து அதில் மலர்களாகிய பாணங்களைப்பூட்டித் தடையின்றித் தன்விளையாட்டினை விஸ்தரித்தனன். விஸ்தரிக்கவே அவ்வாராமத்தில் பலமரங்களைச் சூழ்ந்து படர்ந்துள்ள கொடிகளாலாகிய புதர்வீடென்னுங் கட்குடிச்சாலைகளில் * கந்தலனால் கொண்டுவரப்பெற்ற புதிய மதுவினை அலர்ந்த

---

* இருது—இரண்டு மாதங்கள் ஒருஇருது எனப்படும்: இதில் சித்திரை வைகாசி மாதங்களிரண்டும் வசந்தருதுவென்றும், ஆனி ஆடிமாதங்களிரண்டும் கிரீஷ்மருதுவென்றும், ஆவணி புரட்டாசி மாதங்களிரண்டும் வர்ஷருதுவென்றும், ஐப்பசி கார்திகை மாதங்களிரண்டும் சரத்ருதுவென்றும், மார்கழி தைமாதங்களிரண்டும் ஹேமந்தருதுவென்றும், மாசி பங்குனி மாதங்களிரண்டும் சிசிரருதுவென்றும் கூறப்படும்.

* ஆலவாலம்—பாத்தி.

† டங்காரம்—ஒலிக்குறிப்பு.

* கந்தலகன்—காற்று.

மலர்களாகிய பாத்திரங்களில் வைத்துக்கொண்டு வண்டுகள் தமது பெண்டினங்களுடன் வாரிப்பருகின. அங்கு மற்றொருபுறத்திலொரு மதுகரம் பெண்வண்டை நோக்கி இம்மது சுரபுன்னையினிடத்தினின்று முண்டாயது மிகவுமினிமையுடையதென்றும், இம்மது மகிழினின்றும் வாய்த்தது நல்லவாசமுடையதென்றும் கூறுகின்றதுபோல் ரீங்காரத்துவனியுடன் அம்மதுவினைத்தான் குடித்ததுமன்றித் தன்மனைவியாகிய பெண்வண்டினையும் வாய் மடுக்கச்செய்தது. மற்றொருபுறத்தில் சிலவண்டினங்கள் மலர்களின் மதுவைப் பருகிக் கோகிலங்களின் இன்னிசையாகிய கீதத்தையுடையனவும் சலிக்கின்ற தளிர்களாகிய கைகளாற்செய்யப்படும் தாளத்தையுடையனவுமான கொடிவீடுகளில் நடனஞ்செய்தன. வேறொரு ஆண்வண்டு மலராகிய பாத்திரத்தில் நிறைந்திருக்கும் மகரந்தத்தில் ப்ரதிபலிக்கும் பெண்வண்டினுருவத்தைக்கண்டு அது மதுவில் வீழ்ந்துமூழ்கிற்றென்றுநினைத்து வாய்விட்டலறிக்கொண்டு அப்பெண்வண்டைத்தூக்கி யெடுக்கயத்தனித்தது. உலகத்தில் கட்குடித்தவரின்செய்கை இவ்விதங்காணத் தக்கதன்றோ! அப்பொழுதொரு பெண்வண்டு வாசமுள்ள மதுவைமாந்தி வெட்கத்தைவிட்டு, வீணாய்க் குளறிக்கொண்டு ஆண்வண்டாகிய காமுகனுக் கதிசந்தோஷத்தை விளைத்தது. இன்னுமவ்விடத்தில் புழுதிபடிந்த வடிவத்தையுடையனவும் துலக்கமில்லா ஒலியையுடையனவும் தடுமாற்றமுள்ள * கதியினையுடையனவும் சுழல்கின்ற கண்களையுடையனவும் மதித்துத் திரிகின்றனவுமான மதுகரங்கள் கள்ளுண்டவர்நிலையைக் கைக்கொண்டனவாயிருந்தன.

இத்தகைய பூங்காவில் ஸ்ரீரங்கராஜன் அழகிய மஹிஷிகளால் சூழப்பெற்று இந்திரனது நந்தவனத்தில் பலகொடிகளாற் சூழப்பெற்ற கல்பதருவைப்போல் காணப்பெற்றனன். அப்போதவ்வுபவனத்தில் எம்பெருமான் தருணிகள் யாவரும் ஒலிக்கின்ற கைவளைகளையுடையவராகவும் நிலையின்றிப் புரள்கின்ற நேத்திரங்களையுடையவராகவும், அவிழ்கின்ற கூந்தலினையுடையவராகவும், வீழ்கின்ற மேல்வஸ்திரத்தினையுடையவர்களாகவும் ஒருவர்முன் னொருவராக ஓடிச்சென்று புதிதாய் மலர்ந்திருக்கும் புஷ்பங்களைக்கொய்ய ஆரம்

* கதி—நடை, செல்லுதல்.

பித்தனர். அப்போதம்மங்கையரிலொரு மான்விழியார் தளிர்களையின்றித் தனித்துக் கொய்தமலர்களைத் தங்கையில் வைத்துக்கொண்டு அவற்றைப் பார்க்கும்போது தமது கரதலத்தின் காந்தியுடன் காணப்படும் அம்மலர்களைத் தளிர்களுடன் கூடியிருப்பதாக நினைத்துக்கொண்டு தளிர்களுடனன்றோ மலர்களைக்கொய்துவிட்டோமென்று மயங்கினர். அவ்வாராமத்தில் அழகியவடிவுடைய மாதர்கள் மலர்கொய்யுங்கால் அங்குள்ள மதுகரங்கள் அம்மலர்களைவிட்டு நீங்கி அவ்வனிதையரின் சுகந்தத்தினையுடைய கூந்தல்களில் வந்து வீழ்ந்தன. உகத்தில் எவர்தாம் மிகுகுணமுடைய பொருளில் விருப்பமுடையவராகார். அவ்வுபவனத்தில் மற்றொருயுவதி பூக்களைத்தும் பறிபட்டிருக்குமொரு புன்னைமரத்தின் அருகில் நின்றுகொண்டு புன்முறுவலுடையவளாய் அம்மரத்தினைப்பார்த்து அதிலின்னும் மலர்கள் மிகவிருக்கின்றனவென்றெண்ணிக்கொண்டு அதனைவிட்டகல முடியாதவளாயினள். அவ்வுபவனத்தில் கருநிறமுடையதொரு திலகவிருக்ஷத்தினைத் தம்கண்களாலுற்று நோக்கிய மற்றொருமங்கை அதிலுள்ள புஷ்பங்களொன்றையும் பறிக்க இயலாதவளாயினள். மிகவுமழகிய வசனங்களையுடைய வேறொருவனிதை பிரியாளமரத்தினருகில் நின்றுகொண்டு அதின்மொட்டுக்களிலொன்றையும் பறித்தற்குப் பிரியமில்லாதவளாயினள். அவ்விடத்தில் மற்றொருமாது, திடமாயொன்றோடொன்று பின்னிக்கொண்டு மறைந்துகிடக்குங் கொப்புக்களையுடைய குரவகத்தின் பூக்களைக் கொய்ய முடியாதவளாயிருந்தனள். அங்குவேறொரு விலாசினி, தன் காதுகளைக் கடந்துசெல்லும் விளையாட்டில்வல்ல கண்களின் பார்வைகளை யொன்றுபடச்செய்து மொட்டுகளுடன் கூடிவிளங்குஞ் செண்பகதருவில் செலுத்தவே அப்பார்வைகள் சண்பகத்திலுமன்றோ * சஞ்சரிகங்கள் தங்கியிருக்கின்றதென்ற சங்கையையுண்டுபண்ணின. அங்கொருமங்கை விரைவிற்சென்று தன்கணவன் தோளையொருகையாற் பற்றிக்கொண்டு பாதங்களின் நுனியால் பாரில்நின்றுகொண்டவண்ணம் மற்றொரு கையாலொரு மரத்தின் நுனியிலுள்ள மலர்களைக் கொய்தனள். மற்றொருசுந்தரி, செம்பஞ்சிட்டுச் சிவந்த சேவடியாலொரு அசோகதருவினை மிதித்தனள். மிதிக்கவே அவ்

* சஞ்சரிகம்—வண்டு.

வசோகமரமும் செந்நிறமுள்ள பன்மலர்க்குவியலைப் பயந்தது. உலகில் காரணத்தின் குணங் காரியத்தையடைதல் காணத்தக்கதன்றோ!

அங்கு எம்பெருமான் பத்திநிகளில் சிலர் பகவானைப்பார்த்து ப்ராணநாதா! முற்காலத்தில் தேவரீர் சத்தியபாமைக்குச் சந்தோஷத்தையுண்டுபண்ணவேண்டுமென்ற திருவுள்ளமுடையவராய் தேவதருவையு மிப்பூவுலகிற்குக் கொண்டுவந்தீரன்றோ! அத்தகைய உமக்கு இப்போது இங்கு மலர்ந்திருக்கு மரக்கொம்பின் நுனியை வளைத்து எங்கட்குத் தருதலுமொரு பெரும்பாரமோவென்றும், நாதா! உம்மை வணங்குகின்ற மனிதர்களின் ரஜஸையும், தமஸையும் நீக்கி அவர்கட்கு விரைவில் சத்துவத்தை யளிக்கின்ற தேவரீருக்கு இப்போது எம்கண்களை மறைக்கும் வண்டினங்களாகிய தமஸையும், புஷ்பரஜஸையும் போக்குதலறிதோ? என்றும் கூறினர். இவ்விதஞ் சொல்லவே எம்பெருமான் அம்மங்கையரின் நியமனத்தின்படி செய்து புளகாங்கிதமான புஜங்களையுடையவராய் அளவற்ற மலர்களால் அம்மாதர்களின் அளகபாரத்தையும் தாமே அலங்கரித்தனர். அலங்கரிக்கவே நீலோத்பலமலர்போன்ற நேத்திரங்களையுடைய அம்மாதர்கள் அங்கெழுந்தருளியிருக்கும் எம்பெருமானாகிய பாரிஜாததருவிற்குத் தமமிடத்திலுள்ள இனிபவசனம், கடாக்ஷம், புன்முறுவலென்ற எருவைஇட்டு அத்தருவினை ஹாஸமென்னுமலரையரும்பச்செய்து அப்போதே அப்பாரிஜாதத்தினின்றும தாம் விரும்பிய இஷ்டசித்தியைப் பெற்றனர்.

இவ்விதம் வசந்தருது சென்றபின் விகசித்துள்ள பாடலம் பாடலிமுதலியவற்றால் ப்ரகாசிக்கும் கிரீஷ்மருதுவானது இனிது மலர்ந்த மல்லிகையின் வாசமாகிய செல்வத்தை * உபாயனமாகக் கைக்கொண்டு எம்பெருமானைச் சேவித்தற் கெதிர்ப்பட்டது. இத்தகைய க்ரீஷ்மருதுவின் ஆரம்பத்தில் வசந்தகாலத்தில் விகசிக்கும் மலர்கள் யாவும் மறைந்துபோகவும் கிரீஷ்மருதுவில் அலரும்மலர்கள் உத்பத்தியாகாதிருக்கவும் இத்தருணத்தில் மலர்க்கணையோனாகியமாரன் காமினிகளின் கடைக்கணோக்கத்தையே தனக்குப் பாண

* உபாயநம்—பெரியோர்களைக் காண்பதற்குக் கொண்டுபோதற்குரிய பொருள்.

மாகக் கைக்கொண்டனன். இப்படியிருக்கும் க்ரீஷ்மருதுவின் ஆரம்பத்தில் காற்றின் அசைதலென்னுங் கதையுமில்லாதாயிற்று. இதனையாலோசிக்கும்போது மன்மதராஜன் முன் வசந்தகாலத்தில் தான் திக்விஜயத்திற்குச் சென்றதால் வருந்திய தன்குதிரையை இளைப்பாறுதற்கு *மந்துரையிற் கட்டியிருக்கின்றனனென்பது நிச்சயம். அக்காலத்தில் சூரியகிரணம் நதிகளின் சுத்தமான தண்ணீரைக் கவர்ந்து கானலாகச்செய்தது. அது, ஒருவனுடைய கெட்டஊழ் அவனது நற்குணங்களையகற்றி அவனுக்குத் துர்க்குணங்களையேயுண்டுபண்ணுதல் போவிருந்தது. அக்காலத்திலுண்டான வேர்வைத்திவலைகளின்வரிசையானது மங்கையரின் கொங்கைக்குடங்களிலத்தகைய முத்துமாலையினழகை யுண்டுபண்ணிற்று. ஆகவே அவ்வங்கனையார் அணிந்திருக்கும் வெண்ணிறமுடைய முத்தாரங்கள் வீணென்று கருதும்படியாயிருந்தது.

அப்போது நீர்விளையாட்டிற்குரிய சமயமிஃதொன்றாலோசித்து ஸ்ரீரங்கராஜன் எங்கேனும் எழுந்தருளவேண்டுமென்றிருக்கும்போது காவேரின்சமீபத்தைச் சார்தலேதக்கதென்று சொல்கின்றது போல் மேற்றிசையினின்றும் †சண்டமாருதமொன்று வெளிக்கிளம்பிற்று. அக்காற்று சமுத்திரராஜனது அந்தப்புர மனைவியாகிய காவேரிநதிக்கு முன்னே செல்கின்ற அந்தப்புர வாயிற்காவலனாகவும், காட்டுத்தீயின் விளையாட்டிற்கிசைந்த பாலசிநேகிதனாகவும், சஹ்யகிரியிலுள்ள சர்ப்பங்களின் சீறுதலாகவுமிருந்தது. அப்பெருங்காற்று மலையிலுள்ள மரங்களை முறித்துக்கொண்டும், அதனாலம்மலையை நடுங்கச்செய்துகொண்டும், மதத்தினால் மயங்கிய மாதங்கங்களையும் திகைக்கச் செய்துகொண்டும், விண்ணிலுள்ள மேகங்களை வெவ்வேறிடத்திற் சிதரடித்துக்கொண்டும், வீடுகளின் மேல் கூறைகளைப் பிறித்தெறிந்துகொண்டும், காவேரியினலைகளை விரியச் செய்துகொண்டும், மிகுந்த மணற்குவியல்களை விண்ணில் வீசிச் சிதரிப் பகலிலும் ஆகாயத்தை நக்ஷத்திரங்களுடன் கூடியதாய்த் தோன்றச் செய்துகொண்டும், எரிகின்ற காட்டுத்தீயாலியற்றிய

---

* மந்துரை—குதிரைகட்டுஞ்சாலை.

† சண்டமாருதம் பெருங்காற்று.

* நீராஜனவிதியால் விளங்குகின்ற திக்குக்களையுடையதாய்க் காணப்பட்டது. அக்காற்றுத்தான் எல்லாவற்றையும் விழுங்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பேருருவத்தையெடுத்துக்கொண்டு வெளிவந்ததோ? என்று கருதும்படி சிலிர்த்த பன்றிரோமங்களையும் அவற்றின் ஏற்றுப்பற்களையுமுடையதாயும், எரிகின்ற காட்டுத்தீயின் ஜ்வாலையாகிய நாவினையுடையதாயும், திறக்கப்பெற்ற வீட்டுவாயில்களாகிய வாயினையுடையதாயும், எங்கும் பரவுகின்ற செந்தூட்களாலாகிய செந்நிறத்தையுடையதாயும், மலையிலுள்ள மரநுனிகளின் தாக்குதலாலுண்டான விருணத்தினின்றும் வெளிப்போந்த ஈரத்தினால் நனைக்கப்பெற்றது போன்றதாயுமிருந்தது.

இவ்விதம் மேல் காற்றெழுதலும் உழுதுபயிர்செய்யும் உலகத்தோர்கட்கொரு பாக்கியவிசேஷமாய் விளங்குங் காவேரிநதியானது மோதிக்கொண்டு வருமலைகளில் பொருந்தி சண்டமாருதத்தினால் வாரிச்சிதறிய ஜலத்திவலைகளால் திக்குகளனைத்தையும் மறைத்து, சூரியகிரணங்களை முற்றும் தோன்றாவண்ணஞ் செய்துகொண்டு பயங்கரமாய்வீசும் பெருங்காற்றினால் தத்தளிக்கின்ற தரங்கங்களின் தடுத்தற்கரிய பேரொலியையுடையதாகவும், தண்ணீர்வேகத்தால் சாய்த்துவீழ்த்திய தருக்களாற் தடைபெற்ற ஜலப்ரவாஹத்தின் பெருக்காலுண்டாகிய நுரைகளின் கண்டங்களால் வெண்ணிறமுடையதாயிருத்தலால் இப்பூமியாகிய யுவதிக்கு வெண்முத்துமாலை போன்றதாகவும், சஹ்யகிரியிலுள்ள மதயானைகளின் மதப்ரவாஹமோவென்று மதிக்கத்தக்கதாகவும், ஜகத்ப்ரசித்திபெற்ற ஸ்ரீரங்கராஜதாநியென்னும் அழகியநங்கைக்கு வெண்பட்டாடைபோலிரண்டு கூறாய்விளங்கும் ப்ரவாஹத்தையுடையதாகவும், பற்பல மீன் ஆமைமுதலிய நீர்வாழ்ஜந்துக்களின் விளையாட்டினால் விருத்தியடைந்த நீர்ப்பெருக்கினையுடையதாகவும், மோதுகின்ற பேரலைகளாகிய ஊஞ்சல்களின் விளையாட்டில் விருப்பமுள்ள * ராஜஹம்சம், சக்கிரவாகம் முதலிய பக்ஷிகளுடன் கூடியதாகவும், தரங்கங்களென்னும் புருவங்களின் சலனத்துடன் கூடிய தாமரையாகிய

* நீராஜனவிதி—தீபம் முதலியவற்றாலாராத்திசெய்தல். இதனை ஆரத்தியெடுத்தலென்றும் சொல்வதுண்டு.

முகத்திணையுடையதாகவும் கலக்கத்துடன் விரைவில் ஸ்ரீரங்கராஜன் சமீபத்தை வந்தடைந்தது. அப்போது அக்காவேரிநதியானது கோபத்துடன் தன்புருவங்களை நெரித்துக்கொண்டு மனக்கலக்கமுற்று விரைந்து தன்கணவனிடம்வரும் † கண்டிதையென்னும் மங்கையைப்போல் காணப்பட்டது. இவ்விதம் அக்காவேரிநதி ஆடிமாதம் பதினெட்டாந்தேதியன்று ஸ்ரீரங்கநகரத்தைச் சூழ்ந்துக்கொண்டு அங்கெழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடத்தில் ரத்தினாபரணத்தையும் வஸ்திரத்தையும் வேண்டுமென விரும்பிற்று. அப்போது கரைபுரண்டோடுங் காவேரிநதியின் ப்ரவாஹத்தால் சூழப்பெற்ற ஸ்ரீரங்கத்திலெழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ப்ரளயசாகர ஜல ப்ரவாஹத்தில் மிதக்கும் ஆலிலையில் பள்ளிகொண்டிருக்கும் தோற்றத்தையடைந்தனன்.

அப்போது ஸ்ரீரங்கராஜன் நீர்விளையாட்டில் திருவுள்ளமுடையவராய் அக்காவேரிக்கு திருமங்கல்யம் § தாடங்கம் முதலிய ஆபரணங்களையும் திவ்யவஸ்திரத்தையும் கொடுத்தருளி அக்காவேரியையும் கல்யாணஞ் செய்துகொள்வதற்கு இச்சையுள்ளவர் போலத் தமது தோழிமார்களுடன் அந்நதிக்கரைக்கெழுந்தருளி அதற்குத் திவ்யவஸ்திரத்தையும் கண்டாபரணத்தையும் அநுக்கிரஹித்தனர். அநுக்ரஹிக்கவே அவற்றைப் பெற்றுக்கொண்ட அக்காவேரிநதி பிறழ்கின்ற மீன்களென்னும் நயநங்களையுடையதாய் புதுமணப்பெண் தன்கணவன்முன் வெட்கத்துடன் தலைகுனிந்து செல்வதுபோலத் தலைதாழ்ந்தவண்ணம் விரைவிற்சென்றது. அப்போது அக்காவேரிநதியின் இதயத்துள்ளுமெழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கராஜன் சிறந்த விலாசினிகளான தனது தேவிமார்களுடன் அந்நதிக்கரையினின்று நீர்விளையாட்டென்னும் வியாஜத்தால் நதிக்

---

* ராஜஹம்சம்—சிவந்தமூக்கினையும் கால்களையுமுடைய வெண்ணிறமுள்ள ஹம்சம்.

† கண்டிதை—தன்கணவன் வேறுமங்கையைச் சேர்ந்தனனென்பதை அவனிடத்திலுள்ள அறிகுறிகளாலுணர்ந்து அதனால் பொறுமையுற்றுக் கலங்கியவள்.

§ தாடங்கம்—காதணி.

குள் எழுந்தருளி அக்காவேரிநதியைத் தன் திருமேனியின் காந்தியால் யமுனையாகவும் மாசற்றதனது புன்முறுவலால் கங்கையாகவும் தன்பீதாம்பரத்தின் காந்தியால் சோணநதியாகவும் இவ்வாறு பலவிதமாய்த் தோன்றச்செய்தனர். அக்காலத்தில் அந்நதியிலெழுந்தருளியிருக்கும் எம்பெருமானது நான்கு தோள்களையும் பற்றிக்கொண்டு எம்பெருமான் தருணிகள் நால்வரும் நீர்விளையாடவே அப்பொழுதுதான் பகவானுக்கு நான்கு புஜங்களையடைந்ததின் பலன் சித்தித்தது.

அந்நதியில் அம்மங்கையர் நீர்விளையாடுதற்கிறங்கியதும் அவர்கள் பிற்றட்டின் பருமையால் காவேரிநதியின் தண்ணீர் கரைபுரண்டு சென்று பின்பு அவ்வநிதையரின் ஆழ்ந்த நாபிப்ரதேசத்தைச் சார்ந்ததும் அத்தண்ணீர் கரைக்குள்ளடங்கிச் சமமாய்ச்சென்றது. அந்நீர் விளையாட்டில் எங்கும் வியாபித்திருக்கும் ஈசுவரத்தன்மையையுடைய ரங்கபதியாகிய பகவான் நீரில்மூழ்கவே அவ்வெம்பெருமான் கண்டத்தினை அக்காவேரியின் அசைகின்ற அலைகளாகிய கைகளுடன் அந்தயுவதிகளின் புஜலதைகளும் சூழ்ந்து பற்றிக்கொண்டன. அந்நீர்விளையாட்டின் * விலாசத்தில் வெளித்தோன்றும் மங்கையரின் கொங்கைகளையுள்ளடக்கிக்கொண்டிருக்கும் நீர்ப்பெருக்கினையுடைய அக்காவேரிநதியானது மைநாகமலையையுட்கொண்டுள்ள வாரியின் தன்மையைப்பெற்றது. அந்நீர்விளையாட்டினில் கமலமலரிதழ்போன்ற கண்களையுடைய மாதர்கள், தமது குவிந்த கரகமலங்களிலுள்ள தண்ணீரால் தங்கள் கைவளைகளொலிக்கும்படி விளையாட்டாய் பெட்டையானைகள் துதிக்கைநுனியால் நீரைமுகந்து ஆண்யானையின்மீது கொட்டுவதுபோல் ஸ்ரீரங்கராஜன் திருமேனியில் அபிஷேகித்தனர்.

இவ்விதம் அக்காவேரியில் எம்பெருமான் பத்நிகள் நீர்விளையாடுங்கால் அந்நீரில் சஞ்சரிக்கின்ற மச்சங்கள் அம்மாதர்களின் நயனங்களாகவும், அந்நீரிலுள்ள பாசிக்கொத்துகள் அவ்வநிதை

---

* விலாசம்—மங்கையரினவயவங்களிலும் அவர்கள் செய்கைமுதலியவற்றிலும் அப்போதப்போதுண்டாகும் சிருங்காரசேஷ்டைகளின் வேறுபாடு.

கேசபாரங்களாகவும், அதிலிருக்கும் சக்கிரவாகபக்ஷிகள் அம்மங்கையரின் கொங்கைகளாகவுங் காணப்பெற்றன. அந்நீர்விளையாட்டில் எம்பெருமான் பத்நிகளிலொருவர் தங்கையில் வைத்துக்கொண்டிருக்குந் தோல்துருத்தியினுலும் மற்றொருவர் தங்கையிலிருக்கும் பீச்சாங்குழலாலும் மற்றொருவர் தங்கையிலிருக்கும் * கோசிருங்கத்தாலும் அக்காவேரியின் தண்ணீரைவாரி ஸ்ரீரங்கராஜன் திருமேனியில் மைமலையின்மேல் மேகவரிசை மழையைப்பொழிந்தது போல் பொழிந்தனர். அவ்வெம்பெருமான் தருணிகளில் மற்றொருவர் இடையறாது நீரைப்பெய்கின்ற நாளத்தையுடைய ஒருகருங்குவளை மலரைப்பறித்து அவ்வெம்பெருமான் மீதெறிந்தனர். எறிதலும் அது மலர்க்கணையோனுகிய மாரனல் ப்ரயோகிக்கப்படும் வாருணாஸ்திரமாயிற்று. இங்ஙனமில்லையெனில் அவ்வெம்பெருமானை இம்மங்கையர் எவ்வாறு ஜயித்தல்கூடும். அப்போது அவ்வனிதையரில் மற்றொரு மான்விழியார் விளையாட்டிற்காக அந்நதிஜலத்தில் மூழ்கவே அச்சுதனுன ஆதிபுருஷனும் அம்மாதரைப் பின்பற்றி அவருடன் மூழ்கினன். மூழ்கவே அப்போது பகவான் பிரளயசாகரத்தில் மூழ்கியதரணியை சமுத்தரணஞ் செய்வதற்கு மறுபடியும் ஆரம்பித்தனனே வென்பதாய்க் காணப்பெற்றனன். அந்நதியில் கழுத்தளவுள்ள தண்ணீரில் நின்றுகொண்டு விளையாடும் விலாசினிகளின் முகங்கள் அசைகின்ற அளகங்களாகிய வண்டுகளையுடையனவாய் அந்நீரிலுள்ள தாமரைமலர்போற் காணப்பட்டன. அப்பொழுதங்குள்ள மாதவன் மகிஷிகளான மான்விழியார் அகன்றுவிலகிய ஆடையையுடையவர்களாகவும் அழிந்துபோன * அங்கராகத்தையுடையவர்களாகவும் அவிழ்ந்துவீழ்ந்த கூந்தலையுடையவர்களாகவும் நிலைகுலைந்து நீங்கிய ஆபரணங்களையுடையவர்களாகவும் அஞ்சனமகன்ற கண்களையுடையவர்களாகவும் அம்புவிளையாட்டினை அநங்கன் விளையாட்டெனநடத்தினர்.

இவ்விதமாகவே அக்காவேரிநதி அக்கருங்கண்ணியரின் அங்கராகத்தினைத் தான் கவர்ந்துகொண்டு அதற்கிணையாக அம்மங்கையருக்குத் தன்னிடத்திலுள்ள தாமரைமலரின் தாளிகளையீய நற்

* கோசிருங்கம்—பசுவின்கொம்பு.

கண்ணமாகவும் அம்மாதர்களணிந்திருந்த முத்தாரத்தைத் தானப ஹரித்துக்கொண்டு அதற்கு ப்ரதியாகத் தன்னிடத்திலுள்ள தண்ணீர்த்திவலைகளின் கோர்வையாகிய முத்தாரத்தையுமளித்தது. பின்னும் அக்காவேரிநதி நீர்விளையாட்டில்வல்ல எம்பெருமான் அந்தப்புரமாதர்களின் கொங்கைக்குடங்களினின்றும் நழுவிவீழ்ந்த முத்துமாலைகளின் முத்துக்களையுடையதாய்ப் புதிய மௌக்திகங்களின் சம்பத்திற்கிருப்பிடமாகிய தாமிரபர்ணிநதியை யொத்திருந்தது.

இத்தகைய காவேரியில் எம்பெருமான் நீர்விளையாடி முடிந்ததும் உல்லாசத்துடன் மெல்லநடக்கின்ற தனது பத்நிகளுடன் பெரியதொரு குஞ்சரம் பெண்யானைகளுடன் தன்னிருப்பிடமாகிய * நிகுஞ்சத்தில் ப்ரவேசித்ததுபோல் ப்ரணவமயகிரஹமாகிய ஸ்ரீரங்கவிமானத்தில் ப்ரவேசித்தனன். அதன்பின்பு வர்ஷாகாலம் வந்துதோன்றிற்று. அந்த வர்ஷாகாலமானது மயிலினங்கட்கு மனோத்சாஹத்தை விளைக்கும் பந்துவாகவும் மன்மதனென்னும் வாரணத்தின் மதோதயத்திற்குக் காரணமாகவும் ஹம்சபக்ஷிகளின் அகங்காரத்தை யடக்குதற்கெழுந்ததோர் † அசனியாகவும் ¶ சிலீந்திரங்கட்குச் சிறந்ததோர் சிநேகிதனுகவும் கோடைகாலத்தின் கொடியதாபத்தைத் தொலைத்தற்கென்று கருதிச்செய்ததோர் § அபிசாரத்தின் தூமமாகவுமிருந்தது. அக்காலத்தில் கார்மேகங்களின் தொகுதி எங்கும் காணப்பட்டது. அது ஆகாயமாகிய அரங்கமண்டபத்திற்குரிய விசாலமான மேற்கட்டியாகவும் அவ்வரங்கத்தில் ஆடல்புரியும் மின்னல்களாகிய நடிகட்கு முன்னேயிடப்பட்ட கரியதிரையாகவும் மன்மதன் வாகுவலிமையென்னும் மஹாநலத்தின் பெரும்

---

* நிகுஞ்சம்—நாற்புறமும் கொடிமுதலியவற்றால் சூழப்பெற்று நடுவில் வெள்ளிடையாய்க் காணப்படும் மலைமுதலியவற்றைச் சார்ந்தஇடம்.

% அங்கராகம்—அங்கங்களிற்பூசும் குங்குமம்முதலியன. † அசனி—இடி.

¶ சிலீந்திரம்—காளான்.

§ அபிசாரம்—தீமையை விளைத்தற்கிடமாயினவும் அதர்வணவேதம் முதலியவற்றில் கூறப்பட்டுள்ளனவும் மாரணம் உச்சாடனம் ஸ்தம்பனம் முதலியனவுமான தொழில்கள்.

புகையாகவுமிருந்தது. அக்காலத்தில் அத்தகைய மேகங்களின் பேரொலி எங்கும் பரவிற்று. அவ்வொலி, மன்மதராஜன் ஜயபேரி முழக்காகவும் வெண்ணிறமுள்ள இறகுகளையுடைய ஹம்சங்களை விரட்டுதற்கிசைந்த மூலமந்திரோச்சாரணமாகவும் கார்காலமென்னும் போர்வீரனிற் சிறந்த * அட்டஹாசமாகவுமிருந்தது.

இவ்விதம் கர்ஜித்துக்கொண்டெழுகின்ற கார்மேகங்களைக் கண்டதும் மாசற்றவெண்ணிறம்வாய்ந்த ராஜஹம்சங்கள் விரைவில் பறந்து வேறிடஞ்சென்றன. உலகத்தில் மாசுடையவர்கள் முன்னிலையில் மாசற்றவடிவுடையார் க்ஷணமேனும் வசிப்பது தக்கதன்றன்றோ! அக்காலத்தில் திக்குகள் எங்கும் பரவியெழுந்துபொழியும் மேகங்களின் நீர்த்துளிகளிற்பொருந்தி வீசுங்குளிர்காற்றானது, உலகத்திலுள்ள விரஹிணீஸ்திரீகட்கெல்லாம் ஓர் எமதூதனாகவும் கமலவனங்களனைத்தையும் அடியோடரிதற்குரிய கத்திரிக்கோலாகவுமிருந்தது. இவ்விதம் வீசுகின்ற குளிர்ந்தகாற்றினால் திசைகளெங்குஞ் சிதரப்பட்டிருக்கும் கிரிமல்லிகை தாழைகடம்பு முதலியவற்றின் மலர்களின் தூளியானது, விரகிஜனங்களை விமோகிக்கச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன மலர்க்கணையோனாகிய வஞ்சகனால் போடப்படுஞ் சொக்குப்பொடியாகவே துலங்கிற்று. இஃதன்றியும் அக்கார்காலத்தில் வீசும் கீழ்காற்றென்னும் சீறுதலையுடைய கார்மேகமென்னுங் † காலசர்ப்பத்தால் கடியுண்ட காளையர்கட்குத் தமதுகாதற்குரிய மாதர்களின் ஆலிங்கனமே ஜீவித்திருக்கற்கிடமாயிருந்தது.

அப்போது அக்கார்காலத்தைக்கண்டு களிப்புறுகின்ற மயில் தவளை சக்கிரவாகம் யானை என்ற இவற்றின் பேரொலி, விண்ணிற் ப்ரதிதாய்த்தோன்றிய மேகமுழக்கத்தின் எதிரொலிபோன்றிருந்தது. அத்தருணத்தில் ஆகாயத்தினின்றும் முதலில்வீழ்ந்த நீர்த்துளிகள், விரகிஜநங்கட்கு விஷமாகவும் அம்புஜமலர்கட்காபத்தாகவும் மேகங்களென்னும் யானைகளின் மதத்திவலைகளாகவும் சூரியதாபத்தை யடியோடழிக்கக்கருதி ஒரு மஹாமுனிவன் சபித்துத்

* அட்டஹாசம்—பெருஞ்சிரிப்பு.

† காலசர்ப்பம்—கரும்பாம்பு.

தெளிதண்ணீராகவும் மயினங்கட்கு வாய்த்த நல்வினைப்பயனாகவு மிருந்தன. அதன்பின்பு விண்ணினின்று மிடையறாது வீழுந்தண்ணீர்த் தாரைகள், உலகனைத்தையும் ஜயித்தற்கென்றெழுந்து ப்ரயாணஞ்செய்யக்கருதும் மன்மதனுக்குக் கார்காலமென்னுமொருவனாற் கற்பிக்கப்பெற்ற மேகங்களாகிய கூடாரங்களை இழுத்துக்கட்டியிருக்கின்ற புதியகயிறுகள் போன்றிருந்தன. அப்போது திசைகளெங்கும் பரவிமுழங்கும் கார்மேகங்கள் ஒன்றோடொன்று உரசுமதிர்ச்சியால் தரையிலுதிர்ந்துகிடக்கும் கிரிமல்லிகைப்பூமொட்டுக்கள் விண்ணினின்று வீழ்ந்து மண்ணிற்கிடக்கும் நக்ஷத்திரங்கள்போல் விளங்கின. இஃதன்றியும், அப்போது ஆகாயத்திற் காணப்படு மின்னலானது, பேருருவத்துடன் கர்ஜித்துக்கொண்டு செல்லும் மேகமாகிய குதிரையின் மீதேறிக்கொண்டு விளங்கும் தேவேந்திரன் தன்கையில் வைத்திருக்கும் தங்கச்சாட்டைபோல் ப்ரகாசித்தது. இஃதன்றியும் அக்காலத்தில் தோன்றிய புதியமேகங்களால் விண்ணிலுள்ள சந்திர சூர்யரிருவரும் மறைக்கப்பட்டனர். படவே அவ்விருவரையும் சார்ந்திருந்த சந்திரிகையும் வெயிலும் மண்ணுலகிலுள்ள மான்விழியாரின் புன்முறுவலுடன்கூடி விளங்கு முகங்களிலும் அம்மாதர்களின் இளஞ்சூடுள்ள ஸ்தனதடங்களிலும் முறையேவந்து தோன்றின.

அக்கார்காலமாகிய ஆவணிமாசம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி திதி புதவாரம் ரோகணிநக்ஷத்திரமுங்கூடிய ஸ்ரீஜயந்தி தினத்தில் இராத்திரியில் ஸ்ரீரங்கராஜன் திரு * மஞ்சனமாடித் திவ்யாலங்கார பூஷிதனாய் திவ்யபக்ஷியங்கள் திவ்யான்னங்கள் அமுதுசெய்தருளித் தனது திருவவதாரண மஹோத்ஸவத்தைச் செய்தருளினன். பின்பு எம்பெருமான் திருமேனியின் பரிவர்த்தன கார்யத்திற்குப் போக்கியமான ஆவணிமாச ஏகாதசிதினத்தில் ஸ்ரீரங்கராஜன் சகல எம்பெருமான்களாலும் சேவிக்கப்பெற்றவனாய் திருப்பவித்திர மஹோத்சவத்தில் திருவுள்ளம்பற்றி அவ்வுத்சவத்தில் ஒன்பது திருநாட்கள்வரை கருடன்முதலிய வாஹனங்களில் கிரமமா யெழுந்

* மஞ்சனம்—மஜ்ஜனம். மச்சனம்—மூழ்குதல், மெலித்தல் விகாரம் பெற்று மஞ்சனமெனவந்தது.

தருளிய பின் ¶ அவபிருத ஜலத்தால் உலகனைத்தையும் பரிசுத்தி செய்தருளித் தனது திவ்யமஹிஷீசகிதனுய் அவ்வர்ஷாகாலத்தை யகற்றினன்.

அதன்பின்பு சரத்காலம், அவ்வெம்பெருமான் சமீபத்தைச் சார்ந்தது. அந்த சரத்ருதுவானது வெண்ணிறமுடைய மெல்லிய மேகங்களாகிய மேலாடையையும் அழகிய ராஜஹம்சத்தின் நடையையும் நக்ஷத்திரங்களாகிய முத்துமாலையையும் ப்ரகாசிக்கின்ற சந்திரனுகிய முகத்தினையும் அலர்ந்த அம்புஜமலர்களாகிய நயனங்களையுமுடையதாய் ஒரு மங்கையைப்போல் காணப்பட்டது. இன்னும் அந்தசரத்ருது, வெண்மையானசந்திரகிரணங்களாலும் வெண்ணிறத்துடன் விளங்குகின்ற ஹம்சபக்ஷிகளின் வரிசைகளாலும் வெள்ளிய மேகங்களாலும் விகசிதமாய்க் காணப்படும் வெண்டாமரைமலர்களாலும் மற்றைய ருதுக்களைப்பற்றிச் சிரித்துப் பரிஹசிப்பதுபோன்றுமிருந்தது. அப்போது, % திசைகள்யாவும், வசந்தகாலத்தில் § பூப்பினையுடையவாய் கிரீஷ்மகாலத்தில் கொடியகாற்றால் புழுதிபடிந்த வடிவுடையனவாய் அதன்பின் வர்ஷாகாலத்தில் மேகங்களாகிய குடங்களாலபிஷேகிக்கப் பெற்றனவாய் சரத்காலத்தில் மாசற்ற † அம்பரத்தையுடையனவாய் ப்ரகாசித்தன.

இத்தகைய சரத்காலத்தில் பாற்கடலென்னும் படுக்கையிற் பள்ளிகொண்டிருந்த பரமபுருஷனுன பகவான் துயில்நீங்கி விழித்துக்கொண்டனனென்பது நிச்சயம். அவ்வாறிலையெனில் அவ்வெம்பெருமான் திருநயனங்களாகிய சந்திரசூரியர்கள் அந்த சரத்காலத்தில் மாத்திரம் எவ்வாறு மிகுந்த ப்ரகாசமுடையவர்களாயிருத்தல்

---

¶ அவபிருதம் — யாகத்திற்கங்கமாய் அதன்முடிவில் செய்யப்படும் ஸ்நானம்.

% திசைகள் என்பது முதல் ப்ராகாசித்தன என்பது வரையுள்ள சொற்களால் ஸ்திரீகள் பூப்பினராய் மாசுற்ற வடிவினராயிருந்து பின்பு ஸ்நானஞ் செய்து நல்லஆடையை யணிந்துகொண்டு ப்ரகாசித்தனரென்றொரு பொருளும் விளங்குகின்றது.

§ பூப்பு என்பதற்குப் புஷ்பித்தல் என்றும், ருதகமென்றும் பொருள்.

† அம்பரமென்பதற்கு ஆகாயமென்றும், வஸ்திரமென்றும் பொருள்.

கூடும்? பாற்கடலிற் பள்ளிகொண்டருளிய பரமபுருஷன்விஷபமான * ப்ரபோதத்தை யுண்டுபண்ணுகின்ற ஏகாதசிராத்திரியின் முடிவில் ஸ்ரீரங்கராஜன், முற்காலத்தில் கௌசிகமாமுநிவர் கூறிய மொழிகளைக் கேட்டருளியது போலவே அப்போதும் அந்திமகுலத்தினரான திருப்பாணர் செய்தருளிய ஸ்தோத்திரரூபமான கைசிக கானத்தையும் திருச்செவி சாற்றினன்.

அதன்பின் ஸ்ரீரங்கப்ரபு சர்வஜனங்கட்கு மாநந்தத்தை விளைத்தற்கேதுவான கார்த்திகைமாசம் கார்த்திகை நக்ஷத்திரத்துடன் கூடிய பூர்ணிமையன்று தீபமகோத்ஸவம் செய்தருளவேண்டுமென்று திருவுள்ளம்பற்றித் தன் தேவிமார்களுடன் † ப்ரபாத காலத்திலெழுந்து திருமஞ்சனஞ் செய்தருளித் திவ்யாபரணங்களையணிந்துகொண்டு தன்னைச் சேவித்தற்கென்று பற்பல உபஹாரங்களுடன்வந்து சமயம்பார்த்துக் கொண்டிருக்கும் சகலஜநங்களும் தனது திருவடித்தாமரைகளைச் சேவித்துக்கொள்ளும்படி அநுக்ரஹித்தனன். இவ்விதம் அன்று பகற்பொழுது செல்லவே சூரியன், தங்குதற்கிடமில்லாத ஆகாயத்திற் றடையின்றி போடித்தவித்த தன் குதிரைகளைத் தவிப்பாறும்படி மேல்சமுத்திரத்தில் குளிப்பாட்டவேண்டுமென்று கருதுகின்றவன்போல் அஸ்தமனகிரியின் சிகரத்தையடைந்தனன். அடையவே பக்குவமான சாராயம்போற் செந்நிறமுள்ள சூரியகிரணங்களால் சூழப்பெற்ற அவ்வஸ்தமனகிரியானது, கதிரவன் குதிரைக் குளம்படியாலுண்டான விரணத்தினின்றும் வெளிவந்த இரத்தத்தால் முதலில் தான் குளிப்பாட்டப்பெற்றதோவென விளங்கிற்று. அந்தச் சாயங்காலத்திற் காணப்படும் செந்நிறம், மிக்கவிசாலமான விண்ணிற் சென்றதனாலுண்டான சூரியன் பாதங்களின் சிவப்போவெனத் தோன்றிற்று. அப்பொழுது மேல்சமுத்திரத்தின் அலைகளின் நடுவிற்காணப்படும் சூரியமண்டலம் மதுகைடபர்களை வதஞ்செய்தருளிய மகாபுருஷன் வாக்ஷஸ்தலத்திற் காணப்படும் கௌஸ்துபரத்தினம்போற் காணப்பட்டது.

---

* ப்ரபோதம்—உயிர்வானஞானம்.

† ப்ரபாதம்—சூரியோதயம்வரை ஆறு நாழிகைக்காலம்.

இஃதன்றியும், சிவந்த கிரணங்களாகிய * கேசரங்களையுடையதாய் மேற்றிசையைச்சார்ந்து விளங்கும் சூரியபிம்பமானது மூவுலகங்களையும் வெற்றிகொள்ளவேண்டுமென்று விரும்பும் மலர்க்கணையோனால் ப்ரயோகிக்கப்பெற்ற புஷ்பாஸ்திரம்போலும் பொலிவுற்றது. அப்பொழுது ஆகாயத்தினின்றும் மேற்கடலில் வீழ்ந்து மூழ்கிய சூரியன் என்னை இக்கடலினின்றும் விரைவில் வெளியேற்ற வல்லவன் யாவனோவெனத் தன்கைகளை உயரத்தூக்கியதுபோலவே அவன் கிரணங்கள் ஆகாயத்திற் காணப்பட்டன. இவ்விதம் சூரியன் கடலில் மறையவே தாமரைப் பொய்கைகள் † சண்டகிரணனாகிய தங்கணவன் தலைசாய்ந்ததைக் காணுதல் தகாதென்று கருதித் தமது கண்களை மூடிக்கொள்வதுபோல் குவிந்த தாமரைமலர்களாகிய நயனங்களையுடையனவாய் வாட்டமுற்றன. பதிவிருதைகளான பாவையர்கட் கிஃதியல்பன்றோ உலகில். அந்தச் சாயங்காலத்தில் அஸ்தமனகிரியின் சிகரத்தினின்றும் ஆதித்தியன் ஆழ்கடலில் வீழ்ந்து மூழ்கினன் பாருங்களென்று உலகத்தினர்க்குக் கூறுகின்றனபோல் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு பக்ஷிகளனைத்தும் தத்தங் கூடுகளை யடைந்தன. அப்போதொரு தாமரைப்பொய்கையில் குவிந்த தாமரைமலர்மீது கரியவண்டினங்கள் தங்கியிருந்தன. அதனைக் காணும்போது அத்தாமரைப்பொய்கை, தன் பிரியநாதனை சூரியனது பிரிவையாற்றாது விரைவில் விஷத்தைவிழுங்க ஆரம்பித்ததோ என்று கருதும்படியிருந்தது. அப்போது அப்பொய்கையில் சிலவண்டுகள் அப்பொய்கையை நோக்கி 'நீயேன் வருந்துகின்றாய் இவ்விரவுமாத்திரம் சகித்துக்கொள்; இரவின் முடிவினில் நின்கணவன் மறுபடியும் எழுந்துவருவான்; இத்துக்கத்தை யகற்றுவாய்' என்று அழுதுகொண்டு கூறுகின்றனபோல் இரங்கத்தக்க இன்னிசையுடனொலித்துக் கொண்டிருந்தன.

அப்பொழுது அவ்வாகாயத்திற் காணப்படுஞ் செந்நிறமானது, மேல் சமுத்திரத்திலுள்ள பவழக்கொடிகளின் காந்தியின் பரவுதலா

* கேசரம்—பூங்கூந்தல்.

† சண்டகிரணன்—சூரியன்.

கவும் அஸ்தமனகிரியிலுள்ள § தாதுக்களின் மிகுதியாகவும் வருண புரியாகிய மங்கையின் அங்கராகப்பொடியாகவும் தோன்றிற்று. இன்னும் அச்செந்நிறம் ஆகாயமென்னும் பெருங்கடலிலெழுந்த பவழக் கூட்டமாகவும் மன்மதராஜன் வர்குப்ரதாபமென்னும் * வன்னியாகவும் மேற்றிசையாகிய † விலாசிநியின் பாதகமலங்களிற் பூசிய செம்பஞ்சின் இரசமாகவும் அஸ்தமனகிரியின் காதுகளில் அணிந்திருக்கும் அசோகமலராகவும் ஆகாயமாகிய பெரியவிருக்ஷத்தின் புதிய தளிர்களாகவும் % திமிரங்களாகிய வண்டினங்கட்கு வாய்த்தவொரு செந்தாமரைக்காடாகவும் சந்தியாகாலத்தில் நடனம்புரியும் சங்கர தேவனுக்கிட்டதொரு செந்திரையாகவும் சக்கிரவாக பக்ஷிகளைச் சார்ந்திருக்கும் விரஹாநலஜ்வாலையாகவும் பகற்பொழுதின் எழிலென்னும் மங்கை தன்கணவனை சண்டகிரணன் மேற்கடலில் வீழ்ந்து மாய்ந்தனனென்று கருதித் தானுமவனுடன் அநுமரணஞ் செய்ய வேண்டுமென்றெண்ணி வளர்த்திருக்குஞ் செந்தீப்போலவும் விளங்கிற்று. அப்பொழுது ஆகாயத்தில் நக்ஷத்திரகணங்கள் விருத்தியடைந்தன. அந்நக்ஷத்திரங்கள் ஆகாசமாகிய பெரியதருவின் வெள்ளியமலர்களாகவும் மாலையில் நடனஞ்செய்யும் மஹாதேவன் தலைமிசையோடுகின்ற தேவகங்கையலைகளினின்றுஞ் சிதரிய திவலைகள்போலவும் காணப்பட்டன.

அப்பொழுது ஆகாயமெங்கும் இருள்பரவிற்று. அவ்விருள், திசையென்னும் மங்கையின் கரியகூந்தல்போலவும் அவ்விருளில் மறைந்து தோன்றும் ¶ தாராகணங்கள் அம்மங்கையின் கூந்தலிற் சொருகிய வெண்மலர்மாலையாகவுமிருந்தன. இஃதன்றியும் அவ்விருள் ஆகாயமென்னுங் கருங்குவளைமலரில் வசிக்கும் வண்டினங்களாகவும் மன்மதன் வாகுவலிமையென்னுந் தீயிலெழுந்த புகையாக

---

§ தாதுக்கள்—சுவர்ணம் வெள்ளி தாமிரம் அரிதாரம் மணச்சிலை அப்பிரகம் முதலிய மலைபடு பொருள்கள்.

* வன்னி—தீ.

† விலாசிநி—ஸ்திரீ.

% திமிரம்—இருள்.

¶ தாராகணங்கள்—நக்ஷத்திரக்கூட்டங்கள்.

வும் இரவென்னும் யுவதியின் கரியமேலாடையாகவும் உலகமென்னும் பெருங்காட்டில் விளையாடும் யானைக்கூட்டமாகவும் விரகிஜனங்களை வாட்டுதற்குரிய யமதூதனாகவும் இரவில் மகிழ்ச்சியெய்தும் § உலூகங்களின் கண்கட்கிசைந்தவோர் அஞ்சனமாகவும் ஆகாயமென்னும் பெருங்கடலில் முளைத்தெழுந்த † சைவலமாகவும் விரகிஜனங்களாகிய மசகங்களை வாட்டுதற்கிசைந்த புகையாகவும் மன்மதனென்னும் வாரணத்தின் மதப்ரவாஹமாகவும் * ககனமென்னு கானகத்தில் முளைத்தெழுந்த காயாமரமாகவும் ¶ காளம்போலும் கரியநிறத்தினையுடையதாகவும் விருத்தியடைந்தது. இவ்விதம் கார்மேகவரிசையை ஒத்தயிருள் திசையெங்கும் பரவவே உலகத்திலுள்ள ஜனங்களின் நயனங்கட்கு நேர்ந்த அபமிருத்யுவை நீக்கும் மருத்துவனான சந்திரனது கிரணந்தலையெடுத்தது. அக்காலத்திலாகாயத்திற் காணப்படும் நக்ஷத்திரங்கள், சந்திரனென்னுந் தலைமகன் § சருவரியென்னுந் தலைமகளின்முகத்தைத்தாமரையென்னுங் கண்களை மூடிக்கொண்டு அவளுடன் முத்தமிட்டு ஆலிங்கனஞ்செய்ய அக்காலத்தில் சிரமத்தினாலுண்டான வேர்வைத்துளிகளோவென்னுந் தோற்றத்தை வெளிப்படுத்தின. சந்திரனுதித்ததும் அவன், திக்குகளென்னுமங்கையர் தரித்திருந்த இருளென்னுங் கரியவஸ்திரத்தைமாற்றி அவ்வநிதையர்க்குத் தன் கிரணங்களென்ற வியாஜத்தால் அரியவெண்பட்டாடையை யளித்தனன்போல் காணப்பட்டனன். அச்சந்திரோதயகாலத்தில் ஆம்பல்மலர்க்காடுகளிலுள்ள பூந்தாதுக்களால் மிகவும் வெண்மையாய்க் காணப்படும் சந்திரிகையையுடைய ஆகாயம், கொந்தளித்தெழுகின்ற கடல் அலைகளின் நீர்த்திவலைகளால் விருத்தியடைந்த நக்ஷத்திரங்களையுடையதுபோல் விளங்கிற்று. சகலகலைகளும் நிறைந்த சந்திரன் உதயமாகவே திசைகளெங்கும் வியாபித்திருந்த இருள் நீங்கிற்று. இத

§ உலூகம்—ஆந்தை.

† சைவலம்—பாசி.

* ககனம்—ஆகாயம்.

¶ காளம்—விஷம்.

§ சருவரி—இராத்திரி.

ளைக் காணும்பொழுது இச்சந்திரன் மடியிலுள்ள மான் இவ்விருளனைத்தையும் பசும்புல் கூட்டமெனக்கருதி ஒரேகாலத்தில் விழுங்கிற்றோவெனத் தோன்றிற்று. அப்போது விண்ணிற்பரவிய வெண்ணிலவானது, ஆம்பற்பூக்களினிதழ்களாகிய கவாடங்களைத் திறக்கும் * குஞ்சிகையாகவும், புவஜனங்களை மயக்குமிந்திரஜால % பிஞ்சிகையாகவும், தவித்திருக்கும் சகோரங்களின் தாபத்தைத் தணிக்கின்றதாகவும் விளங்கிற்று அப்போதச்சந்திரபிம்பம், உதயகிரியென்னும் மதகரியின் கழுத்திலணிந்த வெண்சங்காகவும் மன்மதனென்னு மகீபதியின் வெண்முத்துக்குடையாகவும் ஆகாயமென்னுந் தடாகத்திலுள்ள அலர்ந்த வெண்டாமரைமலராகவும் விளங்கிற்று.

அன்றியும் சாயங்காலமென்னு மங்கை, சந்திரபிம்பமாகிய வெள்ளித்தாம்பாளத்தில் அச்சந்திரனிடத்துள்ள அமுதமாகிய * ஆச்சியத்தை நிரப்பி அதில் அச்சந்திரகிரணங்களாகிய பரிசுத்தமான திரியைச்சேர்த்து அச்சந்திரோதயகாலத்தில் காணப்படுஞ் செந்நிறமாகிய தீபத்தையேற்றி மதுகைடபர்களை வதஞ்செய்த மஹாபுருஷனை மாதவனுக்கு ஒரு † முகூர்த்தகாலம் தீபாராதனம் செய்தனளோவெனத் திகழ்ந்தனள். பின்பு ஸ்ரீரங்கராஜன் சுபமுகூர்த்தத்தில் விதிமுறைப்படி கொண்டுவரப் பெற்றனவும் ரத்தினமயமான பாத்திரங்களில் ஏற்றிவைக்கப்பெற்றனவுமான திருவிளக்குக்களைக் கடாக்ஷித்தருளியபின் அழகிய பனையோலைகளாலமைக்கப்பெற்ற சொக்கப்பனைத் தீபோத்சவம் கண்டருளவேண்டுமென்று ஸ்ரீரங்கவிமானத்தினின்றும் திருப்பல்லக்கிலெழுந்தருளிச் சென்று கீழ்த்திசையை நோக்கியவண்ணமே எழுந்தருளியிருந்து கொண்டு தீபமஹோத்சவத்தைக் கடாக்ஷித்தனன். அப்போது அம்மஹாப்ரதீபமானது, அழகிய பனைமரமாகிய நாளத்தினையுடையதாய், திகழ்கின்ற தீப்பொறிகளாகிய கேசரங்களையுடைய

* குஞ்சிகை—திறவுகோல்.

% பிஞ்சிகை—மயிற்றோகை.

§ ஆச்சியம்—நெய்.

† முகூர்த்தம்—இரண்டு நாழிகைக்காலம்.

தாய், பரவுகின்ற தீநாவாகிய பற்பல தளங்களையுடையதாய், புகை யென்னும் வண்டினங்களின் வரிசையையுடையதாய்ப் பெரியதொரு செந்தாமரைமலர்போல் ப்ரகாசித்தது. இஃதன்றியும் அம்மஹா ப்ரதீபவன்னியின் கிரணங்கள், விண்ணிற் பரவிச்சென்று இந்திரன் நந்தனவனத்திலுள்ள தேவ தருக்களை ஒரு முகூர்த்த காலம் * ஜோதிர்லதைபோல விளங்கச்செய்தன. அன்றியும் ஆகாயத்திற் கிளம்பிய அவ்வக்கினி, திரிபுரமெரித்தோன் வீர்யத்தைத் தரிக்க லாற்றாது முன் தேவகங்கையில் வீழ்ந்ததுபோலவே மறுபடியும் சென்று அக்கங்கையில் வீழத்துணிந்ததோவென்றும் அல்லது இம்மண்ணுலகிலுள்ளோர் தேவர்கட்கென்று ஹோமஞ்செய்த அவி முதலியவற்றை அத்தேவர்களிடங்கொண்டு சேர்ப்பதற்கென்று விண்ணிற்கிளம்பினதோவென்றும் தோன்றிற்று.

இவ்விதம் சொக்கப்பனையைச் சூழ்ந்தெரிந்துகொண்டிருந்த அக்நி அப்பனைதனியில்மாத்திரம் ப்ரகாசிக்கும் திருவிளக்கையுடையதாய் அணைதலும் எம்பெருமான் ஸ்ரீரங்கநாயகியின் சந்நிதி மார்க்கமாய் எழுந்தருளி அழகியமணவாளன் திருமண்டபத்திற் சேரபாண்டியன் சிங்காசனத்தில் வீற்றிருந்து கலிவைரியால் அருளிச்செய்யப்பெற்ற ஸ்தோத்திரரூபமான திருப்பாசுரங்களைக் கேட்டருளியவண்ணமே ஆழ்வார்கள் பதின்மர்களால் விக்ஞாபிக்கப் பெற்றவனாய் அப்போதே ஒப்பற்ற சடகோபரருளிச்செய்த பாசுரங்களைக் கேட்கவேண்டுமென்னும் சந்தோஷத்தால் பரவசமுற்ற மனதையுடையவனாயினன். ஆகவே பகவான் அவ்வாழ்வாரைத் தன்னிட மழைத்துவரச் செய்யவேண்டுமென்ற திருவுள்ளத்தை யுடையவனாய்த் தானணிந்துகொண்டிருந்தபடிகளைந்த திவ்யவர்சத் துடன்கூடிய சந்தமாலியங்களையும் ஜகத்தின் சிருஷ்டிஸ்திதி சம் ஹாரங்கட்குக் காரணமான தன் † சாசனத்தையும் பரிஜநமுலமாய்

* ஜோதிர்லதை—இரவில் வெளிச்சந்தருங்கொடி.

† சாசனம்—பத்திரிகை. (ஸ்ரீரங்கராஜ ஸ்ரீமுகம்)

அது வருமாறு:—

ஸகலத்ரைலோக்ய நிர்மாண த்ராண ஸம்ஹார காரணம்।
ஶ்ரீ ஶ்ரீரங்கநாயகஸ்ய ஶாஸநம் ஶாஶ்வதம் பரம்॥

ஆழ்வார் பக்கலிற் சேர்ப்பிக்கும்படி அநுக்ரஹித்தனன். அநுக்ரஹிக்கவே இவ்விதம் எம்பெருமான் சாசனம் வருவதை யறிந்த ஆழ்வார் எதிர்சென்றுவந்து வணங்கி பகவந்நியமந பத்திரிகையைத் தமது திருமுடியில் வஹித்துக்கொண்டுத் தம்முடைய திவ்யசூக்திகளை எம்பெருமான் சந்நிதியில் கானஞ்செய்யவேண்டுமென்ற திருவுள்ளத்துடன் ஆழ்வார் தமது கண்டத்தில் சிறந்த தைலத்தைப் பூசிக்கொண்டெழுந்தருளினர்.

அதன்பின் பனிக்காலமாகிய ஹேமந்தருது ஆரம்பித்தது. அது, தாமரைவனங்களின் வனப்பினையழிக்கு மிடையூறாயு மிகுந்த பனியைப் பெய்கின்றதாயும் கணவரைப்பிரிந்த காதலிகட்குக் காலன் கடைவாய்ப்பற்களாயு மிருந்தது. அக்காலத்தில் மிகுதியாய்க் காணப்படும் பனியின்தொகுதியை ஆதித்தியனுந் தன் கிரணங்களால் அகற்றமுடியாதவனாயினன். ஆகவே உலகத்தில் எளியவனாயிருக்கின்ற ஒருவனும் மிகுந்த விருத்தியை யடைவானாகில் அவன் மேலானவனாலும் வெல்லுதற்கரியவனாகின்றானென்பது விளங்கிற்று இன்னுமப்பனிக்காலம், இடையறாதுபெய்யும் பனியின் வர்ஷத்தால் பங்கஜமலர்களை வாடச்செய்ததுமன்றி மங்கையரைப் பிரிந்த மாந்தர்களின் வதனபங்கஜங்களையும் வாடச்செய்தது. அப்பனிக்காலத்தில் வெண்மையான பற்களின் காந்தியுடன் கூடி விளங்குகின்றதும் * சீத்காரவிலாசத்தினையுடையதாய்த் திகழ்கின்றதுமான அங்கனையாரின் அதரதளமானது, யௌவனபுருஷர்கள் வந்து

---

"தாரணவர்ஷம் கார்த்திகை மாஸம் 19௳ கார்த்திகைக்குக் கார்த்திகை திருக்கார்த்திகைத் திருநாளுக்கு நாம் புறப்பட்டருளி அழகியமணவாளன் திருமண்டபத்தில் சேரபாண்டிய சிங்காஸநத்தில் சுந்தரபாண்டியன் திருமுத்துப்பந்தலின்கீழ் அரிகரிராயன் திருப்பள்ளிக்கட்டிலின்மேல் நாம் எழுந்தருளி வீற்றிருந்து கலியன்பாட்டுக் கேளாநிற்கையில், சேவணவர், கோஷிவர், கொடுவாள்எடுப்பார், பாடுவார், தழையிடுவார் மற்றுமுள்ள நம்மிராமாநுஜனுடையார்களும் வந்துசடகோபனுக்குமுன்பெற்ற பேறும்தரவேணுமென்று விண்ணப்பஞ்செய்கையில் நாம் சாத்திக்களைந்த சந்தனமும், சூட்டிக்களைந்த சுகந்தமும், உடுத்துக்களைந்த வொலியலும் நம் தழையிடுவான் கையிற் கொடுத்தனுப்பினோமென்றுபெருமாள்திருவாய்மலர்ந்தருளினர்" என்பதாம்.

* சீத்காரம்—ஒலிக்குறிப்பு.

பலாத்காரமாய் முத்தமிடுந் தன்மையை பொத்துக்கொள்ளாததா யிருந்தது. அப்போது பனித்திரள், தன்னுடைய நாசத்திற்குக் காரணமான சூரியனுக்கு நேராய் யாதொரு தீங்குஞ் செய்யமுடியாமல் அச்சூரியனுக்கிஷ்டமான கமலவனத்தினை வாடச்செய்தது. உலகத்தில் பிரபலனான ஒருவனாற் பீடிக்கப்பெற்றவன் அவனோடு எதிர்க்கமுடியாதவனாய் அவனைச் சார்ந்தோரை ஹிம்சிப்பது சகஜமன்றோ! இஃதன்றியும் பனிக்கதிரோனாகிய சந்திரன், சாசரத்தினுதித்த தன் சகோதரியான ஸ்ரீதேவியின் முககாந்தியை யநுசரிக்கின்றன இத்தாமரைமலர்களென நினைத்து வெகுண்டு தன் கிரணங்களால் அத்தாமரைதலர்களின் எழிலைத்தாழ்வுறச்செய்தனனென்பது திண்ணம்.

அன்றியும் மார்கழி மாதம் பிறத்தலும் மலர்ந்த *சதபத்திரிகை மலர்களின் வாசத்தையுடையதும் மிகுந்த பனித்துளிகளின் சேர்க்கையாற் குளிர்ந்ததுமான மந்தமாருதம் வீசிற்று. வீசவே மனிதர்களின் மனத்தில் மன்மதாநலம் வளர ஆரம்பித்தது. இத்தகைய மார்கழி மாசத்தில் ஸ்ரீரங்கநகரத்திலுள்ள யாவரும் †பிராதக்காலத்திலெழுந்து அக்காரவடிசில் க்ஷீராந்நம் வெண்பொங்கல் ததிபோதனம் முதலிய ப்ரசாதத்தை ஸ்ரீரங்கநாதனுக்கமுது செய்வித்துத்திருப்பள்ளி யெழுச்சி உத்சவங்கொண்டாடினர். அம்மார்கழி மாதத்தில் பகவான் ஸ்ரீரங்கராஜன் பிராம்மணோத்தமர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய்யும் சாங்கவேத பாராயணத்தையும் சிறப்புற்றோங்கிய திராவிடவேத பாராயணத்தையும் திருச்செவி சாற்றிய வண்ணமே ஆயிரக்கால் சித்திரமண்டபத்தில் எழுந்தருளியிருந்து இருபது நாள் திருவத்தியபநோத்சவம் கண்டருளினன்.

பின்பு சூரியன் மகரராசியை யடைதலும் பகவான் ஊஞ்சல் விளையாட்டினை யநுபவிக்கவேண்டுமென்னுந் திருவுள்ளமுடையவனாய் யுவதிகளான தன் தேவிமார்களுடன் நூற்றுக்கால் மண்டபத்திற் கெழுந்தருளி அங்கு ரத்தினமயமான ஊஞ்சலில் தனது திவ்ய மஹிஷிகளுடன் வீற்றிருந்துகொண்டு மகமுற்ற மாதர்கள் வதிந்து

* சதபத்திரிகை—ஒருவகைப் பூமரம்.

† பிராதக்காலம்—சூரியோதயம் வரை ஆறுநாழிகைக்காலம்.

விளையாடும் ஊஞ்சல் வைபவத்தைக்கடாக்ஷித்தனன். அதன் பின்பும் மலர்ந்த முல்லைப்பூக்களின் வாசத்துடன்கூடிய சிசிருதுவந்து தோன்றிற்று. தோன்றவே சூரியன் அச்சிசிருதுவின் சீதளத்தைப் பொறுக்கமுடியாதவனாய்த் தான் அக்நிதிக்கின் பக்கத்தை யடைந்தனனோவெனக் காணப்பட்டனன். அன்றியும் அச்சிசிர காலத்திலுண்டாகுந் துன்பத்தைத் திருமூர்த்திகளும் தாமெவ்வாறு சகிக்கின்றார்களோவெனில் *தைத்தியாரியின் திருமார்பினில் ஸ்ரீ தேவி நித்தியவாசஞ்செய்தலாலும் †திரிபுராரியின் தேகத்தினிற் பிரியாது தாட்சாயணீ தேவி வசித்தலினாலும் சதுர்முகன் நாவினில் சரஸ்வதிதேவி தங்கியிருத்தலாலுமேயன்றி வேறில்லை. இஃதன்றியும் மன்மதன் தாமரைமலர் முதலிய தன் பாணங்கள் கொடிய பனியின் வீழ்ச்சியால் முன்பே தொலைந்துபோயினவெனக்கருதி விரகிஜனங்களை யொருவரோடொருவரைச் சேர்த்து வைப்பதற்கு அச்சிசிருதுவின் சீதளத்தையே சிறந்தபாணமாகக்கைக்கொண்டனன். அக்காலத்திற் சில தனிகர்கள் விளங்குகின்ற அகிற்புகைகளுடன்கூடிய மாளிகைகளாலும் அற்ப வெப்பத்தினையுடைய அங்கனையர் கொங்கைகளாலும் எரிந்துகொண்டிருக்கும் கணப்புச்சட்டிகளாலும் ஒருவாற்றானச் சிசிருதுவின் சிரமத்தைத்தீர்த்துக் கொண்டனர்.

இத்தகைய பங்குனி மாசத்தில் ரோஹிணீ நக்ஷத்திரத்தில் ஸ்ரீரங்கராஜன் ஆதிப்ரும்மோத்ஸவத்திற்கு அங்குரார்ப்பணம் ரக்ஷா பந்தனம் செய்வித்து பேரீவாத்திய கோஷத்தால் தேவகணங்களை யழைப்பித்துக் கருடக்கொடியைக்கட்டித் துவஜாரோஹணஞ்செய்வித்தனன். அதன்பின் குமுதன் முதலிய கணநாதர்கட்குரிய சப்தாவரண பலியையும் நிறைவேற்றி அக்கிநி காரியம் முடிந்தபின் அன்று ராத்திரி திருப்பந்தலி லெழுந்தருளிச் சேவை சாதித்து எம்பெருமான் திருக்கோயில் வீதிவலம் வந்தனன். பின்பிரண்டாந் திருநாள் இரத்தினமயமான திருப்பல்லக்கிலெழுந்தருளி உபவனஞ் சென்று உத்சவம் கொண்டருளினன். அதன்பின் எம்பெருமான்

* தைத்தியாரி—விஷ்ணு.

† திரிபுராரி—சிவன்.

குதிரையின்மீதெழுந்தருளி ஜீயபுரஉபவனத்தில் மூன்றும் திருநாள் உத்சவத்தை முடித்தருளினன். பின்பு நாலாந்திருநாளன்று கருட மண்டபத்திலெழுந்தருளியிருந்து சாயங்காலத்தில்கருடன்மீதெழுந் தருளி வீதிகள்தோறுஞ்சென்று அப்போது சேவிக்கின்ற ஜனங் களின் இதயத்தில் தன் பாவனை தோன்றும்படி அநுக்ரஹித்தனன். அதன் பின்பு ஐந்தாந்திருநாளில் ஸ்ரீரங்கராஜன் ஸ்ரீ தேவியின் ஜன்ம பூமியும் தனது திருமணப்ரதேசமுமான உறையூர் நகரில் தங்கியிருந்து அன்று ராத்திரி பூப்பல்லக்கில் † அதிரோஹணஞ் செய்துகொண்டு அதிக வைபவத்துடன் ஸ்ரீரங்க நகரத்திற்கெழுந் தருளினன். பின்பாறுந்திருநாள் பகல் முழுதும் அகஸ்தியதிக்கில் வீற்றிருந்து ராத்திரி கஜராஜன்மீது அதிரோஹணித்துக்கொண்டு ஸ்ரீரங்க நகரின் திரு வீதிவலம்வந்து திருக்கோயிலுக்குள்ளெழுந் தருளினன். பின்பு ஏழாந்திருநாள் சாயங்காலத்தில் எம்பெருமான் ஸ்ரீதேவி பூதேவிகளுடன் திருப்பல்லக்கிலெழுந்தருளி அன்று ராத்திரி § ஹரித்ராசூர்ண விளையாட்டினைக்கடாக்ஷித்து வீதிவலம் வந்து ஸ்ரீதேவியின் திருக்கோயிலுக்கெழுந்தருளி¶ ஸ்நபனம்முதலிய காரியங்களைச்செய்து முடித்துக்கொண்டு மறுபடியும் விமானத்தி லெழுந்தருளி வீதிவலம்வந்து திருக்கோயிலுக்குள்ளெழுந்தருளி னன். அதன்பின் எட்டாந்திருநாட் காலையில் குதிரையின்மீது அதி ரோஹணஞ்செய்துகொண்டு ஸ்ரீரங்கநகரத்தின்கீழ்புறத்திலெல்லை யிலுலாவிச்சென்று சாயங்காலம் கதப்ப தீர்த்தோப வனத்தினின் றும் திருக்கோயிலுக்குள்ளெழுந்தருளினன் அதன்பின்பு ஒன்ப தாந் திருநாட்காலையில் எம்பெருமான் திருப்பள்ளி யெழுச்சியில் கண்டவண்ணந்திகழும் திவ்ய *வேஷத்தை யுடையவனாய் வீதிகளி லெழுந்ருதளி கிரஹங்கள்தோறுஞ்செய்யும்திவ்யோபசார பூஜை களைப்பெற்றுக்கொண்டு எல்லோருக்கும் தீர்த்தத்தை யநுக்ரஹித்து ஸ்ரீரங்க நாயகியின் திருக்கோயிலுக் கெழுந்தருளினன். பின்பு பத்

---

† அதிரோஹணம்—ஏறுதல்.

§ ஹரித்ராசூர்ணம்—மஞ்சட்பொடி.

¶ ஸ்நபனம்—ஜலம் முதலியவற்றாலபிஷேகஞ்செய்தல்.

* வேஷம்—அலங்காரம்.

தாந்திருநாளன்று ஸ்ரீரங்கராஜன் ஸ்ரீதேவிபூதேவிகளுடன் புஷ்பக மென்னும் பெயரையுடைய திருத்தேரிலெழுந்தருளி, முற்காலத்தில், ராவணசம்ஹாரம் முடிந்ததும் தசரத சக்ரவர்த்தியின் திருமகன் ஜநராஜன் திருமகளுடன் புஷ்பகவிமானத்திலேறிக்கொண்டு திரும்பியெழுந்தருளியதுபோல் ஸ்ரீரங்க நகரத்தின் திருவீதிகளிலெழுந்தருளினன். அதன் பின் எம்பெருமான் பத்தாந்திருநாள் சாயங்காலம் % அவப்ருதத்தை முடித்துப்புஷ்பயாக கிருத்தியத்தைச் செய்தருளித்தேவர்களனைவர்க்கும் நியமனங்கொடுத்தனுப்பிவிட்டு எழுபிராகாரங்களையும் வலம்வந்து கோயிலுக்குள்ளெழுந்தருளினன்.

இவ்விதம் லக்ஷ்மீபதியான எம்பெருமான் ஸ்ரீரங்கம் திருவேங்கடம் ஸ்ரீகாஞ்சீமுதலான திவ்யதேசங்களில் வருஷந்தோறும் அந்தந்த ருதுக்களின் சீர்மைக்குத்தக்கபடி திவ்யலீலைகளைச்செய்து கொண்டெழுந்தருளியிருக்கவும் எம்பெருமான்களின் திவ்யோத்சவங்களைச் சேவிக்கவேண்டுமென்ற திருவுள்ளமுடையவர்களான பொய்கையார் முதலிய திவ்யஸூரிகள் தமது சிஷ்ய ஜனங்களைத்தத்தம் தேசங்களினின்று மழைத்துக்கொண்டு திவ்யதேசங்கட்கெழுந்தருளினர். பகவத்பக்தர்களான ப்ரபந்நர்கள் பரம்பரையாய் வந்துள்ளதும் ப்ரபத்தியுடன் கூடிப்ரகாசிக்கின்றதுமான பக்திமார்க்கத்தை யுபதேசித்து சகல ஜனங்களையும் ரக்ஷிக்கவேண்டுமென்ற திருவுள்ளமுடையவர்களாய் இத்தகைய பக்திமார்க்கத்தை யுபதேசிக்கும்படி தமது சிஷ்யர்களை நியமித்துவிட்டுத் தாம் பரமபதத்தை யடையவேண்டுமென்ற எண்ணத்துடன் * யோகநிஷ்டானுபவஞ் செய்துகொண்டெழுந்தருளி யிருந்தனர்.

15-வது சர்க்கம் முற்றுப்பெற்றது.

---

% அவப்ருதம்—அவப்ருதம்—முக்கியமான யாகத்தின் முடிவில் செய்யப்படும் யாகத்தின் குறைக்காரியம், அல்லது யாகத்திற்கங்கமாய் யாகத்தின் முடிவிற் செய்யப்படும் ஸ்நானம்.

* யோகநிஷ்டை— யோகநிஷ்டா —மனத்தை வேறிடத்தில் செலுத்தாது பரமாத்மாவிடத்தில் நிலைபெறச்செய்தல்.

## 16-வது சர்க்கம்.

# நாதமுனிகள் வைபவம்.

---

கனகை யென்னும் பெயரையுடைய காவேரியின்கரையில் வீரநாராயண புரமென்னும் பெயரையுடைய பிரசித்திபெற்ற நகரமொன்றுள்ளது அங்நகர், நிஷாதம், ருஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்திமம் தைவதம், பஞ்சமம், என்ற § சப்தஸ்வரங்கட்கிசைந்த சுருதிகளின் தொகுதியை அறிந்தோர்களான வித்வான்கட்குரிய வாசஸ்தானமாயிருந்தது. அங்கு வீரநாராயணனென்று ப்ரசித்தி பெற்ற கண்ணபிரான் கருணை நிறைந்த கண்களின் பார்வையையுடையவனுப் அர்ச்சாவிக்கிரகத்தில் சோழராஜன் தவப்பயனேயென்று சொல்லும்படி யெழுந்தருளியிருந்தனன். அவ்வீரநாராயணபுரத்தில் வெண்ணிறமான தண்ணீருடன் கூடித்தோன்றும் பெரியதொரு தடாகமானது பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் பரமபுருஷன் அப்பாற் கடலைவிட்டு வீரநாராயணபுரத்திற்கெழுந்தருளினனெனக்கருதி அவ்வெம்பெருமான் பிரிவையாற்ருது அக்கடலே அவ் வெம்பெருமானை யுபாசித்தற்கு வீரநாராயணபுரத்தை யடைந்திருக்கின்றதோவென விளங்கிற்று.

அவ்வூரில் சுருதிஸ்மிருதிகளின் ஞானத்தால் மிகவும் பரிசுத்தமான சரிதத்தை யுடையவர்களும் சாஸ்திரங்களாகிய சாகரங்களிற் சஞ்சரிக்கும் † நாவிகர்களுமான நாலாயிரம் பிராமணர்கள் சத்கர்மாநுஷ்டான பரர்களாயிருந்தனர். அவர்களில் ஈசுவரபட்டரென்ற பெயரையுடைய பிராமணசிரேஷ்டரொருவர் பிரசித்திபெற்ற சொட்டைக்குலத்தில் ஜனித்தனர். அவரெப்பொழுதும் தம்முடைய விரதாநுஷ்டானங்களால் எம்பெருமான் திருவுள்ள முகக்கும்படி செய்கின்றவராயும் வேதாந்தங்களனைத்தையும் நன்குணர்ந்தவராயுமிருந்தனர். அவ்வீச்வரபட்டருக்கு நாதமுனியென்பவர் குமாரராயவதரித்தனர்.

---

§ சப்தஸ்வரங்கள்—ஏழுஸ்வரங்கள்.

† நாவிகர்—ஓடக்காரர்.

இவர், எம்பெருமான்சேவகர்களில் முதல்வரானசேனை முதலி யாரென்னுங் கஜவதனரின் அம்சம் பெற்றவர். இவர் வீணகானத் தில் வல்ல நாரதமுனிவருமிவருக்குத் தோற்று வெட்கத்தால் வெளுத்தசரீரத்தையுடையவராயினரோவெனநினைக்கும்படி கான வித்தையில் வல்லவராயிருந்தனர். அன்றியுமிவர், தமது தாயின்கர்ப் பத்திலிருக்கும்போதே கண்ணபிரானின் சம்பூர்ண கடாக்ஷத்தைப் பெற்றுத்தாமே சகல கலைகளிலும் வல்லுநராய்த் தியானவசத்தால் கண்ணபிரானைக் கட்புலனும்படி செய்துகொண்டனர். இத்தகைய நாதமுனிவருக்கு, பகவதம்சம் பெற்றவரான ஈசுவரமுனி யென்ப வர் குமாரராயுதித்தனர் இவரும். அஷ்டாங்கயோகத்திற் செலுத்திய அந்தக்கரணத்தால் காணப்பெற்ற கண்ணனிடத்திற் றிண்ணிய பக்தியையுடையவராயிருந்தனர். இப்படியிருக்கும்போது சிலநாட் சென்றபின் அந்நாதமுனி ஈசுவரமுனி யிருவரும் அவ்வீர நாராயண புரத்திற் சுதிபதியான கண்ணபிரானிடம் விண்ணப்பம் செய்துகொண்டு அவ்வெம்பெருமான் திருவிளையாடியருளிய திருக் கோயில்களைச் சேவிப்பதற்காகத் தமது நகரத்தினின்றும் பூப்ர தக்ஷிணஞ்செய்ய வெளியேறிச்சென்று எம்பெருமான்களெழுந் தருளியிருக்கும் திவ்ய தேசங்கள்தோறும் புண்ய தீர்த்தங்கள் தோறும் ஒவ்வோரிடங்களிலும் மும்மூன்று நாட்கள் தங்கியிருந்து சேவித்துக்கொண்டு முறையேவடதிசையை வந்தடைந்தனர். அடை தலும் அம்முனீந்திரரிருவரும் *காளிந்தீ நதிக்கரையில் கோவர்த் தனமென்று பிரசித்திபெற்ற நகரத்தில் யமுனைக்கிறைவனுயெழுந் தருளியிருக்கும் பாலகிருஷ்ண பரமாத்மாவைச்சேவித்து அவ்வெம் பெருமானை யாராதித்துக்கொண்டெழுந்தருளியிருந்தனர்.

இஃதிவ்விதமிருக்க ஸ்ரீ வீரநாராயண புரத்தில் வீற்றிருக்குங் கண்ணபிரான் தமது பரமபக்தர்களான நாதமுனி ஈசுவர முனி களின் பிரிவையாற்றாது ஸ்வப்நத்திலம் முனிவர்களைப் பார்த்து முனிவர்காள் நாமுங்கள் பிரிவையாற்றாது வருந்துகின்றோம். விரை வில் நீங்களிருவரும் வீரநாராயணபுரம் வந்து சேரவேண்டுமென் றருளிச்செய்தனன். உடனே அம்முநீந்திரரிருவரும் பரமானந்த

---

* காளிந்திநதி—யமுனைநதி.

பரிதர்களாய் கோவர்த்தனபுரியி லெழுந்தருளியிருக்கும் யமுனைத் துறைவனை எம்பெருமானை இதயத்திலெழுந்தருளப் பண்ணிக் கொண்டு அங்கிருந்தும் புறப்பட்டு ஸ்ரீவீரநாராயணபுரத் தெம் பெருமான் சன்னிதியை யடைந்தனர். அங்கெழுந்தருளியபின் சில நாட்சென்றதும் ஸ்ரீநாதமுனிகள் திருக்குருகூரினின்றும் ஸ்ரீவீர நாராயணபுரத்திற் கெழுந்தருளிய ஸ்ரீவைஷ்ணவர்களிடத்தில் பராங் குசராலருளிச் செய்யப்பெற்ற திருவாய்மொழிப் பாசுரங்களாயிரத் தில் "ஆராவமுதே" என்றடையாளமிட்டிருக்கும் அழகிய பத்துப் பாசுரங்களை மாத்திரம் கேட்டு அதிசந்தோஷமுடையவராய் 'ஆ! ஆ!! இதில் "ஆயிரத்துளிப்பத்தும்" என்றிருக்கின்றதே; இங்கு வந்திருக் கும் ஸ்ரீவைஷ்ணவர்களோ இதற்குமேலெங்கட்கு யாதொன்றுந் தெரியாதென்கின்றனரே; ஆழ்வாரருளிச்செய்த கர்ணாமிருதமான மற்றைப் பாசுரங்களையுங் கேட்கவேண்டுமே; இதற்கென்செய்வது?' என்றெண்ணிக்கொண்டு திருக்குருகூருக் கெழுந்தருளினர்.

அங்கெழுந்தருளியதும் அவர் அக்குருகைநகருக் கதிபதியான ஆதிநாதனைப் பக்தியுடன் சேவித்து,பராங்குசரைச் சேவிக்கவேண்டு மென்ற திருவுள்ளத்துடன் உறங்காப்புளியின் மூலத்தையடைந்த னர். அடைதலும் அந்நாதமுனிகள் தமது யோகப்ரபாவத்தால் ஆழ் வாரை ப்ரத்தியக்ஷமாக்கிக் கொள்ளவேண்டுமென்று கருதி அங்கு யோகநிஷ்டையி லெழுந்தருளியிருந்தனர். இவ்விதமெழுந்தருளி யிருந்தும் ஆழ்வார் ப்ரத்தியக்ஷமாகாமையால் அந்நாதமுனிகள் தமது யோகநிஷ்டையிற் பயனில்லை யென்றெண்ணி வருந்திய மனத் தினராய் 'இனி யென்செய்வது? ஆழ்வாரைக் காணுதற்குரிய கல் வியையன்றோ கற்கவேண்டும்' என்ற கருத்துடன்,சடகோபன் விஷய மாய் மதுரகவிகளருளிச்செய்த பத்துப் பாசுரங்களைப் பக்தியுடன் தமது வாயாற் பன்னிராயிரம் உரு ஜபித்தனர். ஜபிக்கவே சடகோ பர் தமது சிஷ்யரான மதுரகவியுடன் அந்நாதமுனிகளினெதிரே யெழுந்தருளி அதிப்ரீதியுடன் அந்நாதமுனிகட்கு முதலில் துவய மந்திரத்தை யுபதேசித்தருளி அதன்பின் தாம் செய்தருளிய நான்கு ப்ரபந்தங்களையும் அர்த்தத்துடனுபதேசித்தனர். உடனே நாதமுனி கள் அப்பராங்குசராலருளிச் செய்யப்பெற்றனவும் உட்பொருள் மய

மாயுள்ளனவுமான அந்நான்கு ப்ரபந்தங்களையும் பெற்றுக்கொண்டு இடைவிடாது அந்த ப்ரபந்தங்களை ஆவிருத்தி செய்யும் ஸம்ப்ரதாயத்திற் சிக்ஷைபெற்றிருக்கும் சித்தத்தையுடையவராய்ச் சிலகாலம் அத்திருக்குருகூரிலே யெழுந்தருளியிருந்தனர்.

இப்படியிருக்கும்போது ஸ்ரீவீரநாராயணபுரத்திற் சதிபனான கண்ணபிரான் நாதமுனிகளின் பிரிவையாற்றாது அவருக்கு ஸ்வப்பனத்திலெழுந்தருளி 'ஹே நாதயோகி! நீ இங்கு வந்தென்னுடன் கூடவே அந்த ப்ரபந்தத்தை மனனஞ்செய்வாய்' என்று கூறித் தன்னிடம் வரும்படி நியமித்தனன். உடனே நாதமுனிகளும் பகவந்நியமனத்தின்படி ஸ்ரீவீரநாராயணபுரஞ் சென்று அங்கெழுந்தருளியிருக்குங் கண்ணபிரானுடன் ஆழ்வாரருளிச்செய்த ஆயிரம் பாசுரங்களையும் மனனஞ்செய்துகொண்டு கானஞ் செய்வதில் வல்ல தமது சிஷ்யர்களால் அவ்வாயிரம்பாசுரங்களையும் திவ்யகானத்திற் பாடும்படி செய்தனர்.

இஃதிவ்விதமிருக்க, சோழராஜன் சுரகானத்தில் வல்லவளான ஒரு சுந்தராங்கியைக் கானவித்தையிற் பரீக்ஷிக்கவேண்டுமென்று கருதிப் பரதசாஸ்திரத்தையறிந்த பண்டிதர்களுடன் நாதமுனிகளையுந் தன்னகரத்திற் கழைப்பித்தனன். அழைக்கவே, நாதமுனிகளும் தமக்குள் 'உலகத்திலுள்ள யாவரும் தேவகானத்துடன்கூடிய திராவிடகானதத்துவத்தை யறிகின்றிலர்; ஆதலாலதனையிப்பொழுது நாம் அரசன் முன்னிலையில் வெளியிடவேண்டும்' என்று விருப்பமுற்றவராய்த் தமது சிஷ்யர்களுடன் அரசன் சமீபத்தையடைந்தனர். அடைதலும், சகலகலைகட்கும் கொள்கலனாய் விளங்கும் அந்நாதமுனிகள் அவ்வரசனால் சத்கரிக்கப்பெற்றவராய்ச் சபையையடைந்து அரசன் நியமனத்தின்படி சபையோர்கட்கெதிரில் சீரியசிங்காசனத்திலெழுந்தருளி யிருந்தனர். அப்போது அரசன் நாதமுனிகளைப் பார்த்து, 'முனிகாள்! இச்சிற்றிடை மாதர்களிருவரும் கானவித்தையில் தமக்கிணையில்லையெனக்கருதி ஒருவரோடொருவர் கலகஞ் செய்துகொண்டு வந்திருக்கின்றனர். இவ்விருமங்கையரின் கானத்தைக்கேட்டு இஃதிவ்விதமென்பதை நன்றாய் நிரூபணஞ்செய்து எங்கட்குக் காண்பிக்கவேண்டும்' என்றனன். அதற்கு நாதமுனிகளும்

'அப்படியேசெய்கிறோம்' என்று அவ்விருவநிதையரின் கானத்தையுங்கேட்டு சோழராஜனைப்பார்த்து அரசே! இவ்விருமாதர்களில் இவருடைய கானம் என்னுலு முங்களாலுமறியத்தக்கதே. இவருடைய கானமோ என்னுலும் தேவர்களாலுமே யறியத்தக்கது. என்று சொல்லி, தேவகானத்திற்கும் மநுஷ்ய கானத்திற்குமுள்ள பேதத்தை அங்குள்ள சபையோர்கள் யாவருமறியும்படி யெடுத்துக்காட்டி, அரசனை மகிழ்வித்தனர். அப்போது அரசன் அங்குள்ள சபையோர்களுடன் நாதமுனிகளின் சரணங்களில் வீழ்ந்துவணங்கி அந்நாதமுனிகட்குத் தக்கபடி சன்மானித்தனன். அதனைப்பெற்றுக்கொண்டு நாதமுனிகளங்கிருந்து ஸ்ரீவீரநாராயணபுரத்திற் கெழுந்தருளினர்

அங்கெழுந்தருளியதும் அவ்விடத்தில், ஜயத்சேனனென்னுந் திவ்யசூரியின் அம்சம்பெற்ற புண்டரீகாக்ஷரென்னும் பிராமணைத் தமரும் காலப்ரகிருதியினம்சம்பெற்ற குருகைகாவலப்பனென்பவரும் ஸ்ரீநாதமுனிகட்கு சிஷ்யராயினர். ஆகவே நாதமுனிகள் புண்டரீகாக்ஷர் முதலிய தமது சிஷ்யர்கட்கும் திராவிடவேத பாசுரங்களைக் கானமுறைப்படி கற்பித்ததுமன்றித் தாம் செய்தருளிய 'நியாய தத்துவம்' என்னுங் கிரந்தத்தையுமுபதேசித்தனர். இவ்விதஞ்சில நாட்சென்றபின் ஸ்ரீவீரநாராயணபுரத் தெம்பெருமானைச் சேவிக்க வேண்டுமென்றுவந்த. சோழராஜன் அங்கெழுந்தருளியிருக்குங் கண்ணபிரானைச் சேவித்துவிட்டு அவ்விடத்தில், உலகப்பற்றுக்களனைத்தையுமொருங்கே யொழித்து அவ்வெம்பெருமான் திருவுருவத்தையே இடையீடின்றி இருதயத்தில் தியானித்துக்கொண்டு சமாதிநிஷ்டராயெழுந்தருளியிருக்கும் நாதமுனிகளையும் சேவித்துக்கொண்டு தனது அந்தப்புரஸ்திரீஜனங்களுடன் தன்னகரத்திற்குத் திரும்பிச்செல்லும்போது யோகநிஷ்டை தெளிந்தெழுந்த நாதமுனிகள் சோழராஜனைக் கோபஸ்திரீகளுடன் கூடிச்செல்லுங் கோபால கிருஷ்ணனாகவே நினைத்துக்கொண்டு அவ்வரசன் நகரம்வரை அவனைப் பின்பற்றிச்சென்றனர். அப்போது அந்நாதமுனிகளின் சிஷ்யர்களான புண்டரீகாக்ஷர் முதலானோர்கள் நாதமுனிகளைப் பார்த்து 'ஸ்வாமீ! தேவரீர் இவ்விதம் ஓரரசன் பின்னே யெழுந்தருளலாமோ? இஃதென்ன காரியம்?' என்றனர். அதற்கு நாதமுனிகள் தமது சிஷ்யர்களைப் பார்த்து 'ஐயோ! கோபிகைகளுடன் கண்ணபிரான் செல்

கின்றனனென்றன்றோ நினைத்து வந்தேன்' என்று சொல்லிக்கொண்டு அங்கிருந்தும் ஸ்ரீவீரநாராயணபுரத்திற் கெழுந்தருளினர். அதன் பின்னுமொருகாலத்திற் சோழராஜன் வீரநாராயணபுரத் தெம்பெருமானைச் சேவித்துவிட்டுத் தன்னகரத்திற்குத் திரும்பிச்செல்லும் போது *சாமந்தர்களின் தலைகளில் தன்சரணங்களை வைத்துக் கொண்டு † தந்தாவளத்தின் மீதேறவே அப்போது அவ்வரசனை அந்நாதமுனிகள் பிரமன் முதலியோர்களின் சிரசில் மிதித்துக் கொண்டு கருடன்மீதெழுந்தருளும் சர்வேசுவரனென்று கருதி மயங்கினர். பின்பு நாதமுனிகள் தமது சிஷ்யரான புண்டரீகாக்ஷரைப் பார்த்து 'நீர் சாஸ்திரார்த்த வழிப்படி யுலகத்தினர்க்குத் தத்துவத்தை வெளியிடவேண்டும்' என்றும், குருகைகாவலப்பனைப் பார்த்து 'நீர் சமாதிநிஷ்டராய் உயர்ந்த யோகமுறைப்படி தத்துவத்தைக் காண்பீர்' என்றும் சொல்லிவிட்டுத் தமது குமாரரான ஈசுவர யோகியைக் குறித்துப் 'புத்திரா! உனக்கு மஹாத்மாவும் மஹா புத்திமானுமாகிய புத்திரனொருவன் எம்பெருமானுடைய சிங்காசனத்தினம்சம் பெற்றவன் உண்டாவான். அவனுக்கு யாமுநேய னென்று § நாமகரணஞ்செய்வாய்' என்று நியமித்தனர். இஃதன்றியும் அந்நாதமுனிகள் உத்பவிக்கப்போகின்ற தமது % பௌத்திரருக்கு சுருத்யர்த்தத்தின் தொகுதியுடனும் துவயமந்திர தத்துவத்தின் யோகத்துடனும் திராவிடவேதத்தை உபதேசிக்கும்படி தம்முடைய சிஷ்யர்களான புண்டரீகாக்ஷர் முதலியவர்கட்கு நியமனஞ் செய்தனர்.

இவ்விதம் வினைக்குறையை முடித்துக்கொண்டு கிருதார்த்தரான நாதமுனிகள் தாம் ¶ சநாதனதருமத்தையடையவேண்டுமென்னு மவாவுடையராய் யோகத்தின் முடிவான சமாதியில் வீற்றிருந்தனர். அப்போது ஸ்ரீநாதமுனிகளின் சிஷ்யர்களில் குருகை

---

* சாமந்தர்—தன்தேசத்தை யடுத்திருக்கும் தேசாதிபர்களான அரசர்.

† தந்தாவளம்—யானை.

§ நாமகரணஞ்செய்தல்—பெயரிடுதல்.

% பௌத்திரர்—மகனது புத்திரன்.

¶ சநாதனம்—எப்பொழுதுமுள்ள வஸ்து.

காவலப்பனென்பவரும் சமாதிநிஷ்டராயிருந்தனர். அவரைத்தவிர மற்றைய சிஷ்யர்களுடன் புண்டரீகாக்ஷரென்ற திவ்யசூரி தாம்கற்ற கல்வியை யாவருக்கும் விஸ்தரிப்பித்தனர். இப்படியிருக்கும்போது முதாக்ஷரென்னுந் திவ்யசூரியினம்சத்திலுதித்தவரான ஸ்ரீராமமிசிர ரென்பவர் புண்டரீகாக்ஷரிடத்தில் பரமபக்தியுடையவராய் அவருக்கு ப்ரதமசிஷ்யராயினர். ஆகவே அப்புண்டரீகாக்ஷர் ராமமிசிரர் செய்யும் உபாசனையினாலே சந்தோஷமுற்ற மனத்தையுடையவராய்த் தமக்குக் குரு வுபதேசித்தருளிய பரமார்த்தங்களையும் த்வயமந்திரத்துடன் ஸ்ரீராமமிசிருக் குபதேசித்துத் திராவிட திவ்யசூக்தியையுமுபதேசித்தனர். பின்பு அவர் ஸ்ரீராமமிசிரரைப் பார்த்து 'நானிதுவரை உமக்குபதேசித்துள்ள பகவத்தர்சனார்த்தங்களை நீர் இனி அவதரிக்கப்போகின்றவரும் நாதமுனிகளின் பௌத்திரரும் ஈசுவரமுனிகளின் புத்திரருமான ஸ்ரீயாமுனேயருக்கு ரகசியமாய், அவரைப் பின்பற்றியேனுஞ் சென்றனுவர்த்தித்து உபதேசிக்க வேண்டும்' என்றனர். அதற்கு ஸ்ரீராமமிசிரரும் அப்படியே யாகட்டுமென்றிசைந்து கேட்டுக்கொண்டு தம்மனத்திற்குள் 'இஃதெவ்விதமெளிதில் நம்மால் முடிவுபெறப்போகின்றது?' என்றுசிந்தாகுலராய்த் தர்சனார்த்தங்களைத் தமது மனதில் தெளிவுறச் செய்துகொண்டவராய் ஸ்ரீயாமுனேயரின் அவதாரத்தைக் காணவேண்டுமென்னுங் கருத்துடையராயிருந்தனர்.

இவ்விதஞ் சிலநாட் சென்றபின் எம்பெருமானுடைய சிங்காசனாம்சம் பெற்றவரான ஸ்ரீயாமுனேயர் ஈசுவரமுனிகட்குப் புத்திரராயவதரித்தனர். அவருக்குச் *சௌள † உபநயநங்கட்குரிய காலம் வந்தவுடன் ஈசுவரமுனிகள் விதிப்படி தமது புத்திரரான யாமுனேயருக்குச் சௌளம் உபநயனம் இவற்றைச் செய்வித்து அவரை வேதாத்தியயனஞ் செய்யும்படி குருவினிடம் ஒப்பித்தனர். அவரும் வேதாத்தியயனத்திற்காக இரண்டு மூன்றுநாள் குருவிடம் சென்று பின்பு செல்லாதிருந்தனர். அப்போது ஈசுவரமுனிகள் தமது புத்திரரைப் பார்த்துக் 'குழந்தாய்! நீயேன் குருவினிடம் செல்லாதிருக்

* சௌளம்—குடுமிவைத்தல்.

† உபநயநம்—பூணூல் அணியும் சடங்கு.

இன்றாய்?' என்றனர். அதற்கு யாமுநேயர் தமது பிதாவைப்பார்த்து 'ஐயா! வேதாத்தியயனகுரு ஒருநாட்சொல்லியதேயே மறுநாளுஞ் சொல்லுகின்றனர். அவரிடஞ் சென்றென்பயன்?' என்றனர்.

இதனைக் கேட்டதும் ஈசுவரமுனிகள் தமக்குள் இஃதென்ன ஆச்சர்யம்! குரு சொல்லுகின்ற விஷயத்தை நமது புத்திரன் ஒருமுறை கேட்டமாத்திரத்திலேயே கிரஹித்துக்கொள்ளும் புத்தி சாதுர்யத்தையுடையவனா யிருத்தலால் இவ்விதஞ் சொல்கின்றானென்று சந்தோஷித்தனர். இவ்விதம் யாமுநேயர் சமஸ்தசாஸ்திரங்களையும் லக்ஷணத்துடன் கற்று வல்லவராய் விவாஹமானபின் மஹாபாஷ்ய குருவின் பக்கலில் வசித்தனர். அக்காலத்திற் சோழராஜன் புரோகிதனும் வித்வான்களிற் சிறந்தவனுமான ஆக்கியாழ்வானென்பவன் வித்வான்கள் சம்பாதிக்கும் பொருள்களிற் பத்திலொரு பாகம் தனக்குக் காணிக்கையாக ஒவ்வொரு வித்வான்களிடத்திலும் பெற்றுக்கொள்ளுதல் வழக்கமாதலால் அவ்வழக்கத்தின்படி யாமுநேயரின் ஆசிரியராகிய பாஷ்யகுருவிற்கும் தனக்கு வரவேண்டிய திரவியவிஷயமா யொருபத்திரிகை யெழுதியனுப்பினன். அப்பத்திரிகையைக் கொணர்ந்த சேவகன் யாமுநேயரிடம் அதனைக் கொடுத்து 'ஐயா! இது ஆக்கியாழ்வான் உங்கள் குருவிற் கனுப்பிய பத்திரிகை' என்றனன். அதனை யாமுநேயர் வாங்கிப் பிரித்துப்பார்த்ததும் கோபத்துடன்கூடியவராய் அப்பத்திரிகையிற் பாதியைக்கிழித்து அதில் "யாம் நற்கவிஞர் மாத்திரமல்லோம்; சாஸ்திரங்களின் கரைகளைமாத்திரம் கண்டவருமல்லோம்; ஆனல் நம்மையெதிர்த்துவரும் கஜேந்திரங்களின் கர்வமென்னும் சர்வசொத்தையுமழிக்கும் § கண்டீரவ மெனக்கண்டு கொள்ளவேண்டும்" என்ற பொருளடங்கிய ஒரு சுலோகத்தை யெழுதி வந்து அவன் கையிற் கொடுத்தனுப்பினர். அனுப்பவே அவனப்பத்திரிகையை ஆக்கியாழ்வானிடங்கொண்டு கொடுத்தனன்.

கொடுத்தலும் அதனைப்பார்த்த புரோஹிதன் ஆச்சரியகரமான இவ்விருத்தாந்தத்தை அரசனிடந்தெரிவித்து அந்த பாஷ்யகுருவுடன் யாமுநேயரையும் அழைத்து வரும்படி ஆக்ஞாபத்திரிகை

§ கண்டீரவம்—சிங்கம்.

யனுப்பி அவ்விருவரையும் வரவழைத்தனன். அவ்விருவரும் சோழ ராஜனரமனைவாயிலிற் சென்றதும் அவர்களில் யாமுநேயர் ராஜ புரோஹிதனுடன் தர்க்கஞ்செய்ய வேண்டுமென்னுங் கருத்துடையவராய்த் தாமொரு பத்திரிகையில் "மலைகளின் பாதபல்லங்கள்பதிந்திருத்தலாற் பயன்பெற்ற தாழ்வரைப் பக்கத்தினையுடைய %ஹிமாலயத்திற்கும், அரக்கனால் கவர்ந்து செல்லப்பெற்ற ஜானகியின் முககமலத்தின் ¶ சமுல்லாசத்திற்கு ஹேதுவான *சேதுவிற்கும், சூரிய சந்திரர்களைத் தலையலங்காரமாயுடைய கீழ்மேற்றிசைகளினுள்ள உதயாஸ்தமனகிரிகட்கும் மத்தியிலுள்ள பூமண்டலத்தில் பூர்வோத்தர மீமாஞ்சைகளென்னும் இரண்டுசாஸ்திரங்களையும் ஆராய்ந்து தெளிந்த மனத்தினையுடைய மற்றொருவன் எனக்கிணையானவனிருந்தால் அவனைக் காணவேண்டும்" என்ற பொருளடங்கிய ஒரு சுலோகத்தை எழுதி முதலிலரசனுக்கனுப்பிப் பின்பு ராஜசபையையடைந்தனர்.

அடைதலும் யாமுநேயர் அவ்வரசனாலுபசரிக்கப்பெற்றபின் அரசனை நோக்கி 'மஹீந்திரா! இப்போது எனக்கும் உமது புரோஹிதருக்கும் வாதம் நடக்கப்போகின்றபடியால் எங்களிருவரின் உண்மையைப் பரீக்ஷித்தற்காக சாஸ்திரார்த்த தத்துவநிச்சயந் தெரிந்தவர்களும் வாக்வல்லமையுடையவர்களுமான வித்வான்களை விரைவில் சபைக்கு வரும்படி செய்யவேண்டும்' என்றனர். அதற்குச் சோழராசனுமிசைந்து 'அப்படியே செய்கிறேன்' என்று சமஸ்தவித்வான்களையும் வரவழைத்துச் சபையில் தன்தேவியுடன் சிங்காசனத்தில் வீற்றிருந்துகொண்டு தனது குருவான ஆக்கியாழ்வானையும் யாமுநேயரையும் பார்த்து 'விவாதம் நடக்கட்டும்' என்றனுமதிசெய்தனன். செய்யவே அவ்வித்வான்களிருவரும் விவாதஞ்செய்யத் தொடங்குமுன் ராஜபத்நி அரசனைப்பார்த்து ரஹசியமாய் 'நாதா! இச்சிறுவனொருபோதும் அபஜயமடையான்; இவன் தோல்வியுற்றானாகில் நீங்கள் சொல்லிய பந்தபத்திற்கு நான் சம்மதிக்கின்றேன்'

% ஹிமாலயம்—இமயமலை.

¶ சமுல்லாசம்—மலர்தல், மலர்ச்சி.

* சேது—அணை.

என்றனள். அதற்கரசனும் பத்நியைப்பார்த்து 'தேவி! என் புரோகிதர் அபஜயமடைந்தால் இவ்விராச்சியத்தில் பாதியை யாமுனேயருக்களிக்கின்றேன்' என்றனன்.

இவ்விதமிருவரும் சம்பாஷித்துக் கொண்டதன்பின், அரசன் மறுபடியும் அவ்விருவரையும் பார்த்துப் 'பண்டிதர்காள்! வாதம் நடக்கட்டும்' என்றனன். இவ்விதம் சொல்லவே ஆக்கியாழ்வான் யாமுனேயரை நோக்கி 'யாமுநேயா! யான்சொல்வதைக் கேள். லோகவ்யவஹாரத்திலும் வேதசம்பந்தமான விஷயத்திலும் நீயுன்வாயிலுண்டென்று சொல்வதை நானில்லையென்றும், நீயில்லையென்று சொல்வதை நானுண்டென்றும் சொல்லிக்கண்டிருக்கின்றேன்; இப்படி யான் செய்யாவிடில் உன் செருப்பினல் என் தலையிலடிப்பாய்,' என்றனன். அதற்கு லோகநியாயந்தெரிந்த பாலனான யாமுனேயர் 'அப்படியே யானும் சம்மதிக்கிறேன்' என்று சொல்லி முதலில் இவ்விதம் ப்ரதிக்ஞைசெய்த புரோகிதனைக்குறித்துப் 'புரோகிதரே! உமது தாய் மலடியல்லள் என்றும், இவ்வரசன் பூமி முழுதுடையவன் என்றும், சொல்லுகின்றேன்; இப்பொழுது இதற்குத்தரம் சொல்வீர்' என்றனர். இவ்விதம் யாமுனேயர் சொல்லவே ராஜ புரோகிதனான ஆக்கியாழ்வான் சற்றுநேரமாலோசித்துவிட்டு யாதொரு மறுமொழியுங் கூறாதவனாய்த் தலை கவிழ்ந்தவண்ணமிருந்துகொண்டு தான் அத்துவைத வாதத்தால் யாமுனேயரை ஜயிக்க வேண்டுமென்னுங் கருத்துடையவனாய், சாஸ்திர சம்பந்தமான பேதவாதத்தைப்பற்றிக்கொண்டு, யாமுனேயரைக் குறித்து 'யாமுநேயா! இவ்வுலக மனைகமனைத்தும் பொய். இப்பியில் வெள்ளியென்னுந் தோற்றமுண்டாவதுபோல் இவ்வுலகம் மெய்யென்று தோன்றுதல். இதற்கு மறுமொழி கூறுவாய்' என்றனன். இவ்விதஞ் சொல்லவே யாமுனேயர் ஆக்கியாழ்வானை நோக்கி புரோகிதரே! நீர் சொல்வது சரியன்று. ஏனெனில்; இவ்வுலகம் பொய்யென்றால் அதற்குள்ளிருக்கும் பொய்மையும் பொய்யாகவேண்டும். இங்ஙனமிருக்க நீரிவ்வுலகினை எவ்விதம் பொய்யென்று *சாதிப்பது என்றுசொல்லி இன்னும் பல ஹேதுக்களால் ஆக்கியாழ்வான் சொல்லிய அத்வைத

---

* சாதிப்பது—சித்திக்கச்செய்வது.

வாதத்தைக் கண்டித்துவிட்டுப் புரோகிதரே! லௌகிக வைதிக நியாயங்களால் இப்பொழுது இச்சபையில் நானும்மை ஜெயித்துவிட்டேன். நீரோ மூப்பினாலும் தர்க்கத்தாலும் அடிபட்டிருக்கின்றீர். ஆகலால் நானும்மைச் செருப்பாலடிக்க விருப்புறகில்லேனென்றனர்.

இதனைக்கேட்டதும் சபையிலுள்ளோர் யாவரும் புரோகிதனை வென்ற யாமுநேயரைப்பற்றி மிகவும் சந்தோஷித்தனர். அப்போது ராஜபத்நியும் மிகவும் நன்றாயிருக்கின்றதென்று மகிழ்ந்து 'எனையாளவந்தாரோ?' என்று சொல்லி யாமுநேயரைத் தழுவிக் கொண்டனள். அப்போது சோழராஜன் ஆக்கியாழ்வானைக் குறித்துப் 'புரோகிதரே! யான் யாமுநேயரின் கல்வித்திறமையைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கின்றேன்; நீர் இவருக்குச் சிஷ்யராகவேண்டும்' என்று சொல்லித் தன் புரோகிதனை யாமுநேயருக்குச் சிஷ்யனாகச் செய்ததுமன்றித் தன் பத்நியின் நியமனத்தின்படி யாமுநேயருக்குப் பாதிராஜ்யத்தையும் பாகித்துக்கொடுத்தனன். கொடுக்கவே யாமுநேயரும் மிகுந்த சம்பத்தையுடைய அவ்விராஜ்யத்தைப்பெற்றுக் கொண்டு ராஜ்யபோகத்தை யனுபவித்தனர்.

இப்படியிருக்கும்போது ஸ்ரீராமமிசிரர் என்பவர் தமது சித்தத்திற்பதிந்துகிடக்கும் பரமார்த்தங்களையெல்லாம் யாமுநேயருக்கு உபதேசிக்கவேண்டுமென்று கருதிச்சென்று அவரைக் காண்பதற்குச்சமயம்நேராது, 'இனியென்செய்வது' என்றாலோசித்துக் கல்விக்குக்காரணமாயும் அவருக்கு மிகவும் பிரியமாயுள்ளதுமான தூதுவளைக்கீரையைக்கொணர்ந்து மடைப்பள்ளிக் கைங்கர்யபரரிடங் கொடுத்துத் தினந்தோறும் பாகஞ்செய்து யாமுநேயருக்குச் சமர்ப்பிக்கும்படி செய்துவந்தனர். இவ்விதம் ஆறுமாதம்வரை அதனைக் கொண்டுவந்து கொடுத்தும் ஸ்ரீயாமுநேயரைச் சந்திக்க மார்க்கமில்லாமையால் ஸ்ரீராமமிசிரர் 'நாம் பெருமுயற்சி செய்தும் தைவவசத்தால் நமக்கேதோ இன்னும் யாமுநேயரைக்காணும் பாக்கியம் கிட்டவில்லையே; இனியென்செய்வது?' என்று சோர்வுற்றவராய் ஒன்றும் தோன்றாது ஒருநாள் தூதுவளையிலையைக்கொணர்ந்து கொடுக்குந்தொழிலை மறந்திருந்தனர்.

அன்று தினம் யாமுனேயரமுது செய்யும்போது கைங்கர்யபரனைப் பார்த்து 'இன்று ஏன் தூதுவளைக் கீரைபாகஞ் செய்யவில்லை? இது வரை தினந்தோறுமதனை யார்கொணர்ந்துகொடுத்தனர்?' என்றனர். அப்போது கைங்கர்யபரன் 'ஸ்வாமீ! ஒரு விருத்தபிராமணர் தேவரீரைக்கண்டுகொள்ள வேண்டுமென்னுங்கருத்துடையவராய் ஆறுமாச காலமாய் தினந்தோறுமதனைக் கொணர்ந்துகொடுத்துக் கொண்டு வருகின்றனர்; ஆனாலவரின்று தினம் என்ன காரணத்தினாலோ வரவில்லை என்றனன். இதைக்கேட்டதும் யாமுனேயர்கைங்கர்யபரனிடத்தில் அந்தப்பிராமணனை நாளையதினம்என்னிடமழைத்துக் கொண்டு வாவென்றனர். இவ்விதஞ் சொல்லவே மடைப்பள்ளி கைங்கர்யபரன் 'நியமனத்தின்படியே செய்கின்றேன்' என்று சொல்லிவிட்டு ஸ்ரீராமமிசிரரிடம்சென்று 'ஸ்வாமீ! தேவரீரை யாமுனேயர் அழைத்துக்கொண்டு வரும்படி நியமித்தனர்' என்று சொல்லி அழைத்துக்கொண்டுவந்தனன். ராமமிசிரர்வந்ததும் யாமுனேயர் ராமமிசிரரைப்பார்த்து 'நீரெதற்காகத்தினந்தோறும் தூதுவளைக்கீரையைக் கொண்டுவந்து கொடுக்கின்றீர்? உமக்கு நன்றாய் விளையும் நன்செய்நிலங்கள் வேண்டுமா? அல்லது மிகுந்த செல்வம் வேண்டுமென்னும் விருப்பமோ?' என்றனர். அதற்கு ராமமிசிரர் 'ஸ்வாமீ! எனக்கு நன்றாய் விளையும் நன்செய்நிலங்களிலும் தேடிக் குவிக்கும் திரவியங்களிலும் விருப்பமில்லை, ஆனாலடியேனிடத்தில் தேவரீருடைய முன்னோர்களால் மறைத்து வைக்கப்பெற்ற நிதி ஒன்றுளது; அதனைத் தேவரீர் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமென்பதே என் விருப்பம்' என்றனர். அதனைக்கேட்டதும் யாமுனேயர் 'அதற்கிப்போதியானென்னசெய்யவேண்டும்?' என்றனர். ராமமிசிரர் 'ஸ்வாமீ! நான் தினந்தோறும் தேவரீருடன் நாலுநாழிகைப்போது வசிக்கவேண்டும்; அதற்குத் தேவரீர் திருமாளிகை வாயிற்றடை செய்யாதிருக்கும்படி யநுமதியளிக்கவேண்டும்' என்றனர். அதற்கு யாமுனேயரும் சம்மதித்து 'அப்படியே பிரதிதினமும் நம்மிடம் தடையின்றி வருவீர்' என்று சொல்லி ராமமிசிரர் வந்தால் தடையில்லாதிருக்கும்படி துவாரபாலகர்கட்கு உத்தரவளித்தனர்.

அதன்பின் ஸ்ரீராமமிசிரர் தினந்தோறும் யாமுனேயரிடஞ் சென்று பதினெட்டத்தியாயங்களடங்கிய பகவத்கீதையிலுள்ள

ஒவ்வொரு அத்தியாயத்தினர்த்தத்தையும் ஒவ்வொரு நாளும் யாமு னேயருக்கு உபதேசித்துக்கொண்டு வந்தனர். இவ்விதம் பதினெட்டு நாட்கள் சென்றபின் ஸ்ரீ கீதையினர்த்தவிசேஷங்களைத் திருச் செவி சாற்றிய யாமுனேயர் அளவற்ற சந்தோஷத்துடன் மிகவும் ஆர்த்தராகவும் விரக்தராகவும் பலித்து ஸ்ரீராமமிசிரரிடத்தில் 'ஸ்வாமீ! இத்தகைய கண்ணபிரானைக் காண்டற்குபாயம் யாதோ?' என்று கேட்கவே ராமமிசிரர் 'ஸ்வாமி! ஒன்றிற்கு மாலோசிக்க வேண்டாம்; அக்கண்ணனைக் காணுதற்கோருபாய மிருக்கின்றது; இங்கெழுந்தருள வேண்டும்' என்றுகூறி யாமுனேயரை ஒருவருமில் லாத தனித்த இடத்திற்கழைத்துச்சென்று சரமசுலோகத்தினுட் பொருளை அவருக்குபதேசித்தனர் உபதேசிக்கவே அச்சரமசுலோ கத்தின் ஆழ்பொருளைத் திருச்செவி சாற்றிய யாமுனேயர் மிகவும் பற்றற்றவராய் சம்சாரபாசமனைத்தையுமொழித்து மகாத்மாவான ராமமிசிரரைப் பின்பற்றிக்கொண்டு சிறப்புற்றோங்கிய ஸ்ரீரங்க நகரத்தையடைந்தனர். அடையவே ராமமிசிரர் கருணைக்கடலா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கராஜனை யாமுனேயருக்குக் காண் பித்து 'யாமுனேயரே! ஜகத்திற்கெல்லாம் மூலகாரணமாமும் தேவரீர் முன்னோர்களால் தேடிவைக்கப்பெற்றதுமான நிதியிதோ யிருக்கின் றது; இந்நிதிக்கு லக்ஷ்மியென்னும் முத்திரையிடப்பட்டிருக்கிறது; பாரீர்' என்றனர்.

இவ்விதம் சொல்லவே யாமுனேயர் வணக்கத்துடன் ராமமிசிர ரைப் பார்த்து 'ஸ்வாமி! இந்நிதியை அடியேன் பெற்றுக்கொள்ளும் படி அநுக்ரஹிக்கவேண்டும்' என்று பிரார்த்திக்க அப்போது ராம மிசிரர் த்வயமந்திரத்தை யாமுனேயருக் குபதேசித்தனர். உபதே சித்தவுடன் ஸ்ரீரங்கராஜன் யாமுனேயருக்கு ப்ரத்யக்ஷமாய் ஸேவை சாதித்தனன். எம்பெருமானை நேராய் ஸேவித்த யாமுனேயர் அடங் காத சந்தோஷத்துடன் ஆனந்தபாஷ்பம் நிரம்பிய கண்களையுடைய வராய்த் தமது திருவுள்ளத்தில் ஸ்ரீரங்கராஜனைத் திருவடிமுதல் திருமுடிவரை கண்டநுபவித்து ஸ்ரீரங்கராஜானுபவத்தால் ஸர்வ விதமானபற்றையுமொழித்து அப்போதே திரிதண்டகாஷாயங்க ளைத் தரித்துக்கொண்டனர். உலகத்தில் ஸத்புருஷர்கள் †சாச்வத

† சாச்வதம்—(ஶாஶ்வதம்) நித்தியமாயுள்ளது.

மான பொருளைப் பெற்றபின் *நச்வரமான வஸ்துவில் நசையுடைய ராவார்களா என்ன? அதன்பின்பு யாமுநேயர் சம்வித்சித்தி, ஆத்ம சித்தி, ஈச்வரசித்தி, ஆகமப்ராமாண்யம், சதுசுலோகீ, கீதார்த்தசம் க்ஷேபம், புருஷநிர்ணயம், ஸ்தோத்திரரத்தினம் என்னும் எட்டு ப்ரபந்தங்களை இயற்றியருளினர். அக்காலத்தில் குமுதாக்ஷன், சங்குகர்ணன், அஹிநேத்திரன், உஜ்வலன் வாமனன் என்பவர்களி னம்சம் பெற்றவர்களும் சம்சாரசாகரத்தில் மூழ்கியவர்களைக் கரை யேற்ற வல்லவர்களுமான ஆர்யர்கள் யாமுநேயருக்குச் சிஷ்யர்களா யினர். இவர்கள் முறையே இவ்வுலகில் மஹாபூர்ணமஹீஷியென்றும், ரங்கிகுசிலவாதீச்வரரென்றும், காஞ்சீபூர்ணரென்றும், ஸ்ரீமால்ய பிருத்தென்றும், கோஷ்டிபுரேசபூர்ணரென்னும், கியாதிபெற்றனர். ஸ்ரீயாமுநேயர் இத்தகைய சிஷ்யர்கட்கும் மற்றுமுள்ள சிஷ்யர்கட் கும் துவயத்துடன் உபநிஷத் ரஹசியத்தையும் திராவிடவேதத்தை யும், தாம் செய்தருளிய அமுதத்துக்கிணையான பிரபந்தங்களையும் பயிற்றுவித்தனர்.

இப்படியிருக்கும்போது ஒருநாள் ராமமிசிரர் யாமுநேயரைப் பார்த்து 'ஸ்வாமீ! தேவரீர் பிதாமஹர் நமக்கென்றொரு ரஹசி யத்தைக் குருகைகாவலப்பனிடம் ஒப்புவித்திருக்கின்றனர்; அவர் கங்கைகொண்டசோழபுரத்திலிருக்கின்றார்' என்றனர். இதனைக் கேட்டதும் யாமுநேயர் ராமமிசிரர் சொற்படி கங்கைகொண்ட சோழபுரஞ் சென்றனர். சென்றதும் அவர் அக்கங்கைகொண்ட சோழபுரத்தில் சிதைந்துகிடக்கும் ஒரு திருக்கோயிலின் சுவரரு கில் சமாதியிலிருக்கின்ற ஒருவரைக்கண்டு இவர்தான் குருகைகாவ லப்பனென்றெண்ணிக்கொண்டு அவரைச் சரண்புகவேண்டுமென் னுங் கருத்துடையவராய் அந்த யோகீச்வரரது சமயத்தைப் பார்த் துக்கொண்டு சுவருக்குப் பின்புறத்தில் ஒன்றும் பேசாது அரவ மின்றித் தமது சிஷ்யர்களுடன் அசைவற்றிருந்தனர். இவரிப்படி யிருக்க யோகத்திலிருக்கின்றவர் பின்னே திரும்பிப்பார்த்து 'சொட் டைக்குலத்திலுதித்தவன் யாரிங்கேவந்தான்' என்றனர். இப்படிச் சொல்லவே சுவரின் பின்புறத்தில் மறைந்திருந்த யாமுநேயர் அந்த

* நச்வரம்—நாசமுடையது, அநித்தியமானது.

யோகீச்வரரி னெதிரேவந்து பக்தியுடனவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுந்துநின்றுகொண்டு ‘ஸ்வாமீ! சுவருக்குப் பின்புறத்தில் ஒருவருமறியாதபடி மறைந்துகொண்டு அசைவற்றிருந்த அடியேனை எவ்விதமறிந்தீரோ? அறிகிலேன்’ என்றனர். அதற்கந்த யோகீச்வரர், ‘அப்பா! சொட்டைக்குலத்திலுதித்தவரல்லாதாரினநுக்கிரஹமன்றிதெனக்கு’ என்றனர். இதனைக்கேட்டதும் யாமுனேயர் மிகவும் வணக்கத்துடன் யோகீச்வரர் சமீபத்தில் சென்று ‘ஸ்வாமீ! அடியேனுக்கு யோகரஹசியஞானத்தை யுபதேசிக்க வேண்டும்’ என்றனர். அதற்கவர் ‘அந்த யோகரஹசியத்தை எனது அந்தியகாலத்திலுபதேசிக்கின்றேனுமக்கு’ என்று சொல்லித் தம்முடைய முடிவுகாலத்தைக்குறித்து ஒருபத்திரிகையிலெழுதி அப்பத்திரிகையை யாமுனேயரிடங்கொடுத்து ‘நீர் செல்வீர்’ என்றனர். யாமுனேயரும் அந்த யோகீச்வரரின் முடிவுகாலத்தைக்குறித்தெழுதப்பட்டிருக்கும்அப்பத்திரிகையைக் கைப்பற்றிக்கொண்டு ஸ்ரீரங்கநகரத்தைச் சேர்ந்தனர்.

இவ்விதம் யாமுனேயர் ஸ்ரீரங்கநகரத்திலெழுந்தருளியிருக்கும் போதொருநாள் ஸ்ரீரங்கராஜன் சந்நிதியில் ரங்கிகுசீலவேசரென்பவரால் இன்னிசையுடன் கானஞ்செய்யப்பெற்றதும் சேஷசயநன் புகழைப்பற்றிக் கூறுகின்றதுமான “நடமினோநமர்களுள்ளீர்” என்ற பாசுரத்தைக்கேட்டனர். அதனைக்கேட்டவுடன் ஸ்ரீயாமுனேயர் திருவனந்தபுரத்தில் திருவனந்தாழ்வான் திருமேனியில் சயனித்துக்கொண்டு திருக்கண்வளரும் ஸ்ரீபத்மநாபனை ஸேவித்து வரவேண்டுமென்னுந் திருவுள்ளமுடையவராய் அங்கிருந்தும் திருவனந்தபுரத்திற் கெழுந்தருளவே நடுவழியில் ஒருநாள் அம்முனிவரின் முடிவுகாலக்கை அறிவிக்கு மப்பத்திரிகையைப் பார்த்தனர். பார்க்கவே அன்றுதினமே அம்முனிவரின் † அவசானகாலமென்றறிந்துகொண்டு ‘ஐயோ! இனியென்செய்வது?’ என்று துக்கித்துக்கொண்டு ‘அத்தகைய யோகரஹசியத்தை யடையப்பெற்றிலேனே’ என்று மிகவும் *ஆர்த்தராய் தமது சிஷ்யர்களுடன் ஸ்ரீரங்கநகரத்

† அவசாநம்—முடிவு.

* ஆர்த்தர்—துன்புற்றவர்.

திற் கெழுந்தருளித் தமது ஸ்ரீவைஷ்ணவ † தர்சனத்தை நடத்து கின்றவர் யாரேனுமுளரோ? எனக்கருதினர். அதன்பின் யாமுனேயர் ஸர்வஜனங்களையும் ரக்ஷிக்கவேண்டுமென்னுந் திருவுள்ளத்துடன் * அஞ்சனாசலம் § குஞ்சரகிரி % கோஷ்டீபுரம் முதலிய திவ்யதேசங்களில் தமது சிஷ்யர்களிற் சிறந்த மஹாபூர்ணர் முதலிய மஹாவித்வான்களைத் தம்முடைய ஜயஸ்தம்பங்களைப்போல் நிலைபெறச்செய்து தமக்கிணையான ஒருவரைத் தாம் பெறவேண்டுமென்னும் விருப்பமுடையவராய் மற்றைய சிஷ்யர்கள் புடைசூழ ஸ்ரீரங்கத்திலெழுந்தருளி யிருந்தனர்.

16-வது சர்க்கம் முற்றுப்பெற்றது.

## 17-வது சர்க்கம்.

துண்டீரமென்னுந் தேசத்தில் இப்பூவுலகிற்கெல்லாந் திலகம் போன்றதும் எம்பெருமான் சரணாரவிந்தங்களிலிடையறாத பக்தியையுடையவர்களாய் வேதாந்தமார்க்கத்தில் விரைவில் செல்லும் வல்லவர்களான ¶ விப்ரர்கட்குறைவிடமாயுள்ளதுமான ஸ்ரீபெரும்பூதூரென்னும் ஒரூரிருக்கின்றது. அவ்வூரில், ஸர்வேச்வரனான பகவான், தனது சயனமாகிய சர்ப்பராஜனைப் பிரியப்போகின்றதைச் சகியாதவன்போல் பக்தனான சேஷனிடத்திலுள்ள வாத்சல்யத்தால் ஸ்ரீதேவியுடன் கேசவனென்னுந் திருநாமத்தையுடையவனைப் பெரும்பூதூரில் சேஷன் ஸ்ரீராமாநுஜனா யவதரித்ததற்கு முன்பேவந்து வாசஞ்செய்கின்றனனோ? எனத்தோன்றும்படி எழுந்தருளியிருக்கின்றனன். அப்பெரும்பூதூரில் பிராமணர்கள் செய்யும் வேள்வியினின்றெழுந்து செல்லும் புகையானது விண்ணிலுள்ள தேவர் குழாத்திற்கு மனமகிழ்ச்சியை யுண்டுபண்ணும்

---

† தர்சனம்—சாஸ்த்ரம்.

* அஞ்சநாசலம்—வடவேங்கடம்.

§ குஞ்சரகிரி—காஞ்சீபுரம்.

% கோஷ்டிபுரம்—திருக்கோஷ்டியூர்.

¶ விப்ரர்—பிராமணர்.

% வைஜயந்தியாகவும், மேலுலகத்திற்குச் செல்லும் மனிதர்கட்கு விரும்பியேறுதற்கிசைந்ததோ ரேணியாகவும், ஆகாயமாகிய பெரியதொரு கருங்குவளைமலரைக் கருதிச்செல்லும் வண்டினங்களின் வரிசையாகவும் காணப்பட்டது. அப்பெரும்பூதூரில் மாதவனிடத்தில் மாறுதபக்தியுடன்கூடிய மனத்தினையுடையவரும் ஆசூரிகுலமென்னும் அம்புநிதிக்கானந்தத்தைவிளைவிக்கும் அம்புலியாயுமிருக்கின்ற பிராமண உத்தமரொருவரிருந்தனர். அவர் மூவுலகத்தினரையும் ரக்ஷித்தற்கேற்ற புத்திரனுக்கு உத்பத்தி ஸ்தானமாய்த் தமது மஹிமையால் சிருஷ்டிகர்த்தாவான கச்யப்பிரஜாபதியையும் ஜெயித்தனர். அத்தகைய பிராமணோத்தமருக்கு மிகுந்த தண்ணளியுடன் கூடி விளங்கும் மனத்தினையுடைய ஒருவர் சித்திரைமாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் புத்திரராக ஜனித்தனர். அவர் அளவற்ற ஸத்குணங்களையுடைய சாதுஜனங்கட் குறைவிடமாயிருத்தலால் அவர் பிதா அவருக்கு ராமாநுஜனென்று பெயரிட்டனர்.

§ அவ்விராமாநுஜர் சுத்தாத்மாவாகவும் எம்பெருமானைத் தம்மிடத்திலிருத்திக்கொண்டவராகவும் சக்கிராங்கத்தையுடையவராகவும் ஸகலக்ஷமையின் பாரத்தைத் தாங்குகின்றவராகவும் மருத்தின் மகிழும் தமது விருத்தியையுடையவராகவு மிருந்துகொண்டு தமது சேஷத்தன்மையை பிரத்திபக்ஷமாய் யாவருமறியும்படி வெளியிட்டனர். அன்றியுமவர் வாயினின்றுண்டாகும் § விஷமமான விஷத்

---

% வைஜயந்தி—பதாகை, துகிற்கொடி.

§ அவ்விராமாநுஜர் என்பது முதல் வெளியிட்டனர். என்பது வரையுள்ள சொற்களில் சுத்தாத்மா வென்பதற்கு பரிசுத்த மனமுடையவரென்றும், வெளுத்த உடலை யுடையவரென்றும், சக்கிராங்கத்தை யென்பதற்கு திருவிலச்சினையை யென்றும், சக்கரம் போலுமடையாளமென்றும், க்ஷமையின் பாரத்தை யென்பதற்கு பொறுமையின் பாரத்தை யென்றும், பூமியின் பாரத்தையென்றும், மருத்தின் மகிழும் தமதுவிருத்தி யென்பதற்கு தேவர்களும் சந்தோஷிக்கத்தக்க தமது செய்கையென்றும், காற்றை மகிழ்ச்சியோடுண்டு ஜீவித்தலென்றும், சேஷத்தன்மையை யென்பதற்கு அடிமைத்தன்மையை என்றும்சர்ப்பங்களுக்கு அரசனானசேஷனது தன்மையை என்றும் இராமாநுஜர் பரமாகவும் ஆதிசேசேஷன் பரமாகவும் இருபொருள் படுதல் காண்க.

§ விஷமமான—பயங்கரமான.

துடன்கூடியிருத்தல் இரட்டை நாவுடைமை நேராய்ச்செல்லாது ¶ வக்கிரமாய்ச் செல்லுந்தன்மை யிவற்றுடன்கூடிய பாம்பின்வடிவை யகற்றி மானிடர் மகிழும் வடிவத்துடன் மூவுலகத்தினரும் வணங்குதற்குரிய இராமாநுஜனென்பவராக ஜனித்தனர். அன்றியும் அச்சேஷன் சகலஜகத்தின் பொறுப்பையுங் கைக்கொண்டிருக்கும் மதுவைரியான வாசுதேவனொருவனுக்கு மாத்திரம் † சேஷபூதனாகயிருத்தல் தனக்குப் போதாதெனக்கருதி உலகத்திலுள்ள எம்பெருமானடியார்களான யாவருக்கும் சேஷபூதனாக இருத்தலே சிறந்ததென்றெண்ணிக்கொண்டு இவ்வுலகிலிராமாநுஜனாக அவதரித்தனன். இவ்விதமவதரித்த இராமாநுஜனுக்கு சௌளம் முதலிய காரியங்கள் செய்துமுடிந்தபின் ஸ்ரீராமாநுஜரின் பிதா அவருக்கு விவாஹம் செய்வித்தனர்.

அதன்பின் அவ்விராமாநுஜர் நுண்ணிய நூற்பொருளையும் எளிதிலறிதற்குரிய மதிநுட்பமுடையவராய் அறிதற்குரிய விஷயத்தையுடைய சாஸ்திரங்களனைத்தையும் அப்பியசித்து ஸ்ரீகாஞ்சிநகரஞ்சென்று வரதராஜனை யுபாசித்தவண்ணமே வேதாந்தசாஸ்திரத்தைக் கற்கவேண்டுமென்று விருப்பமுடையவராய் யாதவப்ரகாசனென்ற * எதியிடஞ்சென்றனர். இவ்விதஞ்சென்று அவ்வாசிரியனிடங் கற்கும்போது சிஷ்யர்களுக்குக் கல்விகற்பிக்கின்ற யாதவப்ரகாசன் வேதாந்த சாஸ்திரத்திலுள்ள வாக்கியங்கட்கு அத்துவைதபரமாய் அர்த்தஞ்சொல்லவே லக்ஷ்மணார்யர் அந்த வேதாந்த வாக்கியங்கட்கெல்லாம் துவைதத்துடன் கூடியபொருளை வெளியிடுதலில் விருப்பமுடையவராய், தமது பாண்டித்தியத்தை யாவருமறியும்படி விஸ்தரித்தனர். இவ்விதம் இராமாநுஜரென்ற வித்வான் வேதாந்தத்தை துவைதபரமாய் வெளியிடுகின்றனர் என்ற விருத்தாந்தத்தைச் செவிக்கினிய தெள்ளமுதெனக் கேள்வியுற்ற யாமுனேயர் ஸ்ரீரங்கத்தினின்றும் தமது சிஷ்யர்களுடன் ஸ்ரீராமாநுஜரைக்காண்பதற்காகக் காஞ்சீபுரத்திற்கெழுந்தருளினர். அங்கெழுந்

---

¶ வக்கிரமாய்—கோணலாய்.

† சேஷபூதன்—அடியனாகப்பலித்தவன்..

* எதி—சந்நியாசி.

தருளியதும் அவர் வரதராஜனை ஸேவித்துவிட்டுத் திரும்பிவரும் போது பரிசுத்தமான அனந்ததீர்த்தக் கரையில் அதிநுட்பமான மதிநுட்பத்தையுடைய சிஷ்யர்களாற் சூழப்பெற்றுத் *தாராகணங்களுடன் கூடிய சந்திரன் போல் காணப்படும் யாதவப்ரகாசனைக் கண்டனர். அப்போதங்குள்ள சிஷயர்கள் மத்தியில் யாதவப்ரகாசன் பக்கத்தில் பிரகாசிக்கின்ற ராமாநுஜரைப் பார்த்து யாமுநேயரின் சிஷ்யர்கள், 'ஸ்வாமீ! இவர்தான் இராமாநுஜர்' என்று இரகசியமாய்க் கூறிக்கையை நீட்டிக்காண்பித்தனர். காண்பிக்கவே யாமுநேயர்மகிமைக்கு வைப்பிடமாய் விளங்கும் அவ்விராமாநுஜரைக்கண்டு 'இவனெப்போதெனக்கு சிஷ்யனுவானே?' என்றெண்ணிக்கொண்டு அவரைக்கிருபையுடன் நன்றாய்க் கடாக்ஷித்தனர். அதன்பின்பு யாமுநேயர் அவ்விராமாநுஜருடன் சம்பாஷிக்கவேண்டுமென்ற விருப்பமுடையவராயிருந்தும் எப்போதும் யாதவப்ரகாசனையே பின்பற்றிச்செல்லும் ராமாநுஜரைச்சந்தித்துச் சம்பாஷிப்பதற்குச்சமயம் நேராமலிருக்க 'இனியென்செய்வது' என்றெண்ணிக்கொண்டு ஸ்ரீராமாநுஜரைத்தயையால் குளிர்ந்த தமது திருக்கண்களின் பார்வையால் நன்றுயநுக்கிரஹித்துவிட்டு மறுபடியும் ஸ்ரீரங்கநகரம் வந்து சேர்ந்தனர்.

இங்ஙனிருக்க அச்சோழராஜன் புத்திரன் பயங்கரமான பிருமராக்ஷசினுல் பீடிக்கப்பெற்றவனுயினன். ஆகவே அச்சோழநாட்டரசன், குரூரகிருஹத்தின் மதத்தையடக்குதற்குரிய ஒப்பற்ற மந்திரவாதத்தில் வல்லவன் யாதவப்ரகாசனெனக்கேள்வியுற்று ஸ்ரீராமாநுஜன் முதலிய சிஷ்யவர்க்கங்களால் சேவிக்கப்பெற்ற யாதவப்ரகாசனை அவன் சிஷ்யர்களுடன் தன் நகரத்திற்கு வரவழைத்தனன். வரவழைத்ததும் அரசன் யாதவப்ரகாசனைப் பார்த்து 'எதிகளிற்சிறந்த யாதவரே! எனது புதல்வன் பிருமராக்ஷசினுல் பீடிக்கப்பட்டிருக்கின்றனன்; அவன் துன்பத்தினை உமது மந்திர சக்தியினுல் நிவிருத்திசெய்யவேண்டும்' என்று சொல்லி அந்தயாதவப்பிரகாசனைத் தன்புத்திரனிருக்குமிடத்திற்கழைத்துக்கொண்டுசென்றனன். அங்குச்சென்றதும் யாதவப்ரகாசன் பயங்கரமான பிரும

---

* தாராகணம்—நக்ஷத்திரக்கூட்டம்—* மகிமை—பெருந்தன்மை.

24

ரக்ஷஸினுலாவேசிக்கப்பெற்ற ராஜகுமாரனைப்பார்த்துவிட்டு அங்கிருந்தவண்ணமே உயர்ந்த தொருமந்திரத்தையுச்சரிக்க ஆரம்பித்தனன். இவ்விதம் ஆரம்பிக்கவே பிருமரக்ஷஸினுல் பீடிக்கப்பெற்றிருந்த ராஜகுமாரன் கோபாவேசத்துடன் அந்த யாதவப்ரகாசனுக்கெதிரே காலைநீட்டிக்கொண்டு அவனைப்பார்த்து 'ஏசன்னியாசியே! உன் மந்திரச்சொற்களின் வைபவத்தையும் உன்முன் ஜன்மத்தையும் எனது முற்பிறப்பையும் நன்ருயறிவேன்யான்; ஆனுல் நீயோ இவற்றிலொன்றையுமறியாய்; இப்படியிருக்க நீயேனிங்குவந்தாயென்னைச் சிக்ஷிப்பதற்கு' என்று சொல்லவும் யாதவப்ரகாசன் பிரமரக்ஷஸினுவேசத்துடன்கூடிய ராஜகுமாரனை நோக்கி 'ஹே பிருமரக்ஷஸே! நீயென் மந்திரத்தின் மகிமையையும் என் முற்பிறப்பையும் உன் முற்பிறப்பையும் அறிவேனென்கின்ருய்; அப்படி அறிந்திருந்தாலவற்றைச்சொல் இப்போது என்னிடம்' என்றனன். அதற்கந்த பிருமரக்ஷசு யாதவனைப்பார்த்து 'உன் மந்திரத்தின் வைபவம் என்போன்றவனிடஞ்செல்லாதென்பதே; அன்றியும் நீயோ முற்பிறப்பில் உடும்பாய் ஜனித்து மதுராந்தமென்னும் ஊரிலுள்ள அக்ரஹாரத்தின்சமீபத்திலிருக்கும்குளக்கரையிலுள்ளபுற்றில்வசித்துக்கொண்டிருந்து அப்புற்றையடுத்த பக்கங்களில்சஞ்சரித்துக்கொண்டிருந்தாய்; இப்படி உடும்பாய்ப் பிறந்து நீயங்குச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் போது * சேஷகிரியிற்றிகழும் எம்பெருமான் திவ்யோத்சவத்தை ஸேவிப்பதற்குச் செல்லும் திவ்யதேசவாசிகளான ஸ்ரீவைஷ்ணவர்கள் அக்குளக்கரையில்தங்கியிருந்து தாம்கொணர்ந்த ப்ரசாதத்தைப் புஜித்து விட்டுச்சென்றனர்; அப்போதங்குச் சிதரிக்கிடந்த பரிசுத்தமான ப்ரசாதத்தின் பருக்கைகளை நீபுஜித்தனை; ஆதலால் நீயிவ்வுலகிலித்தகைய சரீரத்தைப்பெற்றனை; யானோபூர்வஜன்மத்தில் பிராமணன்; பெரிய ஒரு யாகத்தைச்செய்யத் தொடங்கினேன்; அந்த யாகத்தில் மந்திர தந்திரங்களின் குறைவுபாட்டால் பிருமரக்ஷசினுருவத்தையடைந்தேன்; உனக்கு நான் சற்றும்பயப்படவில்லை; ஆனுல் நானிதோ வுன்பக்கத்திலிருக்கின்றவரும் சேஷனது அம்சம் பெற்றவராய் ஜனங்களை ரக்ஷிப்பதற்கென்றே ஜனித்திருக்கிறவரு

---

* சேஷகிரி—வடவேங்கடமலை.

மான இவ்விராமாநுஜரிடத்தினின்றும் அஞ்சுகின்றேன்; இவரென்னைப்பார்த்து இவ்விராஜபுத்திரனைவிட்டு விலகுவாயென்றுசொல்வராகில் யானிவ்விராஜகுமாரனையும் எனது பிருமராக்ஷசத்தன்மையையும் பலாத்காரமாய்விட்டு நீங்குவேன்' என்றது.

இவ்விதம் சொல்லவும் ஸ்ரீராமாநுஜர் அந்த பிருமராக்ஷசைத் தமது கண்களால் கடாக்ஷித்தனர். அப்போதந்த பிருமராக்ஷசு ஸ்ரீராமாநுஜரைப் பார்த்து 'ஸ்வாமீ! அமுதினுக்கிணையான உமது பார்வைகளால் என்னைத் தொடர்ந்திருந்த துஷ்கர்மங்களனைத்தும் தொலைந்துபோயின; என்னைப்பற்றியிருந்த ராக்ஷசத்தன்மையும் நீங்கிற்று' என்றுகூறிபக்தியுடனவ்விராமாநுஜரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிற்று. வணங்கவே யாதவப்ரகாசன் இராமாநுஜரைக் குறித்து 'இராமாநுஜா! இந்த பிருமராக்ஷசு ராஜகுமாரனைவிட்டு நீங்கும்படி உத்தரவு செய்வாய்' என்றனன். இப்படிச் சொல்லவுமிராமாநுஜர் 'ஹே பிருமராக்ஷசே! யானுன்னையென்வசப்பட்டு நடக்கின்றவனாயறிகின்றேன்; ஆகலால் நீயிவ்விராஜகுமாரனைவிட்டு நீங்கி உன்னிஷ்டப்படி சந்தோஷத்துடன் செல்வாய்; நீசென்றதற்கடையாளமாக உனது வாசஸ்தானமாகிய அரசமரத்தையடியோடு சாய்த்து அரசன் மனக்கவலையையுமகற்றுவாய்' என்று மதுவினுமினிய வாக்கினாலுரைத்தனர். இப்படிக்கூறிய இராமாநுஜரின் நியமனத்தை பெலமாய்ப்பற்றிக்கொண்ட அந்தப் பிருமராக்ஷசு தன்னைப்பற்றியிருந்த தோஷங்களுடன் அவ்விராஜகுமாரனைவிட்டகன்றதுமன்றி அவ்வரசன் மனக்கவலையையும் தனக்குறைவிடமான அரசமரத்தையுமடியோடு சாய்த்தது. இதனைக்கண்ணுற்ற அரசனும் யாதவப்ரகாசனும் பிருமராக்ஷசு தான் கூறியபடி விலகிற்றென்று நினைத்துக்கொண்டு அந்த பிருமராக்ஷசினிடத்தில் விசுவசித்தனர்.

இவ்வாறு இராஜகுமாரனைப்பற்றியிருந்த கிரஹபந்தம் நீங்கவே அரசன் அளவற்ற ஆனந்தத்துடன் கூடியவனாய் சேஷாம்சப்பெற்றுச்சிறப்புற்றுயர்ந்த ஸ்ரீராமாநுஜரை வெறுப்புடனிருக்கும் வித்வான்களின் முன்னே மிகவும்போற்றிப்பூஜித்துவெகுமதி அளித்தனன். அளிக்கவே ஐம்பொறிகளையுமடக்கு மாற்றலையுடைய இராமாநுஜர் தமக்கரசன் கொடுத்த பரிசினையனைத்தும் பக்தியுடன்

தமது குருவாகிய யாதவப்ரகாசனுக்கு § அர்ப்பணம்செய்துவிட்டுத் தமது திருவுள்ளத்தில் தேவராஜனைத் தியானித்தவண்ணம் அவ்விடத்தினின்றும் திருப்பித்தமது குருவுடன் காஞ்சீநகரஞ்சென்றனர். அங்குச்சென்றபின்பு ஒருநாள் ஸ்ரீராமாநுஜர் தமது குருவாகிய யாதவப்ரகாசனுக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கும்போது அந்த யாதவப்ரகாசன் வேதாந்தத்திலுள்ள ஒரு வாக்கியத்திற்கு அதின் உண்மைப்பொருளையுணராது விபரீதமாய் வேறு பொருளை விரித்துரைக்கவே அதனைக் கேட்டாற்றுத் துக்கத்துடன் கூடிய இராமாநுஜரின் கோபத்தினால் கொதித்தெழுந்த கண்ணீர் யாதவப்ரகாசன் தொடைகளில் வீழ்ந்தது. வீழ்தலும் அக்கண்ணீர்த் துளிகளின்சூடு குருவின் தொடைகளிற்றாக்கவே எதியாகிய யாதவப்ரகாசன் கோபத்தினால் கண்களிரண்டுந் தெரியாதவனாய் லக்ஷ்மணார்யரை நோக்கி 'ஹே * ப்ரதிகூல! இன்றுமுதல் நானுனக்குக் கல்விகற்பிக்கமாட்டேன்; நீயென் கண்களுக்கெதிரே நில்லாதே; எங்கேயாகிலு முன்னிஷ்டப்படி செல்வாய்' என்றனன். இதனைக்கேட்டதும்இராமாநுஜர் பாடத்தை நிறுத்திவிட்டு அக்குருவைவிட்டு நீங்கிச்சென்று தமது பார்யையுடன் அக்காஞ்சீநகரத்திலேயே வாசஞ்செய்துகொண்டு ஹஸ்திகிரி † வல்லபனை வரதராஜனுக்குத் தினந்தோறும் சாலைக்கிணற்றினின்றும் தீர்த்தங்கொணர்ந்து ஸமர்ப்பிக்கும் கைங்கரியத்தைச் செய்துவந்தனர்.

இஃதிப்படி யிருக்க ஸ்ரீரங்கத்தில் யாமுநேயர் ராமாநுஜரின் செய்தியைக்கேள்வியுற்றுவேதாந்தத்தின்மெய்ப்பொருளுக்குமாறாய் விரித்துரைசெய்த யாதவப்ரகாசனிடத்தினின்றும் நீங்கி இராகுவினிடத்தினின்றும் விடுபட்ட சந்திரன் போல்ப்ரகாசிக்கும் இராமாநுஜரைத்தமது மதத்தில் சார்புடையராய்ச் செய்யவேண்டுமென்றவெண்ணத்துடன் மதிமான்களிற் சிறந்த பெரியநம்பிகளை அக்காஞ்சிபுரத்திற்கனுப்பினர். அப்பெரிய நம்பிகளும் விரைவில் ஸ்ரீரங்கத்தினின்றும் காஞ்சீபுரஞ்சென்று சாலைக்கிணற்றினின்றும தீர்த்தங்

§ அர்ப்பணஞ்செய்தல்—கொடுத்தல்.

* ப்ரதிகூலன்—விரோதமான பக்ஷத்தைக்கைப்பற்றியவன்.

† வல்லபன்—நாதன்.

கொண்டுவருதற்குச் சென்றிருக்கும் ஸ்ரீராமாநுஜரின் சமீபத்தில் சென்று தாம்வந்திருப்பதை அவருக்கு வெளியிடவேண்டுமென்றும் விருப்பமுடையவராய் எம்பெருமானுடைய † உத்கர்ஷத்தைவெளிப் படுத்தும் * ஸ்தோத்திரரத்தினத்திலுள்ள ஒரு சுலோகத்தைத் தன்படியாய்ச் சொல்லிக்கொண்டிருந்தனர். எம்பெருமானின் திவ்ய சரிதத்தை வெளியிடுகின்ற அந்த சுலோகத்தைத் திருச்செவிசாற் றிய ஸ்ரீராமாநுஜர் ஆனந்தத்துடன் பெரிய நம்பிகளைப்பார்த்து 'ஸ்வாமீ! செவிகட்கினிய இத்தகையசுலோகம் எவராலியற்றப்பெற் றது? இவ்வாசிரிய ரெங்கே யிருக்கின்றனர்? இவரைக்காணவேண்டு மென்னுங்கருத்துடையவனுயிருக்கின்றேன்' என்றனர். அதற்குப்பெ ரியநம்பிகள் 'ராமாநுஜா! இத்தகைய சுலோகத்தைச் செய்தருளிய வர் யாமுநேயரென்ற யோகீச்வரர்; அவர் ஸ்ரீரங்கத்திலெழுந்தருளி யிருக்கின்றனர்; அவருமக்கு மிகவும் § சுலபரே; இஃதுண்மை; அங் குச் சென்றால் காணலாமவரை' என்று சொல்லி ஸ்ரீராமாநுஜரைத் தம்முடனழைத்துக்கொண்டு விரைவில்சென்று கதம்பதீர்த்தத்தை யடைந்தனர்.

அங்கிருந்தும் அவ்விருவரும் ஸ்ரீரங்கத்தை நாடிச்செல்லவே காவேரியின் கரையில் கலகலவென்ற சப்தத்துடன் காணப்படும் ஸ்ரீவைஷ்ணவர்களின் கூட்டத்தைக்கண்டு மிகவும் மனவருத்தத் துடன் கூடியவர்களாய் வழியிற் செல்கின்றவர்களிடம் விசாரிக்க வே 'யாமுநேயயோகீச்வரர் பரமபதத்தையடைந்தனர்' என்று அவர் கள் சொல்ல அதனைக்கேட்டதும் சோகத்தால் மூர்ச்சையடைந்து வச்சிராயுதத்தால் மார்பிலடிபட்டவர்போலாயினர். அதன் பின்பு மூர்ச்சை தெளிந்தவுடன் பெரிய நம்பிகள் * விதியின் † கதியைப் பற்றி வெறுப்புடனிகழ்கின்ற ஸ்ரீராமாநுஜரை அழைத்துக்கொ ண்டு சென்று காவேரியின் கரையில் யாமுநேயரைப் பள்ளிபடுக்கத்

---

† உத்கர்ஷம்—மேன்மை.

* ஸ்தோத்திரரத்தினம்—ஆளவந்தார் ஸ்தோத்திர நூல்.

§ சுலபர்—எளிதிலெய்தற்குரியவர்,

* விதி—ஊழ்.

† கதி—போக்கு.

தோண்டிவைத்திருக்கும் உப்புகிடங்கினோரத்தில் நின்றுகொண்டு அவ்விராமாநுஜரை யோகிகளிற் சிறந்த யாமுநேயரின் புண்ணிய சரீராவயவங்களை சேவிக்கச்செய்தனர். ஸ்ரீராமாநுஜர், யதிவரரான யாமுநேயரின் அவயவங்களைக் கண்ணுற்றதும் அடங்காததுக்கத்துடன் அவிழ்ந்து சிதறிய கேசங்களையுடையவராகவும், வாய்விட்டலருகின்றவராகவும், பூமியில் வீழ்ந்து பொருந்தியதால்புழுதி படிந்த அவயவங்களையுடையவராகவும் கலக்கத்தாலுலைவுறுகின்ற ¶ கரணங்களையுடையவராகவும் யதிவரரானயாமுநேயரைத்தண்டன் சமர்ப்பித்தனர்.

அக்காலத்தில், ஸ்ரீராமாநுஜரிடத்திலிருந்த தைரியமானது துக்கத்தால் பின் அடைந்து தூரத்தில் சென்றது. செல்லவே அவரது கண்களைக்கண்ணீர் கவர்ந்துகொண்டது. அவரது திருமேனியை நடுக்கமென்பது நலிவுறச்செய்தது. அவரது மனத்தைச் * சந்தாபமென்பது தன்வசமாக்கிக்கொண்டது. உலகத்தில் வெல்லுதற்குரிய வல்லவனொருவன் பின்னடைவானாகில் அபஜயமடைந்தோரனைவரும் மேன்மையடைவான்றே! இப்படியானபின்பு ஸ்ரீராமாநுஜர் யாமுநேயரின் திருவடித்தாமரைகளின் பக்கத்தில் நின்றவண்ணம் அவருடைய எல்லாஅவயவங்களையும் தம்முடைய கண்களால் செவ்வையாய்ப் பார்க்கவே யாமுநேயர் வியாச சூத்திரங்கட்குப் பகவத்பரமான § தத்வார்த்தத்தை வெளியிட்டு உதவுதற்கிசைந்தகொரு * வியாக்கியானத்தைச்செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்ததற்கறிகுறியாய் ஸ்ரீயாமுநேயரின் அந்தியகாலத்தில் அவர்திருக்கரத்தில் புதிதாய்க்காணப்பட்டிருந்த § அடையாளமானது அந்தக்ஷணத்தில் தானே மறைந்துபோயிற்று. அதனைக்கண்டதும் அங்குள்ளயாவரும் ஆச்சர்யமடைந்தனர். அந்தச்

¶ கரணங்கள்—மெய் வாய் கண் மூக்குச்செவி என்பன.

* சந்தாபம்—மிகுந்தவெப்பம்.

§ தத்வார்த்தம்—உண்மைப்பொருள்.

† வியாக்கியானம்—உரை.

§ அடையாளம் என்றது குருபரம்பரா ப்ரபாவமென்ற கிரந்தத்தில் ஸ்ரீ ராமாநுஜர் யாமுநேயரின் சரமவிக்ரஹத்தை ஸேவிக்கும்போது யாமுநேயரின் திருக்கைவிரல்களில் மூன்று மடங்கியிருக்கக்கண்டு முன்னுமிவர்க்

சமயத்தில் வித்வானாகிய ஸ்ரீராமாநுஜர் சோகானலத்தால் சூழப்பெற்ற தமது மனமாகிய அபக்குருண்டையில் எதிவரராகிய யாமுனேயரின் அத்தகைய புண்ணிய சரீராவயவங்களைத் தமக்குக் கிடைத்த உண்மைப்பொருளாகிய † நிதியைப்போல் பரிவுடன் விரைவில் பதித்துவைத்துக்கொண்டனர். இவ்விதம் யாமுனேயரை இதயத்திலிருத்திவைத்துக்கொண்ட இராமாநுஜர் தம்மனதில், இந்த யாமுனேயர் ஜீவித்துக்கொண்டிருக்கும்போதே இவ்வாசிரியரிடத்தினின்றும் தத்துவார்த்தத்தைக்கிரஹித்துக்கொள்ளுமபடி ஸ்ரீரங்கராஜன் நமக்கநுக்கிரஹம்செய்யவில்லையே; என்று நினைத்துக்கொண்டு தமது திருவுள்ளத்தில் தீராத்துன்பத்தையுடையவராய் ஸ்ரீரங்கராஜனை ஸேவியாமலே அக்காவேரிக்கரையிலிருந்து திரும்பிக் காஞ்சீநகரத்தையடைந்தனர்.

அவ்விராமாநுஜரங்கெழுந்தருளியதும் காஞ்சீநகரத்திற்கதிபதியான எம்பெருமானை முன்போலவே அர்ச்சிப்பதில் ஆதரவுடையவராயிருந்துகொண்டு வரதராஜனது வசனாம்ருதத்தைப்பருகுதற்கிசைந்த பாத்திரமாய் விளங்கும் திருக்கச்சிநம்பிகள் வம்சத்தில் தாழ்ந்தவராகவிருந்தும் அவரைத்தபக்காசார்யனாகச் செய்துகொள்ளவேண்டுமென்று திருவுள்ளம்பற்றினர். ஏனெனில் மஹாத்மாக்களின்வம்சம் முதலியவற்றைத் தாழ்ந்ததாக மதியார்களன்றோவுலகில்.

---

கிப்படியுண்டோ'வென்று முதலிகளைக்கேட்க, முன்பில்லை இப்போது கண்டதித்தனை யென்ன' ராமாநுஜர் இவ்வாசார்யன் வியாக்கியான சமயங்களில் அபிமதசல்லாபங்களைக்கேட்டவர்களுண்டோ? என அதற்கங்குள்ளார். 'வேறொன்றுமறியோம்; வியாச பராசரரிடத்திலுபகாரஸ்மிருதியும், நம்மாழ்வாரிடத்தில் பிரேமாதிசயமும், விசிஷ்டாத்வைதபரமாய் வியாசசூத்திரத்திற்கு வியாக்யானம் செய்தலில் இச்சையுமுண்டென்பதைப் பலகாலுஞ்சொல்லக் கேட்டிருக்கிறோம்'என்ன, அதற்கு ராமாநுஜர் 'இச்சரீரம் திடமாயிருந்து இவ்வாசார்ய கிருபையுமடியேனிடத்தில் பரிபூர்ணமாயிருக்குமாயின் சர்வேசுவரன் அடியேன் நினைத்தபடி கூட்டுவானாகில் இக்குறையைத்தீர்க்கக்கடவேன்' என்று கூறியிருப்பதற்குக்காரணமான மூன்றுவிரல்கள் மடங்கியிருத்தல் என்பதைக்குறிக்கின்றது என்றுணர்க.

† நிதி—புதையல்.

இவ்விதம் ஸ்ரீராமாநுஜர் தம்மனத்திற்கருதிய விஷயத்தைத் திருக்கச்சிநம்பிகளிடந் தெரிவித்து வணக்கத்துடன் பிரார்த்திக்கவும் நம்பிகள் 'ராமாநுஜரே! யான் வரதராஜன் கிருபைக்குப் பரிபூர்ண பாத்திரமாயிருந்தபோதிலும் பிராமணோத்தமர்கள் கைக்கொண்டிருக்கும் லோகவழக்கத்திற்குமாறாய் நடப்பதுயுக்தமன்று; ஆதலால் நீரென்னை யாசார்யனாக வரிப்பது தகாது' என்று தடுத்தனர். நல்லோர்கள் தமக்குள்ள மேன்மையை வெளிப்படுத்த மாட்டார்களன்றோவுலகில்.

திருக்கச்சிநம்பிகள் இவ்விதம் மறுத்துவிடவே ஸ்ரீராமாநுஜர் நம்பிகளைப்பார்த்து 'நம்பிகாள்! இப்படியானால் என் மனத்திற் சில விஷயங்களை நினைத்துக்கொண்டிருக்கிறேன்; இவற்றை ஸ்ரீ காஞ்சிபதியான தேவராஜனிடந்தெரிவித்து அடியேன் செய்யவேண்டியது இன்னதென்பதை எம்பெருமான் திருவாய்மலர்ந்தருளியபடி அடியேனுக்கு விடையளிக்கவேண்டும்' என்றனர். அதற்கு நம்பிகளுமப்படியே செய்கிறேனென்றங்கீகரித்துக்கொண்டு இதனை ரஹஸியத்தில் தேவராஜனிடந்தெரிவிக்கவேண்டுமென்ற திருவுள்ளத்துடன் சென்று எம்பெருமானுக்குத் திருவாலவட்டகைங்கர்யம் செய்துகொண்டிருக்கும்போது, எம்பெருமான நம்பிகளைப்பார்த்து, 'நம்பீ! நம்மிடமென்ன விஷயத்தைத் தெரிவிக்கவேண்டுமென்றெண்ணிக்கொண்டிருக்கின்றாய்' என்றனன். அதற்கு நம்பிகள் பகவானைப்பார்த்து மிகவும் வணக்கத்துடன் கைகுவித்துக்கொண்டு 'தேவேசா! ராமாநுஜரென்ற வித்வான் தம்மனத்திற் சில அர்த்தவிசேஷங்களை நினைத்துக்கொண்டிருப்பதாயும் அவற்றை தேவரீருக்குத்தெரிவித்து அவற்றின் ஹிதாஹிதங்களைத்தெரிந்து தமக்குச்சொல்லவேண்டும்' என்றனர். இவ்விதம் திருக்கச்சிநம்பிகள் தெரிவிக்கவும் காஞ்சிபுராதிபதியான கமலாநாதன், 'நம்பீ! நம்முடைய ராமாநுஜன் மதிமான்களிற் சிறந்தவன்; § சஹஜமான தாசத்தன்மையைச் சற்றும்தவறின்றிக்கைக்கொண்டிருப்பவன்; இஃதன்றியும் அவன் எனது கருத்தையும் எல்லாப்பொருள்களின் தத்துவத்தையும் நன்

§ சஹஜம்—உடன் பிறந்தது.

குணர்ந்தவன். அவன் எது குலநாதனுன கண்ணன், முன்பு † சாந்திபநியென்ற வித்வானிடத்தில் சகல வித்தைகளேயு மெவ்விதம் விரைவில் கேட்டுக்கொண்டனனே அப்படியே ஆசார்யர்களிடத்தினின்றும் சகலார்த்தங்களேயும் கைப்பற்றிக்கொண்டு எனது நிய மனத்தின்படி இவ்வுலகிலுள்ள சமஸ்த ஜனங்களேயும் ரக்ஷிக்கவேண்டுமென்று கருதுகின்றனன். இன்னுமவன் நினைத்திருக்கின்றவற்றிற்கு * உத்தாம் சொல்கின்றேன்கேள். 'யானே தத்வம் % துவைதத்துடன் கூடியதே மதம். ப்ரபத்தியே உபாயம். இவற்றைக் கைப்பற்றினுல் மோக்ஷம் சித்திக்கும். அந்திய காலத்தில் ¶ அவனே நினைக்கவேண்டுமென்பதில்லே. அன்றியும் நம் ராமானுஜன் பெரிய நம்பியை ஆசிரயிக்கவேண்டும்' என்றனர்.

இப்படி யெம்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய இவ்வருக்திகளே நம்பிகள் மறுநாள் ஸ்ரீராமானுஜரிடம் தெரிவிக்கவே ராமானுஜர் திருக்கச்சிநம்பிகளின் திருவடிகளில் தண்டன்சமர்ப்பித்து ஆனந்தத்தால் காணப்படுகின்ற அளவற்ற § ரோமாஞ்சத்தையுடையவராய் அப்போதே அங்கிருந்தும் ஸ்ரீரங்கத்திற்குப் பிரயாணமாயினர். இது இப்படியிருக்கவும் பெரியநம்பிகள் யாமுனேயாசார்யரருளிச்செய்ததைப் பொய்யாதிருக்கும்படி செய்யக்கருதி ஸ்ரீராமானுஜரைத்தமது சொற்படி நடக்கின்றவராய்ச் செய்வதற்காக ஸ்ரீரங்கத்தினின்றும் தமது சிஷ்யர்களநுமதியைப்பெற்றுக்கொண்டு பிரயாணம் செய்தனர். இவ்விதம் பிரயாணமா யெழுந்தருளுகின்ற பெரியநம்பிகள் வழியில் வந்த சிரமத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்ற திருவுள்ளத்துடன் வழியிலுள்ள மதுராந்தகாக்கிரஹாரத்தில் ஏரிகாத்தபெருமாளான எம்பெருமான் திருக்கோயிலேச் சேர்ந்தனர். அதேசமயத்தில் காஞ்சிபுரத்தினின் றெழுந்தருளுகின்ற

---

† சாந்தீபநி என்பவர் பலராமகிருஷ்ணர்கட்காசார்யரும் அவந்திநகரவாசியுமான ஒரு முநிவர்.

* உத்தாம்—விடை.

% துவைதம்—இரண்டுவிதமான பேதமென்றும், இரண்டு என்றும் பொருள்படும்.

¶ அவனே—எம்பெருமானே.

§ ரோமாஞ்சம்—மயிர்க்கூச்சு.

இராமாநுஜரும் அவ்வேவரிகாத்தபெருமாள் கோயிலை யெய்தினர். அங்கு எழுந்தருளியதும் ஸ்ரீராமாநுஜர் பெரியநம்பிகளைக்கண்டு பேரானந்தமடைந்தனர். உலகத்திலொருவருக்குத் தான் கருதிய பொருள் எளிதிற்கைகூடுமாயின் அதனினுமானந்தத்தைச்செய்வதி யாதிருக்கின்றது. அப்போது * ஸ்ரீலக்ஷ்மணார்யர் பெரியநம்பிகளைப் பார்த்து 'ஸ்வாமீ! அடியேன் முற்காலத்திற்செய்த புண்ணிய விசேஷத்தால் தேவரீரைக்கிட்டப்பெற்றது அம்புஜமலருக்கு ஆதவனுதயம் போலாயிற்று' என்றுயர்ந்த தொனியுடன்சொல்லிக்கொண்டு தமக்கு அவரிடத்திலுள்ள பக்தியை யாவருமறியும்படி வெளியிட்டுக்கொண்டு அப்பெரியநம்பிகளின் சரணகமலங்களில் வீழ்ந்து தண்டன் சமர்ப்பித்தனர். இப்படி தண்டன்சமர்ப்பித்தவண்ணம் தரையிற் கிடக்கின்ற இராமாநுஜரைப் பெரியநம்பிகள் தமது கைகளால் தூக்கியெடுத்துத் தழுவிக்கொண்டு அன்புடனுச்சிமோந்துபார்த்து மயிர்க்கூச்சலுடன்கூடிய வடிவத்தையுடையவராய் மனமகிழ்ச்சியடைந்தனர். உலகத்தில் பிரியஜனங்களின் சேர்க்கையானது எதனைத்தான் செய்யாதிருக்கின்றது.

அப்போது இராமாநுஜர் வணக்கத்துடன் தமது கைகளைக் கூப்பிக்கொண்டு அப்பெரியநம்பிகளைப்பார்த்து 'ஸ்வாமீ! தேவரீர் முதலில் அடியேனுக்கு ஹிதோபதேசம்செய்து தேவரீருடைய அழகிய திருவடித்தாமரைகளில் ஆசிரயித்தவனாக அடியேனை அங்கீகரித்துக்கொள்ளவேண்டும்' என்று பிரார்த்திக்கவே அப்பெரியநம்பிகள் 'ராமாநுஜா! § மேதாவியான வுன்னை நான் ஸ்ரீகாஞ்சீநகரத்திற்கலங்காரமாய் விளங்கும் புண்ணிய கோடிவிமானத்தின் நிழலில் வரதராஜன் சந்நிதியில் சிஷ்யனாக அங்கீகரித்துக்கொள்கிறேன்' என்றனர். அதற்கு லக்ஷ்மணார்யர் 'ஸ்வாமீ! எல்லாமுணர்ந்த தேவரீருமிப்படி நியமிக்கின்றதென்னோ வறியேன்; அங்கங்களோ இயல்பாகவே பங்கமடைதற்குரியன; † சித்தவிருத்தியோ க்ஷணப்போதுமொரு தன்மையதாயிருக்கின்றதில்லை; அன்றியும் மின்னலைப் போல் சஞ்சலமான பிராணனின் இருத்தலையும், அது சரீரத்தி

* லக்ஷ்மணார்யர்—இராமாநுஜர்.

§ மேதாவி—உணர்ந்ததை மறவாதிருக்கும் புத்தியையுடையவன்.

† சித்திவிருத்தி—மனநிலைமை.

னின்றும் வெளியேறிப்போதலையும் யார்தாமறிகின்றனர்; ஸ்வாமீ! முன்பு நாமிருவரும் யாமுநேயரின் பாதசேவைசெய்யவேண்டுமென்ற விருப்பத்துடன் ஸ்ரீரங்கநகரத்தையடைய அதற்குமுன்பே பரமபதத்தையடைந்த ஒப்பற்ற யாமுநேயயோகீசுவரரால் மானிடர்களின் நிலையாமை நன்குணரலாகுமன்றோ; ஆதலால் இப்போதே இந்த ஏரிகாத்த பெருமாளான எம்பெருமான்முன்பே இம்மகிழமாத்தடியில் தேவரீருடைய ஹிதோபதேசங்களால் அடியேன் மனதை § ஆதித்தியன் தன் கிரணங்களா லம்புஜமலரினையலரச் செய்வதுபோல் குறைவற்ற நல்லறிவுடன்கூடியதாய்ச்செய்தருள வேண்டும்' என்றனர்.

அப்போது பெரியநம்பிகள் யாமுநேயரின் திருவடித்தாமரைகளைத்தமது மனதில் தியானித்துக்கொண்டு தத்துவார்த்தத்தை வெளியிடுகின்ற துவயமென்னும் மந்திரரத்தினத்தைக் குருபரம்பரையுடன்கூடியதாய் அவ்விராமாநுஜருக் குபதேசித்தருளினர். அதன்பின்பு பெரியநம்பிகள் ராமாநுஜரைப்பார்த்து 'ராமாநுஜா! முற்காலத்தில் ஜகத்தை ரக்ஷிப்பதற்காக ஸ்ரீராமன் தன் * பாதுகைகளைப் பரதனிடங்கொடுத்துவிட்டு எவ்விதம் கானகஞ்சென்றனனோ அவ்விதமே ஸ்ரீயாமுநேயரும் இம்மந்திரரத்தினத்தைக் காப்பதற்காகத் தம்முடைய சரணங்களாகிய உன்னை என்னிடமொப்பித்துவிட்டு வானகமடைந்தனர்; ராமாநுஜா! உனக்கு இந்த துவயமந்திரத்திற்குரிய உயர்பொருளைக் காஞ்சீநகரத்தில் பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்கின்றேன்வா' என்று சொல்லி அவ்விராமாநுஜரை யழைத்துக்கொண்டு அப்பெரியநம்பிகள் அங்கிருந்து காஞ்சீநகரத்திற்கெழுந்தருளி அங்கு அம்மந்திரார்த்தமாய் விளங்கும் வரதராஜனையவருக்குக் காண்பித்தனர். பின்பு அப்பெரியநம்பிகள் தமது % பார்யாசஹிதராய் ஆறு மாசம்வரை யங்கிருந்துகொண்டு வரதராஜ பாதாரவிந்தசேவை செய்தவண்ணமே தமக்கு ஆளவந்தாருபதேசித்தருளிய ஸ்ரீவைஷ்ணவ † தர்சனத்தின் மறைபொருள்

§ ஆதித்தியன்—சூரியன்.
* பாதுகை—பாதகுறடு.
% பார்யாசஹிதராய்—மனைவியுடன் கூடியவராய்.
† தர்சனம்—சாஸ்த்ரம்.

களனைத்தையும் அங்கு பார்யாசஹிதராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராமாநுஜருக்கு விரித்துரைத்தனர்.

இப்படியிருக்கும்போதொருநாள் பெரியநம்பிகளின் தேவிகளும் ஸ்ரீராமாநுஜரின் தேவிகளும் ஒரு கிணற்றில் ஜலம் தூக்கும்போது அவ்விருவர்களின் குடங்களுமொன்றோடொன்று சேரவே அவ்விருவரும் கோபமுற்றவர்களாய் மனவருத்தமடைந்தனர். அப்போது ராமாநுஜரின் தேவிகளால் பெரியநம்பிகளின் தேவிகள் அவமதிக்கப்படவே இதனையறிந்த பெரியநம்பிகள் இனி 'இங்கிருத்தல் தகாது' என்றெண்ணிக்கொண்டு தமது * பார்யையுடன் ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருளினர். இவ்விதம் கோபத்துடன் பெரியநம்பிகள் பிரயாணமாகவே ராமாநுஜர் தமது பத்நிகள் பெரியநம்பிகள் விஷயத்தில் செய்த § அபசாரத்தாலும் முன்பு திருக்கச்சிநம்பிகள் விஷயத்தில் செய்த தவறுதலாலும் மனவருத்தமுற்றவராய்ப் பிறப்பில் வெறுப்புற்று, திரிதண்டகாஷாயங்களையுடையவராய் சன்னியாசம் செய்துகொண்டனர்.

இவ்விதம் சன்னியாசத்தைக் கைக்கொண்ட இராமாநுஜர் தமது திருக்கரத்தில் திரிதண்டத்தைத் தரித்துக்கொண்டவராய்த் தமது பந்துவர்க்கங்களனைவரையும் பற்றறக்கைவிட்டனர். ஆனாலவர் வாதூலகோத்திரத்திலுதித்தவரும் வித்வான்களிற் சிறந்தவரும் தம்முடைய தமக்கையரின் புத்திரருமான முதலியாண்டானென்பவரை மாத்திரம் கைவிடாதிருந்தனர். இப்படியிருக்கும்போது யாதவப்ரகாசரின் தாயார் தம்புத்திரனைப்பார்த்து 'புத்திரா! நீ, வைதிக நெறிமுறையை வெளிப்படுத்துகின்ற இராமாநுஜாசார்யனைப்போலவே சன்னியாசம் செய்துகொண்டு திரிதண்டத்தைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும்' என்றனள். அதற்கு யாதவப்ரகாசர் யாதொன்றும் சொல்லாமல் தாம் பூமி முழுவதையும் பிரதக்ஷிணம் பண்ணிவரவேண்டுமென்ற நினைவுடையவராய் அன்று ராத்திரி நித்திரை புரிந்தனர். அப்பொழுது அவர்கனவினில் வரதராஜன்தோன்றி 'யாதவா! நீயேன் பூமி முழுவதும் சுற்றி வலம்வரவேண்டுமென்று கருது

---

* பார்யை—மனைவி.

§ அபசாரம்—மனதிற்கிசையாது நடத்தல்.

கின்றாய்; நம்மிராமாநுஜனைப் பிரதக்ஷிணஞ்செய்வாயாகில் அதுவே பூமிவலம்வந்ததற் கிணையாகும்' என்றனர்.

இவ்விதம் சுவப்பனத்தில் வரதராஜன் மொழிந்தசொற்களைக் கேட்ட யாதவப்ரகாசர் அச்சொற்களில் நம்பிக்கையற்றவராய் மறுநாட்காலையில் திருக்கச்சிநம்பிகளிடஞ் சென்று 'நம்பிகாள்! யானொன்று நினைத்திருக்கின்றேன்; இன்று இதனை வரதராஜனிடம் தெரிவித்து விடையளிக்கவேண்டுமெனக்கு'என்றனர். அதற்கு நம்பிகளும் 'அப்படியே செய்கிறேனென்று' அங்கீகரித்துக்கொண்டு சென்று அன்று ஏகாந்தத்தில் எம்பெருமானிடம் விண்ணப்பஞ்செய்யவே வரதராஜன் 'நம்பீ! யான் நேற்றையதினம் யாதவன் சுவப்னத்தில் சொல்லியபடியே அவனதனைச் சங்கையன்றியில் செய்யட்டுமென்று' * உத்தரம் அளித்தனன். இப்படி வரதராஜன திருவாய் மலர்ந்தருளிய செய்தியைத் திருக்கச்சிநம்பிகள் யாதவப்ரகாசரிடந் தெரிவிக்க இதனைக்கேட்டதும் யாதவப்ரகாசர் அதிசந்தோஷத்துடன்சென்று, யாவும் தன்னுருவாய் விளங்கும் சர்வ வியாபகனான எம்பெருமான் விளையாட்டிற்கிசைந்த திருக்கோயிலாயிருக்கும் இராமாநுஜரை வலம்வந்து அவரிடத்தில் சன்னியாசம் பெற்றுக்கொண்டு அவருக்குச் சிஷ்யராயினர்.

இஃதிப்படியிருக்க, ஸ்ரீரங்கத்திலுள்ள மதிமான்களான ஸ்வாமிகள் ஸ்ரீராமாநுஜர் நான்காவதாசிரமத்தை யடைந்தனரென்று கேள்வியுற்று மிகவும் சந்தோஷத்தையுடையவர்களாய் அவ்விராமாநுஜரைத் தம்மிடத்திற்கழைத்துக்கொண்டுவரும்படி செய்யவேண்டுமென்ற திருவுள்ளத்துடன் ஸ்ரீரங்கராஜன் நியமனத்தின்படி வித்வானான * ரங்கிகுசீலவரென்பவரை ஸ்ரீகாஞ்சீநகரத்திற்கனுப்பினர். அனுப்பவே அவ்விரங்கிகுசீலவர் அங்கிருந்து காஞ்சீநகரம்சென்று தமது கானவித்தையால் வரதராஜனை மனமகிழச்செய்து அவ்வெம்பெருமான் நியமனத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீராமாநுஜரிடம்

---

* உத்தரம்—விடை.

* ரங்கிகுசீலவர் திருவரங்கப் பெருமாளரையரா யிருக்கலாமென்று கருதுகின்றேன். ஸ்வரூபஜ்ஞர்களிடம் விசாரித்துக் கொள்க.

சென்று தெரிவித்து அவரை யழைத்துக்கொண்டு மறுபடியும் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தனர்.

இவ்விதம் தனது நியமனத்தின்படி ஸ்ரீரங்கத்திற்கெழுந் தருளிய ஸ்ரீராமாநுஜரை ஸ்ரீரங்கராஜன் சேனைமுதலியார் முதலிய பரிவாரங்களுடனெதிர்சென்று தன் திருக்கண்களால் கடாக்ஷித்து தன் திருவடிகளால் அவ்விராமாநுஜர் திருமுடியையலங்கரித்தனன். அப்போது அடிமுதல் முடிவரை அந்த நித்தியவஸ்துவைச் சேவி த்து ஆனந்தமடைந்த அவ்விராமாநுஜரைக்குறித்து, ஆதிபுருஷ னை அவ்வரங்கராஜன், 'ராமாநுஜா! உனக்கும் உன்னிடத்தில் வணக்கமுள்ளவர்கட்கும் உபயவிபூதிகளையும் தந்தோம்; இதுமுதல் நீயென் திருக்கோயிலின் காரியங்களைச் சிறப்புடன் நடத்திவருவா யாக' என்று வரமருளினன்.

இவ்விதம் ஸ்ரீரங்கராஜன் அநுக்ரஹிக்கவே ராமாநுஜர் ஸ்ரீ ரங்கராஜன் நியமனத்தினால் அகளங்கநாட்டாழ்வானென்ற அரசனை யும் தமக்குச் சிஷ்யனாகச் செய்துகொண்டு கெட்டநடத்தையுடைய துஷ்டர்களையெல்லாம் சிக்ஷித்து நிலைபெற்றதான ஸ்ரீரங்கராஜன் கைங்கர்யத்தைச்சிறப்புடன் செய்துவந்தனர். இவ்வண்ணம்நடத்தி வருகின்ற ஸ்ரீராமாநுஜர் ஒருநாள் பெரியநம்பிகளைப்பார்த்து 'ஸ்வாமீ! அடியேன் தேவரீர் திருவடிதாசனும் பாக்யத்தைப்பெற் றேனாதலால் ஸ்ரீரங்கராஜனிடத்தினின்றுமித்தகைய பெருஞ்செல் வத்தைப்பெற்றேன்' என்று விண்ணப்பஞ்செய்தனர். அப்பெரிய நம்பிகளும் தமக்காசார்ய னுபதேசித்தருளிய அர்த்தவிசேஷங்களை யெல்லாம் அவருக்குபதேசித்துத் தமது புத்திரனையுமவ்விராமாநுஜ ருக்குச் சிஷ்யனாகச்செய்து மறுபடியும் அவரைப்பார்த்து 'ராமா நுஜா! நமது யாமுநேயாசார்யரால் உனக்கென்று சில அர்த்த விசேஷங்கள் திருக்கோட்டியூர்நம்பிகளிடத்திலும் திருமலைநம்பிக ளிடத்திலும், ஸ்ரீமாலாதரவரரிடத்திலும், ரங்கிருசிலவரிடத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன; நீ இவ்வுலகத்தை ரக்ஷிப்பதற்காக அவ ற்றை கிரஹித்துக்கொள்ளவேண்டும்' என்றனர். இவ்வண்ணம் சொல்லிய பெரியநம்பிகளின் †திவ்யசூக்தியை ஸ்ரீராமாநுஜர் தமது

† திவ்யசூக்தி—அழகியநன்மொழி.

செவிகட்கினிய தெள்ளமுதாய்ச் செய்துகொண்டு அவ்வர்த்த விசேஷங்களைக்கைப்பற்றிக் கொள்ளவேண்டுமென்னுங்கருத்துடையவராய் சுரகுருவையும் வெல்லுதற்குரிய ¶ சூக்ஷ்ம புத்தியையுடையவர்களும் தமக்கு மிகவும் § ஆப்தர்களுமான எழுபது சிஷ்யர்களுடன் மனதிலடங்கா மகிழ்ச்சியைபடைந்தனர்.

அதன்பின் ஸ்ரீரங்காதிபதியின் பொறுப்பை வஹிக்கின்ற * எதிவரரான இராமாநுஜர் ஸ்ரீகார்யங்களிற் கங்கணம் பூண்டவர்களான ஸ்ரீரங்கராஜ கைங்கர்யபரர்களைச்சேர்த்துக்கொண்டு தம் மதத்தைச்சார்ந்தவர்களும் பற்பலதேசத்திற் பிறந்தவர்களுமான பிராமணோத்தமர்களைப் பத்துவிதகைங்கர்யபரர்களாக்கிச் சன்னியாசம்செய்வித்தனர். இன்னும் † யதிதிலகரான இராமாநுஜர் தொண்டர்களான பிராமணர்கள் பதின்மருக்கும், அத்தனை சூத்திரர்கட்கும் சேஷத்தன்மையான தாழ்ந்தகர்மயோகத்தால் இம்மைமறுமைகளில் பெரும்பொருள் சித்தித்தலின் நியமத்தைச் செய்தனர். இப்படியிருக்கும்போது ஒருநாள் ஸ்ரீரங்கராஜன் * ததியோதன மமுதுசெய்தருளியபின் காவல்கனியமுதுசெய்ய அன்னவல்கனியை விஷமென்றெண்ணிக்கொண்ட ஸ்வாமியின் சிஷ்யன் ஸ்ரீராமாநுஜரிடத்தில் வந்து ‘ஸ்ரீரங்கராஜனுக்கு விஷத்தை யமுதுசெய்வித்தனன்’ என்று விண்ணப்பஞ் செய்யவும் ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்கராஜ கைங்கர்யபரனைத் தண்டித்தது மன்றி ராஜோபசாரத்திற்குரிய ரங்கராஜனுக்கு விஷத்தை யமுதுசெப்வித்த தனாலுண்டான தோஷத்தை நிவிருத்திசெய்வதற்குக் கஷாயமொன்றை யமுது செய்வித்து வைத்தியாலயமொன்றுண்டுபண்ணி அவ்வைத்தியசாலையைத் § தன்வந்தரியாகிய ஹரியின் ஆலயமாக நினைக்கும்

¶ சூக்ஷ்மபுத்தி—நுட்பமானபுத்தி.

§ ஆப்தர்—விசுவசிக்கத்தக்கவர்.

* எதிவரர்—சந்நியாசிகளிற் சிறந்தவர்.

† யதிதிலகர்—எதிகளிற்சிறந்தவர்.

* ததியோதனம்—தயிர்கலந்தசாதம்.

§ தன்வந்தரி—யஜுர்வேதமூர்த்தி—நாராயணனும்சபூதனான பகவான் முற்காலத்தில் பாற்கடலைக்கடையும்போது அக்கடலினின்றும் உத்பவித்தவனான தன்வந்தரியென்ற தேவலோகத்துவைத்தியன்.

படிசெய்தனர். அதுமுதல் தினந்தோறும் ஸ்ரீரங்கராஜனுக்குப் பத்தியத்திற்காக கருடவாஹனபட்டராலிபற்றப்பெற்ற கஷாயத்தையும் கொணர்ந்து சமர்ப்பிக்கும்படி செய்தனர்.

இஃதன்றியும், ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்கேசனுடைய ஸ்ரீகார்யத்திற்கு விரோதிகளான துர்மதமுடையபரிகரங்களை நீக்கித்தாம் எப்போதும் எம்பெருமான் ஸ்ரீகார்யத்தில் பற்றுடையவராயெழுந்தருளியிருந்துகொண்டு வேதாந்தமார்க்க விரோதிகளான பௌத்தர்முதலிய துர்வாதிகளைத்தொலைத்து ஸ்ரீரங்கராஜப்ரதிஷ்டையைப்போலவே சந்திரசூர்யர்களுள்ளவரை நிலைநிற்கும்படி வேதாந்தப்ரதிஷ்டையையும் செய்தருளினர்.

17-வது சர்க்கம் முற்றுப்பெற்றது.

---

## 18-வது சர்க்கம்.

---

அதன்பின் ஸ்ரீராமாநுஜமுனிவர் திருக்கோட்டியூர்நம்பிகளென்னும் * தேசிகரின திருவடிகளில் தெண்டன் சமர்ப்பிக்கவேண்டுமென்னுந் திருவுள்ளமுடையவராய் ஸ்ரீரங்கராஜனிடத்திலநுமதிபெற்றுக்கொண்டு தமது சகல சிஷ்யர்களும் புடைசூழத்திருக்கோட்டியூர் நகரத்திற் கெழுந்தருளினர். அங்கெழுந்தருளியதுமவ்விராமாநுஜர், ஒப்பற்ற திருக்கோட்டிநம்பியூர்களின் பக்கத்தில் பதினெட்டுத்தடவைசென்று உபாசித்து, சரமசுலோகத்தின் மறைபொருளைத்தாமவரிடத்தினின்றும் பெற்றுக்கொண்டனர். அதனையறிந்துகொண்டதும் அவ்விராமாநுஜர் அடங்காத சந்தோஷத்துடன் ஜகத்தைரக்ஷிக்கும்பொருட்டு அம்மறை பொருளை யாவருமறிந்துகொள்ளும்படி தம்வாயால் துலக்கமாய் வெளியிட்டுச்சொல்லினர். சொல்லவே அத்திருக்கோட்டியூர்நம்பிகள் மனமகிழ்ச்சியுடன் ராமாநுஜரைப்பார்த்து 'ராமாநுஜா! உனதுத்தம குணத்தை யானெத்தன்மைத்தென்று புகழ்வேன்; இதுமுதல் ஹரி † தர்சனமானது ராமாநுஜதர்சனமென்றே உன் பெயரால் பிரசித்திபெறத் தக்கதென்று வரமளிக்கின்றேன் உனக்கு' என்றனர்.

---

* தேசிகர்—குருக்கள்.

† தர்சனம்—சாஸ்திரம்.

இவ்விதம் தமது ஆசாரியாநுக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டவரும் பரிசுத்தமான புத்தியையுடையவருமான இராமாநுஜர் அந்நம்பிகளின் புத்திரரையும் தமக்குச் சிஷ்யராகச்செய்துகொண்டு மாலாதரரென்ற வித்வானிடத்தினின்றும் ஆழ்வார்களால் அருளிச்செய்யப்பெற்ற திராவிடவேதத்தின் அர்த்தவிசேஷத்தையும் ரங்கிகுசிலவரிடத்தினின்றும் அதின் கானமுறையையும், திருமலைநம்பிகளிடத்தினின்றும் ஸ்ரீராமாயண திவ்யசூக்தியையும் பெற்றுக்கொண்டனர். இஃதன்றியும், ஸ்ரீராமாநுஜர், யாமுனேயவாசார்யர், தமது சிஷ்யர்களிடத்தில் சேமித்து வைத்திருந்த அர்த்தவிசேஷங்களனைத்தையும் அவர்களிடத்தினின்றும் கைப்பற்றிக்கொண்டு அவர்கள் புத்திரர்களையும் தமச்குச் சிஷ்யராகச்செய்துகொண்டு ஸ்ரீயாமுனேய ரருளிச்செய்த *ஸ்தோத்திரரத்தினம் முதலிய பிரபந்தங்களையும் அவர்கட்குக் கற்பித்தனர்.

இப்படியிருக்கும்போது கங்காநதியை அடுத்தவேதா ரூரினின்றும் சாஸ்திராராய்ச்சியில் வல்லவனான கர்ருண்யாகரனென்னும் பெயரையுடைய ஏகதண்டியாகிய சந்நியாசி ஒருவன் ஸ்ரீரங்கத்திற்கு வந்துசேர்ந்தனன். அவன் அங்குவந்ததும் ராமாநுஜர் சாஸ்திரங்களில் வல்லவரென்றறிந்து அவருடன் தான் வாதஞ்செய்ய வேண்டுமென்னுங் கருத்துடையவனாய் ஸ்ரீராமாநுஜரிடம் வந்து 'ராமாநுஜரே! யான் உம்முடன் வாதஞ்செய்ய விரும்புகின்றேன்; ஆனால் சாஸ்திரவாதஞ்செய்வதில் நம்மிருவரில் அபஜயமடைந்தவர் ஜயித்தவருக்குச் சிஷ்யனாகவேண்டும்; இதற்குச் சம்மதமானால் சொல்வீர்' என்று கூறி அங்கிருந்த உஜ்வலநரசிம்மன் சந்நிதியில் தனது கைகளை யுயரத்தூக்கிக்கொண்டு ப்ரதிக்ஞை செய்தனன் இவ்விதம் ப்ரதிக்ஞை செய்யவே ராமாநுஜரும் 'அப்படியே யானும் சம்மதிக்கிறேன்' என்றனர். இவ்வாறிருவரும் ப்ரதிக்ஞைசெய்துகொண்டு பதினேழுநாள்வரை வாதம்செய்துகொண்டுவந்தனர் பதினேழாம்நாளிராத்திரி ஸ்ரீராமாநுஜர், தம் மனதில் 'நாட்கள் பதினேழாகியும் இவ்வேகதண்டியை ஜயித்தற்கு நம்மா லியலவில்லையே; இனி யென்செய்வது? எம்பெருமான் திருவுள்ளமெவ்

* ஸ்தோத்திரரத்தினம்—ஆளவந்தார் ஸ்தோத்திரமென்ற கிரந்தம்.

விதமிருக்கின்றதோ? தெரியவில்லையே' என்று சிந்தித்துக்கொண்டு துக்கிதராய்ச் சோர்வுற்றுத் துயில்புரிந்தனர். இப்படி மனவருத்தத்துடன் திருக்கண்வளர்கின்ற ஸ்ரீராமாநுஜரின் ஸ்வப்நத்தில் ஸ்ரீரங்கராஜன் எழுந்தருளி, 'ராமாநுஜா! நீயேன் கவலைப்படுகின்றாய்; இந்த யுக்தியை உன் மனதில்வைத்துக்கொண்டு நாளையதின மவனை ஜயிப்பாய்' என்று சொல்லி அவ்வேகதண்டியை ஜயித்தற்குரிய தொரு யுக்தியை யுரைத்தனர்.

அதன்பின் ஸ்ரீராமாநுஜர் பதினெட்டாவதுநாள் காலையிலெழுந்ததும் தம்மிடத்தில் எம்பெருமான் கருணை யிருந்தவிதத்தை நினைத்து ஆனந்தபரவசராய்த் தமது நித்தியகர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சென்று, அன்று வாதத்தில் * திவாகரன் ஒளியைக் கைப்பற்றிக்கொண்ட † செஞ்சுடர் § அல்லிருளையகற்றுதல்போல் அவ்வேகதண்டியை ஜயித்தனர்.

இவ்வண்ணம் இவ்விராமாநுஜரால் ஜெயிக்கப்பெற்ற அந்த சன்னியாசி தன் கையில் தரித்திருந்த ஏகதண்டத்தை எறிந்துவிட்டு மறுபடியும் உபநயனம்பண்ணிக்கொண்டு திரிதண்டசன்னியாசியாய் ஸ்ரீராமாநுஜருக்கு சிஷ்யனாயினன். ஆகவே அப்போது ஸ்ரீராமாநுஜர் தம்முடைய சிஷ்யர்களைப்பார்த்து 'சிஷ்யர்காள்! நீங்கள் இதுமுதல் இவரை யென்னிலும் வேற்றுமையற்றவரென்றெண்ணிக் கொள்ளவேண்டும்' என்றனர். பின்பு யோகீசுவரரான இராமாநுஜர் ஜெகத்திலுள்ள ஜனங்களை ரக்ஷிக்கவேண்டுமென்னுந் திருவுள்ளமுடையவராய் எம்பெருமான் திருவாராதனக்கிரமம், ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தசாரம், கெத்தியத்திரயம், ப்ரபந்நநித்யாநுஷ்டானக்கிரமம் என்ற கிரந்தங்களைச் செய்தருளினர். அதன்பின் மாசற்றமதியுடைய எதிபதியாகிய இராமாநுஜர் ¶ தாராகணங்களாற் சூழப்பெற்ற சந்திரன்போல் தமது சிஷ்யர்களாற் சூழப்பெற்றவராய் % திகந்தங்களில் நிலைபெற்றிருக்கின்றவர்

* திவாகரன்—சூரியன்.
† செஞ்சுடர்—அக்கினி.
§ அல்லிருள்—இராத்திரியிலுள்ள இருள்.
¶ தாராகணங்கள்—நக்ஷத்திரக்கூட்டங்கள்.
% திகந்தம்—திக்குகளின்எல்லை.

களும், மோஹாந்தர்களும். கெட்டநோக்கத்தையுடையவர்களுமான புறமதஸ்தர்களை ஜயிப்பதற்காகத் திக்குகள்தோறுஞ்சென்று மிகவும் மதமுற்றவர்களும் வாக்கின்வலிமையுடையவர்களுமான அரசர்களை ஜயித்து அவர்களையும் தமக்குச் சிஷ்யர்களாகச் செய்துகொண்டு மற்றுள்ள தமது சிஷ்யர்களை ஆங்காங்குள்ள சமஸ்தமான திவ்யதேசங்களிலும் நிலைபெறச்செய்து பூமண்டலத்தை வலம் வந்தனர்.

இவ்விதம் பூவலம் வருகின்ற இராமாநுஜர் ப்ரசித்திபெற்ற * சாரதாபீடத்தையடையவே அங்குள்ள சரஸ்வதிதேவி ஸ்ரீராமாநுஜரைக்கண்டு வணங்கி அவரைப் பரிசுத்தமான தன் கிரஹத்திற்கழைத்துக்கொண்டு சென்று காண்பித்து 'ராமாநுஜரே! இங்குள்ள புஸ்தகங்களில் உமக்கிஷ்டமானதை எடுத்துக்கொள்வீர்' என்றனள். இவ்வண்ணம் ஆதரவுடன் கூறுகின்ற சரஸ்வதியைக்குறித்து எதிபதியாகிய இராமாநுஜர், 'தேவீசரஸ்வதி! நீ என்னிடத்திலித்தகைய பக்தியை எதற்காகச் செய்கின்றாய்' என்றனர். அதற்கவள் 'இராமாநுஜரே! என்ன நீரிப்படிச் சொல்கின்றீர்? வேதாந்தத்திலுள்ள † 'கப்யாசம்' என்ற சொல்லிற்குச் சங்கரர் § கபியின் ¶ குதமென்று இழிவுதரத்தக்க பொருந்தாப்பொருளை யுரைத்தனர். அச்சொல்லிற்கு நீர், தாமரைநாளத்திற்பொருந்திய என்ற இசைந்ததொரு பொருளை எடுத்துரைத்தீரிப்போது; ஆதலால் என்றும் நீர் பூஜிக்கத்தக்கவரே, என்று காரணத்துடன் செவிகட்கினிய செஞ்சொற்களைச்சொல்லி அந்த சரஸ்வதிதேவியானவள் அங்கு வைக்கப்பெற்றிருந்த வேதார்த்த சங்கிரஹமென்ற பெயரையுடைய கிரந்தத்தைத் தான் கைப்பற்றிக்கொண்டு துர்மதியுடையோர்களைத் தொலைத்தற்குரிய அந்நூலின்பொருளையுணர்ந்து அதனை மாலையைப்போல் தலையில் தரித்துக்கொண்டு வித்வான்கள் சந்தோஷிக்கும்படி

---

* சாரதா—சரஸ்வதி.

† 'கப்யாசம்' 'கப்யாஸம்' என்னும் தலைக்குறிப்பிட்ட வேதாந்த ஸூத்ரம்.

§ கபி—குரங்கு.

¶ குதம்—மலங்கழிக்கும் துவாரம்.

அவ்விராமாநுஜருக்கெதிரில் கொண்டாடினள். பின்பு அவ்விராமாநுஜர், ஸ்ரீபோதாயனரால் இயற்றப்பெற்ற வேதாந்தவிருத்தியென்ற நூலைத் தாம் அந்த சரஸ்வதி கிரஹத்தினின்றெடுத்துக்கொண்டு அங்குள்ள அரசர்களால் பூஜிக்கப்பெற்றவராய் அதிசந்தோஷத்துடன் தமது சிஷ்யர்கள்சூழ அங்கிருந்தும் வெளியேறினர்.

இவ்விதம் செல்கின்ற இராமாநுஜர் தம்மைத் தொடர்ந்துவரும் அரசர்களைத் திரும்பிச்செல்லும்படி யநுமதியளித்துவிட்டுத் தாம் கங்காநதியைக்கடந்து புருஷோத்தமத்தி லெழுந்தருளியிருக்கும் ஜகந்நாதனை ஸேவித்து அவ்வெம்பெருமான் அடியார்களான அங்குள்ளவர்கள் துராசாரமுடையவர்களாயிருந்தும் அவர்களை எம்பெருமான் நியமனத்தால் சீர்திருத்தஞ்செய்யாதவராயினர். இப்படி அங்கெழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமாநுஜரை ஒருநாளிரவில் அப்புருஷோத்தமத்திற்கதிபதியான பகவான் * சம்புபிம்பத்துடன் கூடிய கூர்மாலயத்தின் சமீபத்திற்கொணர்ந்து சேர்த்தனன். சேர்க்கவே ஸ்ரீலக்ஷ்மணுர்யர் காலையிலெழுந்ததும் ஆச்சர்யமுற்று 'எம்பெருமான் திருவுள்ளமிருந்தவாறென்னே! இங்கெதற்காக நம்மைக் கொணர்ந்து சேர்த்தனன்' என்று திருவுள்ளத்தில் நினைத்துக் கொண்டு அவ்வாலயத்திற்குட்சென்று அங்குக் காணப்படும் வெண்ணிறமுடைய திருமண்ணைத் தாம் கிரஹித்துக்கொண்டு அங்கிருந்த சிவலிங்கத்தைப் பெயர்த்தெடுத்து ஸ்ரீகூர்மரூபியான எம்பெருமானை யாவரும் கண்டு சேவிக்கும்படி பிரகாசப்படுத்தினர்.

அதன்பின் அவ்விராமாநுஜர் அங்கிருந்துஞ்சென்று சிங்ககிரியிற்றிருவிளையாடல்செய்யுஞ் சிங்கப்பிரானைத் தண்டன்சமர்ப்பித்து அகோபிலநரசிம்மனையு முபாசித்துக்கொண்டு திவ்யகானம்புரியும் தேவமங்கையரா லழகியதாய் விளங்கும் § அஞ்சனகிரியினடிவாரத்தையடைந்தனர். அடைந்ததும் எதிபதியான இராமாநுஜர் அம்மலையைக்கண்டு ஆநந்த % பாஷ்ப ¶ தாரையால் நிரம்பிய திருக்கண்

---

* சம்புபிம்பம்—சிவபிம்பம்.

§ அஞ்சனகிரி—வேங்கடமலை.

% பாஷ்பம்—வாஷ்பம்—கண்ணீர்.

¶ தாரை—யாறா—உருகுகின்ற பொருளின் இடையறாத வீழ்ச்சி.

களையுடையவராய் ஆநந்த சாகரத்திலாழ்ந்தவர்போல் சர்ப்பராஜன் வடிவான அவ்†லைத் திரிராஜனைத் தண்டன்சமர்ப்பித்தனர். அப்போது விட்டலேந்திரனென்னும் அரசன ஸ்ரீராமாநுஜரெழுந்தருளியதையறிந்து தான்அவர் சரணங்களில் வீழ்ந்துவணங்கி அவரை அச்சேஷகிரியினடிவாரத்திற்கு அலங்காரமாய் விளங்கும் திருப்பதிக்கழைத்துக்கொண்டுசென்று அங்குள்ள அக்கிரஹாரத்தைக்காண்பித்து 'ஸ்வாமீ! இவ்வக்ரஹாரத்தைத் தேவரீரங்கீகரித்துக்கொள்ளவேண்டும்' என்று பிரார்த்திக்க அவ்விராமாநுஜர் அவ்வக்ரஹாரத்தைப்பெற்றுக்கொண்டு அதில் தமது சிஷ்யர்களில் ப்ரக்கியாதிபெற்ற முக்கியர்களான முன்னூறுபேர்களை வாசஞ்செய்யும்படி ஸ்தாபித்தனர்.

பின்பவ்விராமாநுஜர் இத்திருமலை சேஷன்வடிவுடையதாயிருக்கின்றதென்று திருவுள்ளம்பற்றி பரகாலர் முதலிய பக்தர்கள் இத்திருமலையின மேலேறிச்செல்லாது இங்கிருந்தவண்ணமே திரும்பிச்சென்றனர். ஆகலால் நாமுமித்திருமலையிலேறுதிருக்கலை தகுதியென்று நினைக்கவே அவரது சிஷ்யர்களான அநந்தாழ்வான் முதலியோர் ஸ்ரீராமாநுஜரைப்பார்த்து 'ஸ்வாமீ! தேவரீர் அவசியமித்திருமலையிலெழுந்தருளித் திருவேங்கடமுடையானை மங்களாசாசனஞ்செய்தருளவேண்டும்' என்று பலாத்காரமாகப் பிரார்த்திக்க அதற்கிணங்கி அவ்விராமாநுஜர் திருவேங்கடமுடையானை ஸேவித்தற்காக அத்திருமலையிலேறிச்சென்றனர். செல்லவே ஸ்ரீராமாநுஜர் அங்கெழுந்தருளுவதை யறிந்த திருமலைநம்பிகள் விருஷகிரிநாதனுன எம்பெருமான் § பிரசாதத்தைக் கைப்பற்றிக்கொண்டு சந்தோஷத்தால் தழைத்த மனதையுடையவராய்ச் சந்திரனைக்கண்டு ததும்பும் % தரங்கங்களையுடைய * சாகரம்போன்றவராய் அவ்விராமாநுஜரை எதிர்நோக்கிச்சென்றனர். செல்லவே ஸ்ரீராமாநுஜர் திருமலைநம்பிகளைக்கண்டதும் அவரைத் தண்டன்சமர்ப்பித்து ஸ்ரீ

---

† அத்திரி—.சுதி—மலை.

§ பிரசாதம்—வூஸாதம்—நைவேத்யம்.

% தரங்கம்—அலை.

* சாகரம்—சமுத்திரம்.

வேங்கடகிரிநாதன் பிரசாதத்தை அந்நம்பிகளிடத்தினின்றும் பக்தியுடன் † பரிக்கிரஹித்துக்கொண்டு நம்பிகளைப்பார்த்து, 'ஸ்வாமீ! இந்த பகவத்ப்ரசாதத்தைத் தேவரீரே கொண்டுவரவேண்டுமா? இதனைத்தேவரீரில் தணிந்தவர்களான யாரிடத்திலேனும் கொடுத்தனுப்பலாகாதா?' என்றனர். அதற்கத்திருமலைநம்பிகள் 'ராமாநுஜா! இந்நகரிலுள்ள நான்கு வீதிகளிலும் நன்றுபாராய்ந்து பார்த்தேன்; என்னிலுந்தாழ்ந்தவர்யாரையும் காணவில்லை; ஆகலால்தான் யானேயிதனைக்கொணர்ந்தேன்' என்று அங்குள்ளார் யாவருமறியும்படி யருளிச்செய்தனர். இப்படிச்சொல்லவே ஸ்ரீலக்ஷ்மணுர்யர் அந்நம்பிகள் கூறிய செவிக்கினிய செஞ்சொற்களைக்கேட்டதும அங்குள்ள தமது சிஷ்யர்களின் முகத்தைப்பார்த்துவிட்டு அத்திருமலைநம்பிகளின் ¶ சேஷபாவத்தைக்குறித்து, சிலாகித்துக்கொண்டு *விருஷகிரிநாதன் திருக்கோயிலையடைந்தனர். அடைந்ததும் அவ்விராமாநுஜர் அத்திருக்கோயிலின் சமீபத்திலுள்ள § ஸ்வாமீ புஷ்கரிணியில் நீராட்டஞ்செய்துகொண்டு அத்திருப்பதியின் நான்கு வீதிகளையும் வலம்வந்து ஆவரணதேவதைகளையும் முறைப்படி சேவித்துக்கொண்டு அதிசந்தோஷத்தையுடையவராய் அத்திருமலைநம்பிகளுடன் அத்திருக்கோயிலின் மணிமண்டபத்தையடைந்து ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு விருஷகிரிநாதனை ப்ரத்தியக்ஷமாய்க் கண்டு அவ்வெம்பெருமான் திருவடிகளில் தண்டன்சமர்ப்பித்து சம்சாரசாகரத்தில் மூழ்கியவர்களைக்கரையேற்றுகின்றவரான அவ்விராமாநுஜர் ஆநந்த சாகரத்தில் ஆழ்ந்தவராயினர்.

ஆகவே அப்போதவ்விராமாநுஜர் அவ்வெம்பெருமானைக்குறித்து, ஸ்ரீரங்கமென்னுந் திவ்யதேசத்தில் பாப்பணையிற்பள்ளி

---

† பரிக்கிரஹித்தல்—ஸ்வீகரித்தல், பெற்றுக்கொள்ளுதல்.

¶ சேஷபாவம்—ஶேஷபாவம்—அடிமைத்தன்மை.

* விருஷகிரி—வ்ருஷகிரி—வேங்கடமலை.

§ ஸ்வாமி—சுப்பிரமணியன். மூலக்கிரந்தகர்த்தாவான மஹாகவி-ஸ்வாமி ஸரஸி என்று கூறியிருத்தலால் ஸ்வாமி புஷ்கரிணியென்பதிலுள்ள ஸ்வாமியென்ற சொல்லிற்கு சுப்பிரமணியனென்று பொருள் கொள்ள வேண்டும்.

கொண்டு நித்திரைபுரிகின்றதும் § வேதாந்தத்தில் விளையாடுகின்ற மெய்ப்பொருளாயுள்ளதும் எதுவோ, அப்பரம்பொருளே அந்நித்திரையினீங்கி லக்ஷ்மீதேவியுடன் கூடியதாய் இச் ¶ சேஷகிரியின் சிகரத்தில் பரமபுருஷனாய் விளையாடுகின்றது. இவ்வுலகில் இக்கலிகாலத்தில் இவ்விடமே வைகுண்டம்; இங்கெழுந்தருளியிருக்கின்றவனே எவற்றிற்குமாதாரமானவன்; லக்ஷ்மீபதியான இவனே தன் திருவடிகளைச்சேவிக்கும் வானவருக்கும் தானவருக்கும் விரும்புகின்றவற்றினும் மேலானபொருள்களை யருள்கின்றனன் என்று ஸ்தோத்திரஞ்செய்தும், பின்னும் ஸ்ரீராமாநுஜர் அவ்வெம்பெருமானைப்பற்றி கருணை நிறைந்த கண்களையுடையவனே! உனக்கு நமஸ்காரம்; % காமினீயால் காரப்பெற்ற திருமார்பையுடையாயுனக்கு நமஸ்காரம்; சர்ப்பராஜன் என்ற மாளிகையிற் றங்கியிருக்கின்றவனே! உனக்கு நமஸ்காரம்; வணங்குகின்றோர்க்கு வரமளிக்கின்றவனே! உனக்குநமஸ்காரம் என்றும் இவ்வண்ணம் வேதாந்தத்தின் மெய்ப்பொருளாய்விளங்கும் எம்பெருமானை ஸ்துதிசெய்து அவ்வெம்பெருமான் கருணாகடாக்ஷத்தைப்பெற்றுக்கொண்டவராய் அத்திருப்பதியிலேயே மூன்றுநாள்முடிய உபவாசமிருந்து அங்குள்ள தீர்த்தங்களையெல்லாம் சேவித்துக்கொண்டு நம்பிகளுடன் அத்திருமலையினின்றுங் கீழேயிறங்கினர்.

கீழேயெழுந்தருளியதும் ஸ்ரீராமாநுஜர் அத்திருமலைநம்பிகளிடத்தினின்றும் ஸ்ரீராமாயணத்தினர்த்த விசேஷங்களனைத்தையும் நன்றாய்க்கேட்டறிந்துகொண்டு தாம் செய்தருளிய வேதார்த்த சங்கிரஹம் முதலிய ப்ரபந்தங்களையும் அத்திருமலைநம்பிகளிடத்தில் தெரிவித்து அவர் குமாரரையும் தமக்குச் சிஷ்யராகச்செய்து கொண்டனர். அதன்பின் ஸ்ரீலக்ஷ்மணார்யர் † தேசிகனையன்றி வேறிடத்திற் செல்லாத ¶ சித்தவிருத்தியுடன்கூடிய கோவிந்த

---

§ வேதாந்தம்—வேதத்தின் சிரோபாகமாயுள்ளதும் ப்ரஹ்மத்தைப் பற்றிக் கூறுகின்றதுமான உபநிஷத்து என்றகிரந்தம்-உபநிடதநூல்.

¶ சேஷகிரி—வடவேங்கடமலை.

% காமினீ-பயமுற்றவள்.

† தேசிகன்—குரு.

¶ சித்தவிருத்தி—மனநிலைமை.

ரென்னுந் திரு % நாமத்தையுடையவரைத் † தாராபூர்வமாகத் தாம் பெற்றுக்கொண்டு திருமலைநம்பிகளிடம் விடைபெற்றுக்கொண்டு ஸ்ரீகாஞ்சீநகரம் வந்துசேர்ந்தனர்.

அங்கெழுந்தருளியதும் அவர் வரதராஜனை உபாசித்தவண்ணஞ் சிலநாட்சென்றபின் அவ்விடத்தினின்று சென்று சோழதேசத்தி லுள்ள சார்ங்கபாணி முதலான எம்பெருமான்களையெல்லாம் ஸேவித்துக்கொண்டு திருக்குருகூர்நகர்வந்துசேர்ந்தனர். அங்கெழுந் தருளிய ஸ்ரீராமாநுஜர் அதன்பக்கத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் முத லிய எட்டு திவ்யதேசங்களிலெழுந்தருளியிருக்கும் எம்பெருமான் களையும் ஸேவித்து, திருக்குருகூர்நகருக்கதிபனான ஆதிநாதனையும் அடிவணங்கி அவ்விடத்திலுறங்காப்புளியினடியிலெழுந்தருளியிருக் கும் மதுரகவியையும் சடகோபனையும் * சாக்ஷாத்கரித்தனர். அதன் பின் ஸ்ரீராமாநுஜர் அங்கிருந்துமெழுந்தருளி வானமாமலைக்கிறை வனான வாசுதேவனை ஸேவித்தனர். அதன்பின் திருக்குறுங்குடி நாதனையுந் தண்டன்சமர்ப்பித்தனர். அங்கு ஸ்ரீராமாநுஜர் ரத்தின மயமான சிங்காசனத்தில் வீற்றிருந்து வேதாந்தார்த்தத்தைப் போதித்து அத்திருக்குறுங்குடி நம்பியையும் தமக்குச் சிஷ்யனாக்கிக் கொண்டனர்.

அதன்பின் அவ்விராமாநுஜர் அங்கிருந்துஞ்சென்று அனந்தன் மீது சயனித்துக்கொண்டிருக்கும் அனந்தபுராதிபனையுமடிவணங்கி அத்திருவநந்தபுரத்தில் தம் பெயராலொருமடத்தையும் ஸ்தாபித் தனர். பின்பு அவரங்கிருந்துசென்று கேரளதேசாதிபதிகளான எம் பிரான்களையும் சேவித்துக்கொண்டு சாகரத்தையடைந்து ராமசேது மூலத்தைச் சார்ந்தனர். சார்ந்ததும் புல்லாரணியத்தி லெழுந்தருளி

---

% நாமம்—பெயர்.

† தாராபூர்வமாக—தண்ணீர்த்தாரையை முன்னிட்டதாக. ஒருபொருளை மற்றொருவர்க்குக் கொடுக்கும்போது கொடுக்கின்றவர் தமது கையில் தண் ணீரைப்பெய்து 'இப்பொருளை யுனக்கே கொடுக்கின்றேன்' என்று அத்தண் ணீர்த்தாரையை முதலில் கீழேவார்த்தல். இதனைத் தாரைவார்த்தலென்று கூறுவார்கள்.

* சாக்ஷாத்கரித்தல்—காணுதல்.

யிருக்கும் † தெய்வச்சிலைநாதனும் * தர்ப்பசயநத்தில் சயநித்திருப்பவனுமான எம்பெருமானைப்பூஜித்துவிட்டு ராவணனாலபஹரித்துக்கொண்டு செல்லப்பெற்ற சீதையின் சந்தாபத்தைத் தணித்தற்கேதுவான சேதுவையுங்கண்டனர்.

பின்பு ஸ்ரீராமாநுஜர் அங்கிருந்தும்சென்று வில்லிபுத்தூரென்னும் பெயரையுடைய நகரத்தையடைந்து அவ்விடத்தில் அதிசயிக்கத்தக்க ஞானத்தையுடைய விஷ்ணுசித்தராகிய பெரியவரையுபாசித்து அவர் திருமகளாகிய ஸ்ரீகோதையினாலருளிச் செய்யப்பெற்ற பிரபந்தங்களிரண்டின் பொருளையும் அப்பெரியவராலருளிச் செய்யப்பெற்ற பிரபந்தத்தினர்த்தத்தையும் திருவுள்ளத்தில் தாரணஞ்செய்துகொண்டு சந்தோஷித்தனர். பின்பவ்விராமாநுஜர் கோபஸ்திரீகளின் குலமபமாய் விளங்கும் ஸ்ரீகோதையாலுபதேசிக்கப்பெற்றதும், கண்ணனென்னும் முத்திரையிடப்பெற்றதும், முப்பது பாசுரங்களடங்கியதும் மார்கழிமாசத்தில் ஆரம்பிக்கப்படும் உத்ஸவத்திற்கு உசிதமாயுள்ளதுமான பிரபந்தத்தை § பிரணவமந்திரத்தைப்போல் ஜபம்புரிந்துகொண்டு அங்கிருந்தும் திருக்கோட்டியூருக்கெழுந்தருளி அங்குள்ள எம்பெருமான்களையும் நம்பிகளையும் தெண்டன்சமர்ப்பித்துக்கொண்டு தமது சிஷ்யர்களுடன் மதுரா நகரம் வந்து சேர்ந்தனர்.

அங்கெழுந்தருளியதும் அவ்விடத்தில் ஸ்ரீதேவியுடன் சேர்ந்து விளங்கும் கூடலுக்கிறைவனை எம்பெருமானை மங்களமிகுந்த விஷ்ணுசித்தரின் வாக்குகளால் ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு அங்கிருந்தும்சென்று திருமோகூரிலெழுந்தருளியிருக்கும் லக்ஷ்மீபதியான காளமேகத்தை வணங்கி அங்கிருந்தும் திருமாலிருஞ்சோலை மலையின் அடிவாரத்தையடைந்தனர். அடைந்ததும் யதீந்திரரான இராமாநுஜர் நூபுரகங்கை முதலிய புண்ணிய நதிகளில் நீராடி நித்தியகர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அச்சோலை

† தெய்வச்சிலை—திவ்யசாபம்—சிலை-வில்லு.

* தர்ப்பசயநம்—குஶஶயநம்—நாணற்புற்படுக்கை.

§ பிரணவம்—ஓம் என்ற அக்ஷரம்.

மலையிலுதித்ததொரு ¶ சுர தருவாய்விளங்கும் சுந்தரராஜனருகிற் சென்று வணங்கி அவ்வெம்பெருமானைத் தமது சொற்களின் தொகுதியால் ஸ்தோத்திரஞ்செய்தனர். பின்பு அவரங்கிருந்துஞ் சென்று % சத்தியகிரிக்குத்திலகமாய் விளங்கும் சத்தியநாதனை யுபாசித்துக்கொண்டு அங்கிருந்துமெழுந்தருளிப் பரிசுத்தமான காவேரியின் ஜலத்தில் நீராடி நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு மாடங்களிற்கட்டி அசைந்துகொண்டிருக்கும் துகிற்கொடிகளாகிய கைகளால் துரிதமாய் வரவேண்டுமென்று சந்தோஷத்துடன் தம்மையழைப்பது போற்றோன்றும் ஸ்ரீரங்கநகரத்தைச் சேர்ந்தனர்.

சேர்ந்ததும் அவ்விராமாநுஜர் ஸ்ரீரங்கராஜன் திருவடிகளில் தண்டன் சமர்ப்பிக்கவே எம்பெருமான் ஸ்ரீராமாநுஜரிடம் க்ஷேம விருத்தாந்தத்தை வினவினர். அதன்பின் ஸ்ரீரங்கராஜன் 'ராமாநுஜா! இப்பூவுலகிலுள்ளனவும், என்விளையாட்டிற் கிசைந்தவையுமான கோயில்களையெல்லாம் சேவித்து வந்தனையா?' என்றனர். அதற்கு இராமாநுஜர் 'ஸ்வாமீ! தேவரீரெழுந்தருளியிருக்குமித் திருக்கோயிலுக்கு § உபவனம்போல் காணப்படும் மற்றைய திருக்கோயில்களனைத்தையும் சேவித்தேன்; ஆனால் இத்திருவரங்கத்திற்கு மேலாய் எந்த எம்பெருமான் திருக்கோயில்களும் காணப்படவில்லை; பிச்சிமலரில் வாசஞ்செய்யும் * பிருங்கமானது வேறுமலர்களை விரும்புமா?' என்றனர். இவ்விதம் எம்பெருமானிடம் விண்ணப்பஞ் செய்துவிட்டு அவ்விராமாநுஜர் ஸ்ரீரங்கராஜன் கைங்கர்ய ¶ நிர்வாஹத்தின் முத்திரையைத் தரித்துக்கொண்டு சடகோபர் முதலிய திவ்யசூரிகளாலருளிச் செய்யப்பெற்ற திராவிடவேதம் முதலிய

---

¶ சுரதரு—தேவதரு. இஃது கண்டுபாரிஜாதமென்ற தருவைக்குறிக்கின்றது.

% சத்யகிரி—திருமெய்யம்.

§ உபவநம்—வநத்திற்கிணையாய் மாங்களைவைத்துண்டுபண்ணிய—உத்தியானம்.

* பிருங்கம்—[illegible], வண்டு.

¶ நிர்வாஹம்—நிறைவேற்றுதல்.

பிரபந்தங்களுடன் வேதாந்தார்த்தத்தையும் விரித்துரைத்துக் கொண்டு அவ்விடத்திலெழுந்தருளியிருந்தனர்.

இப்படி எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமாநுஜர், குமதிகளென்னும் கொடிய சர்ப்பங்களாற்றீண்டப்பெற்று மயங்கிக்கிடக்கும் வேதங்கட்கு ஜீவித்தற்குரிய ஔஷதமாயும், மோக்ஷத்தை விரும்புகின்றோர்க் கொருபாக்கிய விசேஷமாயும், † துவைபாயகர் சுகர் முதலியவர்களின் கருத்தையுள்ளடக்கிக் கொண்டதாயுமிருக்கும் பாஷியத்தைப் போதாயனமுனிவர் சொற்களின் முறைப்படியருளிச்செய்தனர். அக்காலத்தில் ஸ்ரீரங்கராஜன் கைங்கர்யபரரும் ஸ்ரீராமாநுஜரின் சிஷ்யருமான திருவரங்கத்தமுதனாரென்றகவிஞர் எதிபதியான இராமாநுஜரின் வைபவத்தைப்பற்றியதும், அமுதத்தைப்பெய்கின்ற நூற்றெட்டுப் பாசுரங்களையுடையதும் அந்தாதியுமான மஹாப்பிரபந்தமொன்றைத்தமிழில் செய்தருளினர். இத்தகைய இராமாநுஜநூற்றந்தாதியென்னும் பிரபந்தத்தை * பிரபன்னர்கள் பொய்கையார் முதலிய மஹாகவிகளாலியற்றப்பெற்ற திராவிடவேதாந்த ப்ரபந்தங்கட்குமுன்பே வேதாரம்பத்தில் கூறப்படும் பிரணவமந்திரத்தைப்போல் விஸ்தரித்தனர். ஸ்ரீலக்ஷ்மணார்யர் தாம் செய்தருளிய வேதாந்தக்ரந்தங்களை யாவருமறிந்துஉஜ்ஜீவித்தற்காகத் தமது சிஷ்யர்களிற் பிரசித்திபெற்ற கூரத்தாழ்வான் முதலியாண்டான் முதலானோர் மூலமாய் வெளியிடச்செய்தனர்.

செய்யவே இவர்கள் சகல ஜனங்கட்கும் தமது மதத்தைப் போதித்து ரக்ஷித்தற்காக எதிராஜரான இராமாநுஜரின் மகிமையை யாவருக்குமெடுத் துரைத்தனர். இஃதன்றியும் ஸ்ரீரங்கேசன் முதலிய ஐந்து எம்பெருமான்களும், ராக்ஷசன் ஊமையென்ற இருவரும், சடகோபர் முதலிய சூரிகளெண்மரும் ஸ்ரீராமாநுஜரின் மஹிமையை வெளிப்படுத்தினர். இன்னும் ஸ்ரீராமாநுஜர் § காருண்யா

---

† துவைபாயகர்—த்வைபாயநர், வியாசர்; த்வீபம்—த்வீபம், ஜலமத்தியிலுள்ள வெற்றிடம், தீவு. அயநம்-பிறப்பிடம். துவீபத்தைப் பிறப்பிடமாயுடையவனெனப்பொருள்படும்.

* பிரபந்நர்—சரணாகதர், சரணம் புகுந்தோர்.

§ காருண்யாகரர்—அருளாளப்பெருமாளெம்பெருமானார்.

கரமென்ற யதியுடன் வாதஞ்செய்யுங்காலத்தில் அவருக்கு ஸ்ரீரங்க ராஜன் நல்லதொரு யுக்திகூறியதாலும் ஸ்ரீராமாநுஜரின் திருவடிகளிலாசிரயித்தவர்கட்கும் உபயவிபூதியையும் தருகின்றேனென்றருளிச்செய்ததனாலும் ஸ்ரீராமாநுஜரைத் திருவரங்கப்பெருஞ்செல்வ நிர்வாஹத்தைச்செய்துவரும்படி நியமித்தலாலும், திருவேங்கடமுடையான் ஸ்ரீராமாநுஜருக்குச் சிஷ்யத்தன்மையையடைந்ததினாலும், காஞ்சீநாதனான வரதராஜன், நம் மிராமாநுஜனைப் பிரதக்ஷிணஞ்செய்தலே இப்பூமியை வலம்வந்ததற்கிணையாகுமென்று வாக்களித்ததாலும், ஒருநாள் † சுந்தரராஜன் * கோஷ்டியில் தன் திருவாராதந கைங்கர்யத்திற்காக ராமாநுஜனடியாரென்றருளிச்செய்யவே அங்குள்ள ஸ்வாமிகள் பலருமெழுந்தருளப் பெரியநம்பிகளைச் சார்ந்த சிலர் பிந்தியெழுந்தருளவே அப்போது எம்பெருமான் அவர்களைப் பார்த்து 'நீங்களேன் பிந்திவந்தீர்கள்' என்று நியமிக்க அதற்கவர்கள் 'ஸ்வாமீ! ராமாநுஜனடியாரென்றருளிச்செய்தலால் நாங்களிராமாநுஜனின் ஆசார்யவம்சத்தைச் சார்ந்தவர்களென்று பிந்தினோம்' என்று எம்பெருமானிடம் விண்ணப்பஞ்செய்ய அதற்கு பகவானவர்களைக் குறித்து 'நம்பிகாள்! நான் § நந்தகோபன் முதலானோர்கட்கெப்படிப் புத்திரனானேனோ அதுபோலன்றோ இராமாநுஜன உங்கட்குச் சிஷ்யனானான்' என்றருளிச் செய்தலாலும் திருக்குறுங்குடி எம்பெருமான் எதிராஜனைப் பார்த்து 'ராமாநுஜா! எந்த மந்திரத்தினால் இவ்வுலகினை வசப்படுத்திக்கொண்டனையோ அம்மந்திரத்தை எனக்கும் அவசியமுபதேசிக்க வேண்டும்' என்று சொல்லி அவரை யாசனத்திலிருக்கச்செய்து தான் அவருக்குச் சிஷ்யனாய் அத்திருமந்திரத்தை யவரிடம் கிரஹித்துக்கொண்டதனாலும், யாதவப்ரகாசனென்ற குருவையிகழ்ந்து பேசிய இராக்ஷதன் இராமாநுஜரின்சொற்படி இராஜகுமாரனைவிட்டு விலகியதாலும், காஞ்சீநகரத்தில், ஊமைத்தன்மையினின்றும் நீங்கிய ஒருவன் பாற்கடலினின்றும் பணிபதியான சேஷனே இராமாநுஜராயவதரித்திருக்கிறாரென்று வாய் திறந்து சொல்லியதாலும்,

† சுந்தரராஜன்—அழகர், திருமாலிருஞ்சோலை யெம்பெருமான்.

* கோஷ்டி—சபை.

§ நந்தகோபன்—ஸ்ரீகண்ணபிரான் பிதா.

சடாரியான நம்மாழ்வார் உலகத்தினரைக் குறித்து 'மானிடர்காள்! பாவிகளையும் எனக்கு வசப்படாதவர்களையும்பற்றி நானினிக்கவலைப் படவில்லை; ஒருவனிவ்வுலகிலுத்பவித்து அவர்களையும் உலகப்பற் றற்றவர்களோடுவாசியற எனக்கு வசமாகும்படி செய்வான்; அவனால் இக்கலியின் பெருமையும் நாசமடையும்; இது நிச்சயம்; விழித்துப் பாருங்கள்' என்றதனாலும், ஸ்ரீநாதமுனிகள், விண்ணினின்றும் வீழ்ந்த தண்ணீர் ஒரு *கோவின்குளப்படியில் நிரம்புமாயின் அது வே ஊர்க்குருவியின் குழாத்திற்குஉண்ணுதற்குரியதாயமையும்; இஃ தன்றி மேகத்தினின்றும் வீழுமத்தண்ணீரே பெரியதோரேரியிற் பெருகுமாயின் அதனைச் சார்ந்த பூமியை நன்றாய் விளையச்செய்து பலருக்கும் பிரயோஜனத்தை யுண்டுபண்ணுமென் றருளிச்செய்த தாலும்,

ஸ்ரீயாமுநையர் ஸ்ரீரங்கத்தினின்றும் தமது சிஷ்யர்களுடன் காஞ்சீநகரத்திற்கெழுந்தருளி அங்கு யாதவப்ரகாசன் பக்கத்திலி ருக்கின்ற இராமாநுஜரைக் கண்டு மஹாத்மாவான இவன் நமது சித் தாந்தத்தைச் சார்வனோ? என்று சொல்லிக்கொண்டு ஆவலுடன் தமது கடைக்கண்களால் அவரைப் பார்த்ததனாலும், திருக்கோட்டி யூர்நம்பிகள் ஸ்ரீராமாநுஜருக்குத்தாமுபதேசித்தருளிய †கூடார்த் தத்தை ஒருவருக்கும் வெளியிடலாகாதென்று சொல்லியிருந்தும் இராமாநுஜர் அதனை யாவருமறிந்துகொள்ளும்படி வெளியிட்டுச் சொல்லவே நம்பிகள் இராமாநுஜரைப் பார்த்து 'ராமாநுஜா! யானுன்னிடத்திற் சொல்லியதற்குமாறாய் நீ இவ்வர்த்த விசே ஷத்தை யாவருமறியும்படி வெளியிடலாகுமோ?' என்று கேட்க அதற்கவர் 'ஸ்வாமீ! குருவின் சொற்படி நடவாத அடியேனொரு வனைத்தவிர்த்து மற்றெல்லோரும் §முக்தியடைவார்களென்றெண் ணியே தேவரீருபதேசித்தருளிய அர்த்த விசேஷத்தை யாவரு மறியும்படி வெளியிட்டேன் என்று விண்ணப்பஞ்செய்ய நம்பிகள் அதிசந்தோஷத்துடன் அப்பொழுதே தமது புத்திரனை அவ்

* கோவின்குளப்படி-பசுவின் குளம்படி.

† கூடார்த்தம்--மறைபொருள்.

§ முக்தி—மோக்ஷம்.

விராமாநுஜர் திருவடிகளில் ஆசிரயிக்கும்படி செய்து அவரைக் குறித்து 'ராமாநுஜா! உனதுத்தம குணத்தை யெத்தன்மைத்தென்று சொல்வேன்; இதுமுதல் ஸ்ரீவைஷ்ணவ தர்சனமானது இராமாநுஜ தர்சனமென்றே உன்பெயரால் பிரசித்திபெறத்தக்கது' என்று கூறியதாலும்,

ஒருநாள் ஸ்ரீரங்கத்தில் பெரியநம்பிகள் தமது சிஷ்யராகிய இராமாநுஜர் வருவதைக்கண்டு தமதாசார்யரான யாமுநேயரே யெழுந்தருளுகின்றாரென்றெண்ணிக்கொண்டு சந்தோஷத்துடன் தாமும் தமது பத்நியுமெழுந்துநின்றதுமன்றி அப்போதே தமது புத்திரனையும் அவ்விராமாநுஜரின் திருவடிகளிலாசிரயிக்கும்படி செய்து அவருக்குச் சிஷ்யனாகச்செய்ததினாலும், திருப்பதியினின்றும் திருமலைநம்பிகள் திருவேங்கடமுடையான் பிரசாதத்தைக் கைப்பற்றிக்கொண்டு ஸ்ரீராமாநுஜரை எதிர்சென்று காணவேண்டுமென்றெழுந்தருள ஸ்ரீராமாநுஜர் நம்பிகளைக்கண்டதும் 'ஸ்வாமீ! தேவரீரேயெழுந்தருளவேண்டுமா? இந்த ப்ரசாதத்தை யாரிடத்திலேனுங்கொடுத்தனுப்பலாகாதா?' என்று சொல்ல அதற்கு நம்பிகள் 'ராமாநுஜா! இத்திருப்பதியிலுள்ள நான்கு வீதிகளிலும் நன்றுயாராய்ந்து பார்த்தேன் என்னிலும் தாழ்ந்தவரெவருமில்லாமையால் யானே கொண்டுவந்தேனிந்த ப்ரசாதத்தை' என்று சொல்லியதுடன் தமது புத்திரனையும் அவருக்குச் சிஷ்யனாகச் செய்ததினாலும் ராமாநுஜர் § ஸ்ரீமாலாதரரிடத்தினின்றும் திருவாய்மொழியினர்த்த விசேஷத்தைத் தெரிந்துகொள்ளும்போது ராமாநுஜர் தாம் புதிதாயொரு அர்த்தத்தைச்சொல்ல ஸ்ரீமாலாதரர் 'இவ்வர்த்தம் நாம் கேட்டதில்லையே' என்று நினைத்துக்கொண்டு திருக்கோட்டியூர்நம்பிகளிடம்சென்று விண்ணப்பஞ்செய்யவே நம்பிகள் 'இவ்வர்த்தமும் முன்பு நமதாசார்யனருளிச்செய்ததே' என்று சொல்ல அதனைக்கேட்டதும் ஸ்ரீமாலாதரர் ஆனந்த பரவசராய் அப்போதே சென்று தாமும் தமது புத்திரரும் இராமாநுஜருக்குச் சிஷ்யராக ஆனதினாலும், திருவரங்கத்தமுதனாரென்ற கவிஞர், கலியின் பாவத்தால் பீடிக்கப்பெற்ற இப்பூமியானது எதிராஜனை ராமா

§ ஸ்ரீமாலாதரர்—திருமாலையாண்டான்.

நுஜரால் ரக்ஷிக்கப்பெற்றதென்று கூறியதாலும் இவ்வுலகில் இராமா
நுஜரின் பிரபாவம் எவற்றினும் மேலானதென்று யாவரும் புகழ்ந்
தனர்.

இஃதன்றியும் ஸ்ரீரங்கராஜனென்னும் * ஜலநிதியினின்றும்
அவரது கருணையென்னும் † அமுதமானது பொய்கையார் முதலிய
மேகங்களாற் கவரப்பெற்று நாதமுனிகளென்னும் மஹாமேருவிற்
பொழியப்பெற்று ஆசார்யர்களிற் சிறந்த ராமமிசிரர் பத்மவிலோ
சனரென்னுமருவிகளாய்ச்சென்று யாமுநேயரென்னும் மஹாநதி
யில் வீழ்ந்து சுபகுணங்களையுடைய லக்ஷ்மணார்யரென்னும் ஏரி
யில் நிரம்பி அவ்வேரியினின்றும் கூரத்தாழ்வான் முதலியாண்
டான் முதலிய சிஷ்யர்களென்னுமடைகளின் வழியாய்ச்சென்று
சம்சாரிகளென்னு மேட்டுநிலத்திற்பாய்ந்து நனைத்து அதில் ப்ர

---

அத்வைத மதஸ்தர்கள் கூறுமாறு யாவும் சித்ரூபமான பிர்ம்மத்தினி
டத்தில் ஈயத்தில் வெள்ளிபோல் ஆரோபிக்கப்பெற்றதாய் விளங்குகின்றது.
அதுவுண்மையறிவுண்டாயபோது ஈயத்தில் வெள்ளியென்ற உணர்ச்சி
எவ்வாறு விலகிவிடுகின்றதோ அவ்விதமே சித்ரூபமானதும் உண்மையா
யறியப்பட்டபோது வெளியாய்க்காணப்படுமெல்லாவஸ்துவும் விலகிவிடு
கின்றது என்பதே.

துவைதமென்பது இரண்டுவிதமான பேதத்வைதயடைந்ததின் தன்மை
யெனப்படும். (இதற்கிரண்டென்பதே போந்தபொருளாகும்) இத்தன்மை
யுடையதல்லாதது அத்வைதமெனப்படும். (இரண்டில்லை யென்பது இதன்
கருத்து) விசிஷ்டாத்வைதமென்பது பிரகிருதியுடன்கூடிய பிருமத்தின்
இரண்டற்ற தன்மை யெனப்படும். இதனைஸ்தாபிக்க வேண்டுமாயின் இரண்
டில்லை ஒன்றேயுள்ளதென்றுகூறி சுருதிவாக்கியங்கட்குமிவ்விதமே பொரு
ளுரைக்கின்ற வாதியைக்கண்டிக்கவேண்டும். இதற்கவவாதியைக்குறித்து
நீ சொல்கின்றபடியிரண்டில்லையென்பது தவறு. இரண்டென்பதேயுள்ளது
சுருதிவாக்கியங்களும் துவைதப்பொருளையே கூறுகின்றனவென்று முத
லில் ஸ்தாபித்துக்கொள்ளுவது முக்கியமாதலால் திவ்யசூரிசரித கிரந்த
கர்த்தா பலவிடங்களிலும் துவைதமே மதமெனவும் சுருதிகளுக்கும் பொருள்
துவைதபரமாக உடையவரருளிச்செய்தனரென்றும் சொல்லியிருக்கின்றன
ரென்றுகண்டுகொள்க. குருபரம்பரை கிரந்தத்திலுமிவ்வாறு கூறியிருத்
தல்காண்க.

* ஜலநிதி—சமுத்திரம்.

† அமுதம்—தண்ணீர்.

பக்தியென்னும் பயிர்களின் முளைகளையுண்டுபண்ணி சகலப்பிராணிகளுக்கும் மோக்ஷமென்னும் பலனை இப்பொழுதும் தருகின்றது.

ஸ்ரீராமாநுஜரிப்படி எழுந்தருளியிருக்குங்கால் சோழராஜனொருவன் குலதூஷகனாகவும் கொடியனாகவும் கலியிலுண்டான தோஷங்களின் குழாம்போன்றுமிருந்தனன். அக்காலத்தில் பாண்டியன் அச்சோழனை வம்சத்தோடு நாசஞ்செய்வதற்காகத் தன் மந்திரியின் சொல்முறையால் அவனைச் சைவமார்க்கத்தில் நிலைபெறச்செய்தனன். செய்யவே துன்மதியுடையவனும் கொடிய புரோஹிதன் சொற்படி நடப்பவனுமான சோழன் மூவுலகங்கட்கு மிறைவனான விஷ்ணுவின் எழிலுற்ற சித்திரகூடத்திலுள்ள சிறந்ததொரு திருக்கோயிலைச் சிதைத்துச் சாகரத்தின் தண்ணீரில் தாழ்த்தினன். இஃதன்றியும் அச்சோழன் தன் சபையில் சமஸ்தவித்வான்களின் முன்னிலையில் தன் தேசவாசிகளான ஸ்ரீவைஷ்ணவர்களை வரவழைத்துச் சிவத்தின் மேலான தொன்றுமில்லையென்று பத்திரிகையிலெழுதிக் கையெழுத்திடச்செய்தனன். இவ்விதம் சோழன் செய்யுஞ்செவிகட்கின்னாச்செயலைக்கேட்ட ஸ்ரீராமாநுஜர் தாமெழுந்தருளியிருந்த இடத்தில் கூரத்தாழ்வானை நியமித்துவிட்டுத் தாம் வெள்ளை வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு ஸ்ரீரங்கராஜன் திருக்கோயிலுக்கெழுந்தருளி எம்பெருமானைத் தண்டன்சமர்ப்பித்தெழுந்து திருக்கைகளைக்குவித்துக்கொண்டு பகவானைப்பார்த்து ‘ஸ்ரீரங்கா! உன் திருக்கோயிலையும் உன் தர்சனத்தையும் நீயே ரக்ஷித்துக்கொள்ள வேண்டும்’ என்று விண்ணப்பம் செய்துவிட்டு அங்கிருந்தும் வெளிப்புறப்பட்டுச் சென்றனர்.

இவ்விதம் ஸ்ரீராமாநுஜரெழுந்தருளினரென்பதையறிந்த சோழன் அவரைக்கைப்பற்றிக் கொண்டுவரும்படி தன்சைநியத்தையனுப்பினன். அனுப்பவே சோழன் சைநியம் தம்மைத்தொடர்ந்து வருவதையறிந்த அவ்விராமாநுஜர் ஒரு மந்திரத்தையுச்சரித்துத் தாம் சொல்லும் காட்டின்வழியில் மணலைவாரிச்சிதறும்படி தமது சிஷ்யர்கட்கனுமதிசெய்து அரசன் சைநியம் தம்மைப்பின் தொடர்ந்து வாராதிருக்கும்படி செய்தனர். பின்பவ்விராமாநுஜர் தாமெழுந்தருளும் மார்க்கத்தையடுத்திருக்கும் கிராமங்களிலுள்ள ஜனங்களை

ரக்ஷித்துக்கொண்டு தமது அத்புதசரிதத்தை வெளியிடுதலாலும், தமது திவ்ய கடாக்ஷங்களாலும் பயந்தவர்களான சூத்திரர்கட்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணிக்கொண்டு வருந்துகின்ற மனத்தினை யுடையவராய்த் திருநாராயணபுரம் வந்து சேர்ந்தனர்.

இஃதிவ்விதமிருக்க, ஸ்ரீராமாநுஜரைப் பிடித்துக்கொண்டு போகவேண்டுமென்று அவரைப் பின்தொடர்ந்து வந்த சோழன் சைநிகர்கள் எதிபதியான இராமாநுஜரால் மந்திரிக்கப்பெற்ற வழியிற் சிறிய மணற்குவியலைக்கடந்துவருதற்கியலாது திரும்பிச்சென்று ஸ்ரீரங்கத்தில் எதிவேஷத்துடன் எழுந்தருளியிருக்கும் கூரத்தாழ்வானையும், பெரியநம்பிகளையும் அரசன் சமீபத்திற்கழைத்துச் சென்றனர். சென்றதும் அச்சோழனுல் அநுமதி செய்யப்பெற்ற அவன் புரோகிதன், சபையிலுள்ள வித்வான்கள் முந்நிலையில் அவ்விருவரையும் பார்த்து இப்பத்திரிகையில் 'சிவத்தின் மேலானதில்லை' யென எழுதிக் கையொப்பமிடுங்க ளென்றனன். அதற்கவ்விருவரும் அப்புரோகிதனைக்குறித்து ஹா! ஹா!! ஹரியினும் பெரியவொருவனுண்டென்பது அநியாயமன்றோ என்று நியாயமான வசனங்களை அச்சபையிலுள்ளார் யாவரும் அறியும்படி உயர்ந்த தொனியுடன் உரைத்தனர்.

அப்போது சோழன் மிகுந்த கோபாவேசத்தையுடையவனுய் 'இவ்விதமெழுதுகின்றீர்களா? இல்லையா?' என்று சொல்லவே அரசன் கொடியனுயிருக்கின்றுனென்பதை யறிந்திருந்தும் அக்கூரத்தாழ்வான், 'யாவும் எம்பெருமான் சங்கல்பத்தின்படியே நடக்கும்' என்ற எண்ணத்துடன் சிவமென்னும் சொல்லிற்குக் குறுணி என்ற அளவைப்பொருளும் ஒன்றிருத்தலால் இக்குறுணிக்கு மேற்பட்ட பதக்கென்ற பொருளை யுணர்த்தும் துரோணமென்ற சொல்லை இப்பத்திரிகையி லெழுதுவோமென்று நிச்சயித்துக்கொண்டு அப்பத்திரிகையை வாங்கி அதில் 'சிவத்திற்கு மேல் துரோணமொன்று இருக்கின்றது' என்று துலக்கமாயெழுதிக்கொடுத்தனர். கொடுக்கவே சோழன் அப்பத்திரிகையைப் பார்க்கவும் அரசன் பக்கத்திலிருந்த நாலூரானென்ற நயனிலாவொருவன் கூரத்தாழ்வானைக் குறித்து அரசனிடத்தில் 'இவன் கபடசந்நியாசி' என்று கூறினன். கூறவே

அரசன் கோபத்தால் குருடனாய் மதிமயங்கிப் பாவியான தன்னைப் பார்த்த பாவத்திற்காக ப்ராயச்சித்தஞ் செய்தனனோவென்று கருதும்படி அக்கூரத்தாழ்வான் கண்களைக் குருடாகச் செய்தனன். அப்போதங்கிருந்த கொடியர்களான சேவகர்கள் பெரியநம்பிகளைப் பெலமாயடித்துப் பிராணனையிழக்கும்படி செய்தனர். செய்யவும் அரசன் அவ்விருவரையும், ஆயுளையும் திரவியத்தையு மபஹரித்தவர்களைப்போல் நினைத்துக்கொண்டு தன் நகரத்தினின்றும் வெளியேறும்படி செய்தனன்.

அப்போது கூரத்தாழ்வான் தமக்கு நேர்ந்த சங்கடத்தையும் ஸஹித்துக்கொண்டு பெரியநம்பிகளின் பிராணவியோகத்தை நினைத்துப் பரமதுக்கிதராய் அங்குள்ள பராந்தக பிராமணோத்தமர்களால் நம்பிகளை விதிமுறைப்படி சம்ஸ்கரித்துவிட்டு ஸ்ரீரங்கநகரத்திற்கெழுந்தருளி நடந்த விருத்தாந்தமனைத்தையும் இரசியமாய் *சாரன் மூலம் எதிபதியாகிய இராமாநுஜருக்குத் தெரிவித்தனர். தெரிவிக்கவே செவிகளைப்பிளக்குந் தீயசெய்கையைச் சாரனிடம் கேள்வியுற்ற ஸ்ரீராமாநுஜர் துக்கத்தில் மயங்கியவராய் † அர்க்கியங் கொடுக்கவேண்டியதான அக்காலத்தில் கோபத்துடன் திருவேங்கடமுடையானைக் குறித்து தியானித்துக்கொண்டு சூரியனுக்கு நீரில் அர்க்கியத்தைக் கொடுத்துவிட்டுச் சோழனைத் தொலைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பக்ஷியினால் செய்யத்தகுந்ததொரு § அபிசாரத்தைச்செய்ய ஆரம்பித்தனர். ஆரம்பிக்கவே ¶ உபேந்திரனை பகவானுடைய பக்தர்களில் முதல்வனும் திரிபுரத்தை ஜயித்தோனுமாகிய தியாகேசன், திருவாரூரிலுள்ள ஜனங்களின் செவிகட்கு

---

* சாரன்—மறைந்து செல்லும் மனிதன்.

† அர்க்கியம்—𑌅𑌰𑍍𑌘𑍍𑌯𑌂—பூஜோபசாரத்திற்காகக் கொடுக்கப்படும் தண்ணீர் முதலியன.

§ அபிசாரம்—𑌅𑌭𑌿𑌚𑌾𑌰𑌂—ஹிம்சையைப் பயனாகவுடைய மாரணம், உச்சாடனம், ஸ்தம்பனம் முதலியவான அதர்வவேத தந்திரத்தில் பிரசித்தி பெற்ற தொழில்கள்.

¶ உபேந்திரன்—𑌉𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃—கசியபருக்கு அதிதியென்பவளிடத்தில் இந்திரனுக்குப்பின் வாமன உருவத்துடன் அவதரித்த விஷ்ணு.

நன்ருய்ப் புலப்படும்படி 'சோழ வம்சத்தின் அரசுரிமைக்குரிய முத்திரையை இன்றே கைப்பற்றிக்கொண்டேன்' என்று % கமலாலயத்தின் கோபுரநுனியில் * அசரீரவாக்கென்னும் பேரியை முழக்கினன்.

இஃதிவ்விதமிருக்க ஸ்ரீவேங்கடேசன் இராமாநுஜரின் அர்க்கியத்தால் நியமிக்கப்பெற்றவனுய் பிரஹ்லாதனிடத்தில் பரிவுடன் கூடிய பரமபுருஷஞன நரசிங்கப்பிரான் இரணியனை ஹிம்சிக்கத் தொடங்கியதுபோல் அன்றிரவி லுறங்குகின்ற சோழனைத் தனது கூரிய அஸ்திரத்தால் ஹிம்சிக்க ஆரம்பித்தனன். பின்பு சிலநாட்களில் அத்திருவேங்கடமுடையானது அஸ்திரத்தால் சிதைக்கப்பெற்ற அச்சோழனது கண்டநாளத்தினின்றும் கிரிமிகள் வெளிக்கிளம்பின. அப்பொழுது பற்பலவிதமான ஒஷதிகளாலும் மந்திரங்களாலும் பரிஹாரஞ்செய்து பார்த்தும் ஒன்றுமே பயன்படாதாயிற்று. ஆகவே அதுமுதல் அச்சோழன் இத்தகைய பாவத்திற்கேற்றதாய் யாவராலும் கிரிமிகண்டசோழனென வழங்கப்பெற்றனன். அதன்பின்பு அவன் சிலநாளில் தேகமெங்கும் வியாபித்து வீசும் துர்நாற்றத்துடன் சுடலைத்தீயால் சுடப்பட்ட சரீரத்தையுடையனுயினனென்ற சொல்வுலகமெங்கும் பரவிற்று.

இத்தகைய சொற்களைக்கேட்ட இராமாநுஜர் சந்தோஷத்துடன், தமக்குநேரில் வந்துகூறும் தமது சிஷ்யர்களின் வரவையெதிர்பார்த்தவண்ணம் ¶ பணிசீதி ஹோமத்தைச் செய்துமுடித்தனர். முடிக்கவே ஸ்ரீரங்கத்தினின்றும் தமது சிஷ்யரிலொருவர் வந்து தெண்டன்சமர்ப்பித்தெழுந்து நின்று ஸ்வாமீ! சோழராஜன் விருஷகிரிநாதன் அஸ்திரத்தால் அடிபட்டுப் புழுக்கள் சொரியும் கண்டத்துடன் பூமியில் புறண்டு பிராணனை யிழந்தனனெனறனர். இதனைக்கேட்டதும் இராமாநுஜர் இத்தகைய சந்தோஷ விருத்தாந்தத்தைச் சாற்றிய தமது சிஷ்யரிடத்தில் அதிப் பிரீதியுடன் அவருக்கு மந்திரரத்தினத்தை மறுபடியு முபதேசித்தருளினர். அதன்பின்பு அவ்விராமாநுஜர் திருநாராயணபுரத்தில்

---

% கமலாலயம்—திருவாரூர்.

¶ பணிசீதி ஹோமம்—அபிசாரஹோமத்திலொன்று.

கல்யாண § சரசின்கரையில் செல்வப்பிள்ளையென்ற திருநாமத்தை யுடைய எம்பெருமானை ஸ்தாபித்து அவ்வெம்பெருமான் கைங் கர்யத்திற்காக ஐம்பத்திரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களையும் அங்கு நிலை பெறச்செய்தனர். அப்போது அங்குள்ள பகவத் பக்தர்களனை வரும் எதிராஜர் ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருளப் போகின்றாரெனத் தெரிந்துகொண்டு அவ்விராமாநுஜரின் திவ்யசக்தியமைந்த அர்ச்சா விக்கிரஹமொன்றை யுண்டுபண்ணி ஆராதித்துக்கொண்டு அதிப் பிரயாசத்துடன் ஸ்ரீராமாநுஜரின் பிரிவையாற்றியிருந்தனர். இப் படியிருக்க, அத்திருநாராயணபுரத்தினின்றும் தமது * பரிஜனங் களுடன் வெளியேறிய ஸ்ரீராமாநுஜர் அஞ்சனகிரியினடிவாரத்தி லுள்ள திருப்பதியில் சோழனால் தொலைக்கப்பெற்றிருந்த கோவிந் தாதிபனை ப்ரதிஷ்டைசெய்துவிட்டு அங்கிருந்தும்சென்று சித்திர கூடத்திற் சிதைவுற்றிருந்த திருக்கோயிலைச் சீர்மைப்படுத்தி அதில் சித்திரகூடநாதனை ஸ்தாபித்துவிட்டு வருகின்றவழியிலுள்ள மற்ற எம்பெருமான்களின் ஜீர்ணாலயங்களையும் சீர்மைபெற ஸ்தாபித்துக் கொண்டு ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருனர்.

அங்கெழுந்தருளியதும் ஸ்ரீராமாநுஜர் கூரத்தாழ்வானைக் கடாக்ஷித்து 'இப்படியுமிருந்ததே எம்பெருமான் சங்கல்பம்' என்று துக்கத்துடன் அககூரத்தாழ்வானைத் தழுவிக்கொண்டு வருந்தித் தமது பரிஜனங்கள் பின்செல்ல அக்கூரத்தாழ்வானையுமழைத்துக் கொண்டு சென்று ஸ்ரீரங்கராஜனை மங்களாசாசனம் பண்ணினர். அப்போது தயாநிதியான ஸ்ரீரங்கராஜன், ராமாநுஜர் பக்கத்தி லெழுந்தருளியிருக்கும் கூரத்தாழ்வானைப்பார்த்து 'கூரேசா! நீ உனக்கிஷ்டமான வரத்தை என்னிடம் கேட்பாய்' என்றருளிச்செய் தனர். அதற்கவர் 'ஸ்வாமீ! அடியேனுக்குப் பரமபதத்தைத்தந்தருள வேண்டும்' என்று பிரார்த்தித்தனர். அதற்குப் பகவான் 'அது பின்னால்' என்றருளிச் செய்தனர். அப்போது கூரத்தாழ்வான் 'ஸ்வாமீ இராமன் இரண்டு சொல்கின்றிலனென்றன்றோ எண்ணி

§ சரசு—தடாகம்—குளம்.

% ஆராதித்தல்—அர்ச்சித்தல்—பூஜித்தல்.

* பரிஜனங்கள்—சூழ்ந்திருப்பவர்.

யிருந்தேன்' என்று விண்ணப்பஞ்செய்ய ஸ்ரீரங்கராஜன் 'அப்படி யானால் தந்தோம்' என்றருளிச்செய்து பரமபதத்திற்குரிய பருமதி வஸ்துக்களையும் பிரசாதத்தையும் கூரத்தாழ்வானுக் கநுக்கிரஹித்து வேதவியாசபட்டரென்ற திருநாமத்தையுடைய அவர் திருக்குமாரரை எம்பெருமான் தானும் ஸ்ரீதேவியுமாய் புத்திர ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டனர்.

இவ்விதம் விரைவில் இராமாநுஜரின் சிஷ்யர்களிற் சிறந்த கூரத்தாழ்வான் பரமபதத்தையடையவே எதீந்திரரான ஸ்ரீராமாநுஜர் வேதவியாசபட்டர் முதலிய மற்றைய சிஷ்யர்களிடத்தில் ஸ்ரீரங்கராஜ கைங்கர்ய நிர்வாஹத்தையும் வேதாந்த காலக்ஷேபாதி வியவஹாரத்தையும் ஒப்பித்துவிட்டு மற்றுள்ளவர்களைப் பார்த்து நீங்களெல்லோரும் செய்யவேண்டியது யாதெனில் பொய்கையார் முதலிய திவ்யஸூரிகளாலுண்டுபண்ணப்பட்ட நல்ல படிகளையுடையதும் ஸ்ரீமந்திரமென்னும் இரண்டு பக்கச் சட்டங்களுடன் கூடியதும் ஸ்ரீபாஷ்யமென்னும் ஆணியினால் நிலைபெற்றிருப்பதும் பரமபதமென்னுமிடத்தைச் சேர்தற்கிசைந்ததுமான ஏணியைப்பற்றிக்கொண்டு தத்தமதாசார்யர்களால் காண்பிக்கப்பெற்ற மார்க்கத்தின்படி இவ்வேணியிலேறிச் செல்லவேண்டுமென்று நியமித்துவிட்டுத் தாம் பொய்கையார் சடகோபர் முதலியவர்களின் வடிவத்திற்கிசைந்த அர்ச்சாவிக்ரஹங்களையும் அவ்வாழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களையும் தமது திருமேனிக்கிணையான அர்ச்சாவிக்ரஹத்தையும் ஸ்ரீரங்கம் முதலான திவ்யதேசங்களில் நிலைபெறச்செய்துவிட்டு ஸ்ரீராமாநுஜமுனிவர் திவ்யஸூரிகளுடன் நித்யவாசம் பண்ணுதற்குப் பரமபதத்தைச் சேரவேண்டுமென்ற திருவுள்ளமுடையவராயினர்.

ஸ்ரீகாசிபகுலதிலகரும் ஸ்ரீரங்கராஜரின் வைத்தியசாலைத் தலைவரும் கவிவைத்தியபுரந்தரரென்னும் பெயரையுடையவருமான கருடவாஹந பண்டிதரா லியற்றப்பெற்ற திவ்யஸூரிசரிதமென்ற மஹாகாவியத்தில் பதினெட்டாவது சர்க்கம் முற்றுப்பெற்றது.

(மங்களம் மங்களம்.)

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 11-12 | பூங்கொத்துக்களில் ரஸத்தை | பூங்கொத்துக்களிலுள்ள ரஸத்தை |
| 10 | 14 | நாந்தகமென்ற | நந்தகமென்ற |
| ,, | 16 | களாய்த்தோன்றின | களாயவதரித்த |
| ,, | 3 | பிடித்தனர் | பீடித்தனர் |
| ,, | 9 | ச்செய்வாராயினர் | செய்தனர் |
| ,, | 22 | பரிஸுத்தமான | பரிசுத்தமான |
| 12 | 28 | பார்த்தருளி, | செய்தருளி, |
| 14 | 26 | வயிற்றின் வழியே | அவற்றின் வழியே |
| 15 | 27 | பரிஸுத்த | பரிசுத்த |
| 16 | 6 | கேப்பீர் | கேட்பீர் |
| ,, | 13-14 15-16 | நீட்டினர். அக்கால் விரல்களினின்றும் அக்நிஜ்வாலையுடன் கூடிய சூர்யாக்நிகட்கு மதிமான தேஜசுயென்றசொல்லத்தக்க அநேகம் வரி தோன்றி எரிக்கத் தொடங்கிற்று. அதைச் சஹிக்க முடியாத | நீட்டினர். அப்போதக்கால்களினின்றும் பிரகாசிக்கின்ற அக்நிஜ்வாலையையுடையஅத்தகைய பல கண்கள் தோன்றின. தோன்றவே சூர்யன் அக்நி இவற்றிற்கும் மேலான அக்கண்களின் தேஜஸை சஹிக்க முடியாத |
| ,, | 16 | புஸ்களாவர்த்தம் | புஷ்கலாவர்த்தம் |
| 17 | 11 | வியாகூல | வியாகுல |
| ,, | 20 | தானணிந்து | தாமணிந்து |
| 18 | 11 | வினுடைய | வினுடையது. |
| ,, | 12 | கின்றதோ, | கின்றதே, |
| 19 | 18 | ஸயனித்து | சயனித்து |
| 20 | 26 | வேண்டுவென் என்றனன். | வேண்டுமென்றனன். |
| 22 | 6 | தன் மனத்தி | தம்மனத்தி |
| 23 | 5 | திலும் கண்டேனே | தில் கண்டேனே |
| ,, | 8 | அயிரத்திருநூறு | ஆயிரத்துநானூறு |
| 25 | 19 | நதி சூழப்பெற்றதாய், யாவரா | நதிக்கரையில், யாவரா |
| 26 | 17 | அவரும்தன் | அவரும் தம் |
| 30 | 9 | புகழத்தக்க | இகழத் தக்க |
| ,, | 26 | தன்மனத்தி | தம் மனத்தி |
| ,, | 29 | தன்னை | தம்மை |
| 31 | 4 | சரணம் புரிந்து | சரணம் புகுந்து |
| 32 | 10 | முக்தர் பக்தர் | முக்தர் பெத்தர் |
| 33 | 8 | தன்வக்குவிலா | தம் வாக்விலா |
| ,, | 19-20 | அழகாக | அகழாக |
| 34 | 24 | மகராஜருக்கு | மகாராஜருக்கு |
| 35 | 25-26 | பாம்பின் கூடத்தை | பாம்பினை யுள்ளிருக்குங் குடத்தை |
| 36 | 15 | அப்பெருமானுக்கு | அவ்வெம்பெருமானுக்கு |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 36 | 17 | செய்து விட்டு | செய்து பிரியனான மந்திரி சகிதனாய் அவனை யரசாளும்படி நியமித்து விட்டு |
| ,, | 20 | தோடெழுந்தருளி யிருந்தனர். | தோடெழுந்தருளிச் சென்றனர். |
| 38 | 3 | நந்தனவன மொன்றுண்டுபண்ணி அந்நந்தனவனத்திலுண்டாகின்ற | உபவனத்தை யுண்டு பண்ணி அதிலுண்டாகின்ற |
| ,, | 27 | நான் பிராமணன் கங்கையில் | நான் கங்கையில் |
| 40 | 2 | வைத்து இத்தக் கிழியை மஹான்களா யிருக்கின்றவர்கள் எனக்கு | வைத்து மஹான்களா யிருக்கின்றவர்கள் இக்கிழியையும் எனக்கு |
| ,, | 3-4 | சந்தேகத்தை யறுத்து அதன்பின் அறுக்க வேண்டும் | சந்தேஹத்தையும் அறுத்தருள வேண்டும். |
| ,, | 17 | வேதாந்தங்களின் சாரத்தை | வேதாந்தார்த்தங்களின் சாரத்தை |
| ,, | 28 | விஷ்ணு ஸித்தர் | விஷ்ணு சித்தர் |
| 41 | 12 | தன்பரம | தமது பரம |
| ,, | 13-14 | வேணுமென்ற பகவான் | வேணுமென்ற சந்தோஷத்தினால் பகவான் |
| ,, | 16 | சேவை சாதித்தனர். எம்பெருமானை | சேவைசாதித்தனர். பிருமரதத்திலேறிவரும் புத்திரனைத் தாய் தந்தையர் காணவருவது போல லக்ஷ்மீ சகிதனாயெழுந்தருளிய எம்பெருமானை |
| 42 | 3 | வெற்றிபெற் புஜங்களையுடைய எம்பெருமானுடைய | வெற்றி பெற்ற எம்பெருமானுடைய |
| ,, | 5 | சங்க சக்ரங்கட்கும், நித்ய மங்களாசாசனம் | சங்க சக்ரங்கட்கும், மங்களாசாசனம் |
| 43 | 10 | விசேஷத்தாலெழுந்தருளி | விசேஷத்தாலிங்கெழுந்தருளி |
| ,, | 27-28 | புண்டரீகனென்னும் பாகவதரின் கிருத்தியத்தை அவர் திருவுள்ள | புண்டரீகரென்னும் பாகவதரின் கிருத்தியத்தை யெம்பெருமான் திருவுள்ள |
| 44 | 17 | விட்டுதன் | விட்டுத் தன் |
| ,, | 22 | இது எங்களை ஆநந்திக்கச் செய்கிறது. குபேரனுடைய | இது என்கண்களை ஆநந்திக்கச் செய்கிறது. இது இந்திரனுடைய நந்தனமென்னும் வனத்தையும் குபேரனுடைய |
| 45 | 7 | இங்குள்ள வாபியின் | இங்குள்ள புந்நாகவாபியின் |
| ,, | 18 | ஸ்ரீரங்கராஜன் சிரமத்தையே | ஸ்ரீரங்கராஜரின் மிகுந்த சிரமத்தையே |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 45 | 23-24 | கண்டார்கள். அவர் | கண்டார்கள். அப்போதவர் |
| ,, | 25 | தொங்குகின்ற மீசையையுடையவராகவும் | தொங்குகின்ற மீசைதாடிகளையுடையவராகவும் |
| ,, | 27 | அணிந்து கொண்டவராகவும் வெட்ட | அணிந்து கொண்டவராகவும், துவாதச ஊர்த்துவபுண்டரங்களைத் தரித்துக்கொண்டவராகவும், வெட்ட |
| 46 | 3 | மனசையுடையவராக யிருப்பதையும் அழகிய | மனசை யுடையவராகவு மிருப்பதைப்பற்றி அழகிய |
| ,, | 5 | கவனியாதிருப்பதையும் நினைத்து | கவனியாதிருப்பதை நினைத்து |
| 54 | 9-10 | பக்தியுடையவரா யெழுந்தருளியிருந்தனர் | பக்தியுடையவராய்ப் புஷ்ப கைங்கர்யஞ் செய்துகொண்டெழுந்தருளியிருந்தனர். |
| 55 | 9 | எழுந்தூளிகளால் | எழுந்த தூளிகளால் |
| ,, | 27 | ஆச்சர்யமுள்ள | ஆச்சர்யமுற்ற |
| 58 | 5 | திருக்குரையலூர் | திருக்குரையிலூர் |
| 59 | 4 | அழிந்திருந்தும் | அழிந்தும் |
| 62 | 26 | பதிமஹாராஜ | பதி, மஹாராஜ! |
| ,, | 29 | மந்தமலையை | மந்தரமலையை |
| 68 | 26 | தன் கிரஹத்திற் | தம் கிரஹத்திற் |
| 70 | 5 | கிருகத்தின் வாயில் முத்தங்களில் புழுதியில் விளை | கிருஹத்தில் புஷ்ப தூளியில் விளை |
| 72 | 21 | எம்பெருமானுக்கொண்டு | எம்பெருமானுக்குக்கொண்டு |
| ,, | 28-29 | சந்தோஷம்முன்பு ஸ்ரீவிஷ்ணு சித்தர் | சந்தோஷம், ஸ்ரீவிஷ்ணு சித்தர் |
| ,, | 30 | சமர்ப்பித்த மாலையினுலேர்படவில்லை. பின்பு | சமர்ப்பித்த மாலையினுலாவது முன்பு கிருஷ்ணவதாரத்தில் மாலாகாரர் கொணர்ந்து சமர்ப்பித்த மாலையினுலாவதுண்டாகவில்லை. பின்பு |
| ,, | 33 | அழகு பர்த்துவிட்டுப் பின்பு ஸ்ரீவிஷ்ணு சித்தரிட | அழகு பார்த்துவிட்டுப் பின்பு தன் கேசத்தாலும் சிறிது வாசமுற்றிருக்கும் அம்மாலையை ஸ்ரீவிஷ்ணுசித்தரிட |
| ,, | 34-35 | கொடுத்து வந்தனள் | செய்துவந்தனள் |
| 73 | 22 | கடைக்கண் பார்வையே | கடைக்கண் பார்வையையே |
| 76 | 9 | ருமான் | ருமான |
| ,, | 24 | பெற்று வந்தனர் | பெற்றுவந்தனன் |
| ,, | 27 | அநுக்ரஹித்தனர் | அநுக்ரஹித்தனன் |
| 77 | 24 | பாலிக்கின்றனர் | பாலிக்கின்றனன் |
| 79 | 19 | வியாகூல | வியாகுல |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 81 | 1 | சகீயானவள் | சகியானவள் |
| 82 | 13 | முத்தாரத்தை பழிக்கின்றவள் | முத்தாரத்தையளிக்கின்றவள் |
| 83 | 4 | யிருந்தனர் | யிருந்தனன் |
| ,, | 17 | அந்தரங்கதாதி | அந்தரங்கதூதி |
| ,, | 23 | யிருந்தனர் | யிருந்தனன் |
| 84 | 24 | யென்றனர் | யென்றனன் |
| ,, | புட்நோட்டில் | சாத்வீக விகாரம் | சாத்விகவிகாரம் |
| 85 | 3-4 | ஸ்வல்ப திநங்கிளில் என்னலநுபவிக்கப்படுகிறது. ஹேரங்கநாயகா! என்ற | ஸ்வல்ப தினங்களாகத் துன்பமயமா யென்னலநுபவிக்கப் படுகின்றது ரங்கநாதா! என்று |
| 87 | 12 | வில்லையா? நீங்கள் ப்ராண | வில்லையா நீங்கள்? ப்ராண |
| ,, | 20 | வல்லவரும் | வல்லவனும் |
| ,, | 21 | தனிகருமான | தனிகனுமான |
| ,, | 22 | ஹரித்தனரென்றும் | ஹரித்தனனென்றும் |
| ,, | 25 | கொண்டனர் | கொண்டனன் |
| ,, | 27 | கின்றனரென்றும் | கின்றனனென்றும் |
| ,, | 28 | தனர் | தனன் |
| 88 | 17 | ஆசையினல் ஜீவன் போயிருக்கின்ற நிலைமை | ஆசையினலவள் ஜீவன்போகின்ற நிலைமை |
| 89 | 9 | இப்போது வெளுத்திருக்கின்றது பார் | இப்போது, சந்திர கிரணங்களால் வெளுத்திருக்கு மாகாயத்தின் தன்மையையடைந்திருக்கின்றது பார் |
| ,, | 14 | வற்றில் பயப்பட்ட என் | வற்றல் பயமுற்ற என் |
| 91 | 10 | நகரத்தை யடைந்து அவ்விடத்தில் | நகரத்தையடைந்தனர். அடைதலுமவ்விடத்தில் |
| 92 | 20 | வழங்கின | முழங்கின |
| 93 | 17 | எம்பெருமான்களிலெவரும் | எம்பெருமான்களிருவரும் |
| ,, | 33 | புஜங்களை யுடைவர்களும் | புஜங்களையும் உடையவர்களும் |
| 94 | 26 | தனர். | தன |
| 96 | 25 | உருவுடவன் | உருவுடன் |
| ,, | 30 | வேதழமுக்கத்தையும் | வேதமுழக்கத்தையும் |
| 97 | 23 | பாராய் ஈங்கு | பாராய்! ஈங்கு |
| 98 | 11 | குறித்துப் பாராய் | குறித்துப் பாராய்! |
| ,, | 12 | ஜாக்ஷி | ஜாக்ஷி! |
| ,, | 14 | கொண்டிருக்கின்றனர். இவர் | கொண்டிருக்கின்ற இவர் |
| ,, | 16 | கிரீடிப்பாயாகவென்று | கிரீடிப்பாயாக என்று |
| 99 | 13 | நாகபட்டினத்தின் | நாகபட்டிணத்தின் |
| ,, | 28 | அயவிடஞ் | அயலிடஞ் |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 100 | 15 | ஸ்ரீமான் கரிரக்ஷகரென்ற | ஸ்ரீமான். கரிரக்ஷகரென்ற |
| ,, | 17 | திருவெள்ளங்குடி | திருவெள்ளியங்குடி |
| ,, | 19 | எம்பெருமான்கள் பதின்மர்சூழ் | எம்பெருமான்களின் பத்துத் திருக்கோயில்கள் சூழ் |
| 102 | 15 | உன்சிறிய தகப்பனுரான | உன்பிதாவின் சஹோதரரான |
| ,, | 30 | யகற்றினர் | யகற்றினன் |
| 103 | 3 | கின்றனர் | கின்றனன் |
| ,, | 5 | கின்றனர் | கின்றனன் |
| ,, | 30 | வலபுரத் | வலது புறத் |
| 104 | 3 | சிறியபிதாவான | பிதாவினுடன்பிறந்தவர்களான |
| ,, | 7 | செய்துகொண்டன. வணங்கிய | செய்து கொண்டன. விநயத்தால் வணங்கிய |
| ,, | 13 | விக்கின்றனர் | விக்கின்றனன் |
| ,, | ,, | இப்போதும் மேகங் | இப்போதும், மேகங் |
| | 20 | கருத்தாவது | கருத்தானது |
| ,, | 25 | உன்சிறியபிதாவின் சொற்படி | உன் பிதாவுடன் பிறந்தவரின் சொற்படி |
| 105 | 8 | போாதகெதன்னெஞ்சு | போாகெதன்னெஞ்சு |
| ,, | 24 | திருக்கின்ற வைகுண்ட | திருக்கின்றனர். இவர் வைகுண்ட |
| 106 | 13 | ஜனங்கள்கரும்பின்சாற்றையே | ஜநங்கள், நிரம்பிய கரும்பின் சாற்றையே |
| 107 | 1 | தேசித்தனர் | தேசித்தனன் |
| ,, | 3 | கண்டமென்னுங்கடி | கண்டமன்னுங்கடி |
| ,, | 5 | கின்றவரும் | கின்றவனும் |
| ,, | 6 | அபாயமற்றவரும் | அபாயமற்றவனும் |
| 108 | 21 | தினின்றுவ்யூஹம் | தினின்றும் வ்யூஹம் |
| 109 | 11-12 | சந்திரன்போலவும் ரத்தினங்களில் | சந்திரன் போலவும், மலைகளில் மஹாமேரு போலவும் ரத்தினங்களில் |
| ,, | 14 | கூடிகளங்க | கூடியதாய்க் களங்க |
| ,, | 17 | கைப்பற்றுவாய். முன்புநீ | கைப்பற்றுவாய். ஹேயிந்துமுகீ, முன்புநீ |
| ,, | 26 | மாலையை ஸ்ரீ ரங்கேசனிடத்தில் | மாலையை முதலில் ஸ்ரீரங்கேசனிடத்தில் |
| 111 | 1 | பட்டும் பனிநீர் | பட்டும், நிஸ்ஸாணம், தூரியம், ஆனகம், சங்கம், பேரீ, இவற்றின் முழக்கத்தால் நிரம்பிய மாளிகைகளை யுடையனவாகவும் பன்னீர் |
| ,, | 2 | உடையதாகவும் | உடையனவாகவும் |
| ,, | 4 | கின்றதாகவும் | கின்றனவாகவும் |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 111 | 7 | யிருக்தளள் | யிருந்தனள் |
| ,, | 12 | சொல்லும்போது | செல்லும்போது |
| 112 | 4 | அவீழ்ந்த | அவிழ்ந்த |
| ,, | 12 | களாம் | களாகிய |
| 113 | 6 | சசிதேவி | சசீதேவி |
| 114 | 7 | வதூவர்களாக | வதூவரர்களாக |
| ,, | 8 | தன்கரத்தால் தாமரை | தன்கரத்தால் தாமரைக்கொடியிலுள்ள தாமரை |
| ,, | 21 | போலப்ரகாசித்து | போல, ப்ரகாசித்து |
| ,, | 23 | தமது | தனது |
| 115 | 2 | ஸ்ரீரங்கராஜன் | ஸ்ரீரங்கராஜர் |
| ,, | 22 | காலத்தில் வேதங்களால் | காலத்தில், வேதாந்தங்களால் |
| 116 | 5 | மேற்றிசையுற்று வேற்று மங்கையை | மேற்றிசையாகிய வேற்று மங்கையை |
| 117 | 3 | கஸ்தூரிதிலகத்தையும் | கஸ்தூரீ திலகத்தையும் |
| ,, | 7 | இஃதன்றியும் இளவெய்யிலால் | இஃதன்றியு மிளவெய்யிலானது தருக்களின் புதிய தளிர்களின் ஒளியையும் மலைகளிலுள்ள தாதுக்களின் காந்தியையும் தடாகங்களிலுள்ள தாமரைமலர்களின் சோபையையும் ஸ்திரீகள் பூசியிருக்கும் குங்குமத்தின் நிறத்தையுமிரட்டிக்கச் செய்கின்றது அன்றியும் இளவெய்யிலால் |
| ,, | 19 | ஹேரங்கேச்வரா, உத்யாநமோ | ஹே ரங்கேச்வரா! திக்குகளிலிரவியினொளி பரவிற்று. நக்ஷத்திரங்களின் காந்தியும் நீங்கிற்று. சந்திரனு மொளிமழுங்கினன். இருளுமகன்றது. கமுகின்பாளை மணங்கமழுங்காற்றும்வீசுகின்றது. துயிலெழ வேண்டும். ஹே ரங்கேச்வரா! உத்யானமோ |
| ,, | 26 | வியாபிக்கின்றன | வியாபித்தன |
| 119 | 10 | சந்ததருக்கள் | சந்தன தருக்கள் |
| ,, | 11 | கலத்தின் | கலசத்தின் |
| ,, | 13 | இதோ பார். தாமிரபர்ணீ நதியை சந்தன | இதோ பார் தயிரபர்ணீ நதியைச் சந்தன |
| ,, | 15 | இம்மலை நதிகளுக்கெல்லால் | இம்மலை, நதிகளுக்கெல்லாம் |
| ,, | 19-20 | ஹே சுந்தரீ! இம்மலைக்கெதிரே | ஹே சுந்தரீ! இதோ எதிரே |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | | யிருக்கின்ற எனது கிரீடா கிரியைப்பார் | யிருக்கின்றவென்கிரீடாகிரியாகிய ஆராமகிரியைப் பார் |
| 120 | 8 | இம்மலைத்தாழ்வரை | இம்மலை, உச்சியினின்றும் தாழ்வரை |
| ,, | 19-20 | மணிவிளக்காய் ப்ரகாசிக்கின்ற | மணிகளாகிய விளக்கால் ப்ரகாசிக்கின்ற |
| ,, | 23 | மதுவினால் | மதுவின் |
| 121 | 21 | சிறியதந்தையின் | பிதாவுடன் பிறந்தவரின் |
| ,, | 25 | வேசத்திற்கிசைந்த | வேஷத்திற்கிசைந்த |
| 122 | 10 | கொள்ளலாமென்ற | கொள்ள வேண்டுமென்ற |
| ,, | 13 | ளுடன் தம்மை | ளுடன், தம்மை |
| 123 | 2 | மாற்றியதாகவும், இந்திரயானை | மாற்றியதாகவும், சங்கரன் விடை மிடற்றேருசையைத் தவிர்த்ததாகவும், இந்திரயா [னை |
| 124 | 10 | தருளினர் | தருளினன் |
| 126 | 9 | தனர் | தனன் |
| ,, | 23-24 | வருகின்ற | வருந்துகின்ற |
| 127 | 16 | உமக்கும் | உனக்கும் |
| ,, | 19 | தமது | தனது |
| ,, | 20 | கொடுத்தனர் | கொடுத்தனன் |
| ,, | 30 | ப்ரவாஹமென்றும் | ப்ரவாஹமென்னும் |
| 129 | 14 | சேவித்துக்கொண்டு தமது | சேவித்துக்கொண்டு மிகுந்த தனத்தையும் சம்பாதித்துக் கொண்டு தமது |
| 130 | 26 | பவித்தனர் | பவித்தனர் |
| 131 | புட் நோட் | நிதி—பொருள் | நிதி—புதையல் |
| 135 | 27 | தமது | தனது |
| 143 | 5 | முதல் | முதலில் |
| ,, | 18 | வண்டினங்களாகி, டங் | வண்டினங்களாகிய டங் |
| ,, | 23 | கந்தலனால் | கந்தவகனால் |
| ,, | புட் நோட் | கந்தலகன். | கந்தவகன் |
| 144 | 25 | நந்தவனத்தில் | நந்தனவனத்தில் |
| 145 | 2 | வைத்துக்கெண்டு | வைத்துக்கொண்டு |
| ,, | 26 | சஞ்சரிகங்கள் | சஞ்சரீகங்கள் |
| ,, | ,, | கின்றதென்ற | கின்றனவென்ற |
| ,, | புட் நோட் | சஞ்சரிகம் | சஞ்சரீகம் |
| 149 | 17 | தமது தோழி மார்களுடன் | தமது தேவிமார்களுடன் |
| 150 | 4 | செய்தனர் | செய்தனன் |
| ,, | 13 | விளையாட்டில் எங்கும் | விளையாட்டில், எங்குல் |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 150 | 20 | வாரியின் தன்மையைப் பெற்றது | வாரிதியின் மகிமையை விஸ்தரித்தது |
| ,, | 28 | அவ்வநிதை | அவ்வநிதையரின் |
| 154 | 1 | தெளிதண்ணீராகவும் மயினங்கட்கு | தெளித்த தண்ணீராகவும் மயிலினங்கட்கு |
| ,, | 1-2 | பயனாகவுமிருந்தன. | பயனாகவும் சாதக பக்ஷிகளின் துன்பத்தைத் தணிக்கும் வைத்தியனாகவுமிருந்தன. |
| ,, | 24 | திருவவதாரண மஹோத்ஸ | திருவவதாரமஹோத்ஸ |
| ,, | 25-26 | கார்யத்திற்குப்போக்கியமான | கார்யத்திற்கு யோக்கியமான |
| 155 | 10-11 | வெண்ணிறத்துடன் விளங்குகின்ற ஹம்சபக்ஷிகளின் | வெண்ணிறத்துடன் விகசிதமாய்விளங்குகின்ற நாணற்பூக்களாலும் ஹம்ச பக்ஷிகளின் |
| 156 | புட்நோட் | உயிர்வானஞானம் | உயர்வான ஞானம் |
| 158 | 21 | திசையென்னும் மங்கையின் | திசைகளென்னு மங்கையரின் |
| ,, | 22 | அம்மங்கையின் | அம்மங்கையரின் |
| 159 | 4 | அஞ்சனமாகவும் ஆகாய | அஞ்சனமாகவும் திசைகளாகிய மங்கையரின் கூந்தலாகவும் ஆகாய |
| 160 | 25 | கொண்டு தீப மஹோத்சவத்தைக் கடாக்ஷித்தனன் | கொண்டு தனக்கெதிரில் உச்சியிலிடப்பட்ட விளக்கையுடையதாய் ப்ரகாசிக்கின்ற சொக்கப்பனையைக் கடாக்ஷித்தனன் |
| ,, | 27 | கேசரங்களை | கேஸரங்களை |
| 161 | 9 | துணிந்தனனோவென்றம் | துணிந்ததோவென்றும் |
| ,, | 12 | கிளம்பினனோவென்றம் | கிளம்பிற்றோவென்றும் |
| 162 | 16 | விளங்கிற்று | விளங்கிற்று. |
| 163 | 10 | தாமரை தலர்களின் | தாமரை மலர்களின் |
| 165 | 15 | ரத்திரி | ராத்திரி |
| 166 | 3 | ராவணசம்ஹாரம் | ராவண ஸம்ஹாரம் |
| 167 | 4 | சப்தஸ்வரம் | ஸப்தஸ்வர |
| ,, | 12 | அபபாற்கடலை | அப்பாற்கடலை |
| 168 | 1-2 | இவர் எம்பெருமான் சேவகர்களில் முதல்வரானசேனைமுதலியாரென்னும் கஜவநரின் | இவர், விஷ்வக்ஸேநரின் முதல் சேவகரான கஜவதநரின் |
| ,, | 9 | நாதமுனிவாருக்கு | நாதமுனிவருக்கு |
| ,, | 28 | வருந்துசின்றோம் | வருந்துகின்றோம் |
| 171 | 3 | ருடைய | ளுடைய |
| ,, | ,, | இவருடைய | இவளுடைய |
| 172 | 19-20 | தத்துவத்தின் யோகத்துடனும் | தத்துவயோகங்களுடனும் |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ,, | 24 | சநாதன தருமத்தை | சநாதன பிருமத்தை |
| 173 | 3 | விஸ்தரிப்பித்தனர் | விஸ்தரித்தனர் |
| ,, | 3-4 | போதுமுதாக்ஷ | போதுகுமுதாக்ஷ |
| 174 | 8 | யாமுநேயர் சமஸ்த சாஸ்தி | யாமுநேயர் சமஸ்தவேதங்களை யும் சமஸ்த சாஸ்தி |
| ,, | 23 | யெதிர்த்துவரும் கஜேந்திர | யெதிர்த்துவரும் பிரதிவாதி களாகிய கஜேந்திர |
| ,, | 25 | வந்து அவன் | வந்தவன் |
| 176 | 8-9 | நீயுன் வாயிலுண்டென்று | நீ யுன் வாயினுலுண்டென்று |
| ,, | 10 | கண்டிருக்கின்றேன் | கண்டிக்கின்றேன் |
| ,, | 23 | மனைகமனைத்தும் | மனைத்தும் |
| 177 | 20 | சித்துக்கல்வி | சித்து அவரைக் காணுதற்குரிய கல்வி |
| 179 | 5 | பலித்து | பவித்து |
| 184 | 10 | முடிந்தபின் ஸ்ரீராமாநுஜரின் | முடிந்தபின் பரிசுத்த மதியினை யுடைய அவர் அகிலவேதங் களையுங் கற்றுணர்ந்ததும் ஸ்ரீராமாநுஜரின் |
| ,, | 14 | அறிதற்குரிய | அறிதற்கரிய |
| ,, | 15 | ஸ்ரீகஞ்சி | ஸ்ரீகாஞ்சி |
| ,, | 25 | கின்றனர் | கின்றனன் |
| ,, | புட் நோட் | பலித்தவன் | பவித்தவன் |
| 185 | 9 | நேயர்மகிமைக்கு | நேயர், மகிமைக்கு |
| 186 | 8 | இப்படியிருக்க நீயேனி | இப்படியிருக்க, ஐயோ! நீயேனி |
| ,, | 16 | மதுராந்தமென்னும் | மதுராந்தகமென்னும் |
| ,, | 29 | நானிதோ | நான், இதோ |
| 188 | 8 | கேட்டாற்ருத்துக்கத்துடன் | கேட்டாற்ருது துக்கத்துடன் |
| 189 | 2 | வேண்டுமென்றும் | வேண்டுமென்னும் |
| ,, | 16 | களின | களின் |
| 192 | 10 | நப்பிகளை | நம்பிகளை |
| ,, | 24 | தமக்குச் செல்ல | தமக்குச் சொல்ல |
| 193 | 9 | அந்தியகாலத்தில் அவனை | அந்தியகாலத்தில் என்னை |
| 194 | 7 | கிட்டப் பெற்றது அம்புஜ | கிட்டப் பெற்றது. அம்புஜ |
| 195 | 5 | நன்குணாலாகுமன்றே ஆத லால் | நன்கறிவுறுத்தப்பட்டதன்றே நமக்கு, ஆதலால் |
| ,, | 27 | செய்தவண்ணமே தமக்கு | செய்தலி லன்புடையவராய்த் தமக்கு |
| 196 | 16 | இவ்விதம் சன்னி | இவ்விதம் விரைவில் சன்னி |
| 197 | 2 | என்றனர் | என்றனன் |
| 197 | 27 | பெற்றுக்கொண்டு ஸ்ரீராமாநு ஜரிடம் | பெற்றுக்கொண்டு எம்பெருமா ன்கிருபைக்கு பரிபூர்ணபாத் திரமான ஸ்ரீராமாநுஜரிடம் |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 198 | 4 | தருளிய | தருளும் |
| ,, | 5 | பரிவாரங்களுடனெதிர் சென்று தன் திருக்கண்களால் | பரிவாரங்களை யனுப்பி யெதிர்கொண்டு சென்றழைத்து வரச் செய்து தான் கைத்தலத்திலெழுந்தருளியெதிர் சென்று அவரைத் தன் திருக்கண்களால் |
| ,, | 19 | திருவடிதாசனும் பாக்கியத்தைப் பெற் | திருவடிதாசனும் தன்மையைப் பெற் |
| ,, | 21 | செய்தனர். அப்பெரிய | செய்தனர். அப்போதப்பெரிய |
| 199 | ,, | திறகுரிய ரங்கராஜனுக்கு | தினைச்செய்யக் கருது மிராமாநுஜர் ரங்கராஜனுக்கு |
| 200 | 18 | திருக்கோட்டி நம்பியூர்களின் | திருக்கோட்டியூர் நம்பிகளின் |
| 201 | 8 | யாமுநேயவாசார்யர், தமது | யாமுநேயாசார்யர், திருவரங்கப் பெருமாளரையர் முதலிய தமது |
| 203 | 9 | சாஸ்வதி தேவீ | சாஸ்வதி தேவி |
| ,, | புட் நோட் | கப்யாசம் கப்யாஸம் என்றந் தலைக்குறிப்பிட்ட வேதாந்த ஸூத்ரம் | † கப்யாசம் கப்யாஸம் சாந்தோக்கிய உபநிஷத்தில் 1-வது . அத்தியாயத்தில் 6-வது கண்டத்தில் தஸ்ய யதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ என்ற வாக்கியத்திலுள்ளது. |
| ,, | 22 | தேவீயானவள் | தேவியானவள் |
| 206 | 14 | ஸ்வாமீபுஷ் | ஸ்வாமி புஷ் |
| 207 | 8 | கின்றனன் என்று | கின்றவன் என்று |
| ,, | 11 | காமினீயால் | காமினியால் |
| 208 | 8 | தருளிய ஸ்ரீராமாநுஜர் | தருளியதும் ஸ்ரீராமாநுஜர் |
| 211 | 15 | பன்னர்கள் | பன்னர்கள், |
| ,, | 16 | முன்பே | முன்பே, |
| 213 | 3-4 | பவித்ர அவர்களையு முலகப் பற்றற்றவர்களோடு வாசியற எனக்கு வச | பவித்தரத்தனது சொற்களால் இவ்வுலகத்தைத் தனக்கு வச |
| 216 | 28 | சொல்லும் காட்டின் | செல்லும் காட்டின் |
| 16 | 13 | கால் விரல் | கால் |
| 22 | 6 | லுள்ளபக்தியே வெளி | லுள்ள பக்தியே உருவுடன் வெளி |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 22 | 7-8 | போன்றதும், மூவுலகங்களை யும் தனது திருமேனியாக வுடைய முராரியின் விஷயமு மான பிரபந்தத்தைத் தமிழ் பாஷையாற் | போன்றதும், முராரியின் விஷ யமுமானப்ரபந்தத்தை மூன் றுலகங்களி னுபகாரார்த்த மாய்த் தமிழ் பாஷையாற் |
| 23 | 5 | திலும் | தில் |
| ,, | ,, | அவனை | அத்தாமரைக்கண்ணனை |
| ,, | 8 | இருநூறு | நானூறு |

# விளம்பரம்.

ஹரிஸமயதிவாகரம்:- இது வைணவஸமயக்கொள்கைகளையும் ஸம்ப்ரதாய விஷயங்களையும் தழுவி மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப் பத்திரிகை. உபயவேதாந்தங்களிலும் சிறந்த பண்டிதர்களால் எழுதப்பெறும் அரிய விஷயங்கள் வற்றையுங்கொண்டு விளங்குவது. வருடச்சந்தா உள்நாட்டி ரூ. 2—0—0 வெளிநாடுகளுக்கு ரூ. 2—4—0.

ருக்மாங்கத சரித நாடகம்:- இது ருக்மாங்கத சரிதத்தை அழகுபெற விரித்துரைக்கும் நாடக நூல். சொற்சுவை பொருட்சுவைகள் ததும்புவது. எட்டயபுரம் ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ. உ. வே. திரு. வி. சாமி ஐயங்கார் ஸ்வாமியால் எழுதப்பட்டது. விலை அணா 6.

இராமாயணத் திருப்புகழ்:- இது ஸ்ரீராம சரித்தத்தை வ விருத்தங்களால் விளக்கியுரைக்கும் ஓர் சிறந்த நூல். பால ரதியார் என்னும் பெரியாரால் அருளிச்செய்யப்பட்டது. சொல் ம் பொருள்நயம் முதலிய பலவகை நயங்களாலுந் துலங்குவது. கொண்டே முடிவுபெற்றுள்ளது. குறிப்புரையுடன் விலை ணா 8.

மேற்கண்ட புஸ்தகங்களுடன் வடகலை தென்கலை நித்யாநு தானங்களும் கீழ்க்கண்ட விலாசத்திற் கிடைக்கும்.

விலாசம்:—

ஹரிஸமய திவாகரம் ஆபீஸ்,

பெருமாள் கோவில் தெரு,

மதுரை.